தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.

5 & 6

மதுரை.

தமிழ் புத்தகங்கள்.

	ரூ.	அ.	ப.
தென் இந்தியா க்ஷேத்திரங்கள்:			
1. ஸ்ரீரங்கம் ...	0	10	0
2. சிதம்பரம் ...	1	0	0
3. திருவானைக்காவல், திருச்சிறுப்பள்ளி, உய்யக்கொண்டான் திருமலை	0	10	0
4. கரூர், நெரூர், கங்கைகொண்ட சோழபுரம், அன்பில் ...	0	10	0
5 & 6. மதுரை ...	1	8	0
திருவானைக்காபுராணம் ...	2	0	0
கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ...	1	8	0
ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ...	1	0	0
ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் திவ்யசரித்திரம் ...	3	0	0
ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம் முதற்பாகம் ...	1	4	0
பகவத்கீதை வெண்பா ஷட்கம்—1 ...	0	6	0
ஷட்கம்—2 ...	0	6	0
ஷட்கம்—3 ...	0	6	0
தேவீ கீர்த்தனைகள் ...	0	2	0
ஸத்குருஸ்துதி ...	0	2	0
ஹரிஸ்துதி ...	0	2	0
ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள்	0	5	0
சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியில் செய்த உபன்யாஸம் ...	0	2	0
சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட் தளவரிசை இவைகளைப்பற்றிய நூல் ...	0	4	0
சித்தரதரன் ...	0	2	0
காங்கிரஸ் மஹாஸபை ...	0	4	0
தேவபோகம் ...	1	0	0
நாற்பது லக்ஷம் ரூபாய் ...	0	3	0
தாதாவின் தந்திரம் ...	0	2	0
ஓர் இரவின் ஸம்பவங்கள் ...	0	6	0
ஹேமர்தகுமாரி ...	0	2	0
ஹென்றி பெஸ்டலேஸி ...	0	2	0
ஹிரண்மயி ...	0	2	0
கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல்	1	0	0
இந்தியாவும் சுய ஆட்சியும் ...	1	8	0
இந்திரா ...	0	2	0
கொடியாலம் வாசுதேவ அய்யங்கார்	0	2	0
காவடிச்சிந்து ...	0	2	0
லஜ்ஜாவதி ..	0	2	0
மாலதீ ...	0	3	0
பெருமுடிச்சோழன் ...	0	6	0
அன்பின் வலிமை ...	0	10	0

	ரூ.	அ.	ப.
பிருதுலை ...	0	8	0
இராதாராணி ...	0	2	0
ஸத்குரு கீதை ...	0	8	0
வீரமாதேவன் ...	0	4	0
வித்யாரண்ய நகரம் ...	0	8	0
வியாபாரநீதி ...	0	8	0
ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை	0	8	0
,, இரட்டைச் சஞ்சிகை 1க்கு	1	0	0
,, 6 நம்பர்கள் அடங்கிய பயிண்டு செய்த வால்யம் ஒன்றுக்கு ...	3	4	0
குணசீல ஸ்தலபுராணம் ...	0	8	0
ஹனுமான்சிங் ...	0	12	0
மெய்யறிவு ...	0	8	0
சர்கா ...	0	8	0
சுந்தரி ...	1	0	0
திருமுருகாற்றுப்படை ...	0	12	0
பத்மினி ...	0	3	0
ரகுநாதன் ...	0	12	0
குணசீலதிருத்தேர் திருப்பணி அகவல் ...	0	2	0
விவேகசந்திரிகை ...	0	8	0
வஸந்தஸமுத்ரம் ...	0	12	0
மங்களாம்பாள் ...	0	8	0
ஜினேந்திரன் ...	1	8	0
பொன்னுசாமித் தேவர் கொலை ...	0	14	0
ஸ்ரீ வாமன சரித்திரம் ..	0	2	0
மூன்று வைரங்கள் ...	0	6	0
தாக்ஷாயிணி ...	0	6	0
கலாசுந்தரி ...	0	12	0
மதுசூதனன் ..	0	8	0
சிவகுமாரன் ...	1	0	0
நற்குலதெய்வம் ...	0	8	0
மதனமனோஹரி ...	0	8	0
கவீந்தரம்பை ...	1	0	0
சோமளவல்லி ...	0	8	0
காமேந்திரன் ஞானலோசனி ...	1	0	0
கஜபதி ..	3	10	0
துயராழன்கதை ...	0	12	0
பூர்ண வல்லிகதை ...	0	6	0
கோமளம் காஞ்சியாத்திரை ...	0	8	0
சாரசநேத்ரி ...	0	12	0
காட்டுராஜன் ...	0	3	0
திலோத்தமா ...	0	8	0
மாதவி ...	0	10	0
விக்டோரியா மெய்கீர்த்தி ...	0	12	0

மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் வாசல்.

மதுரை.

மதுராபுரி என்று சொல்லப்படும் ஹாலாஸ்ய க்ஷேத்திரமானது இந்த புண்ய பூமியாகிய பரதகண்டத்துக்குள் விளங்கிவரும் பற்பல க்ஷேத்ரங்களுள் மிகச் சிறந்தது. இவ்வுலகத்தினுள் நமது மாதிரு பூமியாகிய இந்தியாவையே புண்ய பூமியென்று சொல்லுகிறார்கள். இவ்விந்தியாவிலோ அநேக புண்ய க்ஷேத்ரங்களுள என. அவைகள் வைஷ்ணவ க்ஷேத்ரங்களெனவும் சைவக்ஷேத்ரங்களெனவும் இருவகைப்படும். வைஷ்ணவ க்ஷேத்ரங்களை நூற்றெட்டு திவ்ய தேசங்களெனவும், சைவக்ஷேத்ரங்களை ஆயிரத்தெட்டு சிவாலயங்களெனவும் பிரித்திருக்கிறார்கள். இந்த ஆயிரத்தெட்டு சிவக்ஷேதரங்களுள்ளும் கைலாஸம் முதலிய பதினாறு க்ஷேத்ரங்கள் மிகச் சிறந்தவை. பதினாறுக்குள்ளும் நான்கு க்ஷேத்ரங்கள் மிகவும் முக்கிமானவை. அவையாவன:—வடக்கேயுள்ள காசீ க்ஷேத்ரம், தக்ஷிண கைலாஸமென்று சொல்லப்படும் ஸ்ரீகாளஹஸ்தி, புண்டரீகபுரமென்று சொல்லப்படும சிதம்பரம், ஹாலாஸ்யமென்று சொல்லப்படும் மதுரை, இந்த நான்கு க்ஷேத்ரங்களுமே. இவைகளுள்ளும் எவ்விதத்திலும் சிறப்புற்று விளங்குவது யாதெனில் இந்த ஹாலாஸ்ய க்ஷேத்ரமே. இத்



ஹேமபத்மாகரம் என்னும் பொற்றாமரைக் குளம்.

துணை சிறப்புற்றோங்கி விளங்குவதற்குக் காரணம் இங்குள்ள ஸர்வேசுவரனான பரசிவமூர்த்தியாகிய ஸோமசுந்தரேசுவரர் இவ்விடத்திலருளிச் செய்த திருவிளையாடல்களே. வேறு ஒரு இடத்திலும் ஈசுவரன் இம்மாதிரி தமது லீலைகளை நடத்திககாட்டவில்லை. சிதம்பரத்தில் ஆநந்தத்தாண்டவம் ஒன்றுமட்டும் செய்து காட்டினாரென்றாலும், அதையும அத்துடன் மாறுகாலாட்டத்தையும், மற்றுமனேக லீலைகளையும இந்த க்ஷேத்ரத்தில் செய்து காண்பித்திருக்கிறார். காசியில் மரணமடைந்தால் முக்தியென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த க்ஷேத்ரத்திலோ வஸிப்பதாலேயே ஜீவன் முக்தியென்று சொல்லியிருக்கிறது. அதனாலேயே இந்த க்ஷேத்ரத்துக்கு ஜீவன்முக்திபுரமென்றும ஒரு பெயர் உண்டு. இவ்விடத்தில்தான் தேவேந்திரனுக்கு விருத்திராஸுரனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கிற்று. மேலும விராட் புருஷனுடைய சரீரமயமாகிய இந்த பிரமமாண்டததில் இடுப்புக்கு கீழ்பாகத்தில் ஏழு பாதாளலோகங்களுமிருக்கின்றன இடுப்புக்கு மேலுள்ள பாகத்தில் பூலோகம் முதலான ஏழுலகங்களுமுள்ளன. அவைகளுள் மூலாதாரம் முதலான ஆதாரஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முக்கியமான க்ஷேத்ரமும் ஈசுவர ஸாந்நித்யமும இருந்துவருகிறது. விராட் புருஷனுடைய மூலாதார ஸ்தானம்தான் கமலாலய க்ஷேத்ரமாகிய திருவாரூர். இவ்விடத்தில் ஈசுவரன் பிருதிவி லிங்கரூபமாய் இருக்கிறார். ஸ்வாதிஷ்டானஸ்தானம்தான் கஜாரண்ய க்ஷேத்ரமாகிய ஜம்புகேசுவரம். இங்கு ஈசுவரன் அப்புலிங்க ரூபமாயிருக்கிறார். மணிபூரஸ்தானம்தான் அருணாசல க்ஷேத்ரமாகிய திருவண்ணாமலை. இந்த க்ஷேத்ரத்தில் ஈசுவரன் தேஜோலிங்கரூபமாக விளங்குகிறார். அநாஹதஸ்தானமாகிய ஹ்ருதய புண்டரீகத்திலதான் சிதம்-

மதுரை கோயிலில் சித்திர சில்ப வேலைகள் செய்த மண்டபம்.

பர க்ஷேத்ரம் விளங்குகிறது. இங்கே ஈசுவரன் ஆகாசலிங்கரூபமாய் ஆநந்தத்தாண்டவம் செய்துகொண்டு பிரகாசிக்கிறார். விசுத்திஸ்தானத்தில்தான் தக்ஷிண கைலாஸமாகிய ஸ்ரீகாளஹஸ்தி க்ஷேத்ரம். இங்கே ஈசுவரன் வாயுலிங்கரூபமாய் பக்தர்களை அநுக்ரஹிக்கி

மதுரை வண்டேர் தெப்பக்குளம் அதன் மத்தியிலுள்ள மண்டபமும் தோட்டமும். இது மதுரைகோயிலைப்போலவே 75 ஏகர் விஸ்தீர்ணமுள்ளது.

ளூர். ஆக்ஞாஸ்தானமதான் வாராணஸீ க்ஷேத்ரமாகிய ஸ்ரீ காசி. இவ்விடத்தில் ஈசுவரன் விசுவேசுவரலிங்கரூபமாக தர்சனமளிக்கிறூர். விராட் புருஷனின் பிரம்மரந்திரஸ்தானம் தான் ஸ்ரீ கைலாஸ க்ஷேத்ரம். இவ்விடத்தில் ஈசுவரன் ஸ்ரீ கண்டபரமேசுவரரூபராய் வஸிக்கிறூர். இந்த ஆதாரஸ்தானங்களுக்கெல்லாம் அதீதமாயும், அவ்பக்தமாயும் உள்ள தான த்வாதசாந்தமென்று சொல்லப்படுவதுதான் ஹாலாஸ்ய க்ஷேத்ரம். இவ்விடத்தில் தான் ஈசுவரனுனவர் ஜகத்துக்கெல்லாம் மூலகாரணமாயுள்ள ஸ்வயம்புலிங்க ரூபத்துடன் ஸோமசுந்தரேசுவரராக விளங்குகிறூர். ஆதலால் பலவாற்ருனும் இந்த க்ஷேத்ரம் மிகவும் மேம்பட்டது. இது தறகாலம் சென்னப்பட்டணமிருந்து 350 மைல்தூரத்தில் ராமேசுவரம் போகும் இருப்புப்பாதையிலுள்ளது. இந்த மதுராபுரிக்குப் பலவித பெயர்கள் பல காரணங்களால் ஏற்பட்டுள்ளன. அவையாவன :—மதுரை, ஹாலாஸ்யம், ஸமஷ்டிவித்யாநகரி, பூலோக சிவலோகம், ஜீவன்முக்திபுரம், கன்யகாபுரம, கதம்பவனம், த்வாதசாநதம், சதுஷ்

கூடம், திருவாலவாய் என்பன. இந்த மதுரையென்னும் பெயருடனேயே வட இந்தியாவில் ஒரு க்ஷேத்ரம் இருக்கிறது. அதில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா செய்த லீலைகளால் அந்த க்ஷேத்ரத்துக்கு பெருமை ஏற்பட்டது. அதேமாதிரி இந்த மதுரைக்கும் ஸாக்ஷாத் ஸோமசுந்தரேசுவரர் செய்த லீலைகளால் பெருமையேற்பட்டது.

இத்தகைய மஹிமைவாய்ந்துள்ள க்ஷேத்ரமானது ஆதிகாலத்தில் கதம்பவிருக்ஷங்களாலும் வில்வ விருக்ஷங்களாலும் அடர்ந்த காடாயிருந்தது. அதனுலேயே இந்த க்ஷேத்ரத்துக்குக்கதம்பவனமென்று பெயர். இந்தக் காட்டின் நடுவில் எல்லா சிவ க்ஷேத்ரங்களிலுமுள்ள சிவலிங்கங்களின் ஸமஷ்டிரூபமாக மூலபூதமாயுள்ள ஸ்வயம்புலிங்கம் ஒன்று ஆவிர்ப்பாவமாயிருந்தது. இந்த லிங்கம் விசுவம் முழுமையும் வியாபித்திருக்கும் தன்மையுடைத்தாயிருநததால் ஈசுவரன் புட்டுக்கு மண் சுமநத காலத்தில் பிரம்பால் அடிவிழுந்த



மதுரை கோவில் திருவாபரணங்கள்.



மதுரை கோயில் யானை வாகனம்.



மதுரை கிளிக்கூட்டு மண்டபம்.

ஸமயத்தில் ஜகத்திலுள்ள எல்லோருக்கும் அடிவிழுந்ததாகத் தோன்றியது. ஆதலால் இந்த லிங்கத்தை தர்சனம் செய்து பூஜித்தால் எல்லா லிங்கத்தையும் பூஜித்த பலன் ஏற்படுகிறது. ஆகையால்தான் அநேகம் ஸ்தலங்களில் மீனாக்ஷிசுந்தரேசுவரருக்கு தனி கோயில்கள் ஏற்பட்டு பூஜைகள் நடந்துவருகின்றன. இந்த பரமபொருளுக்கெல்லாம் பரமாயிருக்கும்படியான கமேசுவர காமேசுவரி ரூபர்களான ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர் தமது பக்தர்களை அநுக்கிரஹித்தற்பொருட்டு அறுபத்திநான்கு லீலைகளை செய்தருளியிருக்கிறார். அவைகளில் பதிநாறு கிருதயுகத்திலும், பதிநாறு திரேதாயுகத்திலும், பதிநாறு துவாபரயுகத்திலும், பதிநாறு கலியுகத்திலும் நடந்தது. இவைகளின் விவரம் பின்வருமாறு :—

1. இந்திரனுக்கேற்பட்ட பிர்ம்மஹத்தியை நிவர்த்தித்தது.

முன்னொருகாலத்தில் கிருதயுகத்தில் தேவலோகத்தில் தேவேந்திரனானவன் தனது ஸபையாகிய "ஸுதர்மா" என்னும் இந்திரஸபையில் எல்லா தேவர்களுடனும் ரத்னஸிம்ஹாஸனத்திலுட்கார்ந்துகொண்டு ரம்பை முதலான அப்ஸரஸ்திரீகள் கானம் செய்ய திலோத்தமை மிகவுமத்புதமாக லாஸ்ய நர்த்தனம் செய்ய அதைக் கண்ணுற்று அந்த விஷயானந்தத்தில் மூழ்கியிருக்கையில் அச்சபைக்கு பிரஹஸ்பதி பகவான் வந்துசேர்ந்தார். இந்த நர்த்தன அமளியில் தேவேந்திரன் தனது குருவின் வரவை கவனிக்காமல் அவரைத் தகுந்தபடி வரவேற்று உபசரிக்காமலிருந்துவிட்டான். இதைக்கண்டு வருத்தமுற்ற பிரஹஸ்பதியும் உடனே தேவதைகள் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்துவிட்டார். அச்



மதுரை கோயில் ரதம்.

மதுரை—கம்பத்தடி மண்டபத்தின் தூண்களிலுள்ள சில்பவேலைகள்.

சபை கலைந்ததும் தேவேந்திரனுக்குத் தன் ஞாபகம் வந்தது. உடனே குருவை தான் வரவேற்காத குற்றத்தையறிந்து மிகவும் வருந்தி மனம் நொந்து அந்த தோஷத்தாலேயே வர வர தனது தேஜஸும் பலமும் குன்றிப்போய் அஸுரர்களிடம் அபஜயமடைய ஆரம்பித்தான். உடனே எல்லா தேவர்களுடனும் பிரம்மாவிடத்தில் போய் அவரை துதித்து அஸுரர்களை ஜயிப்பதற்கு உபாயம் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் குருவை அவமதித்த பாபத்தால் இவ்வாறு நேர்ந்ததென்றும் பிரஹஸ்பதியானவர் அவனிடம் வருத்தத்தால் மறைந்திருப்பதால் தற்சமயம் அவனுக்கு அவர் உதவமாட்டாரென்றும், குருவில்லாமல் ஒரு கார்யமும் நடவாதாதலால் தற்காலத்திற்கு த்வஷ்டாவின் புத்ரனாகிய விசுவரூபனை குருவாக அடையும்படிக்கும் அவனுக்குச் சொன்னார். தேவேந்திரனும் அவ்வாறே விசுவரூபனை குருவாக அடைந்து அவனால் சிவகவசம் கொடுக்கப்பெற்று, நாளுக்குநாள் பலம் விருத்தியடைந்து அஸுரர்களை ஜயித்து ஸுகமாய் இருந்தான். இச்சமயம் அஸுரர்களுக்கு மருமகனும் த்வஷ்டாவின் புத்திரனும், மூன்று தலைகளையுடையவனுமான விசுவரூபனென்பவன் ப்ரத்யக்ஷத்தில் தேவதைகளுக்கு ஹவிர்ப்பாகத்தைக் கொடுக்கிறதும் பரோக்ஷத்தில் அஸுரர்களுக்குக் கொடுப்பதுமாய் இந்திரனை வஞ்சித்து வந்தான். இதை ஞானதிருஷ்டியால் அறிந்த தேவேந்திரன் கோபம்கொண்டு தனது வஜ்ராயுதத்தால் விசுவரூபனின் மூன்று சிரஸுகளையும் வெட்டிவிட்டான். அவைகள் மூன்று பக்ஷிகளாய் பரந்து போய்விட்டன. ஆனால் விசுவரூபனைக் கொன்ற ஹத்தி தோஷமானது இந்திரனைத் தொடர்ந்தது. உடனே தேவதைகளின் ஸகாயத்தால் தேவேந்திரன் அந்த பிரம்மஹத்தியை நான்காகப் பிளந்து அந்த நான்கு பாகங்களையும் பூமி, ஜலம், ஸ்திரீ, விருக்ஷம் ஆகிய இந்த



மதுரை—கம்பத்தடி மண்டபத்திலுள்ள த்வஜஸ்தம்பம்.

நான்கினிடத்திலும் சேர்ப்பித்துவிட்டான். இவ்வாறு தனக்கு நேர்ந்த பிரம்மஹத்தி தோஷத்தைத் தீர்த்துக்கொண்டு வாவா விருத்தியடைகிறான் என்பதைத் தெரிந்துகொண்ட விசுவரூபனின் தகப்பனாகிய த்வஷ்டாவானவன் தனது புத்ரனைக் கொன்ற கோபத்தால் இந்திரனுக்கு சத்துரு ஏற்படவேண்டுமென்று பலமான யாகத்தைச் செய்து விருத்திராசுரனை யுண்டாக்கினான். அந்த விருத்திராசுரனும் அஸுர சைன்யங்களுடன் இந்திரனை யெதிர்த்த காலத்தில் அவனை ஜயிக்கமுடியாமல் இந்திரன் முதலிய தேவர்கள் பிரம்மாவிடம் செல்ல அவர் எல்லோரையும் கூட்டிக்கொண்டு மகாவிஷ்ணுவிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தார். மஹா விஷ்ணுவும் இந்திரனிடமுள்ள ஆயுதங்கள் ஸாமர்த்திய மற்றவையென்றும் புதிதாக மிகக் கெட்டியானதான ஒரு வஜ்ராயுதம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதற்கு ததீசிமஹரிஷியின் முதுகெலும்புதான் ஸரியான ஸாதனமென்றும், அம்மஹரிஷியை யாசித்தால் அவர் தமதெலும்பை உலகத்தின் க்ஷேமத்திற்காகக் கொடுப்பாரென்றும், அதிலிருந்து வஜ்ராயுதம் ஒன்று செய்துகொண்டு விருத்திராசுரனை எதிர்த்தால் அவனை ஜயித்து விடலாமென்றும் உபாயம் சொல்லிக்கொடுத்தார். அங்ஙனமே தேவர்களெல்லாம் ததீசி மஹரிஷியிடம் போய் யாசிக்க அவர் தமது முதுகெலும்பைக் கொடுத்துவிட்டார். அதைக்கொண்டு விசுவகர்மாவால் ஒரு வஜ்ராயுதம் செய்வித்து அதை யெடுத்துக்கொண்டு விருத்திராசுரனுடன் இந்திரன் யுத்தத்துக்குச் சென்றான். விருத்திராசுரன் எவ்வளவு எதிர்த்து போர்புரிந்தும் ஜயிக்க முடியாமையைக் கண்டு ஸமுத்திரத்திலிறங்கி தண்ணீருக்குள்ளே நடுவில் சென்றுவிட்டான். இந்திரன் அவனை அங்கு பின்தொடரமுடியாமையால் தேவதைகளெல்லாம் மறுபடியும் பிரம்மாவினிடம் போய்



மதுரை கோயிலாபரணங்கள்.



மதுரை கோயிலாபரணங்கள்.



மதுரை கோயில் சுவரிலுள்ள 64 லீலைகளின் சித்திரப்படங்கள்.

முறையிட அவர் அகஸ்தியமஹரிஷியைப் போய் வேண்டிக்கொண்டால் அவர் ஸமுத்திரத்தை வற்றடிப்பர். அதன் பிறகு விருத்திராசுரனைக் கண்டு பிடித்துக் கொல்லலாம் என்றார். அவ்வாறே அகஸ்தியரிடம் போய் பிரார்த்திக்க அவரும் ஸமுத்திரஜலம் முழுமையையும் உள்ளங்கையிலேந்தி ஆசமநம் செய்துவிட்டார். உடனே தேவேந்திரன் தனது சைன்யங்களுடன் ஸமுத்திரத்தின் தரையிலிறங்கிச்செல்ல அங்கு ஒரு மலையினுச்சியில் விருத்திராசுரன் பத்மாசனத்திலுட்கார்ந்துகொண்டு கல்லுப்போல் அசைவற்றவனாய் இந்திரியங்களையெல்லாம் அடக்கி மநஸை ஏகாக்ரசித்தனாக பரப்பிரம்மத்தினிடத்தில் வைத்து தியானத்தில் லயித்திருந்தான். அவனைக் கண்டதும் தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தால் அவனுடைய சிரஸை துண்டித்துவிட்டான். உடனே அவனைக்கொன்ற பிரம்மஹத்திதோஷமானது இந்திரனைப் பலமாகப் பிடித்துக் கொண்டுவிட்டது. அது எங்குப் பார்த்தாலும் இவனை பயங்கரமான ரூபத்துடன் பின் தொடர்ந்தது. அதற்கு பயந்து இந்திரனும் ஈசான்யதிக்கிலுள்ள ருத்ரலோகத்துக்கு ஓடி அங்குள்ள ஓர் தாமரைக்குளத்தில் தாமரைத்தண்டினுள்ளிருக்கும் தாமரைநூலில் ஒளிந்துகொண்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வெகுகாலம் வஸித்தான். அங்கிருந்தபடியே தனக்கு இவ்வித ஆபத்துக்களெல்லாம் நேர்ந்ததற்கு காரணம் தான் தனது குருவாகிய பிரஹஸ்பதிக்குச் செய்த அபராதம்தானென்பதை யுணர்ந்து அவரைப் பலவாறாகத் துதித்து தன்னை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். பிரஹஸ்பதி பகவானும் இவனிடம் மனமிரங்கி இவன் முன் தோன்றினர். உடனே அவர் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தான் செய்த குற்றங்களையெல்லாம் க்ஷமித்து தன்னை எவ்வாற்றானும் காப்பாற்ற வேண்டுமென்று மன்றாடினான். அவரும் தயவால் இளகிய மனத்தினராய் அவனுக்கு விருத்திராசுரவதத்தால்



திருமலைநாயக்கன் மால் என்னும் அரண்மனை.

ஏற்பட்ட பிரம்மஹத்திதோஷம் நீங்க உபாயம் சொன்னார். மகாபாதகங்களெல்லாம் போகவேண்டுமானால் சிவபூஜை செய்து சிவனின் அனுக்கிரகம் கிடைத்தால்தான் போகும் ஆதலால் இப்புண்ய பூமியிலுள்ள கைலாசம் முதலிய பற்பல சிவக்ஷேத்ரங்களுக்குச்



வண்டேர் தெப்பக்குளமும் அதன் மத்தியிலுள்ள கோயிலும் தோட்டமும்—
ஒரு மூலையிலிருந்து எடுத்த காக்ஷி.

சென்று அங்குள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து ஈசுவரமூர்த்திகளைப் பூஜை செய்து வந்தால் அவைகளுள் ஸர்வோத்தமமானதும் மிகச்சிறந்ததுமான க்ஷேத்திரத்தை யடைந்ததும் பிரம்மஹத்தி தானாகவே விலகிவிடுமென்று சொல்லி அபயப்பிரதானம் செய்தார். உடனே தேவேந்திரனும் குருவார்த்தைக்கிணங்கி எல்லா பரிவார தேவதைகளுடனும் பூலோகத்திற்கு வந்து கைலாசம் முதலான ஒவ்வொரு சிவ க்ஷேத்ரங்களுக்கும் சென்று அங்குள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நானம் செய்து ஈசுவரனைப் பூஜித்துவந்தான். அங்குள்ள காடுகளிலெல்லாம் ராஜதருமப்படி வேட்டையாடிவந்தான். இவ்வாறு அநேக க்ஷேத்திரங்கள் கடந்து இந்த ஹாலாஸ்யக்ஷேத்திரத்தினெல்லைக்கு ஸமீபத்தில் வரும்பொழுதே அவனுக்கு வேட்டையில் மனம் நசிக்கவில்லை. அது பிராணிஹிம்ஸையென்று தோன்றி வேட்டையிலிருந்தும் நீங்கினான். இந்த இடத்தில் தன் மனதுக்கு சாந்தி ஏற்படுகிறதென்றும் அதனால் இவ்விடத்தில் ஏதோ விசேஷமிருக்கிறதென்றும் தன்னுடன் வந்த தேவதைகளிடம் சொன்னான். இந்தப் பிரகாரம் சொல்லிக்கொண்டே கதம்பவன க்ஷேத்திரத்தின் எல்லையைத் தாண்டி அதனுள் பிரவேசித்தான். அச்சமயத்தில் அவனை விடாமல் பின்தொடர்ந்த பிரம்மஹத்தியானது அந்த க்ஷேத்திரத்தின் மஹிமையால் அதன் எல்லைக்கு வெளியிலேயே நின்றுவிட்டது. இதைக்கண்டதும் பயம் தெளிந்தவனாய் தன்னுடன் வந்த பிரஹஸ்பதி முதலிய தேவர்களை நோக்கி ஆனந்த பாவசனாய் "விடுபட்டேன், விடுபட்டேன், பிரம்மஹத்தியிலிருந்தும் விடுபட்டேன்" என்று உரக்கக் கதறினான். உடனே எல்லா தேவர்களும் "இவ்விடத்திலேதோ விசேஷமிருக்கிறதென்று நீங்

திருமலைநாயக்கன் மால் என்னும் அரண்மனை.

கள் சொன்னது ஸரியாகி விட்டது. இந்த கதம்பவிருக்ஷங்களடர்ந்த காட்டில் சிம்மங்களும் யானைகளும், கருடனும் பாம்பும், புலியும் மானும், இன்னுமிவைபோன்ற பரஸ்பரம் ஸஹஜமான விரோதமுள்ள பிராணிகளெல்லாம் மிக்வும் ஸ்நேகத்துடன் ஸஞ்சரிப்பதால் இந்த ஸ்தலத்தில் அத்யந்த நிர்மலமான ஸாத்விகவஸ்து ஏதோ ஒன்று இருக்கிறது அதைத் தேடிப்பார்த்து கண்டுபிடிப்போம்" என்று சொல்லிக்கொண்டு நாலாபக்கமும் சென்றார்கள். இவ்வாறு தேடிச் செல்கையில் ஓரிடத்தில் தெளிவான தீர்த்தத்துடன் கூடிய ஒரு தடாகத்தைக் கண்டார்கள். அதிலுள்ள நிர்மலமான நீரையருந்தித் தங்களது சிரமத்தைப் பரிஹாரம் செய்துகொண்டு கரையிலுட்கார்ந்து நாலாபக்கமும் தோன்றிய வடர்ந்த காட்டைக் கண்ணுற்றார்கள். அச்சமயம் அக்குளத்துக்கு வாயவ்ய திக்கிலுள்ள கதம்பவிருக்ஷங்கள் வில்வவிருக்ஷங்கள் இவைகளின் மீது வெகு நேர்த்தியான பஞ்சவர்ணக்கிளிகள் உட்கார்ந்து கொண்டு அடியிற்கண்ட நாமாவளிகளை மனோகரமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தன. "சிவ சம்போ மஹாதேவ பரமேசுவா சங்கா, சந்த்ரசேகா பூதேச ஸாம்ப ஸ்ரீகண்ட சாசுவத". இதைக் கேட்டதும் ஆச்சரியமடைந்தவர்களாய் அக்கிளிகளிருந்த திக்கை நோக்கிச் சென்று நாலாபக்கமும் கவனித்துப் பார்க்கையில் அங்கு கதம்பவிருக்ஷத்தினடியில் அமிருதமயமான ஸ்வயம்புலிங்கமாகிய ஸுந்தரேசுவாரைக் கண்டார்கள். உடனே தேவேந்திரனிடம் சென்று தாங்கள் கண்ட விந்தையைத் தெரிவித்தார்கள். உடனே தேவேந்திரனும் எல்லோருடனும் அவ்விடத்திற்கு வந்து பிரஹஸ்பதி பகவானின் ஆக்ஞைப்படி அங்குள்ள புண்யதீர்த்தமாகிய குளத்தில் விதிப்படி ஸ்நாநம்



மதுரை—ஸௌந்தரேசுவரர் கோயில் உள்பிரகாரம்.

செய்து நித்தியாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தன்னுடன் வந்த பரிவாரங்களை ஈசுவரபூஜைக்காக புஷ்பங்கள் கொண்டுவரும்படி கட்டளையிட்டுவிட்டு தான் ஆதிலிங்கமாகிய ஸௌந்தரேசுவரரை தர்சிக்கச் சென்றான். அந்த மஹாலிங்கத்தை இவன் தர்சித்த அந்த க்ஷணத்திலேயே இவன் பாபங்களெல்லாம் தொலைந்து கதம்பவனத்தினெல்லையில் தங்கியிருந்த விருத்திராசுரனின் பிரம்மஹத்தியும் நசித்துவிட்டது. புஷ்பம் கொண்டுவரச் சென்றவர்கள் புஷ்பங்களொன்றும் கிடைக்கவில்லையென்று திரும்பிவர அதைக் கேட்டு மனவருத்தமுற்று உடனே எல்லா தேவர்களையும் தேவலோகத்திற்குச் சென்று அங்கிருந்து ஏராளமான புஷ்பங்களையும் இன்னும் இதர பூஜாதிரவியங்களையும் ஸ்வர்ணபாத்திரங்களையும் அதிசிக்கிரத்தில் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தான். விசுவகர்மாவை வரவழைத்து ஸ்ரீ ஸோமசுந்தரேசுவரருக்கு திவ்யமயமான ஒரு விமானம் உடனே நிர்மாணஞ்செய்யும்படி உத்தரவு செய்து விட்டு புஷ்பங்களைத்தேடிக்கொண்டு காட்டினுள் சென்றான். பலவிடங்களிலலைந்தும் புஷ்பம் கிடைக்காதவனாய் களைத்து அங்கு குளத்தங்கரையில் வந்துட்கார்ந்துகொண்டு சுந்தரேசுவரனையே தியானித்துக்கொண்டு ஆத்மபூஜை செய்வதற்கு புஷ்பங்கள் கிடைக்கவில்லையே என்று மிகவும் வருந்திக்கொண்டிருந்தான். அச்சமயம் ஈசுவரனானவர் இவனுடைய தாபத்தைக்கண்டு மனமிரங்கி அந்தக் குளம் முழுமையும் ஸ்வர்ணத்தாமரைகளை உண்டாக்கினார். அவைகளைக் கண்டு தேவேந்திரன் மிகவும் ஆச்சரியம் கொண்டவனாய் அப்புஷ்பங்களை ஈசுவரனுக்கு அர்ச்சிக்கவேண்டுமென்று தன் கைகளினாலேயே கொய்துகொண்டு அந்தத்தடாகத்துக்கும் "ஹேமபத்மாகாம்" "பொத்தாமரைக்குளம்" என்று பெயரி

மதுரை—மீனாக்ஷி நாயகர் மண்டபம்.

ட்டு அங்கிருந்து புறப்பட்டு ஈசுவரனிடம் சென்றான். அவன் அந்த லிங்கத்தின் ஸமீபத்தில் வருகிறதற்குள் விசுவகர்மாவானவன் எட்டு திக்கஜங்களால் தூக்கப்பட்டதான மிகவும் அத்புதமான ஒரு விமானத்தை நிர்மாணம் செய்து கொண்டுவந்தான். தேவலோகத்திற்குப் போன தேவதைகளும் ஏராளமான புஷ்பங்களுடனும் பூஜாதிரவியங்களுடனும் வந்து சேர்ந்தார்கள். உடனே தேவேந்திரன் அந்த விமானத்தை பிரஹஸ்பதியின் உத்தரவுப் படி அந்த லிங்கமிருக்குமிடத்தில் வைத்து சாஸ்திரவிதிப்படி பிரதிஷ்டை செய்தான் பின்னும் விசுவகர்மாவைக்கொண்டு இந்த விமானத்தைச் சுற்றிலும் ஐந்து பிராகாரங்களும், அம்பாள் ஆலயமும், பரிவார தேவதைகளின் ஆலயங்களும், பிம்பங்களும, கோபுரங்களும் நிர்மாணம செய்யும்படி உத்தரவு செய்துவிட்டு தான் பிரஹஸ்பதிபகவானுடைய ஆக்ஞையை யநுஸரித்து ஈசுவரனின் பூஜையை செய்ய ஆரம்பித்தான். தேவர்களெல்லாம் வேதகோஷங்கள் முழக்க, கணங்களெல்லாம் வாத்தியங்கள் வாசிக்க, ரிஷீசுவரர்களெல்லாம் ஸ்தோத்திரங்கள் செய்ய நிரம்ப மேன்மையாய் பூஜையை செய்து முடித்து கடைசியில் ஈசுவரனை

एकं ब्रह्माद्वितीयं च परिपूर्णं परात्परम् । इति यो गीयते वेदैस्तं वन्दे सोमसुन्दरम् ॥
ज्ञातृज्ञानज्ञेयरूपं विश्वं व्याप्य व्यवस्थितम् । स्वयं सर्वैरदृश्यो यस्तं वन्दे सोमसुन्दरम् ॥



மதுரை கோயில் மாடியிலிருந்து காண்கும் கோபுரங்களின் காக்ஷி.

என்பது முதலான அநேக சுலோகங்களால் ஸ்தோத்ரம் செய்து பக்தியால் மனமுருகி தண்டம் போல் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து ஆநந்தக்கண்ணீர் சொரிந்து சிரஸின்மேல் கரங்களைத் தூக்கி அஞ்சலிபத்தனாய் நின்றான். ஈசுவரனும் அவன் செய்த பூஜையால் ஸந்தோஷமடைந்து அவனுக்கு அனுக்கிரகம் செய்யக்கருதி அவன்முன் தோன்றி கம்பீரமான த்வனியுடன் அவனை "பயப்படாதே உனக்கு வேண்டிய வரனைக்கேள்" என்றுரைத்தார். அதைக் கேட்ட தேவேந்திரன் தான் ஈசுவரனை தர்சனம் செய்த தத்க்ஷணமே தன் பாபங்களெல்லாம் தொலைந்து தன்னைப் பிடித்திருந்த விருத்திராசுரவதத்தாலுண்டான பிரம்மஹத்தியும் நசித்துப்போய் விட்டது. இனி வேறொன்றும தனக்கு ஆகவேண்டியதில்லை. ஈசுவரசரணாரவிந்தங்களில் அசஞ்சலமான பக்தியிருக்கும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென்றான். ஈசுவரனனவர் திரும்பவும் அவனை வரம் கேட்கச் சொல்லி நிர்ப்பந்தித்தார். அதற்கு இந்திரன் தனக்கு பிரதிதினமும் கதம்பவனக்ஷேத்திரத்திற்கு வந்து ஸுந்தரேசுவரரைப் பூஜிக்கவேணுமென்னுமிச்சை மேலிட்டிருப்பதால் அதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டான். இதைச் செவியுற்ற ஈசுவரன் மிகவும் ஸந்தோஷமடைந்து "உன் பக்தியை மிகவும் மெச்சினோம். நீ செய்துவைத்திருக்கும் இந்த அழகான விமானமானது எப்பொழுதும் உன் பெயராலேயே "இந்திரவிமானம்" என்று பிரசித்தி அடையட்டும். நீ வருஷத்துக்கு ஒரு தடவை சைத்ர மாஸம் பௌர்ணமியாகிய சித்ராபௌர்ணமியன்று இங்கு வந்து

நம்மை பூஜித்தாயேயானால் வருஷம் முழுவதும் பூஜை செய்த பலனை உனக்குத் தருகிறோம். ஸுகமாகப் போய் வா" என்று சொல்லிவிட்டு மறைந்தார். உடனே இந்திரன் பிரஹஸ்பதி முதலிய எல்லா தேவர்களும் ஆனந்தஸாகரத்தில் மூழ்கினவர்களாய் பலவாறுக ஸோமஸுந்தரரை ஸ்தோத்தரித்து ப்ரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து தேவலோகம் போய்ச் சேர்ந்தார்கள். இதனால் தான் மதுரையில் இப்பொழுதும் சித்ராபௌர்ணமி உத்ஸவம் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. ஐராவதத்திற்கு துர்வாஸர் சாபம் நீக்கியது.

முன்னொருகாலத்தில் தேவேந்திரன் அஸுரர்களை ஜயித்து விட்டு அந்த ஜயத்தாலுண்டான ஸந்தோஷகோலாஹலத்துடன் தனது வாஹனமாகிய ஐராவதமெனப்படும் வெள்ளையானையின் மீதேறிக்கொண்டு தேவர்களால் சூழப்பட்டவனாய் தனது ராஜதானியாகிய அமராவதிக்குத் திரும்பி வருகையில் வழியில் துர்வாஸமுனிவரை சந்தித்தான். அவர் தேசஸஞ்சாரங்கள் செய்துவிட்டு ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் ஈசுவரனை பூஜித்துவிட்டு அவர் பிரஸாதமாகிய ஒரு உத்பலபுஷ்பத்தை கையிலெடுத்துக்கொண்டு வந்தார். இந்திரனைக்கண்டதும் அவனை அநுக்ரஹிக்கவேண்டி ஈசுவரப்பிரஸாதமாகிய அந்த புஷ்பத்தை கையில் கொடுத்தார். அவன் ஜயலக்ஷ்மியால் மதம் கொண்டிருந்தமையால் அந்த புஷ்பத்தை ஒரு கையால் வாங்கி ஆனையின் மஸ்தகத்தில் வைத்தான். அந்த ஐராவதமும்



மதுரை கோயிலாபரணங்கள்.



திருமலை நாயக்கன் மால் என்னும் அரண்மனை.

தனது தலையை யசைத்ததால் கீழே விழுந்த அந்த புஷ்பத்தை காலால் மிதித்துவிட்டது. உடனே துர்வாஸருக்கு கோபம் வந்துவிட்டது. மஹேந்திரன் கஜேந்திரன் இருவரையும் சபித்துவிட்டார். தன்னை ஸாமாந்யராக நினைத்துத் தான் கொடுத்த புஷ்பத்தை சிரஸில் தரித்துக்கொள்ளாமல் கர்வத்தால் ஆனையின் மஸ்தகத்தில் வைத்து அவமதித்ததால் அவன் சிரஸை முதலில் அடிப்பவன் பாண்டியராஜாவாக ஏற்படுவனென்று இந்திரனையும் ஐராவதமானது மதத்தால் புஷ்பத்தைக் கீழே தள்ளிக் காலால் மிதித்ததால் அது ஸாமான்யமான கருப்பு யானையாக பூலோகத்தில் காடுகளில் ஸஞ்சரிக்கக்கடவதென்று ஐராவதத்தையும் சபித்தார். உடனே தேவர்களெல்லோரும் அவர் கால்களில் வணங்கி தேவேந்திரன் செய்த தவறுதலை க்ஷமித்தருள வேண்டுமென்று நிரம்பவும் மன்றாடிக் கேட்டுக்



பொத்தாமரைக் குளம்.

கொண்டதின் பேரில் துர்வாஸரானவர் தான் சொன்ன சாபம் வியர்த்தமாகப் போகாது. இந்திரனுக்குத் தலையடிபடுவதற்குப் பதிலாக அவனுடைய கிரீடமடிபடட்டும். ஐராவதமும் நூறு வருஷகாலம் பூலோகத்தில் திரிந்துவிட்டுப் பிறகு அங்குள்ள ஹாலாஸ்யக்ஷேத்ரமாகிய மதுரையையடைந்து அங்குள்ள புண்யதீர்த்தமாகிய ஹேமபத்ம புஷ்கரணியில் ஸ்நாநம் செய்துவிட்டு மூலலிங்கமாகிய ஸ்ரீஸுந்தரேசுவரைப் பூஜை செய்வதால் சாபவிமோசனமாகும் என்று சொல்லிப்போய்விட்டார். அவ்வாறே உடனே ஐராவதத்திற்கு நிறம் மாறி அதன் நான்கு தந்தங்கள் இரண்டாகஆகி ஸாதாரணயானையைப்போல் பூலோகத்திற்குப்போய் ஸஞ்சரிக்கவாரம்பித்தது. நூறு வருஷம் சென்றபிறகு தற்செயலாய் ஹாலாஸ்யக்ஷேத்திரத்தை அடைந்து அங்குள்ள பொத்தாமரைக்குளத்தில் ஸ்நானம் செய்து ஸோமஸுந்தரரை தர்சித்ததும் அதற்கேற்பட்ட சாபம் நீங்கி முன்போல் ஸ்வசரீரத்தையடைந்தது. பிறகு அது ஸுந்தரேசுவரருக்குப் பலவிதமாக பூஜைகளும் ஸேவைகளும் செய்து நமஸ்கரித்துத் தனது வம்சஸ்தர்களான திக்கஜங்களுக்கு ஈசுவரனின் விமானத்தை எட்டு திக்குகளிலும் சுமந்துகொண்டு நிற்கும் பாக்யம் எப்படி கிடைத்ததோ அவ்வாறே தானும் அந்த விமானத்தை சுமந்துகொண்டு எப்பொழுதும் ஸுந்தரேசுவரரின் ஸேவையைச் செய்துகொண்டிருக்கவேண்டுமென்று ஈசுவரனைப் பிரார்த்தித்தது. ஈசுவரனும் ஸந்துஷ்டசித்தராய் அதன் முன் தோன்றி "என்னுடைய பக்தனாகிய தேவேந்திரனுக்கு எப்பொழுதும் நீ ஸேவைசெய்துகொண்டிருந்தால் எனக்கு செய்ததாக ஆகும். ஆதலால் நீ இந்திரலோகம் சென்று முன்போல் இந்திரனிடமிரு" என்று சொல்லிவிட்டு அந்தர்த்தானமானார். ஐராவதமும் அங்கிருந்து புறப்பட்டு மேற்குமுகமாகப் போய் அங்கு தனது கால்களால் ஒரு குளத்தை வெட்டி அதற்கு "கஜபுஷ்கரணி" என்று பெயரிட்டு அதன் கரையில் ஒரு மஹாகணபதியையும் ஐராவதேசுவரர் என்று ஒரு லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து அதை பூஜித்துக்கொண்டிருந்தது. தேவேந்திரன் ஐராவதமில்லாமல் வருந்தினவனாய் அதற்கு சாபவிமோசனமாய்விட்ட செய்தியறிந்து அதை கூட்டிவரும்

படி தூதர்களை யனுப்பினான். அவர்கள் வந்து சொன்னதும் ஐராவதமும் உடனே புறப்பட்டு கிழக்கே கொஞ்சதூரம் சென்று அங்கு தனது யஜமானாகிய தேவேந்திரன் பேரால் இந்திரேசுவரர் என்று ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்து அதைச் சிறிதுகாலம் பூஜை செய்துவிட்டு மறுபடியும் இந்திரன் கூப்பிட்டனுப்ப தேவலோகம சென்று ஸௌக்கியமாயிருந்தது.



மதுரை கீழகோபுர வாசல்கள்.

3. மதுராபுரி நிர்மாணம் செய்வித்தது.

தேவேந்திரன் வந்து இந்திர விமானத்தை பிரதிஷ்டை செய்து ஸோமஸுந்தரரை பூஜைசெய்தது முதல் தேவர்களெல்லோரும் இந்த மூர்த்தியின் பூஜை மிகவும் விசேஷமென்பதை யறிந்துகொண்டு பிரதிஸோமவாரமும் இந்த கதம்பவனத்துக்கு வந்து ஹேமபத்மாகரத்தில் ஸ்நானம் செய்து இந்த மஹாலிங்கத்தை பூஜை செய்துபோவது வழக்கமாயிருந்துவந்தது. ஒரு ஸமயத்தில் கல்யாணபுரம் என்று வழங்கிவந்த பாண்டிய ராஜதானியில் வஸித்த ஒரு தனிகனான வைசியன் தனஞ்ஜயன் என்பவன் வியாபாரார்த்தம் புறப்பட்டு மேற்கு திக்கை நோக்கி வெகுதூரம் சென்று பற்பல வியாபாரங்கள் செய்துவிட்டு திரும்பிவருங்காலையில் இந்த அடர்ந்த கதம்பவனத்துக்கு ஸமீபத்தில் ஸூர்யாஸ்தமனமாய்விட்டது. அன்று ஸோமவாரமாயுமிருந்தது. அந்த வைசியனோ பெரிய சிவபக்தன். சிவ விரதங்களை அனுஷ்டிப்பதிலும், சிவபூஜை செய்வதிலும், சிவத்யானம் பண்ணுவதிலும் மிகுந்த சிரத்தையுடன் கூடினவன். அன்று ஸோமவார விருதமிருந்ததால் ஏற்கனவே களைத்திருந்தான். அத்துடன் இந்த அடர்ந்த காட்டில் இருட்டில் அகப்பட்டுக்கொண்டதும் வழி தெரியாமல் அங்குமிங்குமாகத் திரிந்து சோர்வடைந்து கடைசியில் பொத்தாமரைக் குளத்தைபடைந்து அதன் கரையில் களைப்பார உட்கார்ந்து அயர்ந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அன்று ஸோமவாரமானதால் சுந்தரேசுவரர் பூஜைக்காக தேவர்க



மதுரை கிளிக்கூட்டு மண்டபம் (மற்றொருகாக்ஷி)

ளெல்லோரும் அங்குவந்து தேவ கோஷங்களுடன் ஹேமபத்மாகரத்தில் ஸ்நானம் செய்தார்கள். அச்சமயத்தில் ஈசுவரனும் தமது பக்தனிடம் மனமிறங்கி அவனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸை அனுக்கிரஹம் செய்தார். அதனால் அவன் அந்த தேவர்களெல்லோரையும் தர்சித்து அவர்கள் செய்ததையெல்லாம் கண்டு ஆச்சர்யம் கொண்டிருந்தான். அவர்கள் ஸ்நானமான பிறகு ஸுந்தரேசுவரர் பூஜைக்கு சென்றபொழுது இந்த வைசியனும் அவர்களை பின்தொடர்ந்து அவர்கள் ஈசுவரனுக்குச் செய்த திவ்யமயமான பூஜையைக் கண்ணுற்று ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவனாய் தானும் அந்த லிங்கத்தை மிகுந்த பக்தியுடன் பூஜைசெய்தான். பூஜை முடிந்து ஸ்தோத்ரநமஸ்காரங்களானபிறகு தேவர்களெல்லோரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். உடனே இந்த வைசயனுக்கு அனுக்ரஹித்திருந்த திவ்ய சக்ஷுஸ்ஸையும் ஈசுவரன் மறைத்துவிட்டார். அவன் வழக்கம்போல் தூங்கிவிட்டு ஸூர்யோதயமான பிறகு எழுந்திருந்து பார்த்ததும் அங்கு அடர்ந்த காட்டில் இந்திர விமானமும் ஸுந்தரேசலிங்கமும் மட்டுமிருப்பதைக் கண்டான். ராத்திரி தான் கண்டதெல்லாம் கனவோவென்று நினைப்பதற்கில்லாமல் அங்கு தேவர்கள் அர்ச்சித்த புஷ்பம முதலிய பூஜாதிரவியங்களிருந்தன. இதைக்கண்டு வியந்து தனது ஊராகிய கல்யாணபுரிக்குச் சென்று தனது அரசனிடம் தெரிவிக்கவேணுமென்று ஆவல்கொண்டன். இக்காலத்தில் கல்யாணபுரத்தில் சந்திரவம்சத்திலுதித்த குலசேகரபாண்டியன் நீதிநெறிதவறாமல் அரசுசெலுத்திவந்தான். இவ்வரசன் மிகவும் ஆஸ்திகன். நிரம்ப தெய்வபக்தியுள்ளவன். அதிலும் பரமசிவனிடம் அத்யந்த ஆஸக்தியுள்ளவனாயிருந்தான். ஆதலால் அந்த வைசியன் தனஞ்ஜயனானவன் தான் கண்ட காக்ஷிகளையெல்லாம் விஸ்தாரமாக மஹாராஜாவிடம்

புதுமண்டபத்திலுள்ள திருமலை நாயக்கர் சிலை.

தெரிவித்ததும் அரசனுக்குண்டான உத்ஸாகத்துக்கு ஓர் எல்லையில்லை. அந்த ஈசுவரனை தர்சிக்கவேண்டுமென்று அவா அதிகமாக உண்டாயிற்று. தனஞ்செயனிடம் தான் கேட்ட பூஜா விபரங்களையெல்லாம் நினைத்து நினைத்து அந்த ஈசுவரத்தியானத்திலேயே ஆழ்ந்திருந்தான். அன்றிரவு ஈசுவரன் ஒரு ஸித்தபுருஷர் மாதிரியாக அவனுக்கு முன் ஸ்வப்னத்தில் தோன்றி கதம்பவனத்தை ஓர் மிகச் சிறந்த பட்டணமாக நிர்மாணம் செய்து அதை அவனது ராஜதானியாக செய்துகொள்ளும்படி சொல்லி மறைந்தார். பொழுதுவிடிந்ததும் அவன் தான் கண்ட ஸ்வப்னத்தைத் தனது மந்திரிகளிடம் சொல்லி அவர்களையும் கூட்டிக்கொண்டு கதம்பவனத்துக்கு வந்து அங்குள்ள பொத்தாமரையில் ஸ்நானம் செய்து ஈசுவரனை தர்சனம் செய்ததும் இவனுக்கு முதல் நாள் தோன்றியமாதிரியான ஸித்தர் ரூபமாகவே ஈசுவரர் இவனுடைய கண்களில் பட்டு இவனை அநுக்ரஹித்து ஏற்படுத்தவேண்டிய மதுராபுரி பட்டணத்தின் எல்லைகளைக் குறிப்பிட்டுத் காண்பித்துப் போனார். அதைக் கண்டு மிகவுமாச்சர்யமடைந்து அவ்வரசன் உடனே தனது வேலைக்காரர்களைக்கொண்டு அந்தக் காட்டையழித்து அங்கு ஓர் அதிரம்யமான நகரத்தை நிர்மாணம் செய்து அநேகவீதிகள், பிராஸாதங்கள், தோட்டங்கள், நந்தவனங்கள், குளங்கள் முதலியன ஏற்படுத்தி, ஈசுவரனுடைய கோவிலையும் வெகுவாக விஸ்தாரப்படுத்தி பிராகாரங்களும் கோபுரங்களும் கட்டுவித்து, அநேக ஜனங்களை அங்கு குடியேத்தி அதை தனது பாண்டியதேசத்துக்கு முக்கிய ராஜதானியாக ஆக்கிக்கொண்டான். இவ்விதமாக காட்டிலுண்டாக்கிய இந்தப் பட்டணத்தை யார் சுத்தி செய்வார்கள் யார் ரக்ஷிப்பார்கள் என்று அவ்வரசன் மனதிலுண்டான எண்ணத்தை யறிந்த ஸாக்ஷாதீசுவரன் தமது ஜடையிலுள்ள கங்கா ஜலத்தை மழை வியாஜத்தாலே அந்த நகரம் முழுமையும் புரோக்ஷித்து அதை சுத்தமாக்கினார். அசரீரவாக்காக கிழக்குத் திக்கில் சாஸ்தாவையும், தெற்கு திக்கில் ஸப்தமாதிருக்களையும், மேற்கு திக்கில் மஹாவிஷ்ணுவையும், வடக்கு திக்கில் காளியையும் பிரதிஷ்டை செய்தால் அவர்கள் இந்நகரத்தை ரக்ஷிப்பார்கள் என்று ஆக்ஞை செய்தார். அந்தப்படியே அவ்வரசனும் செய்வித்தான். அதன்பிறகு சாஸ்திர விதிப்படி ஈசுவரனுக்கு பூஜை முதலியதுகள் தினப்படி செய்துவந்தான். பிறகு அந்த ஈசுவரனுடைய அனுக்கிரஹத்தால் எல்லா சத்ருக்களையும் ஜயித்து அந்த குலசேகரபாண்டியனெனவன் ஸார்வபௌமபதவியையடைந்தான். அவனுக்கு மலயத்வஜபாண்டியனென்று ஒரு புதல்வன் உண்டானான். இவ்வாறு வெகு விபவத்துடன் பல ஆண்டுகள் பூமியை ஆண்டுவிட்டு தனது புத்திரனுக்கு பட்டாபிஷேகம்

காமதேனு வாகனம்.

செய்வித்தபிறகு கதம்பவனநாதனாகிய ஸுந்தரேசுவரருடைய சரணாரவிந்தங்களில் இடைவிடாமல் பக்தி செய்வதைத் தவிர இஹபர சிரேயஸுக்கு வேறு ஸாதனம் கிடையாது என்பதை தன் புத்ரனுக்கு நன்கு வற்புறுத்திய பிறகு தான் ஸாக்ஷாத் ஈசுவரனுடைய கர்ப்பகிரஹத்திற்குள் நுழைந்து பரமாத்மாவை பிரதக்ஷிணம் செய்து ஸசரீரியாய் ஈசுவர ஸாயுஜ்யத்தை யடைந்துவிட்டான். பிறகு மலயத்வஜபாண்டியன் சற்றேனும் ராஜநீதி தவறாமல் பிதிருவாக்கியப்படி அனவரதமும் ஈசுவர பக்தி செய்துகொண்டு ராஜ்யபாரத்தை வஹித்துவந்தான்.

4. மீனாக்ஷியம்பாளினவதாரம் செய்வித்தது.

இவ்வாறு மநுநீதிதவறாமல் மலயத்வஜபாண்டியன் ராஜ்யம் வஹித்து வரும் நாளில் ஸூர்யவம்சத்தரசனாகிய சூரஸேன மஹாராஜாவினுடைய பெண்ணாகிய காஞ்சனமாலையை மணம் புரிந்துகொண்டான். இந்த காஞ்சனமாலையானவள் பூர்வஜன்மத்தில் வித்யாதரராஜனாகிய விசுவாவஸு என்பவனின் புத்திரியாக வித்யாவதீ என்ற பெயருடன் கூடினவள். இந்த வித்யாவதியானவள் பால்யம் முதலே நிரம்பவும் விரக்தையாய் எப்பொழுதும் விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு ஈசுவராராதனம் செய்வதும் ஸாக்ஷாத் பரதேவதையை ஸ்ரீவித்யா முதலான மந்த்ரங்களால் புரஸ்காரம் செய்வதுமாயிருந்தாள். ஒரு ஸமயம் தனது பிதாவாகிய விசுவாவஸுவிடம் போய் எல்லா க்ஷேத்ரங்களுள்ளும் பரதேவதை மிகப் பிரஸன்னமாக இருக்கும் ஸாரதாமான க்ஷேத்ரம் எது என்று கேட்டாள். அதற்கவன் "இந்த கர்மபூமியில் எல்லா க்ஷேத்ரங்களுக்குள்ளும் எவ்வாற்றானும் சிலாக்கியமானது ஹாலாஸ்ய க்ஷேத்ரமே. அவ்விடத்தில்தான் ஆதியந்தமிரண்டுமற்றவளாயும் ஜகன்மாதாவாயும் ஸச்சிதானந்தரூபிணியாயும் நினைத்தமாத்திரத்தில் எவ்வித பாபங்களையும் போக்கக்கூடியவளாயும் எவ்வித ஐசுவர்யத்தையும் கொடுக்கக்கூடியவளாயும் எல்லா வஸ்துக்களுக்கும் மேம்பட்ட வஸ்துவாயும் உள்ள ஸாக்ஷாத் பராசக்திஸ்வரூபமாயுள்ள மீனாக்ஷியானவள் பரிபூர்ணமான கலையுடன் பிரகாசிக்கிறாள். அநேகங்களாயுள்ள தேவீ பீடங்களுக்குள் 64 பீடங்கள் மிகச் சிறந்தவை. அவைகளுள்ளும் கதம்பவன பீடமானது அதி சிலாக்கியமானது. அவ்விடத்தில் ஈச்வரியை பூஜை செய்து நமது முன்னோர்கள் பலர் ஸித்தியடைந்திருக்கிறார்கள்" என்றான். இதைக்கேட்டதும் வித்யாவதியானவள் தானும் அக்கதம்பவனம் சென்று அங்குள்ள தேவதையை பூஜித்து ஸித்தி பெறவேணுமாதலால் தனக்கதற்கனுமதி கொடுக்கவேண்டுமென்று விசுவாவஸுவைப்பிரார்த்தித்து அவனது அனுமதியின்பேரில் இந்த கதம்பவனத்திலுள்ள ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தை ஸங்கிராந்தியன்றையதின

மதுரை ஆனை மலையிலுள்ள குகை.

மடைந்து முதல் ஒருவருஷகாலம் ஸம்வத்ஸர மஹாவிருதமென்று சொல்லப்படும் கடுமையானவிருதத்தை யநுஷ்டிக்கவாரம்பித்தாள். பிரதிதினமும் இந்த கந்தர்வராஜ புத்திரியானவள் பொத்தாமரைக் குளத்தில் ஸ்நானம் செய்து விக்னேசுவரரை பூஜித்துவிட்டு மீனாக்ஷி ஸுந்ரேசுவரர்களை நமஸ்கரித்து தனது தபஸ்ஸித்தியாகும்படி பிரார்த்தித்துக் கொண்டு பராதேவதையின் ஸந்நிதியையடைந்து, அம்பாளை ஏகாக்ரசித்தையாய் தியானம் செய்து அந்தர்யாக விதானத்தால் ஆராதனை செய்து 108 புண்யதீர்த்தம் நிரம்பிய கும்பங்களால் மீனாக்ஷீதேவிக்கு நன்கு அபிஷேகம் செய்வித்து திவ்யமயமான ஆடையாபரணங்களாலும் பரிமளகந்தங்களாலும் அலங்கரித்து 1008 நீலோத்பல புஷ்பங்களால் அழகான மாலையிட்டு ஸஹஸ்ரநாமம் முதலிய அநேக ஸ்தோத்ரங்களால் துதித்துப் பூஜை செய்துவந்தாள். இவ்வாறு புருஷர்களால்கூட அனுஷ்டிக்க முடியாத கடுமையான ஸம்வத்ஸர மஹாவிருதத்தை மிகுந்த பக்திசிரத்தையுடன் நிறைவேற்றி பன்னிரண்டாவது மாஸம் முழுமையும் ஒருவித ஆஹாரமுமில்லாமல் நிர்ஜலவிருதத்துடன் விருதத்தை பூர்த்திசெய்து பதிமூன்றுவது மாஸம் ஆரம்பதினத்தில் வழக்கம்போல் காலவேளையில் பொத்தாமரைக்குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு நிர்மலசித்தத்துடன் வித்யாவதியானவள் அம்பாள் கோவிலுக்குள் பிரவேசித்ததும் அங்குள்ள பராதேவதையானவள் மூன்று வயதுள்ள பாலையாக ரூபமெடுத்துக்கொண்டு ஸர்வாங்கஸுந்தரியாகவும் ஸர்வாபரணபூஷிதையாகவும் புன்சிரிப்புடன் கூடினவளாய் "வேண்டின வரத்தைக்கேள், வரத்தைக்கேள்" என்று சொல்லிக்கொண்டே கர்ப்பகிருஹத்துக்குள்ளிருந்து வெளியேவந்தாள். அக்காக்ஷியைக் கண்டதும வித்யாவதியானவள் ஆநந்தபரவசையாய் பூமியில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து மந்திரரூபமான பன்னிரண்டு சுலோகங்களால் அம்பாளை ஸ்தோத்திரம் செய்தாள் பிறகு எழுந்திருந்து அஞ்சலிபத்தையாய் நின்றுகொண்டு "என்னுடைய மனதானது எப்பொழுதும் உன்னுடைய பாதாரவிந்தங்களில் சஞ்சலமின்றி லயித்திருக்கவேண்டும். இதைக்காட்டிலும் வேறென்ன வேண்டியிருக்கிறது" என்றாள். இதைக்கேட்ட பாலரூபி மீனாக்ஷியானவள் ஸந்தோஷித்து "அவ்வாறே உனது மனது ஸ்தைர்யத்தையடையும். என்னுடைய ரூபத்தை ஸதா தியானம் செய்வாய். உன்னுடைய விருதானுஷ்டானத்தால் மிகவும் ஸந்தோஷமடைந்துள்ளேன். ஆதலால் பிறரால் அடையக்கூடாததாயும் உத்தமமாயுமுள்ள வரன் ஒன்றைக்கேள்" என்று பகர்ந்தாள். உடனேவித்தியாவதியும் இப்பொழுது என்முன்தோன்றியிருக்கும் இந்த மனோஹரமான ரூபத்துடன் நீ எனக்குப் புத்திரியாக வந்து பிரதிதினமும் கட்டியணைத்து முத்தமிடுதல்முதலிய லாலனங்களால் எனக்கு ஸந்தோஷத்தை விளைவித்துக் கடைசியில் எனக்கு முக்தியருளவேணும்" என்று பிரார்த்தித்தாள். இதைக்கேட்டதும் பராதேவதையானவள் "உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் நீ சந்திரவம்



தங்கப் பல்லக்கு வாகனம்.

திருமலை நாயக்கன் மால்.

சத்தாசனுகிய மலயத்துவஜ பாண்டியனைப் பதியாகவடைந்து வெகுகாலம் அவனுடன் ஸு
கமாக வாழ்ந்து பிறகு புத்ரகாமேஷ்டி யாகம் செய்து அச்சமயம் அக்கினியிலிருந்து என்னை
புத்திரியாக அடைந்து கடைசியில் பர்த்தாவுடன் கைவல்யமடைவாய்" என்று அநுக்ர
ஹித்துவிட்டு மறுபடியும் கர்ப்பகிருஹத்துக்குள் சென்று அந்தர்த்தானமாய்விட்டாள்.
அம்பாளால் கொடுக்கப்பட்ட இந்த வரத்துக்கனுகுணமாய்த்தான் வித்யாவதியானவள்
மறுஜன்மத்தில் காஞ்சனமாலையாகப்பிறந்து மலயத்வஜபாண்டியனை மணம்புரிந்தாள். மணம்
புரிந்தும் வெகுகாலம வரையில் புத்ரபாக்கியம் கிட்டாததால் தங்களது குலகுருவாகிய
அகஸ்தியமஹரிஷியை வரவழைத்து இவ்விராஜதம்பதிகள் அவரை யுபசரித்துத்தங்களுக்கு
மக்கட்பேருகிடைக்கும்படி அநுக்ரஹிக்கவேணுமாய் பிரார்த்தித்தார்கள். அவரும் ஞான
திருஷ்டியால் காஞ்சனமாலையின் பூர்வஜன்மவிருத்தாந்தங்களையெல்லாமறிந்து அவற்றை
யெல்லாம் அந்ததம்பதிகளுக்குத்தெரிவித்து "ஆதலால் ஸாக்ஷாத்பரதேவதையே உங்க
ளுக்குப் புத்திரியாகவந்து உதயமாவள். ஆனுல் கர்மத்தாலேற்பட்டிருக்கும் பிரதிபந்தங்
களை விலக்குவதற்கு யாகாதிகள் செய்யவேண்டும்" என்றுர். உடனே அவ்வரசனும் அத
ற்கு வேண்டிய கார்யங்களைச் செய்துவைக்கவேண்டுமென்று அம்மஹரிஷியையே பிரார்த்தி
த்து அவர் உத்திரவுப்படி அசுவமேதயாகம் செய்வதற்கு வேண்டிய யத்னங்கள் செய்தான்.
பிறகு சாஸ்திரவிதிப்படி அசுவமேதயாகம் முடிந்ததும் அகஸ்தியர் முதலிய மஹரிஷிகளின்
ஆக்ஞைப்படி புத்ரகாமேஷ்டியாகம் செய்யவாரம்பித்தான். உடனே ஸுந்தரேசுவரரும் த
னது பத்னியாகிய மீனுக்ஷியை நோக்கி "நீ இந்த புத்ரகாமேஷ்டியாகத்தில் வைதானிகாக்னி
யில் போய் உத்பவிப்பாயாக" என்று அனுமதிகொடுத்தார். உடனே அந்த யாகத்திலுள்ள
வைதானிகாக்னியானது ஸுவர்ணவர்ணமான ஜ்வாலையுடன் பிரகாசித்தது. அதிலிருந்துவந்
த தூமமானது தாமரைவாஸனை பொருந்தியிருந்தது. பிறகு அகஸ்தியமஹரிஷியானவர்
ஹோமம் செய்யவேண்டிய ஹவிஸில் சைவதேஜஸை த்யானம் செய்துகொண்டு யஜமானனு
கிய அவ்வரசனுடன் வடக்குமுகமாக நின்றுகொண்டு ஜ்வலித்துக்கொண்டிருக்கும் வைதா
னிகாக்னியில் ஆஜ்யாஹுதிசெய்ததும் அதனுல் மிகவும் விருத்தியடைந்த அந்த ஜ்வாலையி
ன் மத்தியில் அதிலாவண்யமுள்ள மூன்றுவயதளவுள்ள கன்யகை ஒருவள் தோன்றினுள்.
அவளுடைய ஸௌந்தர்யமானது ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனுலும் சொல்லவொண்
ணுததாயிருந்தது. ஆனுல் லோகவிலக்ஷணமாக மூன்று குசங்களுடன் கூடினவளாய் கா
ணப்பட்டாள். இவ்வத்புதரூபமுள்ள பெண்ணுனவள் அக்கினியிலிருந்து வெளியில் வந்
ததும் "அம்மா அம்மா" என்று தன்னுடைய மதுரமானவாக்கால் கூப்பிட்டுக்கொண்டு
அவ்வரசனது பத்னியாகிய காஞ்சனமாலையின் மடியில் போய் உட்கார்ந்தாள். அந்த காஞ்
சனமாலையின் பாக்கியமே பாக்கியம். வேதத்துக்கெல்லாம எட்டாத அந்த பரம்பொருள்
தானுகவே "அம்மா" என்று கூப்பிட்டுக்கொண்டு மடியில் வந்துட்காருகிறதென்ருல் இந்த
பாக்கியம் யாருக்குக்கிடைக்கும்? தனது பூர்வஜன்மதபஸ்ஸுக்கு பலன் கிடைத்து விட்
டதென்று ஆநந்தஸாகரத்தில் மூழ்கினுள். பிரதிக்ஷணமும் அக்குழந்தையை கட்டிய
ணைத்து முத்தமிட்டாள். உச்சி முகர்ந்தாள். முககமலத்தை இடைவிடாமல் பார்த்
தாள். அதன் மந்தஸ்மிதத்தால் மதிமயங்கினுள். அவளுக்கு உண்டான ஸுகத்துக்கு
ஓர் அளவில்லை. மூன்றுலகங்களுக்கும் தாயாரான அந்த குமாரியை மடியில் அணைத்து

ரதோத்ஸவம், மதுரை.

கட்டிக்கொண்டதும் அந்த மலயத்வஜனின் பிரியையான காஞ்சனமாலைக்கு அவளது ஸ்தனங்களிலிருந்து பால்பெருக வாரம்பித்தது. அவ்வரசனுக்கோ அக்குழந்தையைக் கண்டதுமுதல் கைவல்ய பதவியில் கூட லக்ஷ்யமில்லாமலாய் விட்டது இவ்வாறு இந்த ராஜதம்பதிகள் ஆனந்தக்கண்ணீர் பெருக ஒன்றும் செய்யத் தோன்றாதவர்களாய் அக்குழந்தையையே பார்த்துப் பார்த்துப் பரவசர்களாயிருந்தார்கள். அப்பொழுது அக்குழந்தைக்கு லோகவிலக்ஷணமாய் மூன்றுகுசங்கள் இருப்பதைக் கண்டதும் மனஸில் சற்று வியாகுலமுற்றார்கள். உடனே அடியில் கண்டவாறு அசரீரி வாக்கு கம்பீரமாய் உண்டாயிற்று. "ஓ அரசனே, யோஜிக்கவேண்டாம். உங்களிருவருடைய புண்யபரிபாகத்தாலும் ஜகத்தின் க்ஷேமார்த்தமாகவும், ஸாக்ஷாத் ஜகன்மாதாவான பரமேசுவரியானவள் உங்களுடைய புத்திரியாக அவதரித்திருக்கிறாள். அவளுக்குத் தடாதகையென்று பெயரிட்டு வளர்த்து வந்தால் அவளை விவாஹம் செய்துகொள்ள அவள் புருஷன் வரும் காலத்தில் அவனைக்கண்டதும் இந்த மூன்றாவது குசமண்டலம் தானாகவே மறைந்துவிடும்." இதைக் கேட்டதும் அவ்விராஜதம்பதிகளுக்கு மிகுந்தஸந்தோஷமுண்டாய் உடனே அந்த யாகத்தில் பாக்கியாயிருந்ததை பூர்த்திசெய்துவிட்டு இந்தக்குழந்தைக்கும் ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்களை செய்து விட்டு அந்தக் குழந்தையையும் கையில் பிடித்துக்கொண்டு தங்களது குலகுருவாகிய அகஸ்தியருக்கு நமஸ்காரம் செய்தார்கள். அவரால் வெகுவாக ஆசீர்வதிக்கப் பெற்று அக்குழந்தையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். அக்குழந்தைக்குத் தகுந்தவயது வந்ததும் அதையே தனது புத்ரனாகவும் பாவித்து அதற்கு எல்லாவித வித்யைகளையும் கற்பித்துக் கொடுத்து, அவ்வரசன் தனது கடைசி காலத்தில் அக்குழந்தைக்கே பட்டாபிஷேகம செய்வித்து அவள் ராஜ்யபாரம் செய்வதைக்கண்டு ஸந்தோஷித்துப் பிறகு ஸ்வர்க்கலோகம் போய்ச் சேர்ந்தான். அந்த தடாதகையும் அதிஸாமர்த்தியத்துடன் நீதிநெறி தவறாமல் ராஜ்யபாரம் செய்து எல்லா சத்ருக்களையும் ஜயித்து எல்லா தேசங்களின் ஆதிபத்யத்தையுமடைந்து அந்த கன்யகாபுரியில் ஸுந்தரேசுவரரை ஆராதித்துக் கொண்டு ஸுகமாக காலம் கழித்து வந்தாள்.

5. மீனாக்ஷியை விவாஹம் செய்துகொண்டது.

இவ்வாறு தடாதகையானவள் சற்றேனும் ராஜநீதிதவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்துவருகையில் அவளுக்கு மேன்மேலும் யௌவனம் விருத்தியடைந்தது. அச்சமயம் ஒருநாள் அவள் தனதுதாயாராகிய காஞ்சனமாலையுடன் பின்வருமாறு ஆலோசிக்கலானாள்.



மதுரை புதுமண்டபம் முன்பக்கம்.

அம்மா, எனக்கு வயதோ வந்துவிட்டதே. எப்பொழுது எனக்கு பர்த்தா கிடைக்கப்போகிருர்; எப்பொழுது என்னுடைய இந்த மூன்ருவது ஸ்தனம் மறையும். எனக்கு இதே கவலையாயிருக்கிறது. நான் இந்த ராஜதானியிலேயே உட்கார்ந்திருந்தால் நமதிஷ்டம் ஒருநாளும் கைகூடாது. ஆதலால் நான் திக்விஜயம் என்னும் வியாஜத்தை வைத்துக்கொண்டு இதரதேசங்களில் சுற்றினல்தான் எனக்குத் தகுந்த மணவாளன் ஏற்படுவன்" என்ருள். இது ஸரியான யோசனைதானென்று காஞ்சனமாலையும் ஆமோதிக்கவே, தடாதகையானவள் உடனே தனது மந்திரிகளை வரவழைத்து விஜயயாத்திரையாகத்தான் புறப்பட உத்தேசித்திருப்பதைத் தெரிவித்து அதற்கு ஆகவேண்டிய காரியங்களை ஸந்நத்தம செய்யச்சொல்லி உத்தரவு கொடுத்தாள். அதற்கு மந்திரியாகிய ஸுமதியென்பவர் உலகத்திலுள்ள எல்லா ராஜாக்களும் தடாதகைக்குக்கீழ்ப்படிந்தே இருப்பதாகவும், படைகொண்டுபோய் ஜயிக்கப்பட வேண்டியவர்கள் ஒருவருமில்லையென்றும் தெரிவித்தார். "அப்படியாஞல் ஊர்களையெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு கடைசியில் எட்டு திக்குகளிலுமுள்ள திக்பாலகர்கள் எண்மரையும் ஜயித்துவிட்டு வருவோம்" என்ருள் தடாதகை. இந்த உத்தரவுக் கிணங்க உடனே மந்திரியானவர் ரதகஜதுரகபதாதிகளையெல்லாம் தயாரித்து ரதத்தில் மீன்கொடியை நாட்டி அரண்மனை வாசலில் கொண்டுவந்து நிறுத்திப் புறப்படலாமென்று தெரிவித்தார். தடாதகையும் தனதுதாயாரையும் குலகுருவையும் நமஸ்கரித்து அவர்களால் விடைகொடுக்கப்பெற்று குலகுருவாகிய அகஸ்தியமகரிஷியால் இந்த ஜயயாத்திரையில் அவச்யம் நீ பர்த்தாவை யடைவாய் என்று ஆசீர்வதிக்கப்பெற்று நல்ல ஜயமுகூர்த்தத்தில் வாத்திய கோஷங்கள் முழங்க விஜயயாத்திரை புறப்பட்டாள். இம்மாதிரி திக்ஜயத்துக்காக தடாதகை தேவியானவள் புறப்பட்டிருக்கிருள் என்கிற ஸமாசாரம் இதரதேசங்களில் பரவியவுடன் அந்தந்ததேசத்து அரசர்களெல்லாம் தாம் தாமாகவே பற்பல விதமான உயர்ந்த நஜர்களையெடுத்துக் கொண்டு தடாதகையை வந்துநமஸ்கரித்து சரணமடைந்தார்கள். தடாதகையும் அவர்களுக்கெல்லாம் அபயப்ரதானம் செய்துவிட்டு முன்சென்ருள். இவ்வாறு அநேகதேசங்களைக் கடந்து சென்று இமயமலையை யடைந்து அவ்விடத்தில் பாகீரதியை தர்சனம் செய்து அதில் ஸ்நானம்செய்து அதனல் தன்னை பரிசுத்தயாக்கிக் கொண்டாள். பிறகு மேருவை பிரதக்ஷிணம் செய்துகொண்டு திக்பாலர்களை ஜயிக்க உத்தேசம் கொண்டவளாய்முதலில் கிழக்குதிக்கில் இந்திரனை நோக்கிச்சென்ருள். ஆகாயமார்க்கம் செல்லவேண்டியநிமித்தம் தனது ஸைந்யங்களுக்கெல்லாம் திவ்யமந்திரங்களை உபதேசம் செய்வித்து தனது சக்திமஹிமையால் திவ்ய திருஷ்டியையும் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் திறமையையும்

விழுதுகளுடன் கூடிய ஒரே ஆலமரம், மதுரை தெப்பக்குளத்துக்கு ஸமீபத்திலுள்ளது.

அருளினாள். இவ்வாறு தேவேந்திரனுடைய ராஜதானியாகிய அமராவதியை முற்றுகை போட்டதும் அங்குள்ள தேவஸைன்யங்கள் யுத்தத்துக்குவந்தார்கள். அவர்களைத்தோற்கடித்து நாலாபக்கங்களிலும் ஓடும்படி செய்து விட்டாள். உடனே தேவேந்திரன் பயந்தவனாய் வஜ்ராயுதத்தையும் வாஹனத்தையும் விட்டு தடாதகையினிடம் ஓடிவந்து அவளை நமஸ்கரித்து காமதேனுகல்பகவிருக்ஷம் சிந்தாமணிமாலை இவைகளைக்கப்பமாக ஸமர்ப்பித்தான். அவைகளை அங்கீகரித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு அக்னிதிக்கை நோக்கிச் சென்றாள். அவ்விடம் சென்றதும் அக்னியிலிருந்து தானுண்டானவளாதலால் தடாதகையானவள் அக்னியை தனது தகப்பனாராகப் பாவித்து சைன்யங்களையெல்லாம் ஆரவாரமில்லாமல் அமைதியாய் நடக்கும்படி மந்திரிக்கு ஆக்ஞாபித்தாள். இதையறிந்த அக்னிபகவானானவர் தனது குமாரியைப்பார்க்க ஆவல்கொண்டு மங்களபதார்த்தங்களை காணிக்கையாக எடுத்துக்கொண்டு அவள் ஸமீபத்திற்கு வந்தார். உடனே தடாதகையும் ரதத்தை விட்டிறங்கி அவரை நமஸ்கரித்து அவர் கொண்டு வந்தவைகளை அங்கீகரித்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று "உன்னுடைய பாணிக்ரஹண ஸமயத்தில் நான்ஸாக்ஷியாயிருக்கும் தன்மையை அபேக்ஷிக்கிறேன்" என்று கேட்டுக் கொள்ளப்பட்டாள். இதைக்கேட்டதடாதகை புன்னகை கொண்டு அந்ததிக்கைவிட்டு அடுத்ததிக்காகிய தக்ஷிணத்திற்கேகினாள். அவ்விடத்தில் யமகிங்கார்கள் "மதுராபுரிவாஸிகள் முன்பாக போகாதேயுங்கள்" என்று தர்மராஜாவால் கொடுக்கப்பட்டிருக்குமாக்ஞையையனுஸரித்து இச்சைன்யத்துக்கு முன்



மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் கோயில் கும்பாபிஷேகம்.

நில்லாமல் மறைந்துவிட்டார்கள். தடாதகை வருவதைக்கண்டு யமதர்மராஜாவும் தூரத்திலேயே அஞ்சலிபந்தனாய் நின்றான். மந்திரியாகிய ஸுமதியால் அனுமதிகொடுக்கப்பட்டவனாய் ஸமீபத்தில் வந்து தன்கையிலேந்தியிருந்த கதையையே கப்பமாகக்கொடுத்து நமஸ்கரித்தான். அதைக்கண்டு ஸந்தோஷித்து அதற்குமுன்பாக புறப்பட்டாள் தடாதகை. இவ்வாறு நிர்ருதிதிக்கு, மேற்குதிக்கு வாயுதிக்கு, வடக்குதிக்கு இவைகளுக்கெல்லாம் சென்று அங்குள்ளநிர்ருதி, வருணன், வாயு, குபேரன் இவர்களை ஜயித்துவிட்டு கடைசியாக ஈசான்யதிக்கையடைந்தாள். அந்ததிக்குக்கு அதிபதியாகிய பரமேசுவரனுக்கு முக்கியஸ்தானமாகிய கைலாஸத்தையடைந்து அதை முற்றுகைபோட்டு அதன் வாசலில் தனதுகொடியை நாட்டி ஸிம்ஹநாதம் செய்வித்தாள். அங்குவாசலில் காவலிருந்த நந்திகேசுவரர் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து சிவகணங்களையெல்லாம் திரட்டிக்கொண்டு தடாதகையுடன் எதிர்த்துப்போர்செய்ய வந்தார். ஆனால் தடாதகையானவள் க்ஷணப்பொழுதில் அந்தசிவகணங்களையெல்லாம் சின்னாபின்னமாகப்பாந்து ஓடும்படிசெய்துவிட்டாள். இதைக் கண்டுநந்திகேசுவரர் வியந்து ஒன்றும்செய்யத்தோன்றாதவராய் ஸாக்ஷாத்பரமேசுவரனிடம் ஓடோடியும் வந்து "ஸ்வாமின், யாரோ ஒருபாலையானவள் விலக்ஷணமாக மூன்றுஸ்தனங்களுடன் வந்து நமது ஸைன்யங்களையெல்லாம் ஹதம்செய்துவிட்டாள். நாதபிரம்ஹத்தின்ஸ்வபாவம் தெரிந்தவளாக நாதாநுஸந்தானம் செய்கிறாள். அவளுடன் எப்படியாவது தாங்கள்ஸமாதானம் செய்துகொண்டால் தேவலை. இல்லாவிடில் பெரும் அனர்த்தம் விளையும் போலிருக்கிறது" என்று பரபரப்புடன் சொன்னார்.

மதுராபுரியிலிருந்து தடாதகையானவள் எந்தமுகூர்த்தத்தில் விஜயயாத்திரைக்காக வெளிப்புறப்பட்டாளோ அதேமுகூர்த்தத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் அம்சரூபமாக



திருமலைநாயக்கர் குடும்ப ஸகிதம்.

லிங்கத்திலிருந்து வெளிக்கிளம்பி தடாதகைக்கும் அவளுடையஸைன்யங்களுக்கும் காணாமல் மறைவாகவே தடாதகையோடு கூடவே நெடுகிலும் சென்றுகொண்டிருந்தார். அவள் கைலாஸம் வந்தவுடன் தமதூருக்குவந்து விட்டாளென்ற ஸந்தோஷத்துடன் ஒருவருக்கும் தெரியாமலே தமது ஆஸ்தானத்தில் போய் அமர்ந்திருந்தார். நந்திகேசுவரர் மேற்கூறியாவாறு வந்துமொழிந்தவுடன் புன்னகைசெய்துகொண்டு தாமே நேரில்வந்து ஆகவேண்டியதைச் செய்கிறதாகவும் ஒருவிதத்திலும் கவலைப்படவேண்டாமென்றும் சொல்லி நந்திகேசுவரரைத் தேர்த்திவிட்டு மஹாஸுந்தர ரூபத்துடன் கூடிய ஒருயௌவன புருஷராக ரூபமெடுத்துக்கொண்டு பினாகபாணியாகத் தானே தடாதகைக்கு முன்பாக எதிரில் வந்து மந்தஹாஸத்துடன்நின்றார். அவரைக்கண்டதும் தடாதகைக்கு மனதில்காமவிகாரம் தோன்றி திகைத்து நின்றாள். கையில்பிடித்திருந்த தனுஸை மெதுவாக நழுவவிட்டாள். மார்பில் விலக்ஷணமாகவிருந்த மூன்றாவது ஸ்தனமானது உள்ளே மறைந்து விட்டது. தேகம் முழுமையும் மயிர் சிலிர்த்தது. இன்னதுசெய்வதென்று தெரியாமல் வெட்கத்தால் தலை குனிநதாள். மூன்றாவதுஸ்தனம் மறைந்ததைகவனித்த மந்திரியான ஸுமதியானவர் மெதுவாக ஸமீபத்தில்வந்து "அம்மா, இவர்தான் தங்களது பர்த்தா" என்று ரஹஸ்யமாகச்சொன்னார். அவவார்த்தைகள் அவளுக்குமிகஇனிமையாயிருந்ததால் புன்னகைகொண்டு சித்திரத்திலெழுதியபதுமை போலசைவற்றுநின்றாள். அப்பொழுது ஈசுவரனானவர் அவள் ஸமீபத்தில் வந்து அவளைபாணிக்கிரஹணம் செய்துகொள்வதற்கு இச்சைப்படுவாதாகச் சொன்னார். அதற்கு தடாதகையானவள் தான் மதுராபுரியெனவும் அவ்விடத்தில் தனது தாயார் இருப்பதாகவும் அவளைக்கேட்டு அவள் உத்தரவின் பேரில் தான் செய்துகொள்ள வேண்டுமென்றும் விடைபகர்ந்தாள். "அப்படியே செய்யலாம். இன்றைக்கு எட்டாவது நாளாகிய ஸோமவாரதினம் நான் மதுராபுரிக்குவந்து உன்தாயார் அனுமதிபெற்று உன்னை மணந்து கொள்ளுகிறேன், நீஇப்பொழுது ஸௌகர்யமாய் ஊருக்குப்போய்வா" என்று சொல்லிவிட்டு ஈசுவரன் அந்தர்த்தானமாயினர். உடனே தடாதகையானவள் வெகுஸந்தோஷத்துடன் மந்திரியுடனும் ஸைந்யங்களுடனும் வேகமாகத்திரும்பி மதுராபுரிக்கு வநது தன்தாயாரிடம் எல்லாவிருத்தாந்தங்களையும் சொன்னாள். அவளும் அவைகளைக்கேட்டு ஆனந்தபரவசையாய் தன்பெண்ணை கட்டியணைத்து உச்சிமுகர்ந்தாள். உடனே மறு திங்கட்கிழமை நடக்கப்போகிற விவாஹ மஹோத்ஸவத்துக்காக ஊர்முழுமையும் அலங்கரிக்கும்படியும் மற்றுமாகவேண்டிய எல்லாகார்யங்களையும் வேகமாய் செய்யும்படியும் அக்ஞைபிடப்பட்டது. அவ்வாறே நொடிப்பொழுதில் மதுராபுரியானது இந்திரலோகமாக மாறிவிட்டது. நவரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டு பார்ப்பவர் கண்களைக்கவரும்படி

யான கல்யாணமண்டபமும் மிகவத் புதமாய் நிர்மாணம் செய்யப்பட்டது. அரசர்கள் எல்லோருக்கும் கல்யாணப் பத்திரிகைகளனுப்பப்பட்டு அவர்கள் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தார்கள். எல்லாம் ஸஜ்ஜமாயிருந்தன. முகூர்த்த தினமாகிய ஸோமவாரம் ஸூர்யோதய மாயிற்று. மதுராபுரியில் எங்கு பார்த் தாலும் நானுவித மங்கள வாத்தியங்கள் முழங்கவாரம்பித்தன. தேவதைகளெல் லாம் ஒவ்வொருவராய் வர ஆரம்பித்தா ர்கள். பிரம்மாவானவர் அநேக முனி



மாரியம்மன் கோவில், மதுரை.

கணங்களோடும் ஸரஸ்வதீ தேவியோடும் வந்துசேர்ந்தார். மஹா விஷ்ணுவானவர் ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியுடனும் தமது கணங்களுடனும் வந்து சேர்ந்தார். தேவேந்தி ரன் சசிதேவியுடனும் தமது பரிவாரங்களுடனும் முப்பத்திமுக்கோடி தேவர்களுட னும் வந்துசேர்ந்தான். வஸிஷ்டர் அருந்ததி முதலான மஹரிஷிகளெல்லோரும் அகஸ் தியமஹரிஷிக்கு கொடுத்த வாக்குப்படி தக்ஷிண திக்கில் மதுராபுரியில் மீளவும் ஸாக்ஷாத் பரமேசுவரன் மணவாளத்திருக்கோலம் புரிவதைக்கண்ணுற்று கிருதார்த்தர்களாக வேண்டுமென்று ஓடோடியும் வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு நகாம் முழுமையும் ஆநந்த கோலாஹலமாய் ஆரவாரிக்க முகூர்த்தலக்னம் கிட்டிற்று. அச்சமயத்தில் ஹாலாஸ்ய நாதனாகிய ஸுந்தரேசுவரர் கோடி மன்மதன் ஒரேஸமயத்தில் உருவெடுத்து வந்தாற் போல் மிகுந்த வழகிய உருவத்தோடு கூடினவராய் கல்யாணத்திற்கனுகுணமான ஆடை யாபரண அலங்காரத்துடன் ஜ்வலித்துக்கொண்டு மஹத்தான ரிஷபவாகனத்திலேறிக் கொண்டு, தமது கணங்கள் முன்செல்ல குண்டோதரன் பின்னால் அத்புதமான வெண்கு டைபிடிக்க, ஆகாசத்திலிருந்து புஷ்பவர்ஷங்கள் வர்ஷிக்க அப்ஸரகணங்கள் நர்த்தனம் செய்ய, தேவகன்னிகைகள் கானம் செய்து கொண்டு ஸுவர்ணபாத்திரங்களிலிருந்து ரத் னாக்ஷதைகளை வாரியிறைக்க முனிக்கூட்டங்களும் ரிஷிக்கூட்டங்களும் வேதகோஷங்களு டன் சூழ்ந்துவா மதுராபுரி வந்துசேர்ந்தனர். உடனே பிரம்மாவிஷ்னு முதலானதேவர் களும் அகஸ்தியர் முதலான மகர்ஷிகளும் எதிர்கொண்டு வந்து மங்களவாத்தியங்களுடன் கல்யாணமண்டபத்துக்கு அழைத்துச் சென்றதும் முதன் முதலில் ஸாக்ஷாத்லக்ஷ்மீ தே வியும் ஸரஸ்வதீதேவியுமாக அரண்மனைக்குட் சென்று காஞ்சனமாலையைக் கூட்டிவந்தார் கள். காஞ்சனமாலையும் பரபரப்புடன் வந்து ஈசுவரனுடைய சாணாரவிந்தங்களை புஷ்பங்க ளால் அர்ச்சித்து நமஸ்கரித்து தனது புத்திரியாகிய தடாதகையை கிருபைசெய்து பாணிக் கிரஹணம் செய்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தாள். ஈசுவரனும் மந்தஹாஸத் துடனதையங்கீகரித்து எல்லோருடனும் உள்ளேசென்று கல்யாணமேடையிலமர்ந்தார். உட னே லக்ஷ்மீதேவியும் ஸரஸ்வதிதேவியுமாக உள்ளேசென்று காஞ்சனமாலையைப்பார்த்து "அம்மா, எங்களுக்கும் எல்லாஜகத்துக்கும் தாயாரான உங்கள் பெண்ணெங்கே" என்று

கேட்டு கல்யாணப்பெண்ணை அழைத்து வந்தீசுவரனுக்குப் பக்கத்தில் மேடையிலுட்காரவைத்தார்கள். பாண்டிய அரசர்களுக்கு குலபுரோஹிதர் அகஸ்தியராயிருந்தபோதிலும் அவருக்குகைலாஸத்தில் நடந்த பார்வதீகல்யாணத்தைதர்சனம் செய்து வைப்பதாக முன்னமேயே வரமளிக்கப்பட்டிருப்பதால் அவரை இப்பொழுது எல்லா வைபவத்தையும் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருக்க சொல்லி விட்டு பிரம்மதேவனானவர் தாமே பௌரோஹித்யத்துக்கு உட்கார்ந்தார். தடாதகையின் தகப்பனாராகிய மலயத்வஜபாண்டியர் காலஞ்சென்று விட்டதால் அரசர்களெல்லாம் விஷ்ணுவின் அம்சம் என்பதாக சொல்லிக்கொண்டு மஹாவிஷ்ணுவானவர் தாமேபெண்ணை கன்யகாதானம் செய்ய ஏற்பட்டார்.

அம்மன் கோயில் வாசல்புரத்தின்மேல் இருக்கும் ஷண்முகரின் சிலை.

இப்படி யேற்பட்டதில் இவருக்கு ஒரு உத்தேசம் உண்டு. முன்னொருகாலத்தில் ஈசுவரன் விசுவரூபியாயிருந்த ஸமயம் தாமும் பிரம்மாவுமாக ஈசுவரனுடைய பாதத்தையும் சிரஸையும் கண்டுபிடிப்பதாக பிரதிக்ஞை யேற்படுத்திக்கொண்டு தாம் வராஹாவதாரம் எடுத்து கீழ் லோகங்கள் எவ்வளவுதூரம் போயும முடியாமல் திரும்பிவந்தது முதல் எப்படியாவது இந்த ஈசுவரனுடைய பாதத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற அவா மிகவும் ஜாஸ்தியாயிருந்தது. இக்கல்யாண ஸந்தர்ப்பத்தில் தாம் பெண்ணின் தகப்பனார் ஸ்தானத்தில் தாரை வார்க்கிறவராக ஏற்பட்டால் மாப்பிள்ளையை நல் வரவேற்று பாதப்பிரக்ஷாளனம் செய்விக்கும் ஸமயத்தில் அந்த அருமையான சரணாவிந்தங்களை கண்டுபிடித்து விடலாமென்னுமெண்ணத்துடனேயே அவ்வித மேற்பட்டனர் போலும்! மேலும் பரம்பொருளாகிய பராசக்தியை மடியில் உட்கார்த்திவைத்துக் கொள்கிறதென்றால் அது லேசான காரியமா. அந்த பாக்கியம் எல்லாருக்கும் கிடைக்கக்கூடியதா. த்ரிலோக ஸம்ரக்ஷகரான ஸாக்ஷாத் பரமாத்வாகிய மஹாவிஷ்ணுகூட தமது யோக நித்ரையைவிட்டு இந்தபாக்கியத்தை ஆவலுடன் அபேக்ஷித்து வந்து பிரார்த்தித்து நின்றாரென்றால் அதன் பெருமையை எடுத்துரைக்கலாகுமோ? இதுமட்டுமா. மூன்றுலகங்களிலும் “ஈசுவரன்” என்றால் நிர்விவாதமாய் பரமசிவனைக்குறிக்குமேயொழிய வேறொருவரும் அந்த சப்தத்திற்கு வாச்யராக மாட்டார்கள். இம்மாதிரி ஐசுவர்யத்துக்கெல்லாம் ஒரே இருப்பிடமாயும், ஈசுவர சப்தத்திற்கு ஒரேலக்ஷ்யமாயும் உள்ள ஸாக்ஷாத்பரமேசுவரன் கூட பாணிக்கிரஹணஸமயத்தில் தமது கையைமல்லாத்தி ஏந்தி பரதேவதையின் கையை அதன்மேல் வைத்துக்கொண்டு தாங்கினார் என்றால் அந்த அம்பிகையின் ஹஸ்தங்களின் கௌரவாதிசயத்தைச்சொல்லவும் வேண்டுமோ? இன்னுமோர் விசேஷம் யாதெனில் ஈசுவரனானவர் மஹாவிஷ்ணுவிட

மிருந்து அம்பாளைக்கிரஹித்துக் கொண்டதும் அக்னிபகவானை பிரதக்ஷிணம் வந்து ஸப்தபதிக்காக அம்பாளுடைய காலை கையால் பிடித்துக்கொண்டார். இந்த அத்புதக்காக்ஷியானது உலகத்திலுள்ளவர்களுக் கெல்லாம் அவர்கள் எவ்வளவு மஹிமைபொருந்தியவர்களாயிருந்தாலும் ஸாக்ஷாத் பரதேவதையாகிய பராசக்தியின் பாதபத்மங்களை யடைந்து அவைகளை கெட்டியாகப்பிடித்துக் கொள்வதைத்தவிர வேறுகதியில்லையென்பதை வற்புறுத்திக்காட்டுவது போலிருந்தது. மூன்றுலகங்களுக்கும் சரண்யராயிருக்கும் ஈசுவரன் கையில் அம்பாளின் சரணாரவிந்தமிருந்ததைப் பார்த்தால் உலகத்திலுள்ள மானுஷாநந்தம் முதல் பிரம்மாநந்தம் வரையுள்ள எல்லா ஆநந்தங்களையுமளிக்கக்கூடியது மழிவில்லாததுமான ஸதாசிவாந்தமுள்ள ஐசுவர்யம் அந்தசரணாரவிந்தங்களிலிருந்துமே உண்டாகின்றதென்பதை நன்கு விளக்குவது போலிருந்தது. இவ்வாறு ஆதிசேஷனும் வர்ணிக்க வொண்ணாத மஹிமையுடனும விபவத்துடனும் மீனாக்ஷிஸுந்தரேசுவாருடைய விவாஹ மங்கள மஹோத்ஸவமானது முடிந்ததும் வந்திருந்த தேவதைகளையெல்லாம் அவரவர்களுக்குத் தக்கவாறு ஸம்மானம் செய்து உத்தரவுகொடுத்தனுப்பி விட்டு ஈசுவரனுனவர் விவாஹ மண்டபத்தினின்றும் புறப்பட்டு தனிமையில் போயுட்கார்ந்து கொண்டு மீனாக்ஷீ தேவியுடன் பரிஹாஸமாக ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார்.

6. பதஞ்சலி மஹர்ஷிக்கு தாண்டவதர்சனம் கொடுத்தது

தடாதகையின் கல்யாணமஹோத்ஸவம் முடிந்த சற்று நேரத்துக்கெல்லாம் மாத்தியான்ஹிககாலம் வந்து விட்டதால் கல்யாணத்திற்கு வந்திருந்தவர்க ளெல்லோரும் பொத்தாமரைக்குளத்திற்குப்போய் ஸ்நானம் செய்து மாத்யான்ஹிகவிதிகளை செய்து முடித்துக்கொண்டு கோவிலுக்குச்சென்று ஸ்ரீமீனாக்ஷி ஸுந்தரேசுவார்களைத்தர்சனம்செய்து விட்டுத்திரும்பி வந்ததும் அரண்மனையில் போஜனத்துக்கழைக்கப்பட்டார்கள். அச்சமயம் பதஞ்சலி வியாக்ரபாதமஹர்ஷிகள் தயங்கிநின்று ஸுந்தரேசுவார் ஸமீபத்தில் போய் பின்வருமாறு தெரியப்படுத்திக்கொண்டார்கள் "ஸ்வாமின், தாங்கள் தஹரபுண்டரீகமாகிய சிதம்பர க்ஷேத்ரத்தில் எங்களிடம் பரமகிருபையுடன் அருளிச்செய்த தாண்டவதர்சனம் என்று எங்களுக்குக் கிடைத்ததோ அன்றுமுதல் பிரதிதினமும் அவ்விடத்தில் தங்களுடைய தாண்டவதர்சனத்தை மத்தியான வேளையில் தர்சனம் செய்து விட்டுத்தான் ஆகாரம் செய்வது என்ற நியமத்துடனிருந்துவருகிறோம். ஆதலால் இப்போழுது சிதம்பரம் போக எங்களுக்கு ஆக்ஞை கொடுக்கவேண்டும் அல்லது வேறு எவ்வித ஆக்ஞை கொடுத்தாலும் அவ்வாறு நடக்கசித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். இதைக்கேட்ட ஈசுவரனுனவர் அவர்களுடைய நியமத்தினல் மகிழ்ந்து, "ஹேமஹர்ஷிகளே, நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்களுடைய நியமத்துக்கு பங்கம் வரவேண்டாம். சிதம்பரக்ஷேத்ரமானது விராட் புருஷனுடைய ஹிருதயஸ்தானமாகிறது. இந்தஹாலாஸ்யமோ த்வாதசாந்தஸ்தானமாயுள்ளது. ஆதலால் சிதம்பரத்தைக்காட்டிலும் இது விசேஷமான க்ஷேத்ரம். இந்தக்ஷேத்ரத்திலேயே உங்களுக்கு தாண்டவதர்சனம் கொடுத்தருளிகிறோம். கோவிலுக்குப் போங்கள்" என்று கூறினர். உடனே ஈசுவரன் தாண்டவதர்சனமளிக்கப் போகிறார் என்கிற செய்தி எங்கு பார்த்தாலும் பரவவே திரளான ஜனங்கள் கோவிலில் கூடினார்கள். அவ்வி

டத்தில் கர்ப்பகிருஹமாகிய இந்திரவிமானத்துக்கு முன்பாகக்கீழ்பக்கத்தில் ரத்தினங்களாலலங்கரிக்கப்பட்ட மிகவும் ஜ்யோதிர்மயமானராஜதஸபை யொன்று நொடிப்பொழுதில் தோன்றிற்று. அதில் சிவகணங்களெல்லாம் சிதம்பரத்திலுள்ளபடி அவரவர்களுக்கேற்பட்ட வாத்யங்களுடன் தோன்றினார்கள். அந்தஸபையின் நடுவில் ஒருமணிபீடம் போடப்பட்டிருந்தது. அதில் அபஸ்மாராஸுரனைக்குப்புறப்போட்டுத் தமது வலதுகாலால் அழுத்திக்கொண்டுத்தமது இடது காலைக்குஞ்சிதபாதமாகத் தூக்கிக்கொண்டு பத்துக்கைகளிலும் பத்துவிதமான ஆயுதங்களை தரித்துக்கொண்டு ஸாக்ஷாத் பரமேசுவரனானவர் அவ்யாஜகருணைமூர்த்தியானதால் எல்லோருக்கும் ஆநந்தத்தாண்டவக் காக்ஷியைக் கொடுத்தருளினார். அந்த அத்புதமானகாக்ஷியைக்கண்டு ஆநந்தபரவசராகப் பதஞ்சலிமஹர்ஷியானவர் பின்வருமாறு ஸ்தோத்ரம் செய்தார்.

सुवर्णपद्मिनीतटान्तदिव्यहर्म्यवासिने सुपर्णवाहनप्रियाय सूर्यकोटितेजसे ।
अपर्णया विहारिणे फणाधरेन्द्रधारिणे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ १ ॥

सुतुङ्गभङ्गजह्नुजासुधांशुखण्डमौलये पतङ्गपङ्कजासुहृत्कृपीटयोनिचक्षुषे ।
भुजङ्गराजकुण्डलाय पुण्यशालिबन्धवे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ २ ॥

चतुर्मुखाननारविन्दवेदगीतिभूतये चतुर्भुजानुजाशरीरशोभमानमूर्तये ।
चतुर्विधार्थदानशौण्डताण्डवस्वरूपिणे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ३ ॥

शरन्निशाकरप्रकाशमन्दहासमञ्जुलाधरप्रवालभासमानवक्त्रमण्डलश्रिये ।
करस्फुरत्कपालमुक्तविष्णुरक्तपायिने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ४ ॥

सहस्रपुण्डरीकपूजनैकशून्यदर्शनासहस्रनेत्रकल्पितार्चनाच्युताय भक्तितः ।
सहस्रभानुमण्डलप्रकाशचक्रदायिने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ५ ॥

रसारथाय रम्यपत्रभृद्रथाङ्गपाणये रसाधरेन्द्रचापशिञ्जिनीकृतानिलाशिने ।
स्वसारथीकृताजनुन्नवेदरूपवाजिने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ६ ॥

अतिप्रगल्भवीरभद्रसिंहनादगर्जितश्रुतिप्रभीतदक्षयागभोगिनाकसद्मनाम् ।
गतिप्रदाय गर्जिताखिलप्रपञ्चसाक्षिणे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ७ ॥

मृकण्डुसूनुरक्षणावधूतदण्डपाणये सुगण्डमण्डलस्फुरत्प्रभाजितामृतांशवे ।
अखण्डभोगसंपदर्थिलोकभावितात्मने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ८ ॥

मधुरिपुविधिशक्रमुख्यदेवैरपि नियमार्चितपादपङ्कजाय ।
कनकगिरिशरासनाय तुभ्यं रजतसभापतये नमः शिवाय ॥ ९ ॥

हालास्यनाथाय महेश्वराय हालाहलालंकृतकन्धराय ।
मीनेक्षणायाः पतये शिवाय नमो नमः सुन्दरताण्डवाय ॥ १० ॥

இவ்வாறு தாண்டவமூர்த்தியை ஸ்தோத்ரம் செய்து நமஸ்கரித்து இம்மாதிரியாகவே எப்பொழுதும் இந்த த்வாதசாந்த க்ஷேத்ரத்தில் பிரதிதினமும் மத்யானவேளையில் ரஜதஸபையில் தாண்டவதர்சனம் கொடுத்து ஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். அவ்வண்ணமே செய்வதாக அவருக்கு அநுக்ரஹம் செய்துவிட்டு ஈசுவரனவர் திரும்பவும் அரண்மனைக்கு தடாதகையிடம் சென்றார். உடனே எல்லோரும் போஜனத்துக்குச் சென்றார்கள்.

7. குண்டோதரனுக்கன்னமளித்தது.

அத்புதமான ஆநந்தத் தாண்டவதர்சனம் செய்து கொண்டு மஹர்ஷிகள் முதலிய எல்லோரும் திரும்பி அரண்மனைக்கு வந்ததும் அவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. எல்லோரும் மிகுந்த உத்ஸாகத்துடனும் கோலாகலத்துடனும் போஜனம் செய்தார்கள். ஆனால் எவ்வளவு பேர்கள் சாப்பிட்டபோதிலும் உள்ளே தயாரிக்கப்பட்டிருந்த அன்னம் சாகம் பக்ஷணம் வகைறுக்கள் குறைந்தபாடில்லை. ஸாக்ஷாத் ஈசுவரன் மாப்பிள்ளையாக வருவதால் அவர் பின்னோடு ஏராளமான கணங்கள் வருமென்று நினைத்து காஞ்சனமாலையானவள் எல்லா பதார்த்தங்களையும் திரள்திரளாய் சேகரித்து மலைபோல் குவித்து வைத்திருந்தாள். சிவகணங்கள் ஒன்றுவது சாப்பாட்டுக்கு வாராமையால் எல்லாபதார்த்தங்களும் அப்படியே மிஞ்சிப்போய்விட்டது. இது விஷயத்தை வேலைக்காரர்கள் காஞ்சனமாலையிடம் தெரிவிக்க காஞ்சனமாலை தனது பெண்ணிடம் சொன்னாள். தடாதகையும் மெதுவாக தனது பர்த்தாவிடம் தெரிவித்தாள். ஈசுவரனவர் காஞ்சனமாலைக்கேற்பட்டிருக்கும் கர்வத்தையறிந்து புன்னகை செய்துகொண்டு தடாதகையைநோக்கி “நீ எல்லாதேசங்களையுமடக்கி ஏகசக்ராதிபத்யத்திலிருந்து எட்டுதிக்பாலகர்களையும் வசப்படுத்தியாளும்பொழுது எல்லாருமுனது பிரஜைகளேயொழிய எனக்குத்தனியாக மனுஷ்யாளேது. இருந்தாலும் என்னோடு கொடை பிடித்துவந்த இந்த குண்டோதரன் ஒருவன்தான் என்னைவிடாமல் இருக்கிறான். அவனைக் கூட்டிக்கொண்டுபோய் அவனுக்கு அன்னமளித்தால் பிறகு பார்ப்போம்” என்று சொல்லி குண்டோதரனைப் பார்த்து அவன் வயற்றிலுள்ள வைசுவாநராக்னியை தூண்டிவிட்டு விட்டார். உடனே அகோரமான பசியால் வருந்திக்கொண்டு தடாதகையுடன் குண்டோதரன் உள்ளேசென்றான். இவன் ஒருவனைகூட்டிக் கொண்டு தடாதகைதிரும்பி வருவதைக்கண்டு காஞ்சனமாலை “மாப்பிள்ளை மனுஷ்யனிவன் ஒருவன்தானோ” என்று பரிஹாஸம் செய்து கொண்டு அவனை போஜனசாலைக்குள் அழைத்துச்சென்றாள். அங்கே பதார்த்தங்களைப் பரிமாறுவதற்குள் மிகவும் அவஸரப்பட்டுக்கொண்டு குண்டோதரன் எதிரில்வைக்கப்பட்ட ஸமஸ்தஸாமான்களையும் ஒருங்கே திரட்டி ஒரு பிராணாஹுதியாக செய்துவிட்டு திரும்பவும் பசி பசியென்று பறந்தான். அதைக்கண்டு அங்குள்ள எல்லா வேலைக்காரர்களையும் மிகவேகமாக மேன்மேலும் பதார்த்தங்களைக் கொண்டுவந்து போடச் சொன்னாள். அவை முழுமையையும் சாப்பிட்டுவிட்டு மீளவும் மிகப்பசியால் வருந்தினவனாய் பாகசாலைக்குள்ளேயே நுழைந்து அங்கிருந்த பக்குவமாகாத பதார்த்தங்கள் யாவற்றையும் பாக்கியன்னியில் விழுங்கிவிட்டான். அப்படியும் அவனுக்குப் பசி தணியவில்லை. காஞ்சனமாலையைப் பார்த்து இவ்வளவுதானா நீசேகரித்து வைத்த பதார்த்தங்கள் என்று

கேட்டான். அவள் வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டு பெண் தடாதகையிடம் விருத்தாந்தத்தைச் சொன்னாள். தடாதகையும் தனது பர்த்தாவிடம் சென்றாள். அவளைக் கண்டதும் ஈசுவரனானவர் "நான் அனுப்பிய குண்டோதரனுக்கு அன்னமளித்தாயிற்றா. இன்னும் பாக்கியிருக்கிறதா, இன்னுமொருகணத்தை யனுப்பட்டுமா" என்று கேட்டார். உடனே தடாதகையானவள் "ஸ்வாமி தங்களுடைய லீலாவிபவத்தால் குண்டோதரனுக்கே இன்னும் பசிதீர ஆகாரம்போடமுடியவில்லை. சேகரித்து வைக்கப்பட்டிருந்தபதார்த்தங்கள் முழுமையும் பக்வமானது, ஆய்க்கொண்டிருந்தது, ஆகாதது எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டான். இன்னும் அவனுக்குப் பசியடங்கவில்லை. எனது தாயாருக்கும் கர்வபங்கமாய் விட்டது. தாங்கள்தான் கிருபைசெய்யவேண்டும்" என்றாள். இதைக்கேட்டதும் ஈசுவரன் புன்சிரிப்புக்கொண்டு "நீ நாணத்தால் என்னுடன் ஸரியாகப் பேசாமலிருந்ததால் உன்னைப்பரபரப்புடன் பேசும்படி செய்வதற்காக இப்படிச்செய்தேன். கவலைப்படவேண்டாம்" என்றார். இதற்குள் குண்டோதரனும் ஓடோடியும் வந்து ஈசுவரனுடைய சரணாரவிந்தங்களில் விழுந்து அகோரபசியால் வருந்துவதாகக் கதறினான். உடனே ஈசுவரன் மீனாக்ஷியைநோக்க ஸாக்ஷாத் பூரதேவதையும் தமது அன்னபூர்ணா சக்தியால் நான்கு அக்ஷயமான அன்னகுண்டங்களை உண்டாக்கி அவைகளை சாப்பிடச் சொல்லி குண்டோதரனுக்கு ஆக்ஞையிட்டாள். அவனும் மிகுந்தபரபரப்புடன் அந்த நான்கு குழிகளிலிருந்தும் சாப்பிடவே அவனுடையபசி ஒருவாறு சமனமாச்சுது. இந்த நன்கு அன்னகுண்டங்களும் இன்னும் அந்த கோயிலில் காணப்படுகின்றன.

8. வேகவதியை வரவழைத்தது.

இவ்வாறு குண்டோதரனுடைய பசியானது ஒருவாறு தீர்ந்ததும் அவனுக்குண்டான தாகத்துக்கு ஓர் எல்லையில்லை. அந்த ஊரிலுள்ள கிணறுகள் குளங்கள் எல்லாவற்றையும் வற்றடித்துவிட்டான். திரும்பவும் ஈசுவரனிடம் வந்து தாஹம் என்று தபித்தான். உடனே கருணாமூர்த்தியான ஈசுவரனனவர் தமது சிரஸிலிருந்த கங்கையை சற்று கீழே வரும்படி ஆக்ஞாபித்தார். உடனே மிகவும் வேகத்துடன் கங்காதேவியானவள் நதீரூபமாக வந்தாள். அந்தஜலத்தைக் குடிக்கச்சொல்லி குண்டோதரனுக்கு ஆக்ஞையிடவே அவனும் அப்படியே அந்தநதியை குறுக்கேதடுத்து தன்வாய்க்குள் விட்டான். மணல் முதலிய எல்லாமுள்ளே போயும் அவன் தாஹத்தால் குடித்துக் கொண்டேயிருந்தான். மீனாக்ஷியானவள் மிக்க மனமிறங்கினவளாய் ஈசுவரனைப்பார்த்து அவனது தாஹத்தை சமனம் செய்யும்படி பிரார்த்தித்தாள். ஈசுவரனும் தாம் தூண்டிவிட்டிருந்த குண்டோதரன் வயற்றிலுள்ள வைசுவானராக்னியைத் தணித்தார். உடனே அவன் முன்போலாய் பசிதாகமடங்கினவனாய் ஜகத்பிதாக்களான மீனாக்ஷிஸுந்தரேசுவரர் முன்பாகவந்து அவர்களின் சரணங்களில் நமஸ்கரித்து எழுந்திருந்து அஞ்சலி பத்தனாய் ஸ்தோத்ரம் செய்தான். அதனால் ஸந்தோஷசித்தமுடையவராய் ஈசுவரனனவர் அவனை இந்த க்ஷேத்ரத்தில் தமது கணங்களுள் முதன்மையானவனாக இருக்கும்படி அநுக்ரஹித்துவிட்டு மீனாக்ஷியை நோக்கி "இனி இது முதல் கங்கையானவள் இந்த க்ஷேத்ரத்தில் வேகவதி என்னும் பெயருடன் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருப்பாள். இந்த வேகவதியில் ஸ்நானம் செய்கிறவர்கள் எல்

லா பாபங்களினின்றும் விடுபடுவார்கள்'' என்று பகர்ந்தார். இந்த வேகவதிதான் இப்பொழுது வைகையென்று சொல்லப்படும் நதி.

9. ஏழுகடலையும் வரவழைத்தது.

இத்தகைய விபவத்துடன் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவாருடைய விவாஹ மஹோத்ஸவம் நடந்தேறியதும் அந்த தேசத்திலுள்ள எல்லோருடையவும் பிரார்த்தனைக்கிணங்க அங்கு வந்திருந்த மஹர்ஷிகளால் ஈசுவரனவர் ஸுந்தரேசபாண்டியர் என்கிற பெயரோடு அந்த பாண்டியராஜ்யத்தின் அதிபதியாக பட்டாபிஷேகம் செய்து வைக்கப் பெற்றார். அதுமுதல் அந்தராஜ்யத்தை மிகவும் சிறப்புற்று விளங்கும்படி ஆண்டுவந்தார். இச்சமயம் ஒருநாள் தமது பத்னியாகிய மீனாக்ஷீ தேவியானவள் முகம்வாடியிருப்பதைக் கண்டு அதற்குக் காரணமென்னவென்று கேட்டார். அதற்கவள் தனது தாயார் புண்யம் ஸம்பாதிக்கவேண்டி தீர்த்தயாத்திரையாக ஸமுத்திர ஸ்நானத்திற்காக மறுநாள் புறப்பட உத்தேசித்திருப்பதாகவும் அதனால் தான் கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தாள். இதைக்கேட்டதும் ஈசுவரனவர் "அதற்காக நீ கவலைப்படுவானேன். உனது தாயார் ஒரு ஸமுத்ரத்திலல்லவா ஸ்நானம் செய்ய உத்தேசித்தாள். இதோ ஏழுஸமுத்திரங்களையும் இங்கு வரவழைக்கிறேன். இங்கேயே அவள் ஸ்நானம் செய்து கிருதார்த்தையாகலாம்'' என்று சொல்லி ஸ்மரித்தமாத்திரத்தில் ஸப்த ஸமுத்திரங்களும் புருஷரூபமாக ஈசுவரனின் முன்பாக தோன்றி வணங்கிநின்றன. ஈசுவரன் அவைகளை நோக்கி "நீங்கள் எழுவரும் இந்நகமது கோயிலுக்குக் கீழ்புரமாயுள்ளகுளத்தில் ஆவிர்ப்பவிக்க வேண்டும்'' என்று உத்தரவுகொடுத்தார். உடனே அவைகளின் புருஷரூபங்கள் மாறி அலைகளுடன் கொந்தளித்துக்கொண்டு ஏழுஸமுத்திரங்களும் குறிப்பிட்டகுளத்தில் வந்து சேர்ந்தன. இந்த அத்புதக்காக்ஷியைக் கண்டு எல்லோரும் பிரமித்து எழுகடல்குளமென்று அந்தக்குளத்துக்குப் பெயர் கொடுத்து அதில் ஸ்நானம்செய்து கிருதார்த்தர்களானார்கள்.

10. மலையத்வஜனை யழைத்தது.

இவ்வாறு ஏழுகடல்களும் மதுரையிலேயே ஒருகுளத்தில் வந்துவிட்டதை யறிந்த காஞ்சனமாலையானவள் மிகவும் ஸந்தோஷத்துடன் மஹர்ஷிகளையழைத்து தனக்குவிதிப்படி ஸமுத்ரஸ்நானம் செய்துவைக்கும்படி பிரார்த்தித்தாள். அதற்கு அகஸ்தியமஹர்ஷியானவர் காஞ்சனமாலைக்கு ஸமுத்ரஸ்நான விதியையெல்லாம் எடுத்துச்சொல்லி ஆனால் பர்த்தாவுடனாவது புத்திரனுடனாவது சேர்ந்து ஸ்நானம் செய்தால்தான் புண்யபலன் கிடைக்குமென்றும் இல்லாவிடில் பிரயோஜனமில்லையென்றும் சொன்னார். இதைக்கேட்டதும் காஞ்சனமாலைக்கு அதிகவருத்தமுண்டாயிற்று. தனக்குப்புருஷனுமில்லை, புத்ரபாக்யமுமில்லையேயென்று நொந்துகொண்டாள். தனது புத்ரியாகிய தடாதகையிடம் இதைச் சொல்லி என்ன செய்வதென்று கேட்டாள். உடனே தடாதகையும் தனது நாயகனாகிய ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் போய் விஷயத்தைத் தெரியப்படுத்த அவரும் தமது மனதால் இந்திரனுடன் கூட தேவலோகத்திலிருந்த மலையத்வஜபாண்டியனை ஸ்மரித்தார். ஸ்மரித்த மாத்திரத்தில் மலையத்வஜபாண்டியனும் ஈசுவரனை தர்சனம் செய்வதற்காக ஓடோடியும் வக்

தான். ஈசுவரனும் அவனைத் தமது மாமனாரென்ற காரணத்தால் எதிர்கொண்டு சென்று மரியாதையுடன் வரவேற்று அவனை காஞ்சனமாலையுடன் ஸமுத்திரஸ்நானஞ் செய்யச் சொன்னார். அவ்வாறே மலையத்வஜனும் தனது புத்திரியாகிய தடாதகையைக் கண்டு ஸந்தோஷித்துத் தனது பிரியபத்னியாகிய காஞ்சனமாலையைக் கண்டு தழுவிக்கொண்டு விதிப்படி எழுகடல் குளத்தில் ஸமுத்திரஸ்நானம் செய்தான். உடனே அவ்வரச தம்பதிகளுக்கு திவ்யமயமான சரீரமுண்டாயிற்று. ஆகாயத்தில் புஷ்பகவிமானம் தோன்றிற்று. தம்பதிகளிருவரும் கரையிலேறி ஸுந்தரேசுவரரை நமஸ்கரித்து அவ்விமானத்திலேறிக்கொண்டு சிவஸாயுஜ்யத்தை யடைந்தார்கள். இவ்வாச்சர்யத்தைக்கண்டு எல்லோரும் அகமகிழ்ந்தார்கள்.

11. உக்ரபாண்டியனவதாரம் செய்தது.

பிறகு ஸுந்தரபாண்டியனும் மீனாக்ஷியும் ஸுகமாக ராஜ்யபாரம் வஹித்துவருகையில் வெகுநாளாயும் தனக்கு புத்ரஸந்தானமில்லாமையால் மீனாக்ஷி மனம்வருந்துவதையறிந்த ஸுந்தரேசுவரரானவர் அவளை கர்ப்பவதியாகச் செய்தார். அந்த கர்ப்பமும் நாளுக்குநாள் விருத்தியாயிற்று. சாஸ்திரவிதிப்படி பும்ஸவனம் ஸீமந்தம் முதலானவை நடத்தப்பட்டன. பத்துமாஸங்கள் நிறைந்ததும் ஸோமவாரம் ஆருத்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பிரஹஸ்பதியானவர் கேந்திரத்திலிருக்கும் ஸமயத்தில் மீனாக்ஷியானவள் நல்ல புத்ரனைப் பெற்றாள். உடனே கிரமப்படி அக்குழந்தைக்கு ஜாதகர்மா நாமகரணம் முதலியன செய்வித்தார்கள். உக்ரபாண்டியனென்று பெயரிட்டார்கள். ஊர்முழுமையும் உத்ஸவமாகக் கொண்டாடினார்கள். பிறகு அக்குழந்தைக்கு நான்காவது மாதத்தில் சந்திரதர்சனமும், ஆறாவது மாதத்தில் அன்னப்பிராசனமும், மூன்றாவதுவயதில் சௌளமும், ஐந்தாவது வயதுமுடிந்ததும் உபநயனமும் விதிப்படி செய்வித்தார்கள். அதுமுதல் அதிசீக்கிரத்தில் அரசர்களுக்குரிய எல்லாவித்யைகளையும் கற்றுக்கொண்டு எட்டாவது வயது பூர்த்தியாவதற்குள்ளாகவே எல்லாவித்யைகளிலும் நிகரில்லாதவனாக ஆய்விட்டான். பிறகு யௌவனபருவம் வந்ததும் அவனுக்கு முதலில் விவாஹத்தை நடத்திப் பிறகு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து வைக்கவேணுமென்ற எண்ணத்துடன் ஸுந்தரபாண்டியனானவர் தனது மந்திரிகளுடன் ஆலோசிக்கலானார்.

12. உக்ரபாண்டியனுக்கு ராஜசின்னங்கள் கொடுத்தது.

அரசனிவ்வாறு ஆலோசித்துக் கொண்டிருக்கும் காலத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரரானவர் கல்யாணபுரத்தரசனாகிய ஸூர்யவம்சத்திலுதித்த ஸோமசேகரனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி அவனது குமாரத்தியாகிய காந்திமதீ யென்னும் பெண்ணை மதுராபுரிவேந்தனாகிய ஸுந்தரபாண்டியன் குமாரனான உக்ரபாண்டியனுக்கு விவாஹம் செய்துகொடுக்கும்படி கட்டளையிட்டு அந்தர்த்தானமானார். அந்த ஸோமசேகரராஜனும் மிகவும் சிவபக்தனானதால் ஈசுவரனால் கொடுக்கப்பட்ட ஆக்ஞையை வெகு ஸந்தோஷத்துடன் சிரஸா கிஹித்து உடனே தனது பரிவாரங்களுடனும் புத்திரியுடனும் புறப்பட்டு மதுராபுரிக்குச் சென்றனன். அவனது வருகையைக் கேள்விப்பட்டதும் ஸுந்தரபாண்டியனும் எதிர்கொண்டுபோய் அவனை மரியாதைகளுடன் வரவேற்று போகக்ஷேமங்களை பரஸ்பரம் விசா

ரித்த பிறகு அவ்வாசன் வந்த கார்யத்தைத் தெரிந்துகொண்டு ஸௌந்தரபாண்டியனும் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஜோஸ்யர்களைக்கொண்டு ஜாதகங்கள் ஒத்திருக்கிற விஷயம றிந்து பிரஹஸ்பதிபகவானைக்கொண்டு பெண்ணுக்கு ஸகலஸாமுத்ரிகாலக்ஷணங்களும் பொருந்தியிருப்பதையும் தெரிந்துகொண்டு உடனே கல்யாணத்துக்கு ஆகவேண்டிய ஏற் பாடுகளையெல்லாம் செய்வித்தான். சுபமுகூர்த்தத்தில் உக்ரபாண்டியனுக்கும் காந்திமதிக் கும் விவாஹமஹோத்ஸவம் நடந்தேறியது. கல்யாணகோலத்துடன் வதூவரர்களுக்கு ஊர்வலம் செய்வித்து குலத்து வழக்கப்படி கோயிலுக்குச் சென்று ஸ்ரீ மீனாக்ஷிஸௌந்தரே சுவரரை தர்சனம் செய்து பூஜை செய்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பிவந்து உடனே உக்ரபாண்டியனை ராஜஸிம்ஹாஸநத்தில் ஏற்றிவைத்து ராஜசின்னங்களால் அலங்கரிப்பித்து மற்றுமுள்ள சத்ர, சாமராதிகளையெல்லாம் சேர்ப்பித்து மஹர்ஷிகளைக் கொண்டு பட்டாபி ஷேகம் செய்வித்தான் ஸௌந்தரபாண்டியன். இச்சமயத்தில் ஸௌந்தரேசுவரர் உக்ரபாண் டியனுக்கு மூன்று ஆயுதங்களைக் கொடுத்தார். அவையாவன— வலயம், சக்தி (வேல்), சண்டாயுதம். இவைகளைக் கொடுத்து “இவைகள் பின்னொருகாலத்தில் உனக்கு உபயோ கப்படும். இந்திரன் ஒரு ஸமயம் உனக்குப் பகைவனாவான். அக்காலத்தில் அவன் முடி சிதற இந்த வலயத்தாலடி. கடலானது உன்னை ஒருஸமயம் த்வேஷிக்கும். அச்சமயம் இந்த வேலால் அதை வற்றடி. மஹாமேரு ஒரு ஸமயம் கர்வமடையும். அச்சமயத்தில் இந்த சண்டாயுதத்தால் அதன் செருக்கை யடக்கு” என்று சொன்னார். உக்ரபாண்டிய னும் மிகுந்த வணக்கத்துடன் இந்த மூன்று ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டு ஸாக்ஷாத் ஈசுவராவதாரமான தனது தகப்பனாரை வணங்கிநின்றான். உடனே ஸௌந்தரபாண்டியனும் தடாதகையும் தங்களது புத்ரனைத் தழுவியணைத்து உச்சிமுகர்ந்து நீதிநெறி தவாமல் ராஜ் யம் வஹிக்குமாறு புத்திசொல்லிவிட்டு ஆலயத்தினுள் சென்று ஸாக்ஷாத் மீனாக்ஷிசுந்தரே சுவரருடன் ஐக்கியமானார்கள்.

13. உக்ரபாண்டியனால் கடலை வற்றடித்தது.

தகப்பனார் சொல்லுக்கிணங்கி உக்ரபாண்டியன் மநுநீதி தவறாமல் ராஜ்யபாரம் செய்துவருகையில் மாதம் மும்மாரி மழை பெய்து தேசமெங்கும் ஸௌபிக்ஷமாக ஜனங்க ளெல்லாம் ஸந்தோஷமாயிருந்தார்கள். உக்ரபாண்டியனும் ராஜதர்மத்தையனுஸரித்து 96 அசுவமேதயாகம் செய்து முடித்தான். இதைக்கண்ட தேவேந்திரனானவன் இவ்வாச னிடம் பயமும் அஸூயையும் கொண்டவனாய் ஸமுத்ரராஜனாகிய வருணபகவானையழைப் பித்து ஸமுத்ரத்தைப் பொங்கச்செய்து மதுரைநாட்டையழிக்கும்படி கட்டளையிட்டனன். தேவராஜனுக்கு பயந்து ஸமுத்ரராஜனுமதற்கிணங்கி உடனே மிகுந்த ஆரவாரத்துடன் யுகாந்தப்பிரளயம் போல் பொங்கி மதுரை நாட்டை நோக்கி அர்த்தராத்திரியில் வெகு ஆ டம்பரமாய் வந்தான். ஜனங்களெல்லாம் பிரமித்து நடுங்கவாரம்பித்தார்கள். ஒருவருக் கும் இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அச்சமயத்தில் கோயிலில் மூலலிங்கத்தி னின்றும் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் வெளிக்கிளம்பி அரண்மனையில் நித்திரையிலிருந்த உக்ர பாண்டியனுக்கு ஸ்வப்னத்தில் ஒரு ஸித்தர் மாதிரி ரூபத்துடன் தோன்றி “நீ அரசு செ லுத்துவது மிகவும் நேர்த்தியாயிருக்கிறது! ஸமுத்திரம் கரைபுரண்டு கொந்தளித்துக்

கொண்டு உனது நாட்டையே மூழ்க்கி த்வம்ஸம் செய்யவெண்ணங்கொண்டு யுகாந்தப் பிரளயம் மாதிரி ஊருக்கு ஸமீபத்தில் வந்துவிட்டது. ஜனங்களெல்லாம் பதறுகிறார்கள். ஜனங்களை எவ்வித ஆபத்திலிருந்தும் ரக்ஷிக்கவேண்டியது க்ஷத்திரியனாகிய ராஜாவின் கடமையாயிருக்க நீ ஸ்வஸ்தமாய் தூங்குவது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. உடனே எழுந்திருந்து போய் நான் கொடுத்திருக்கும் சக்தியாயுதத்தை அந்த ஸமுத்திரத்தின் பேரில் பிரயோகம் செய். உடனே அதன் கர்வமடங்கும்” என்று சொல்லி மறைந்தார். உடனே உக்ரபாண்டியனும் பரபரப்புடன் எழுந்திருந்து தனது மந்திரிகளையும் கூட்டிக்கொண்டு ஸமுத்ரம் பொங்கி வந்துகொண்டிருக்கும் திக்கை நோக்கிச் சென்றான். அங்கு அதன் கொந்தளிப்பைக் கண்டதும் பிரமித்து நின்றான். உடனே ஸ்ரீஸுந்தரேசுவரரானவர் மறுபடி அவன் முன்பாக ஸ்வப்நத்தில் தோன்றிய ஸித்தர் மாதிரியாகவே ரூபமெடுத்துக் கொண்டுவந்து உடனே வேகமாக சக்தியாயுதத்தை பிரயோகிக்கச் சொன்னார். உக்ரபாண்டியனும் அவரை வணங்கி அவர் சொன்னமாதிரியே அச்சமுத்திரத்தை நோக்கி சக்தியை விட்டெறிந்தான். அந்த வேலின் முனை ஸமுத்திரத்தில் பட்டவுடனே வடவாக்னிபட்டது போல் ஸமுத்ரஜலம் முழுமையும் “உஸ்” என்ற சத்தத்துடன் வற்றிப் போயிற்று. கூடியிருந்த எல்லா ஜனங்களும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். உக்ரபாண்டியனும் அந்த ஸித்தரை வெகுவாகக் கொண்டாடினான். அரசனை அநுக்ரஹித்து விட்டு அந்த ஸித்தரும கோயிலுக்குள் சென்று மூலலிங்கத்தில் தேஜோரூபமாய் மறைந்தார். இந்த ஸித்தருக்கு தனி ஸந்நிதி ஸ்வாமி கர்ப்பகிருஹத்தின் வடக்கில் முதல் பிராகாரத்திலிருந்துவருகிறது.

14. இந்திரனின் கர்வபங்கம் செய்வித்தது.

ஒருகாலத்தில் சேரசோழபாண்டிய ராஜ்யங்கள் மூன்றிலும் மழையென்ற பேச்சேயில்லாமல் ஆறுகள் குளங்கள் கிணறுகளெல்லாம்கூட வற்றிப்போய் புல்பூண்டுகள் முதல் உலர்ந்துபோய் ஜனங்கள் முதலிய ஸகல ஜீவஜந்துக்களும் அன்னபானாதிகளுக்கு மார்க்கமில்லாமல் வருந்தினதைக் கண்ட மேற்சொன்ன மூன்றுதேசத்து மன்னர்களும் ஒருங்குகூடி யோசித்துக் கடைசியில் பாண்டியராஜனின் குலகுருவாகிய அகஸ்தியரிடம் போய் முறையிட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து மூவருமாக மலய பர்வதத்துக்குச் சென்றார்கள். அங்கே அகஸ்திய மஹர்ஷியைக் கண்டு வணங்கி தங்கள் தேசங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைத் தெரியப்படுத்தி அதை நிவர்த்திக்க மார்க்கம் சொல்லித்தர வேண்டுமென்று யாசித்தார்கள். அம்மகரிஷியும் சற்றுநேரம் தியானத்திலிருந்துவிட்டு அம்மன்னர்களை நோக்கி “ஏ, அரசர்களே உங்களுடைய தேசங்களுக்கு வந்திருக்கும் அனர்த்தம் ஸ்வல்பமானதல்ல. நவக்கிரகங்களின் கதி வித்யாஸத்தால் இத்தீங்கு நேர்ந்திருக்கிறது. அங்காரகனும், சூரியனும் முன் சென்றுகொண்டு பின்னாடி சுக்கிரன் வக்கிரித்திருப்பதால் இன்னும் பன்னிரண்டு வருஷகாலம் உங்கள் ராஜ்யங்களில் மழையே கிடையாது. துவாதச வருஷக்ஷாமம் இப்பொழுதுதான் கோரமாய் ஆரம்பித்திருக்கிறது. இதை பரிஹரித்துக்கொள்ள ஒரே ஒரு உபாயந்தான் உள்ளது. அதாவது மதுராபுரியிலுள்ள காலகாலனை ஹாலாஸ்யநாதனை பூஜித்து அவருடைய கிருபாகடாக்ஷமாரி பொழியும்படி செய்தால், இந்த துர்பிக்ஷம் நொடிப்பொழுதில் விலகிவிடும். அவர் பக்தவத்ஸலரானதால்

நீங்கள் போய் அங்குள்ள ஹேமபத்மாகரத்தில் ஸ்நாநம் செய்து அவரை பக்தியுடன் பூஜித்து ஏகாக்ரசித்தர்களாய் தியானித்து உங்கள் தேசங்களுக்கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று உருக்கத்துடன் பிரார்த்தித்துக்கொண்டீர்களானால் உங்களுக்கு அவர் கட்டாயம் அனுக்ரஹம் செய்வார்" என்று சொன்னார். இதைக்கேட்ட அவ்வரசர்கள் ஹாலாஸ்யநாதரை ஆராதிக்கவேண்டிய விதத்தைத் தங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று வேண்ட அகஸ்தியரும் அவர்களுக்கு ஸோமவார விருதத்தின் கிரமத்தை நன்கெடுத்துரைத்து அவ்விதிப்படி ஸோமஸுந்தரரை ஆராதியுங்கள் என்று சொல்லியனுப்பிவிட்டார். அவர்களும் அவ்வண்ணமே மதுராபுரியையடைந்து, ஸோமவார விருதத்தை அனுஸரித்து ஸோமஸுந்தரரை வெகுவாக ஆராதித்தார்கள். அவ்வாராதனையில் ஈடுபட்டு ஸுந்தரேசுவரரும் மனமிரங்கி இந்திரனுடைய கர்வத்தை அடக்க இதுதான் தருணமென்றெண்ணி அசரீர வாக்கு மூலமாய் அவ்வரசர்களுக்குச் சொன்னதாவது. "உங்கள் ராஜ்யங்களில் மழைவேண்டுமானால், மேகங்களுக்கதிபதியாகிய இந்திரனை நீங்கள் பிரார்த்திக்க வேண்டும். அவனைப் பிரார்த்தித்தீர்களேயானால் அவன் உங்களுக்கு வேண்டியதைக் கொடுப்பான். என்னை ஆராதித்ததற்குப்பலனாக ஸ்வர்க்கலோகத்திலுள்ள இந்திரனிடம் போவதற்கு வேண்டிய சக்தியை யான் தருகிறேன்" என்றார். இதைக்கேட்ட அவ்வரசர்களும் உடனே இந்திரலோகம்போகப் புறப்பட்டார்கள். ஆனால் பாண்டியதேசத்தரசனாகிய உக்ரபாண்டியனுக்குமட்டும தனது குலகுருவாகிய அகஸ்தியரையும், தனது குலதெய்வமாகிய ஹாலாஸ்யநாதரையும் தவிர்த்து மற்றொருவரைப்போய்ப் பிரார்த்திப்பதில் இஷ்டமில்லாமலிருந்தது. ஆனாலும் ஸுந்தரேசுவரர் அசரீர வாக்காய்க் கொடுத்த உத்தரவுக்கிணங்க சேரசோழமன்னர்களுடன் இநதிரலோகம் போய்ச்சேர்ந்தான். இவர்களுடைய வரவைத் தெரிந்துகொண்ட தேவேந்திரன் தனது ஆஸனத்திற்குக் கீழாக மூன்றாஸனங்களை போட்டுவித்து அவ்வரசர்கள் மூவரையும் ஸபைக்குள் அழைத்துவரச் சொன்னான். சேரசோழமன்னர்கள் இருவரும் முன்னதாக வந்து இந்திரனை நமஸ்கரித்து அவர்களுக்காகப் போடப்பட்டிருந்த ஆஸனத்தில் அமர்ந்தார்கள். உக்ரபாண்டியனோவெனில் நேராக வந்து இந்திரனுடனொன்றும பேசாமலேயே, அவனுடைய உயர்ந்த ஆஸனத்திலேயே அமர்ந்தான். தேவேந்திரனும் அவர்கள் வந்த கார்யத்தை வினவ செரசோழமன்னர்கள் தங்கள் தேசங்கள் துர்பிக்ஷததால் வருந்துவதாயும், தயவுசெய்து மழை கொடுத்தருள வேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். பாண்டியனோ வாயைத்திறக்கவில்லை. தேவேந்திரனும் அப்படியே ஆகட்டுமென்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு சேரசோழமன்னர்களுக்கு இரண்டு சின்ன ஹாரங்களை ஸம்மானமாக ஸமர்ப்பித்தான். பாண்டியனிடத்தில் இந்திரனுக்கு மிக்க கோபமும் அஸூயையும் ஏற்பட்டிருந்ததென்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனை அவமானப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் அவனுக்கு எல்லாரையும்விட சிறந்த மரியாதை செய்யும் பாவனையாய் ஒரு மனுஷனாலும் தூக்கமுடியாத அவ்வளவு பாரமாயுள்ள ஓர் ரத்தினஹாரத்தை அவன் கழுத்தில் போட்டான். ஆனால் உக்ரபாண்டியனோ தன் பிதாவாகிய ஸுந்தரேசுவரரின் அனுக்கிரஹத்தால், அந்த ஹாரத்தைச் சற்றேனும் லக்ஷியம் செய்யாமல் அதி சுலபமாய் தரித்தான். இதைக்கண்டு இந்திரனும் வியப்படைந்து தன் உத்தேசம் கைகூடாததைக் குறித்து வியசனமுற்று அவ்வரசர்

களுக்கு விடைகொடுத்தனுப்பினான். அவர்களும் தத்தம் ராஜ்யம்போய்ச் சேர்ந்தார்கள். சோசோழ ராஜ்யங்களில் யதேஷ்டமாக மழைபெய்து சுபிக்ஷம் ஏற்பட்டுவிட்டது. பாண்டியராஜ்யத்திலோ க்ஷாமத்தின் கொடுமை வரவர அதிகரித்தது. உக்ரபாண்டியனும் பிரதிதினமும் கோயிலில் ஹாலாஸ்யநாதரைப் பிரார்த்தித்தான். ஒருநாள் வேட்டைக்காக இவன் மலயபர்வதத்திற்குப் போயிருந்த சமயத்தில் அவ்விடத்தில் புஷ்களம், ஆவர்த்தகம் முதலிய நான்கு மேகங்கள் தங்கியிருப்பதைக் கண்டான். வர்ஷிக்காமல் அங்கிருப்பதைக்கண்டு கோபங்கொண்டவனாய், அந்த நான்கையும் பிடித்துவந்து தன் ராஜ்யத்திலுள்ள காராக்ருஹத்தில் அடைத்துவிட்டான். இதைக் கேள்வியுற்ற தேவேந்திரன் மிகவும் கோபாக்கிராந்தனாய் உக்ரபாண்டியனுடன் யுத்தத்திற்கு வந்தான். உக்ரபாண்டியனும் கோவிலுக்குச் சென்று ஸுந்தரேசுவரரைப் பூஜித்து பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, இந்திரனுடன் யுத்தத்திற்குச் செல்ல அனுமதிகேட்டான். ஸுந்தரேசுவரரும் தாமவனுக்குக் கொடுத்த வலயாயுதத்தை எடுத்துச செல்லும்படிக்கும், அதைக் கடைசியில் உபயோகப்படுத்தும்படிககும், அவனுக்கு ஜயம் உண்டாகுமென்றும சொல்லியனுப்பினார். உடனே உக்ரபாண்டியனுக்கும் தேவேந்திரனுக்கும் மஹத்தான யுத்தம் ஆரம்பித்தது. சஸ்திரயுத்தம், அஸ்திரயுத்தம், மல்லயுத்தம் எல்லாம் நடந்தன. எல்லாவற்றிலும் உக்ரபாண்டியனே ஜயமடைந்தான். இதைக்கண்டு மிக்க மனவருத்தம்கொண்ட தேவேந்திரன் ஒரே அடியால் உக்ரபாண்டியனை தொலைக்க வெண்ணி கடைசியில் தன் வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான். உடனே உக்ரபாண்டியனும் ஸாக்ஷாத் ஈசுவரனின் வார்த்தையை ஸ்மரித்துக்கொண்டு அவரால் அனுக்ரஹிக்கப்பட்ட வலயாயுதத்தை மிக வேகமாய் சுழற்றியெறிந்தனன். அவ்வலயாயுதமானது எதிரில் வந்த வஜ்ராயுதத்தைத் தவிடுபொடியாக அடித்துவிட்டு தேவந்திரனின் சிரஸிலிருந்த கிரீடத்தைத் தாக்கி அதைக் கீழே தள்ளிச் சிதறவடித்தது. இவ்வாறு தனது முடியிழந்ததும் தேவேந்திரன் மிக வெட்கப்பட்டுக்கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் திரும்பி தனதூருக்கு ஓடிவிட்டான், உக்ரபாண்டியனும் கோயிலுக்குச் சென்று ஈசுவரனிடம் நடந்தவற்றைச் சொல்லி நமஸ்கரித்துவிட்டு அரண்மனை போய்ச்சேர்ந்தான். தேவேந்திரனும் தனதூரிலிருந்து ஒரு கடிதமெழுதி உக்ரபாண்டியனுக்கனுப்பினான். அதில் தான் செய்தது பிசகென்றும் ஸாக்ஷாத் பரமேசுவரராகிய ஸுந்தரேசுவரரின் புத்திரன் உக்ரபாண்டியனென்பதைத்தான் மறந்துவிட்டதாகவும, பாண்டிய ராஜ்யத்தில் யதேஷ்டமாக மழைபொழிய உடனே செய்விப்பதாயும், தயவு செய்து சிறையிலடைத்து வைத்திருக்கும் நான்கு மேகங்களையும் விடுவிக்கப் பிரார்த்திப்பதாயும், எழுதியிருந்தான். இதைப் பார்த்ததும் உக்ரபாண்டியன் மழை பெய்வதற்கு யார் பாத்தியமென்று கேட்க இந்திரனுக்குப் பிரியனான ஸப்தக்கிராமாதிபதியாகிய சிறந்த சிவபக்தனான ஏகவீரனென்பவன் தான் பாத்தியமென்றுரைக்க உடனே நான்கு மேகங்களையும் சிறையினின்றும் விடுவித்தனன். அதுமுதல் பாண்டியராஜ்யத்தில் ஏராளமான மழை பெய்து மிகவும் சுபிக்ஷமாகவிருந்தது.

15. மேருவின் கர்வத்தையடக்கி ஸ்வர்ண நிதியை எடுத்துவந்தது.

இவ்வாறு உக்ரபாண்டியன் பிரதிதினமும் தவறாது மீனாக்ஷி ஸுந்தரேசுவரரைப்

பூஜை செய்து ஆராதித்து வரும் நாளில் அவனுக்கு ஒரு புத்ரோத்ஸவமுண்டாயிற்று. அப்புத்ரனுக்கு வீரபாண்டியனென்று பெயரிட்டார்கள். சிறிதுகாலம் சென்றதும் ஒரு ஸமயம் நாடெங்கும் அநாவிருஷ்டியால வருந்திற்ற. அரசனும் ஜோஸ்யர்களைத் தருவித்து அதற்குக் காரணம் கேட்டதில் நவக்ரஹங்களின் வக்ரத்தாலிது நேர்ந்திருக்கிறதென்றும் இன்னும் கொஞ்சகாலம் அப்படித்தானிருக்குமென்றும் தெரிவித்தார்கள். ஊரிலுள்ள பிராம்மணர்களெல்லாம் ஜீவனத்துக்கு யாதொரு மார்க்கமுமில்லாததால் அயலூர்களுக்குச் செல்ல ராஜாவின் உத்திரவை நாடினார்கள். இதைக்கண்ட அரசன் மிகவும் மனவருத்தமுற்று மந்திரிகளுடன் ஆலோசித்தும் ஒன்றும் தோன்றாதவனாய் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ மீனாக்ஷி ஸௌந்தரேசுவரரைப் பூஜை செய்து பிரார்த்தித்து மன்றாடினான். எப்பொழுதும் இதே விசாரமாய் உருகினான். ஸ்ரீ ஸௌந்தரேசுவரரும் ஸித்தர் ரூபமாக அரசனுக்கு ஸ்வப்நத்தில் தோன்றி "இந்த அநாவிருஷ்டியானது இன்னும் ஒருவருஷமிப்படித்தானிருக்கும. பிறகு ஏராளமாக விருஷ்டியேற்படும். ஆதலால் அதுவரையில் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கு வேண்டிய தனத்தை நீ வெளியிலிருந்துதான் கொண்டுவந்தாகவேண்டும். நான் உனக்குக் கொடுத்திருக்கும் சண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு வடக்கேயுள்ள மேருபர்வதத்தையடைந்து அதை அந்த சண்டாயுதத்தால் தாக்கினாயேயானால் அது உன்னிடம் பயந்து உனக்கு இடம் கொடுக்கும். அதன் மத்தியில் ஏராளமான தனம் புதையலாக இருக்கிறது. அதிலிருந்து உனக்கு வேண்டியதை எடுத்துவந்து பிரஜைகளுக்கும் கொடுத்து நீயும் வைத்துக்கொண்டு இந்த ஒருவருஷகாலத்தைத் தள்ளிவிடலாம்" என்று சொன்னார். அவ்வார்த்தைக்கிணங்கி உடனே உக்ரபாண்டியனும் சண்டாயுதத்தையெடுத்துக்கொண்டு ஏராளமான ஸேனைகளையும் திரட்டிக்கொண்டு மேருவை நோக்கிச் சென்றனன். மேருபர்வதத்தையடைந்ததும் அதைப் பிரதக்ஷிணம் செய்து அதற்கு முன்பாக நின்றுகொண்டு ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் சொல்படி அதை சண்டாயுதத்தாலடித்தான். உடனே அந்த மேருபர்வதமானது ஒரு பந்துபோல சுற்றவாரம்பித்தது. தனக்கு இன்னது நேர்ந்ததென்று தெரியாததாய் அந்த பர்வதமானது பயந்துகொண்டு புருஷாகாரமாய் உக்ரபாண்டியனுக்கு முன்பாக வந்துநின்று தன்னை யடித்ததற்கு யாதுகாரணமென்று கேட்டது. அதற்கு உக்ரபாண்டியன் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் தனக்குச் சொன்னதைச் சொல்லி அம்மலையிலுள்ள தனத்தை யபஹரித்துச் செல்லுவதற்காகத்தான் வந்திருப்பதாகச் சொன்னான். இதைக்கேட்டதும் அந்தப் புருஷரூபியான பர்வதம் சொன்னதாவது— "எனக்கு ஜங்கமரூபமென்றும் ஸ்தாவரரூப மென்றும் இரண்டு ரூபங்களுண்டு. அதில் ஜங்கமரூபத்தோடு நான் பிரதிதினமும் மதுராபுரிக்குச் சென்று ஹாலாஸ்யநாதரைப் பூஜை செய்து நியமத்துடன் ஆராதித்து வருவேன். இப்பொழுது கொஞ்சகாலமாய் எனக்கு ஏற்பட்ட மதச்செருக்கால் நான் அவ்வாறு செய்யாமல் தவறியிருந்துவிட்டேன். ஆதனால் என் மதத்தை யடக்கவேண்டி ஸ்ரீ ஸௌந்தரேசுவரரிந்தமாதிரி செய்திருக்கிறார். நீ அவருடைய புத்ரனானதால் உன்னுடைய வீர்ய பராக்ரமங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நான் செய்த அபராதத்திற்கு இப்பொழுது நான் பட்ட அடிபோதாது. நீ அபேக்ஷிக்கிறபடி வேண்டியதனத்தை யெடுத்துச்செல்லு" என்று சொல்லி ஸ்வர்ணப்புதையல் இருந்த இடத்தையும் காண்பித்துவிட்டு மறைந்தது. உடனே உக்ர

பாண்டியனும் தனது ஆள்களை விட்டு அங்குள்ள மலைக்கல்களைப் பெயர்த்து உள்ளிருந்த புதையலிலிருந்து தனக்கு வேண்டியமட்டில் ஏராளமான ஸுவர்ணக்குவியல்களை மூட்டை மூட்டையாய் எடுத்து ஆனைகள்பேரிலும் ஒட்டகைகள்பேரிலும் குதிரைகள் பேரிலும் ஏற்றிக்கொண்டு திரும்பவும் அப்புதையலை கல்பாறைகளைப் போட்டு மூடி அதில் தனது ராஜாங்க முத்திரையையிட்டு ஊருக்குத் திரும்பி வந்து தனது பிரஜைகளுக்கெல்லாம் ஒருவருஷ ஜீவனத்துக்குவேண்டிய அளவு தனம் கொடுத்துத்தானும் மீதியாயுள்ள தனத்தைக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரருக்கு கோபுரங்கள் பிராகாரங்கள் முதலியன கட்டுவித்தான். நாட்டிலுள்ள பிரஜைகளும் யாகாதிகள் முதலிய விருஷ்டிஸாதனமான காரியங்களைச் செய்தார்கள். உடனே மழை பெய்ய ஆரம்பித்தது. ஊர் முழுமையும ஸௌக்யமுண்டாயிற்று. சிறிதுகாலம் சென்றதும் தனது புத்ரனாகிய வீரபாண்டியனுக்கு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்து உக்ரபாண்டியனும் காந்திமதியும் சிவஸாயுஜ்யத்தையடைந்தார்கள்.

16. வேதார்த்தோபதேசம் செய்தது.

முன்னொருகாலத்தில் கண்வர் முதலான மஹர்ஷிகளெல்லாம் வேதங்கள் முழுமையையும் ஸாங்கோபாங்கமாக அத்யயனம் செய்துவிட்டு அதற்கு அர்த்தம் தெரியாமல் வருந்துகையில் ஈசுவரனானவர் சிவபக்தனான ஒரு கிழட்டு பிராமணரூபத்துடன் விபூதிருத்திராக்ஷங்கள் தரித்துக்கொண்டு அவர்கள் முன்பாகத் தோன்றி அவர்கள் படும் வருத்தத்திற்குக் காரணத்தையறிந்து அவர்களை ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவராலயத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதியில் போய் அவரை நன்கு உபாஸித்தால் அவர் வேதார்த்த உபதேசம் செய்வார் என்று சொல்லிப்போனார். அவ்வாறே அம்மஹர்ஷிகளும் ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தையடைந்து அங்குள்ள பொத்தாமரைக்குளத்தில ஸ்நானம் செய்து தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதிக்குச் சென்று ஒரு கார்த்திகை பௌர்ணமி முதல் மறு கார்த்திகை பௌர்ணமிவரையில் ஒரு ஸம்வத்ஸரகாலம் வெகு நியமத்துடன் ஈசுவரனை பூஜை தபஸ் முதலியவற்றால் திருப்தி செய்வித்தார்கள். ஈசுவரனும் திருப்தியடைந்த மனத்தினராய் பதினாறு வயதுள்ள யுவாவாகக் கோடிஸூர்யப் பிரகாசமான தேஜஸுடன் விபூதிருத்ராக்ஷமணிந்து மந்தஹாஸத்துடன் அந்த ரிஷிகளுக்கு முன்வந்து அவர்கள் படும்துயரத்தையறிந்து அவர்களை ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வேதார்த்தம் முழுமையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்கிக் காட்டினார்.

17. ரத்னவியாபாரம் செய்தது.

வீரபாண்டியனுக்கு அநேகம் போகஸ்திரீகளிருந்தார்கள். அவர்களிடத்தில் அநேகம் குமாரர்கள் அவனுக்கு உண்டாயிருந்தார்கள். ஆனால் தர்மபத்னியிடம் ஒரு புத்ரன் கூட பிறக்கவில்லை. இதனால் வியாகுலமுற்றவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை பலவாற்றானும் பூஜித்து ராஜ்யத்துக்குப் பட்டத்துக்கு உபயோகப்படும்படியான ஒரு புத்ரனை யாசித்தான். ஈசுவரனும் மனமிரங்கி அவனுக்கு அநுக்ரஹம் செய்தார். உடனே அவனுடைய பட்டமஹிஷிக்கு ஒரு புத்ரன் பிறந்தான். அவனை மிகவும் செல்வமாக வளர்த்துவந்தார்கள். அக்குழந்

தைக்கு ஐந்தாம் வயது நடக்கும்பொழுது வீரபாண்டியனானவன் ஒருநாள் வேட்டையாடப்போனவிடத்தில் ஒரு புலியால் கொல்லப்பட்டான். இது செய்தி கேட்டதும் அவனுடைய போகஸ்திரீகளின் குமாரர்கள் அரண்மனையின் கஜானாவிலுள்ள விலையுயர்ந்த ரத்னங்கள் ஆடைகள் ஆபரணங்கள் முதலியவத்றையெல்லாம் அபஹரித்துக்கொண்டு மூலைக்கு ஒருவராய் ஓடிவிட்டார்கள். மந்திரிகள் இக்குழந்தையைக் கொண்டு வீரபாண்டியனுக்கு உத்தரகிரியைகளையெல்லாம் செய்வித்து பிறகு ராஜாவின்றி ராஜ்யமானது அராஜகமாயிருந்தால் சீக்கிரத்தில் நாசமாய் விடுமென்ற கவலையுடன் இந்த ஐந்து வயது குழந்தைக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்க யத்னம் செய்தார்கள். அரண்மனை கஜானாவில் போய்ப் பார்த்ததும் அங்கு ஒரு ஆபரணமாவது காணவில்லை. கிரீடத்தைக்கூடக் காணோம். கிரீடமில்லாமல் பட்டாபிஷேகம் எவ்விதம் செய்விக்கிறது. புதிதாக செய்விக்கிறதென்றாலும் அதற்குத் தகுந்த சிரேஷ்டமான ரத்னங்கள் உடனே எங்கு கிடைக்கும். தாமதமானால் ராஜா இல்லாத ராஜ்யம் பாழாய்விடுமே என்று மிகவருந்தி எல்லாவற்றிற்கும் ஸ்ரீ ஸுந்தரேசுவர் தான் கதி. அவரை சரணமடைந்து அவர் விட்டவழி செல்வோமென்றெண்ணி இந்த ராஜ குமாரனையுமழைத்துக்கொண்டு ஆலயம் சென்று அங்கு ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை நன்கு பூஜித்து தங்களது மனோபீஷ்டங்களைத் தெரிவித்துத் தாங்கள் செய்யவேண்டியது யாது என்பதை உத்தரவு கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்து நின்றார்கள். சற்று நேரமானபிறகு கோயிலுக்குள்ளிருந்தும் வெளியே வந்து கோபுரவாசலில் ஸ்ரீ ஸுந்தரேசுவரரின் உத்தரவை யெதிர்பார்த்துக்கொண்டு அந்த ராஜகுமாரனுடன் காத்திருந்தார்கள். அச்சமயத்தில் கோயிலுக்குள்ளிருந்து ஒரு வைசியவியாபாரி இடுப்பில் ஒரு பெட்டியுடனும் தோளில் ஒரு பையுடனும் கம்பளியுடனும் அவ்வழியாக வந்து மந்திரிமார்களையும் ராஜகுமாரனையும் கண்டு எதற்காக அவர்கள் முகம்வாடி யங்கு நிற்கிறார்களென்று விசாரித்தான். அவர்கள் விஷயத்தைச் சொல்ல உடனே அந்த வைசியன் தான் ஒரு ரத்னவியாபாரியென்றும் தன்னிடத்தில் மிகவும் சிரேஷ்டமான விலையுயர்ந்த நவரத்னங்களிருப்பதாயும், அவைகளை உடனே எடுத்துக் காண்பிப்பதாயும் சொல்லி அங்கேயே ஒரு பக்கத்தில் தனது தோளிலிருந்த கம்பளியை விரித்து அதன்மேல் தன் பையிலிருந்தும் பெட்டியிலிருந்தும் பார்ப்பவர்கள் கண்களைக் கவரும்படியான அதிசிலாக்கியமான ரத்னங்களையெடுத்துப் பரத்தினான். எவ்வளவோ ரத்னங்களை பார்த்திருக்கும் அந்த மந்திரிகள் இந்த ரத்னங்களைக் கண்டதும் பிரமித்து வியப்படைந்தார்களென்றால் அவைகளின் வனப்பை வர்ணிக்கவும் வேண்டுமோ. ரத்னங்களையெல்லாம் பரத்தியானபிறகு அந்த வியாபாரியானவன் “இந்த ரத்னங்களெல்லாம் வலாஸுரன் தேஹத்திலிருந்துமுண்டானவைகளாதலால் மிகச் சிறந்தவைகள்” என்றான். அதென்ன விபரமென்று மந்திரிகள் கேட்டதற்கு வியாபாரி சொன்னதாவது “முன்னொருகாலத்தில் வலாஸுரனென்றொரு அஸுரனிருந்தான். அவன் சிறந்த சிவபக்தன். ஈசுவரனைக் குறித்து ஸதா கடுமையான தபஸ் செய்து அவர் பிரஸந்நமாகப் பெற்றான். உடனே அவரிடம் இரண்டு வரங்கள் யாசித்தான். அதாவது தன்னை யுத்தத்திலொருவரும் எதிர்த்துக் கொல்லமுடியாமலிருக்கவேண்டுமென்றும் தான் வேறு காரணத்தால் இறந்தால் தனது சரீரத்திலுள்ள எலும்பு தோல் சதை ரத்தம் முதலிய ஸமஸ்தமும் நிகரில்லாத அதி சிரேஷ்டமான ரத்னங்களாக மாறிவிடவேண்டுமென்

றும் வரம் பெற்றான். இவ்வரத்திற்கிணங்க இவனை இந்திரனால் யுத்தத்தில் ஜயிக்கமுடியாமல் போகவே தேவதைகளெல்லாம் கூடி இவனை எவ்வுபாயத்தால் கொல்லலாமென்று ஆலோசித்தார்கள். பிறகு எல்லோருமாக தேவேந்திரனுடன்கூட வலாஸுரனிடம் சென்று அவனை வெகுவாக ஸ்தோத்ரித்து "உன்னுடைய குணங்களிலும் சிவபக்தியிலும் ஈடுபட்டோம். உனக்குவேண்டிய வரங்களை கேட்டால் கொடுக்க ஸித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். அதற்கு அந்த அஸுரன் தேவர்களை யுத்தத்தில் ஜயித்த கர்வத்தால் மதோன்மத்தனாயிருந்ததால் "நீங்கள் அல்பர்கள்; உங்களிடம் எனக்கு வரம்வேண்டியது ஒன்றுமில்லை. உங்களுக்கு ஏதாவது வேண்டியிருந்தால் கேளுங்கள். எதுவாயிருந்தாலும நான் கொடுக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட தேவர்கள் இதுதான் ஸமயமென்றெண்ணி "தேவேந்திரன் ஒரு யாகம் செய்கிறார். அதில் தாங்கள் புருஷபசுவாக வந்து எங்கள் யாகத்தை பூர்த்திசெய்து வைக்கவேண்டும்." என்று கேட்டார்கள். உடனே அந்த அஸுரன் தான் வார்த்தையால் அகப்பட்டுக்கொண்டதை யறிந்து சிவபக்தனானதலால் சொன்னசொல் தவறக்கூடாதென்ற எண்ணத்துடன் தான் அப்படியே செய்வதாக அவர்களுக்கு சொல்லிவிட்டு தனது குமாரனுக்கு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்துப் பிறகு தேவர்களுடன் யாகசாலைக்குச் சென்றான். அங்கே அவனை பசுவாக யூபஸ்தம்பத்தில் கட்டி தேவர்கள் யாகத்தை நடத்தி அவனைக் கொன்றார்கள். உடனே அவனுக்கு திவ்யமயமான சரீரம் கிடைத்தது அவன் ஸ்வர்க்கலோகம் சென்றான். அவனுடைய ஸ்தூல சரீரத்தைச் சேர்ந்த ஸமஸ்த வஸ்துக்களும் ஈசுவரன் கொடுத்த வரத்துக்கேற்ப விலைமதிக்கவொண்ணாத நவரத்னங்களாக மாறின. அவ்விரத்னங்களாக்குமிவைகள்." என்று சொல்லி நவரத்னங்களின் குணாகுணங்களையும் அவைகளைப் பரீக்ஷிக்கும் விதங்களையும் அவைகளின் ஜாதிபேதங்களையும், அவைகளை தரிக்கும் தினங்களையும்பற்றி விஸ்தாரமாக எடுத்துப் பிரஸங்கித்தான் அந்த வியாபாரி. இதையெல்லாம் கேட்டு மந்திரிகள் வியந்தார்கள். உடனே அந்த வியாபாரி "இந்த ரத்னங்களை யெடுத்துச்சென்று ஒரு கிரீடம் தயாரித்து உடனே இக்குழந்தைக்கு அபிஷேகபாண்டியனென்னும் நாமத்துடன் பட்டாபிஷேகம் செய்வியுங்கள். குழந்தையும் ஈசுவர கிருபையால் மேன்மேலும் விருத்தியடைந்து க்ஷேமமாயிருக்கும்" என்றான். ரத்னங்களின் விலையை விசாரித்ததற்கு பட்டாபிஷேகம் ஆனபிறகு தனக்கு அவைகளின் கிரயத்தைக் கொடுக்கலாமென்று சொல்லி அந்த நவரத்னங்களை விதிப்படி பூஜித்து ஈசுவரனை நோக்கி பிரார்த்தித்துவிட்டு அவ்விராஜகுமாரன் கையில் கொடுத்தான். அக்குழந்தை அவைகளை வாங்கிக்கொண்டதும் அந்த வியாபாரி கோயிலுக்குள் சென்றான். சற்றுதூரம் சென்றதும் வியாபாரி மறைந்து ரிஷபாரூடராய் ஈசுவரன் உள்ளே செல்வதைக்கண்ட மந்திரிகள் ஒன்றும் தோன்றாதவர்களாய் பிரமித்து ஈசுவரனே ரத்னவியாபாரியாக வந்து நவரத்னங்களைக் கொடுத்துப்போனதாக அறிந்து ஆச்சர்யத்துடன் அரண்மனை சென்று ஓர் புதுக்கிரீடம் அந்த ரத்னங்களால் நிர்மித்து அதனால் அவ்விராஜகுமாரனுக்கு ஈசுவரன் சொல்படி அபிஷேகபாண்டியனென்ற நாமத்துடன் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள்.

18. மேகங்களால் ஸமுத்திரத்தைக் குடிக்கச்செய்தது.

அபிஷேகபாண்டியனானவன் பால்யத்திலேயே ஸுந்தரேசுவரர் மஹிமையையறிந்

னதலாலும் தனக்கு ஹிதம் சொல்லக்கூடிய பெரியவராக தகப்பனாரில்லாததாலும் இத ற்கு முன்னிருந்த எல்லாவரசர்களைக் காட்டிலும் மிகச் சிறந்த பக்தியுடன் ஸதா ஸர்வகால மும் ஸுந்தரேசுவரரைப் பூஜிக்கிறதும் ஒவ்வொரு கார்யத்துக்கும் அவரை யனுமதிகேட்டு நடத்துவதுமாயிருந்தான். தன் பெயருக்கேற்ப பிரதிதினமும் பற்பல திரவியங்களால் மூல லிங்கத்துக்கு அபிஷேகம் செய்துவைத்து வந்தான். ஒருநாள் கர்பூரத்தால் மூலலிங் கத்தின் உடம்பு முழுமையும் கவசம் மாதிரி சாத்தி அதை தர்சனம் செய்து அச்சமயம் ஈசுவரனை கர்ப்பூரஸுந்தரர் என்று பெயரிட்டழைத்தான். இவ்வாறு விதம் விதமாகப் பூஜைசெய்து வரும்நாளில் ஒரு ஸமயம் சித்ரா பௌர்ணமியன்று ஏராளமான திரவியங்க ளைச் சேகரித்து மிகவும் விசேஷமாகப் பூஜித்தான். அந்த பூஜையானது முடிவுபெற அதிக நேரம் சென்றது. அன்றையதினம் தேவேந்திரன் பூஜை செய்யும் தினமானதால் அதற் காக இந்திரன் வந்து வெகுநேரமாய் காத்திருந்தும் பாண்டியன் பூஜை நடந்துகொண்டி ருந்ததால் அவகாசம் ஏற்படவில்லை. கடைசியில் பாண்டியன் பூஜை முடிந்ததும் அதன் விபவத்தையும் சிரத்தையையும் கண்டு ஆச்சர்யத்துடன் தான் வழக்கமாய் செய்துவருகிற பிரகாரம் ஸ்வர்ணத்தாமரைகளால் அர்ச்சித்துச் சென்றனன். அவன் தேவலோகம் போன தும் வருணபகவான் அவனைக் காணவந்தார். அவன் சோர்ந்திருந்ததைக் கண்டு யாது காரணமென்று கேட்டார். அதற்கிந்திரன் தான் ஹாலாஸ்யநாதரைப் பூஜிக்க மதுராபுரி சென்றதும் அங்கு பாண்டயராஜாவின் பூஜை நடந்துகொண்டிருந்ததால் காத்திருந்து பிற கு பூஜையை முடித்துக்கொண்டுவந்த சிரமததால் சோர்வடைந்திருப்பதாகச் சொல்லி ஸ்ரீ ஹாலாஸ்யநாதரின் மஹிமையின் பெருமையை வெகுவாக எடுத்துரைத்தான். தனக்கு விருத்திராஸுரனைக் கொன்ற பிரம்மஹத்தி அங்குதான் நிவர்த்தியாயிற்றென்றான். அதைக் கேட்ட வருணன் அவ்வளவு மஹிமை பொருந்தியவராயிருந்தால் அந்த ஹாலாஸ்யநாதர் தனக்குள்ள ஜலோதரவியாதியைத் தீர்த்துவைப்பாராவென்றான். அதற்கிந்திரன் அவரைப் பூஜித்தால் அவசியமது நிவர்த்தியாகுமென்றும் அந்த ஈசுவரனின் சக்தியை வருணனே நே ரிலறிந்து கொள்ளலாமென்றும் சொன்னான். உடனே வருணன் திருமபிச் சென்று புத்திக் குறைவால் ஸ்ரீ ஸுந்தரேசுவரரின் சக்தியைத் தானே சோதிக்கவெண்ணி கடலைக் கூப்பிட் டு உடனே பொங்கிப்போய் மதுராபுரியை மூழ்கவடிக்கும்படி ஆக்ஞாபித்தான். கடலும் இதற்குமுன் தனக்கு நேர்ந்த ஆபத்தை மறந்து வருணன் கட்டளைக்கிணங்கி உடனே கொந்தளிப்புடன் பிரளயகாலத்தையொப்ப அலைகளை வீசிக்கொண்டு மதுரையை நோக்கி வர அங்குள்ள ஜனங்கள் மயங்கி நடுங்க அரசனாகிய அபிஷேகபாண்டியன் பயந்து ஸ்ரீ ஸோமஸுந்தரர் பாதமே கதியென்று நிச்சயித்து ஸமுத்ரத்திற்றோன்றின விஷத்தைக் கண்டு அஞ்சின விஷ்ணுவைப்போலவும், யமனைக்கண்டஞ்சிய மார்க்கண்டனைப்போலவும் கலங்கி ஈசுவரனின் சரணாவிந்தங்களில் விழுந்து பலமாக முறையிட்டான். உடனே ஈசு வரனும் மனமிரங்கி புன்னகை செய்துகொண்டு அபிஷேகபாண்டியனுக்கு அபயப்பிரதா னம் செய்து தனது தலையிலுள்ள ஜடையிலிருந்து நான்கு மயிர்களைப் பிடுங்கி ஆகாயத் தில் நான்கு திக்குகளிலும் விட்டெறிய அவை நான்கு மேகங்களாக மாறி ஆரவாரத் துடன் வந்த கடல் முழுமையையும் உறிஞ்சிக் குடித்துவிட்டன. இவ்வதிசயத்தைக் கண்ட எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

19. அதிவிருஷ்டியிலிருந்தும் தேசத்தைக்காப்பாற்றியது.

இவ்வாறு தான் அனுப்பிய சமுத்திரத்தின் ஜல முழுமையும் குடிக்கப்பட்டுப்போனதைக் கண்ட வருணனானவன் ஈசுவரன் மஹிமையிலீடுபடுவதற்கு பதிலாக, மிகுந்த அஹங்காரம் கொண்டவனாய் கோபபரவசனாய் அதிக பரபரப்புடன் புஷ்களம், ஆவர்த்தகம் முதலிய நான்கு முக்கிய மேகங்களையும் வரவழைத்து பாண்டியநாடு முழுமையும் அகோரமான மழையை வர்ஷித்து ஹதம் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டான். அதைக் கேட்டதும் அம்மேகங்களுக்கு ஏற்கனவே பாண்டியதேசத்தரசனால் தாங்கள் காராகிருஹத்தில் அடைக்கப்பட்ட வருத்தம் மனதிற்குள்ளிருந்ததால் உடனே மிகவும் உத்ஸாஹத்துடன் அப்படியே செய்கிறோமென்று சொல்லி அதிவேகமாய்க் கிளம்பி பாண்டியநாடெங்குமே பரவி காடாந்தகாரமாயிருட்டிக்கொண்டு மின்னலும் இடியுமாய் ஆர்ப்பாடம் செய்துகொண்டு ஜனங்களெல்லாம் நடுங்கும்வண்ணம் ஆலங்கட்டி மழையாக, ஸந்ததாரையாய் மிகுந்த சப்தத்துடன் ஓயாமல் வர்ஷிக்க ஆரம்பித்தது. இதைக்கண்டு ஜனங்கள் மிகவும் பயந்து, தங்களுடைய அரசனாகிய அபிஷேகபாண்டியனுடன் ஆலயம் சென்று ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை, இந்த ஆபத்தினின்றும் தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்யாஜகருணாமூர்த்தியாகிய ஈசுவரனும் உடனே இதற்கு முந்திய லீலையில் தான் அனுப்பிய நான்கு மேகங்களையும கூடாரங்கள்போல் ஒன்றுசேர்ந்து பாண்டியநாட்டிற்குமேல் ஆவரணமாக நின்றுகொண்டு உள்ளே மழை துளியேனும் விழாமல் காக்கும்படி கட்டளையிட காமரூபிகளான ஈசுவரன் ஜடைமயிர்களான அந்த மேகங்களும் உடனே நான்கு கூடங்களாக (கூடாரங்களாக) மாறி ஒன்றுசேர்ந்து பாண்டியதேசம் முழுமையுமே ஒரு துளிகூட மழை விழாமல் ஆவரணமாகக் குடைபோல் மூடிக்கொண்டன. இதனால் பக்கங்களில் எவ்வளவு அதிகமாக மழை பெய்தபோதிலும் பாண்டிய தேசத்திலுள்ளவர்கள் மழை என்கிற விசாரமே இல்லாமல் ஸ்வஸ்தமாகக் காலம் கழித்தார்கள். இவ்வதிசயத்தைக் கண்ட வருணபகவான் மிகவும் வெட்கமடைந்து புத்தி வந்தவனாய் தனது அஹங்காரத்தை நொந்துகொண்டு தான் ஏவிய மேகங்களை திருப்பிக்கூப்பிட்டு அவைகளை தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்குப் போகும்படி அனுப்பிவிட்டான். மழை நின்றுவிட்டதையறிந்த ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் உடனே தாம் அனுப்பியிருந்த நான்கு மேகங்களையும் வெளிவாங்கி தம்மிடம் முன்போல் வந்துவிடும்படி ஆக்ஞாபித்தார். பிறகு வருணபகவானும் மிகத் தாழ்மையுடன் ஹாலாஸ்ய க்ஷேத்திரம் வந்து ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை ஆராதிக்க எண்ணங்கொண்டு பொத்தாமரைக்குளத்தில் தனது ஜலோதர வியாதி தீரவேண்டுமென்னு விதிபூர்வகமாய் ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்நானம் செய்து, சுத்தவஸ்திரம் விபூதிருத்ராக்ஷங்களை தரித்துக்கொண்டு ஆலயத்தினுட் சென்றான். கோபுர வாசல் தாண்டியவுடனே தன்னுடைய ஜலோதர வியாதி தன்னைவிட்டு நீங்கியதையறிந்து அளவிலடங்காத ஸந்தோஷங்கொண்டு மிகுந்த வணக்கத்துடன் இந்திரவிமானத்தையடைந்து ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை அதிக பக்தி சிரத்தையுடன் பூஜித்து பிரதக்ஷிணநமஸ்காரம் செய்து ஸ்தோத்ரிக்கலானான்.

कल्याणशैलपरिकल्पितकार्मुकाय मौर्वीकृताखिलमहोरगनायकाय ।
पृथ्वीरथाय कमलापतिसायकाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ १ ॥

भक्तार्तिभञ्जनपराय परात्पराय कालाभ्रकान्तिगरलाङ्कितकन्धराय ।
भूतेश्वराय भुवनत्रयकारणाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ २ ॥
भूदारमूर्तिहरिमृग्यपदाम्बुजाय हंसाब्जसंभवसुदूरसुमस्तकाय ।
ज्योतिर्मयस्फुरितदिव्यवपुर्धराय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ३ ॥
कादम्बकाननिवासकुतूहलाय कान्तार्धभागकमनीयकलेबराय ।
कालान्तकाय करुणामृतसागराय हालास्यमध्यानिलयाय नमः शिवाय ॥ ४ ॥
विश्वेश्वराय विबुधेश्वरपूजिताय विद्याविशिष्टविदितात्मसुवैभवाय ।
विद्याप्रदाय विमलेन्द्रविमानगाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ५ ॥
संपत्प्रदाय सकलागममस्तकेषु संघोषितात्मविभवाय सदाशिवाय ।
सर्वात्मने सकलदुःखसमूलहन्त्रे हालास्यमध्यानिलयाय नमः शिवाय ॥ ६ ॥
गङ्गाधराय गरुडध्वजवन्दिताय गन्धस्फुरद्भुजगकुण्डलमण्डिताय ।
गन्धर्वकिन्नरसुगीतगुणाधिकाय हालास्यमध्यानिलयाय नमः शिवाय ॥ ७ ॥
पाणिं प्रगृह्य मलयध्वजभूपपुत्र्याः पाण्ड्येश्वरः स्वयमभूत्परमेश्वरो यः ।
तस्मै जगत्प्रथितसुन्दरपाण्ड्यनाम्ने हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ८ ॥
गीर्वाणदेशिकगिरामपि दूरगं यद्वक्तुं महत्त्वमिह को भवतः प्रवीणः ।
शंभो क्षमस्व भगवच्चरणारविन्दभक्त्या कृतां स्तुतिमिमां मम सुन्दरेश ॥ ९ ॥

இவ்வாறு ஸ்தோத்ரம் செய்ததும் ஈசுவரன் ஸந்தோஷமடைந்து வருணனுக்குப் பிரஸன்னராகி என்ன வரம்வேண்டுமென்று கேட்டார். அதற்கு வருணன் தனக்கு இந்திரன் சொல்லிய வாலாற்றையும் தான் கர்வமடைந்து ஸமுத்திரத்தையும், மேகங்களையும் மதுரையை அழிக்க ஏவிவிட்டதையும் சொல்லி தான் புத்திக்குறைவால் செய்தகுற்றங்களை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். ஈசுவரன் "அவைகளைப் பொறுத்தோம். உனக்கு ஆகவேண்டியதைக்கேள்" என்றார். அதற்கு வருணன் தனக்கு ஜலோதர வியாதிதான் தீரவேண்டியதென்றும், அது கோபுரவாயில் நுழையும்பொழுதே தீர்ந்துவிட்டதென்றும் வேறுதனக்கு ஆகவேண்டியதொன்றுமில்லையென்றும், ஈசுவானிடம் தனக்கு எப்பொழுதும் பக்தியிருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டுமென்றும் சொன்னான். ஈசுவரனும் அவ்விதமே அவனை அனுக்ரஹித்து, அவன் செய்த ஸ்தோத்திரமாகிய ஹாலாஸ்யாஷ்டகத்தை எவர் பாராயணம் செய்தபோதிலும் அவர் பீடையெல்லாம் தொலைந்து ஸர்வஸம்பத்தையும் அடைவார்கள் என்று சொல்லிமறைந்தார். ஈசுவரன் விடுத்த நான்கு மேகங்களும் நான்கு கூடமாக (கூடாரமாக) மதுரையைக் காத்ததால் மதுரைக்கு அதுமுதல் சதுஷ்கூடம் (நான்மாடக்கூடல்) என்று பெயர் ஏற்பட்டது.

20. எல்லாம் வல்ல ஸித்தராய் வந்தது.

அபிஷேகபாண்டியன் ராஜ்யபாரம் வஹித்துவரும் நாளில் ஒரு ஸமயம் அவனை அனுக்ரஹிப்பதற்காகவும் ஜனங்களுக்கு க்ஷேமத்தையும் ஐசுவர்யத்தையும் கொடுப்பதற்

காகவும் ஸ்ரீ ஹாலாஸ்யநாதரானவர் 16 வயதுள்ள ஸித்தர்மாதிரியாக ரூபமெடுத்துக்கொண்டு உடம்பு முழுமையும் விபூதியைப்பூசிக்கொண்டு ருத்ராக்ஷமாலையை யணிந்து தலையிலுள்ள ஜடையை ஓர் ஸர்ப்பத்தால் கட்டி கையில் யோகதண்டமும் ஸ்வர்ணமாத்ரைக்கோலும் எடுத்துக்கொண்டு மனோஹரமான ரூபத்துடன் புன்னகை செய்துகொண்டு மதுராபுரியில் எல்லோருக்கும் முன்பாகத் தோன்றினர். அவர் ரூபத்தைக்கண்டதும் அதிலேயேமயங்கி அநேக ஜனங்களவரையணுகினார்கள். அவர் காண்பிவித்த விநோதங்களுக்கு ஓரளவில்லை. கிழவர்களைக் குமாரர்களாக்கினார், குமாரர்களை கிழவர்களாக்கினார். ஆணைப் பெண்ணாகச்செய்தார், பெண்ணை ஆணாகச்செய்தர். தூரத்திலுள்ளமலையை ஸமீபத்தில் வரச்செய்தார், ஸமீபத்திலுள்ளதை தூரப்போகச்செய்தார். மலடியை பிள்ளை பெறச்செய்தார். இரும்பு செம்புகளை தங்கமாக்கினார். கூன், செவிடு, குருடு, ஊமை, முடம் முதலிய குறையுள்ளவர்களை குறையற்றவர்களாகச் செய்தார். எட்டிமரத்தில் மாங்கனிபழுக்கச் செய்தார். எளியவர்கள் வீட்டில் ஏராளமான தனக்குவியல்களைக் கொடுத்தார். மரங்கள் பட்சிகள், மிருகங்கள் முதலியவற்றை தனது மாத்ரைக்கோலால் தொட்டு ஒன்றை ஒன்றாகமாறும்படி செய்தார். இராக்கலாத்தில் பகலையும், பகலில் இரவையும் தருவித்தார். அக்னிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம் முதலிய விநோதங்களெல்லாம் செய்துகாண்பித்து ஜனங்களைப் பிரமிக்கச்செய்தார். வைகையில் திடீரென்று பிரவாஹம் வரவழைத்தார். வந்த பிரவாஹத்தை க்ஷணப்பொழுதில் வற்றச்செய்தார். கீழுலகங்களிலும் மேலுலகங்களிலும் உள்ள பொருள்களை யெல்லாம் மதுரையில் வரச்செய்தார். எல்லோர் முன்னிலும் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே திடீரென்று மறைந்து தனது சப்தம் மட்டும் அவர்கள் காதில்விழும்படிச் செய்தார். எதிர்பார்க்காதிருக்கும்போது திடீரென்று கூட்டத்தின் மத்தியில் தோன்றினார். சுருங்கச்சொல்லுங்கால் எல்லாஜனங்களுடையவும் எல்லாப்பிணிகளையும் தீர்த்தார். இவருடைய அதிசயச்செயல்களை யெல்லாம் கண்டு வியந்தஜனங்கள் ஓடோடியும் தங்கள் அரசனிடம் சென்று அவைகளைச் சொல்ல உடனே அபிஷேகபாண்டியனும் தனது வேலைக்காரர்களிற் சிலரை அவரைக் கூட்டிவரும்படி அனுப்பினான். அந்த வேலையாட்கள் அவரிடம் சென்றதும் அவர் செய்த அத்புதகிருத்யங்களைக் கண்டு பிரமித்து தாங்கள் வந்தகாரியத்தை மறந்து ஒன்றும் சொல்லத் தோன்றாமல் தயங்கிநின்றார்கள். போனவர்கள் வாராமையைக்கண்டு அரசனானவன் மந்திரிகளை அழைத்து "நீங்களே நேரில்சென்று அந்த ஸித்தரைக் கூட்டிவாருங்கள்" என்று அனுப்பினான். அவ்வாறே மந்த்ரிகளும் ஸித்தரிடம் சென்று அவரைவணங்கி ராஜஸபைக்கு தயவு செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அதற்கவர் "உங்கள் அரசனாலே எமக்கு என்ன பிரயோஜனம், எமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை, அதனால் நாம் வரமாட்டோம்" என்று மறுத்துவிட்டார். மந்திரிகளும் திரும்பி அரசனிடம் சென்று ஸித்தர் கூறியதைத்தெரிவிக்க அவ்வரசன் "இஹபரங்களை வெறுத்து அணிமாத்யஷ்டஸித்திகளையும் பெற்ற மஹாயோகிகள் மும்மூர்த்திகளையுமே லக்ஷ்யம் செய்யமாட்டார்களென்றால் என்னைப்போலொத்த அல்பனையாமதிப்பார். நான் அவரை அரண்மனைக்கு வரும்படி சொல்லியனுப்பியது தவறு. நானாகவே அவர் இருக்குமிடத்தில் போய் தர்சிக்கவேண்டும்" என்று ஆலோசித்துக்கொண்டு மறுநாள் ஸித்தரிடம் சென்று அபாரதக்ஷமாபனம் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்தான்.

21. கல்யானையைக் கரும்பருந்தச் செய்தது.

மறுநாள் மகாஸங்காராந்தி தினமாயிருந்ததால் அன்றையதினம் அபிஷேகபாண்டியனுனவன் தனது காலைக்கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரரை தர்சித்து பூஜை செய்வதற்காக கோயிலுக்குப் பரிவாரங்களுடன் புறப்பட்டான். கோயிலுக்குள் கர்ப்பக்கிருஹத்திற்குச் சுற்றியுள்ள பிராகாரத்தில் வாயவ்யதிக்கில் இந்திரவிமானத்தைச் சுமந்துகொண்டிருக்கும் திக்கஜத்திற்கு எதிராக அந்த ஸித்தர் த்யானத்தில் உட்கார்ந்திருந்தார். அதற்கு ஸமீபத்தில் அபிஷேகபாண்டியன் வரும்பொழுது முந்திச்சென்ற ராஜகிங்கரர்கள் அந்த ஸித்தரிடம் சென்று அரசன் அந்தவழி வருவதாயும் உடனே எழுந்திருந்து பக்கத்தில் செல்லவேண்டுமென்றும் அதட்டினுர்கள். ஸித்தரோ அவர்கள் வார்த்தையை சற்றேனும் மதிக்காமல் புன்சிரிப்புடன் அசைவற்றிருந்தார். இதற்குள் அரசனும் ஸமீபித்துவிடவே இந்த ஸித்தரைக்கண்டு வியப்படைந்து பின்வருமாறு வினவினன் "ஹே ஸ்வாமின், தாங்கள் யார், எந்த ஊர், இங்கு எதற்காக வந்தீர்கள், என்ன வித்யை தங்களுக்குத தெரியும், என்ன சக்திகள் அப்யாஸம் செய்திருக்கிறீர்கள்? எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்றுன். இதைக்கேட்ட ஸித்தர் சொன்னதாவது "நான் ஒரு ஸித்தன், எனக்கு ஊர் கிடையாது, இஷ்டப்படி ஸஞ்சரிப்பவன், பிக்ஷை வாங்கி சாப்பிடுகிறவன், இதற்கு முந்தி காஷ்மீரத்திலிருந்தேன், அங்கிருந்து காசீ க்ஷேத்ரத்திற்கு வநது பிறகு சிவக்ஷேத்திரங்களையெல்லாம் தர்சனம் செய்துகொண்டு காலக்ரமேண இந்த ஹாலாஸ்யத்திற்கு வந்துசேர்ந்தேன். இங்கு ஸ்ரீ ஹாலாஸ்யநாதரை தர்சனம் செய்து இங்குள்ள ஜனங்களுக்கு எனது அத்புதச்செயல்களைக் காண்பித்து அவர்கள் அபேக்ஷிப்பவைகளையெல்லாம் அவர்களுக்கு கொடுப்பதற்கு இங்கு தங்கியிருக்கிறேன். எனக்குத் தெரியாத வித்யைகள் கிடையாது. என்னிடம் இல்லாத சக்திகள் கிடையாது. எனக்கு ஆக்ஞாஸித்தன் என்று பெயர். உனக்கு ஏதாவது ஆகவேண்டியிருந்தால் சொல்" என்றுர். இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் இவர் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமலிருப்பதைக்கண்டு வியந்து இவரைப் பரீக்ஷிக்கக் கருதி அப்பொழுதுதான் மஹாராஜாவைக் காணவந்த ஒரு குடியானவன் கொண்டுவந்திருந்த மிகப் பருத்த நீண்ட ஒரு செங்கரும்பை தன் கையில் வாங்கி ஸித்தரை நோக்கி "தங்களுக்கு எல்லா ஸித்தியும் இருக்கிறது நிஜமாயிருந்தால் எதிரில் தோன்றும் இந்திரவிமானத்தைச் சுமந்துகொண்டிருக்கும் கல்யானையை இந்தக் கரும்பை சாப்பிடச் செய்வீர்களேயானுல் நான் தங்கள் இஷ்டம் யாவற்றையும் பூர்த்தி செய்விக்கிறதுமன்னியில் தங்களையும் நாதனுக ஏற்றுக் கொள்கிறேன்" என்றுன். இதைக் கேட்டு ஸித்தரும் மந்தஹாஸம் செய்துகொண்டு, "ஹே ராஜனே, உனக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறேன் என்று நீ சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை. என்னுடைய சக்திகளால் எனக்கில்லாத ஐசுவர்யம் உன்னிடம் ஒன்றுமில்லை. நான் அபேக்ஷிக்கிறதெல்லாம் என்னிடமிருக்கின்றன. இருந்தாலும் என்னுடைய சக்தியை உனக்கு காண்பிக்கிறேன். பார்" என்று சொல்லி தன் கண்களால் எதிரிலிருந்த கல்யானைக்கு ஜாடை காண்பிக்கவே அக்கல்யானையும் உயிருள்ள யானைபோல் உடனே தன் தும்பிக்கையை நீட்டி அரசன் கையிலிருந்த கரும்பைப் பிடுங்கித் தின்றுவிட்டது. அத்துடன் நிற்காமல் அரசன்கழுத்தில் போட்

டிருந்த ஹாரங்களை தாமரைத் தண்டுகளோ என்கிற சங்கையினால் தும்பிக்கையால் இழுக்கவாரம்பித்தது. அரசன் பக்கத்திலிருந்தவர்கள் ஹாஹா என்று தடுத்தும் ஸித்தருடைய ஆக்ஞையானதால் அந்த யானையானது கம்பீரமாக கர்ஜித்துக்கொண்டு அரசனின் கழுத்திலிருந்த மாலைகளையிழுத்து சாப்பிட்டுவிட்டது. உடனே அரசனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் மிகக்கோபமுண்டாய் அவ்விராஜகிங்கரர்கள் சிவந்த கண்களுடனும் ஓங்கின கைகளுடனும் அந்த ஸித்தரையடிப்பதற்காக அவரை நெருங்கியதும் அவர் சற்றேனும் திகைக்காமல் தன்னுடைய சக்தியால் அவர்களை அப்படியே அசைவற்று கல்போல் நிற்கச் செய்துவிட்டார். இதைக்கண்ட அரசன் கோபம் தெளிந்தவனாய் பயமுற்று ஸித்தரை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தான் செய்த அபராதத்தை க்ஷமிக்கவேண்டுமென்று திரும்பத்திரும்ப மன்றாடிப் பிரார்த்தித்துக் கொண்டு பரவசனாக கல்தூண் போல் அசைவற்று நின்றான். இவ்வாறு பக்தியோடும் பயத்தோடும் நிற்கும் அரசனைக்கண்டு வேண்டிய வரத்தைக் கேட்கும்படி ஸித்தர் சொன்னார். உடனே அரசன் மறுபடி ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலிபத்தனாய் தனக்கு எல்லா குணங்களும் பொருந்திய ஒரு புத்ரன் வேண்டுமென யாசித்தான். அவ்வாறே கொடுத்தோம என்று சொல்லி ஸித்தரானவர் அந்தக் கல்யானையின் வாயில் தனது கையை விட்டு அரசனது ஹாரங்களை எடுத்து அவனிடம் கொடுத்து அவனை ஆசிர்வதித்து தனது கைகளால் அவனை தடவிக்கொடுத்து உடனே அந்தர்த்தானமானார். இதைக்கண்ட அபிஷேகபாண்டியனும் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் தான் இம்மாதிரி திருவிளையாடல் செய்திருக்கிறார் என்று நிச்சயித்துக்கொண்டு கர்ப்பக்கிருஹத்திற்குள் சென்று மூலலிங்கத்தை தர்சித்துப் பின்வருமாறு ஸ்தோத்ரம் செய்தான்.

परिपूर्णपरानन्द परचित्सत्यविग्रह । सुन्दरेश्वर सर्वज्ञ त्राहि मामपराधिनम् ॥ १ ॥

फालाक्षिजातज्वलन परिलीढमनोभव । जीवन्मुक्तिपुरीनाथ त्राहि मामपराधिनम् ॥ २ ॥

पारिजातगुणातीतपादपङ्कजवैभव । कदम्बकाननाध्यक्ष त्राहि मामपराधिनम् ॥ ३ ॥

भक्तप्रार्थितसर्वार्थकामधेनो पुरान्तक । करुणावरुणावास त्राहि मामपराधिनम् ॥ ४ ॥

कैवल्यदाननिरत कालकूटभयापह । कन्यकानगरीनाथ त्राहि मामपराधिनम् ॥ ५ ॥

कमलापतिवागीशशचीशप्रमुखामरैः । परिपूजितपादाब्ज त्राहि मामपराधिनम् ॥ ६ ॥

पञ्चास्य पन्नगाङ्काङ्ग परानन्दप्रदायक । पर्वताधीशजामातस्त्राहि मामपराधिनम् ॥ ७ ॥

परात्परपदाम्भोजपरिध्यानरतात्मनाम् । काङ्क्षितार्थप्रदस्त्वं हि त्राहि मामपराधिनम् ॥ ८ ॥

अपराधाष्टकस्तोत्रं यः पठेत्तव संनिधौ । तस्यानन्तापराधं च क्षमस्व करुणानिधे ॥ ९ ॥

இவ்வாறு ஸ்ரீ ஸுந்தரேசுவரரை ஆராதித்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். பிறகு நாளடைவில் அந்த ஸித்தர் வாக்கப்படி விக்ரமபாண்டியனென்று ஒரு புத்ரன் பிறந்தான். அப்புத்ரனுக்கு வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்பிவித்துவிட்டு அபிஷேகபாண்டியனும் கைவல்யபதவியை அடைந்தான்.

22. சமணர்கள் அனுப்பிய யானையைக் கொன்றது.

தன்னுடைய பெயருக்கேற்ப மிகுந்த பராக்ரமத்துடன் நீதிநெறி தவறாமல் ஸதா ஸர்வகாலமும் சிறந்த ஈசுவரபக்தியுடன் விக்ரமபாண்டியன் தனது நாட்டையாண்டுவந்தான். கோயிலில் மூலப்ராகாரத்தில் வாயவ்யதிக்கில் ஓர் ஸந்நிதியுண்டாக்கி அங்கு ஆக்ஞாஸித்தரை பிரதிஷ்டைசெய்து அவருக்கு மஹத்தான பூஜைகளைச் செய்து ஆராதித்து வந்தான். இச்சமயத்தில் காஞ்சீபுரம் தேசத்திலுள்ள சோழராஜனானவன் விக்ரமபாண்டியனின் பராக்ரமத்தையும் அவன் நாட்டின் செழிப்பையும் கேள்விப்பட்டு அவனை நேராக எதிர்த்து யுத்தத்தில் ஜயிக்கமுடியாதென்பதை நன்கறிந்து வேறு எந்த உபாயத்தால் அவனை ஜயிக்கலாமென்று பலவாறு ஆலோசித்தான். கடைசியில மந்திரம் தெரிந்தவர்களைக்கொண்டு அவன் மேல் மந்திரப்ரயோகங்கள் செய்யச்சொல்லி அதனால்தான் அவனை ஜயிக்கவேண்டுமென்று நிச்சயித்து அதற்காக மந்திரசாஸ்திரத்தில் மிகவும தேர்ந்தவர்களான சமணர்களை நாலாபக்கங்களிலிருந்தும் தருவித்து, அவர்களிடம் தனது அபிலாஷையைத் தெரிவித்தான். அவர்களும் உடனே அதற்காகவேண்டிய ஸாமக்ரியைகளையெல்லாம் சேகரித்து ஒரு கோரமான ஆபிசாரஹோமம் செய்யவாரம்பித்தார்கள். அந்த ஹோமகுண்டத்தினின்றும் ஒரு மஹத்தான மதம்பிடித்த யானை யொன்று பூதத்தையொப்ப பயங்கரமானதாய் வெளிக்கிளம்பிற்று. அதை மதுராபுரிக்குச் சென்று அந்நகரையழிக்கும்படி ஏவினார்கள். அதுவும் அவ்வாறே தெற்கே சென்றது. இது ஸங்கதியைச் செவியுற்ற விக்ரமபாண்டியன் உடனே கருணாநிதியாயும் தனக்கு காதனாயுமுள்ள ஸோமஸுந்தரரிடம் சென்று பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து ஸ்தோத்ரித்து அஞ்சலிபத்தனாய் "ஹே தீனபந்தோ, சமணர்களால் ஆபிசாரமந்திரங்களால் உண்டுபண்ணப்பட்ட மதம்பிடித்த யானையானது மலைபோலாகிருதியுடன் மதுராபுரியை யழிக்க வெண்ணங்கொண்டு ஈசான்யதிக்கில் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு நான் என்ன செய்யவேண்டியது. என்னை இந்த ஆபத்தினின்றும் நொடிப்பொழுதில் காத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். தயாநிதியான ஸுந்தரேசுவரரும் அசரீரவாக்கு மூலமாய் விக்ரமபாண்டியனுக்குச் சொன்னதாவது: "நீ சற்றேனும் பயப்படவேண்டாம். வெளிப்பிராகாரத்துக்கு ஸமீபத்தில் கிழக்குதிக்கில் ஓர் உயர்ந்தஸ்தானத்தில் அட்டாலமண்டபம் என்று சொல்லப்படும் 16 கால் மண்டபம் ஒன்று உடனே கட்டுவித்தயேயானால் நாம் அங்கு தனுஷ்பாணியாய் வந்து அந்த யானையைக் கொல்வோம்" என்றார். இதேக்கேட்ட பாண்டியனும மிகக்களிப்புடன் அவ்வாறே பூர்வதிக்கில் உயர்ந்தவிடத்தில் ஒரு பதினாறுகால் மண்டபம் நொடிப்பொழுதில் கட்டிமுடித்தான். அதை வெகுவாக சிங்காரித்து அதன் மத்தியில் ஒரு மேடையும் போட்டுவித்து அதை தங்கத்தகடுகளால் மூடினான். உடனே ஸ்ரீ ஹாலாஸ்யநாதரும் ஒரு வேடன் மாதிரியான வேஷத்தை தரித்துக்கொண்டு வில்லும் கையுமாய் அந்த மண்டபத்தின் நடுவில் தோன்றி அங்கிருந்தபடியே பத்துமைல் தூரத்தில் வந்துகொண்டிருந்த அந்தயானையின் பேரில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நாஸிம்ஹாஸ்திரத்தை ப்ரயோகம் செய்தார். அந்த அஸ்திரமும் அந்த யானையின் பிராணனை யபஹரித்து விட்டு அதை யானைமலையென்று சொல்லப்படும் கல்மயமாகச் செய்து அதனடிவாரத்திலேயே ஈசுவரனின் உத்தரவுப்படி நாஸிம்ஹரூபத்தை தரித்துக்கொண்டு இன்றைக்கும் மஹா

ஸாந்நித்யத்துடன் விளங்கிவருகிறது. ரோமசமஹர்ஷியும் அங்கு தன் பெயரால் ஒரு குளத்தையுண்டாக்கி அதில் ஸ்நானம் செய்து தபஸ் செய்து அநேகஸித்திகளைப் பெற்றார். விக்ரமபாண்டியனுடங்கு சென்று மலைபோல வந்தயானையானது யானைமலையாக மாறிவிட்டதைக்கண்டு ஸந்தோஷித்து அங்கிருந்த நரஸிம்ஹரை நமஸ்கரித்துவிட்டுத்திரும்பி வந்து அட்டால மண்டபத்தின் நடுவிலிருந்த கிராதகவீரனை ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப்பின் வருமாறு ஸ்தோத்ரம் செய்தான்—

कल्याणाचलकोदण्डकान्तदोर्दण्डमण्डितम् । कलम्बीकृतकंसारिं कलयेऽट्टालसुन्दरम् ॥ १ ॥

कालकूटप्रभाजालकलंकीकृतकन्धरम । कलाधरकलामौलिं कलयेऽट्टालसुन्दरम् ॥ २ ॥

कालकालं कलातीतं कलावन्तं च निष्कलम । कमलापतिसंस्तुत्यं कलयेऽट्टालसुन्दरम ॥ ३ ॥

कान्तार्धकमनीयाङ्गं करुणामृतसागरम । कलिकल्मषदोषघ्नं कलयेऽट्टालसुन्दरम् ॥ ४ ॥

कदम्बकाननाधीशं काङ्क्षितार्थसुरद्रुमम् । कामशासनमीशानं कलयेऽट्टालसुन्दरम ॥ ५ ॥

सृष्टानि मायया येन ब्रह्माण्डानि बहूनि च । रक्षितानि हृतान्यन्ते कलयेऽट्टालसुन्दरम् ॥ ६ ॥

स्वभक्तजनसंतापपापापद्भङ्गतत्परम् । कारणं सर्वजगतां कलयेऽट्टालसुन्दरम् ॥ ७ ॥

कुलशेखरवंशोत्थभूपानां कुलदैवतम् । परिपूर्णचिदानन्दं कलयेऽट्टालसुन्दरम ॥ ८ ॥

अट्टालवीरश्रीशंभोरष्टकं परमिष्टदम् । पठतां शृण्वतां सद्यस्तनोति परमां श्रियम् ॥ ९ ॥

பிறகு அந்தமண்டபத்திலந்தரூபத்துடனேயே எப்பொழுதும் பிரஸன்னராயிருக்கும்படி அரசன் வேண்ட அதற்கு இணங்கி அவனை அநுக்ரஹித்து விட்டு ஈசுவரன் அந்தர்த்தானமானார். கொஞ்சகாலமானபின் விக்ரமபாண்டியனுக்கு ராஜசேகரபாண்டியனென்று ஒரு புத்ரன் பிறந்தான். அவனுடன் வெகுகாலம் ஸுகமாக ராஜ்யபாரம் செய்து கடைசியில் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு சிவலோகமடைந்தான்.

23. பிராம்மணப் பெண்ணின் கஷ்டத்தை நிவர்த்தித்தது.

மதுராபுரியில் விரூபாக்ஷனென்று ஒரு பிராமணனிருந்தான். அவன் மிகச்சிறந்த சிவபக்தன். எப்பொழுதும் ஈசுவரனை தியானம் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு ஈசுவரனுடைய அநுக்ரஹத்தால் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதற்கு கௌரீயென்று பெயரிட்டு மிகச் செல்வமாய் வளர்த்து வந்தான். அக்குழந்தையும் பால்யம் முதலே மிகவும் பக்தியுடன் கூடியிருந்தது. அதன் ஐந்தாவது வயதில் ஒருநாள் அப்பெண்குழந்தையானது தனது தகப்பனாரிடம் சென்று தனக்கு கௌரீமந்திரம் உபதேசம் செய்யவேண்டுமென்று கேட்டது. இதைக்கண்டு மிகவுமாச்சர்யம்கொண்டவனாய் விரூபாக்ஷனானவன் அந்தச்சிறுகுழந்தைக்கு எல்லா பலனையும் கொடுக்கக்கூடிய ஸாக்ஷாத்பராதேவதையினுடைய மந்த்ரமாகிய ஏகாக்ஷரத்தை விதிப்படி ஸாங்கோபாங்கமாக உபதேசித்து அம்பாளை த்யானம் செய்யும் வழியையும சொல்லிக்கொடுத்தான். அவ்வழியையே அப்பெண்ணும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஸதா ஏகாக்ஷரமந்திரத்தை ஜபிக்கிறதும் அம்பாளை த்யானம் செய்வதுமாயிருந்தாள். அதிசீக்கிரத்தில் அந்த மந்திரமும் அவளுக்கு ஸித்தியாய்விட்டது. பெண்ணு

க்கு வயது எட்டானதும் கன்யாதானம் செய்துகொடுக்கவேண்டியது பிதாவின் கடமையாதலால் அந்த விரூபாக்ஷன் தனது தபஸ்ஸைவிட்டு இப்பெண்ணுக்கு வரன்தேடிக்கொண்டு வெளிகளில்போக மனமில்லாதவனாய் தன் கிருஹத்திற்கு பிக்ஷைக்கு வருகிற பிரம்மசாரிப் பையன்களுள் புத்திசாலியாயும் வர்ச்சஸ்வியாயும் வேதாத்யயனம் செய்தவனாயுமுள்ளவனுக்குக் கொடுத்துவிடுவதாகத் தீர்மானித்தான். அதே மாதிரி ஒருநாள் ஒரு பிரம்மசாரி பையன் ஸர்வலக்ஷணமும் கூடினவனாய் வேதம் சொல்லிக்கொண்டு பிக்ஷைக்கு வந்தான். உடனே விரூபாக்ஷன் அந்தப்பையனுக்குத் தன்பெண் கௌரியைக் கல்யாணம் செய்துகொடுத்துவிட்டான். பிறகு அவன் குலம் கோத்ரம் விசாரித்ததில் எலலாம் நல்லதாகவே இருந்தபோதிலும் பையன் வைஷ்ணவப்பையனாகவிருந்தான். இருந்தபோதிலும் அவனிடம் பலகுணங்களிருந்தமையால் இந்த ஒன்றை கவனிக்காமல் கல்யாணம் யதோக்தமாய் முடிந்தது. சிறிது நாள் சென்றதும் அந்த வைஷ்ணவப்பையன் கௌரியையுமழைத்துக்கொண்டு தன்னூருக்குச் சென்றான். அங்கு அவனுடைய பெற்றோர்கள் அவன் கல்யாணம் செய்துவந்த பெண்ணின் ரூபலாவண்யத்தையும் சீரையும் கண்டு மெச்சினார்களென்றாலும் பெண் எப்பொழுதும் அம்பாள் மந்திரம் ஜபிப்பதிலும் சைவகுலம் என்பதிலும் நிரம்பவும் வருத்தப்பட்டார்கள். அப்பெண்ணை தங்கள் கிருஹத்தில் ஒன்றையும் தொடக்கூடாதென்று தனியாக ஓரிடத்தில் இருக்கச் செய்தார்கள். இது அப்பெண்ணுக்கு மிகச் சந்தோஷத்தையே உண்டாக்கிற்று. ஏனெனில் எப்பொழுதும் தான் தனிமையில் ஸாக்ஷாத்பராதேவதையை தியானம் செய்வதற்கும், பூஜை ஜபம் முதலானவை செய்வதற்கும் அது மிகவுமனுகூலமாயிருந்தது. ஆனால் விபூதிருத்ராக்ஷம் தரித்தவர்கள் முகத்தையே பார்ப்பதற்கில்லாமலும் ஈசுவரன் கோவிலுக்குப் போவதற்கில்லாமலும் இருக்கிறதேயென்று அதிக வருத்தத்துடன் காலம் கழித்தாள். ஒரு ஸமயம் இப்பெண்ணை அந்த வீட்டில் தனிமையில் விட்டுவிட்டு இவள் மாமியார் மாமனார் பர்த்தா முதலியவர்கள் அயலூருக்கு ஒரு கல்யாணத்திற்காகப் போயிருந்தார்கள். அச்சமயம் ஈசுவரனானவர் கிழப்பிராமண வேஷம் பூண்டு விபூதிருத்ராக்ஷதாரியாய் கையில் தடியூன்றிக்கொண்டு சிவசிவ என்று ஜபித்துக்கொண்டு அவ்வீட்டிற்கு வந்தார். இந்த சிவநாமஜபம் கேட்டதும் கௌரிக்கு உண்டான ஸந்தோஷத்துக்கு ஓரளவில்லை. ஓடோடியும் வந்து அக்கிழவரை நமஸ்கரித்து அர்க்யபாத்யாதிகள் கொடுத்து "தாதா, என்னவேண்டும்" என்று கேட்டாள். அக்கிழவர் தனக்கு அதிகப் பசியாயிருக்கிறதென்றார். அரிசிபருப்பு முதலியன வைத்திருக்கும் உக்கிராண உள்ளை தனது மாமியார் பூட்டித் திறவுகோலைக் கொண்டுபோய்விட்டாளே என் செய்வேன் என்று வருத்தப்பட்டாள் அப்பெண். "பாதகமில்லை. நீ ஸமீபத்தில் போனதுமே கதவுகள் திறந்துகொள்ளும்" என்றார் கிழவர். அம்மாதிரியே கௌரியைக் கண்டதும் கதவுகளெல்லாம் திறந்துகொண்டன. உடனே மிகவும் உத்ஸாஹத்துடனும் பாபரப்புடனும் கௌரியானவள், க்ஷணப்பொழுதில் சமையலெல்லாம் செய்துமுடித்து வாசல் கதவைசாத்தி உள்தாப்பாளிட்டு கிழவருக்கு இலைபோட்டு சாப்பாடு செய்து வைத்தாள். சாப்பிட்டு முடிந்ததும் கிழவராயிருந்த பிராமணர் நல்ல யௌவன புருஷராக அழகிய வடிவத்துடன் மாறி வெற்றிலை பாக்கு கேட்டார். இதைக்கண்ட கௌரீ பயந்து ஒதுங்கி நின்றாள். இச்சமயத்தில் வாசலில் கௌரியின் மாமியும் மாமனும் வந்து கதவை தட்ட

வாரம்பித்தார்கள். அப்பொழுது கௌரியின் மனநிலையிருந்த விதத்தை சொல்ல வொண்ணாது. ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து நின்றாள். வாசலில் மாமியார் தனக்கு உடனே கதவைத் திறக்கவில்லையென்று மிகுந்த கோபம்கொண்டவளாய் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தாள். அச்சமயம் யௌவன புருஷனாக விருந்த ஈசுவரானவர் மிகச் சிறுகுழந்தையாக மாறி படுத்தவண்ணமே தனது இருகைகளாலும் கால் கட்டவிரலை வாயில் வைத்துக்கொண்டு கௌரியைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார். அக்குழந்தையைப்பார்த்ததும் மாமியார் "இது யாருடையகுழந்தை" என்றாள். கௌரிக்கு இன்னது சொல்வதென்று தெரியாமல் "தேவதத்தனின் குழந்தையிது. அவனும் அவன் பத்தினியும் எங்கேயோ போய் வரவேண்டுமென்றும் தாங்கள்வரும் வரையில் இக்குழந்தையை சற்று பார்த்துக்கொள் என்றும் சொல்லி இங்கு விட்டுப்போனார்கள்" என்றாள். இதைக் கேட்டதும் அடக்கமுடியாத கோபத்துடன் அந்த மாமியார் "ஊரார் பிள்ளையைப்பார்த்துக்கொண்டிருக்கிறதற்குத்தானா நீ இங்குவந்திருக்கிறாய். இந்தக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஓடிப்போ நீ வெளியே" என்று அதட்டி அவளை அக்குழந்தையுடன் வெளியே தள்ளி விரட்டிவிட்டாள். கௌரியும் அக்குழந்தையை கட்டியணைத்துக்கொண்டு நடுவீதியில் நின்று செய்வதின்னதென்று தெரியாமல் தவிக்கையில் அவள் கையிலிருந்த குழந்தை ஸாக்ஷாத் ஈசுவரனாக மாறி ரிஷபாரூடராக அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கெல்லாம் தர்சனம் கொடுத்து கௌரியையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு அந்தர்த்தானமானார்.

24. கால்மாறி அத்புதத்தாண்டவமாடியது.

ராஜசேகரபாண்டியன் வெகுகாலம் பாண்டிய நாட்டை யரசாண்டுவரும் நாளில் அவன் 64 கலைகளுள் 63ல் தேர்ந்தவனாய் பாதநாட்டியம் மட்டும் கற்றுக்கொள்ளாமலிருந்தான். ஏனெனில் வெள்ளியம்பலத்தில் ஸாக்ஷாத் ஈசுவரன் செய்யும் நர்த்தனத்தைத் தான் செய்வது ஸரியல்ல வென்றிருந்தான். ஒருஸமயம் சோழநாட்டிலிருந்து வந்த ஒரு வித்வான் ராஜசேகரபாண்டியனை நோக்கி "எங்களரசனாகிய கரிகாலச்சோழனுக்கு 64 கலைகளிலும் பூர்ணமான ஞானம் இருக்கிறதே. தங்களுக்கு 63 தானே தெரியும். ஆதலால் ஞானத்தில் தாங்கள் எங்களரசனுக்குத் தாழ்ந்தவர்தானே" என்றான். இதைக்கேட்டதும் ராஜசேகரனுக்கு மிகவும் வெட்கமும் ரோஷமும் உண்டாச்சுது. உடனே அக்குறையை நிவர்த்தித்துக்கொள்ள யத்தனித்தான். பாதநாட்யத்தில் தேர்ந்த அநேக வித்வான்களைத் தருவித்து அதை அப்யஸிக்கவாரம்பித்தான். ஆனால் அதைச் சற்று அப்யாஸம் செய்வதற்குள்ளேயே ஒருகாலில் நிற்பதால் அவனுக்கு மிகுந்தசிரமம் உண்டாயிற்று. சிறந்த ஈசுவரபக்தனாதலால் பின்வருமாறு ஆலோசிக்கலானான். "சற்றுநேரம் நடனம் செய்வதற்குள்ளாக ஒருகாலில் சரீரபாரத்தை முழுவதும் சுமத்துவதால் நமக்கு இத்துணை வலியுண்டாயிற்றே, ஈசுவரனோ ஓயாமல் ஸதாஸர்வகாலமும் ஒரு காலாலேயே நர்த்தனம் செய்கிறாரே. அவருக்கு எவ்வளவு வலியிருக்காது. அவருடைய பக்தனாயிருந்துகொண்டு நாம் அதைப்பார்த்துக்கொண்டிருக்கலாமா" என்று எண்ணி சிவராத்ரியன்றையதினம் அர்த்தராத்திரியில் கோயிலுக்குள்ளிருக்கும் ரஜதஸபைக்குச்சென்று ஈசுவரன் செய்யும் ஆநந்தத்தாண்டவத்தை தர்சனம் செய்து சற்று நேரத்துக்கெல்லாம் ஆநந்தக்கண்ணீர்

பெருக்கிக்கொண்டு ஈசுவரனைநோக்கி "ஹே, ஸ்வாமின், தாங்கள் எப்பொழுது பார்த்தாலும் இடதுகாலையே தூக்கிக்கொண்டு வலதுகாலையே ஊன்றிக்கொண்டு நர்த்தனம் செய்கிறீர்களே. தங்களுக்குக் கால் எவ்வளவு வலியுடனிருக்கும். இப்பொழுது நான் பரதநாட்டியம் அப்யஸிக்கவாரம்பித்த பிறகுதான் இது விஷயம் தெரிந்தது. நான் தங்கள் சிரமத்தைக் காணப்பொறுத்திரேன். ஆதலால் தாங்கள் சற்று சிரமபரிஹாரமாக இடதுகாலையூன்றி வலதுகாலைத் தூக்கியாடவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இல்லையேல் என் சிரஸை வெட்டிவிடுவேன்" என்று சொல்லி தனது பட்டாகத்தியை உருவி ஈசுவரன் பாதத்தில் வைத்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். அரசனின் பக்தியையும் அவனது மன உறுதியையும் கண்ட நடராஜமூர்த்தியானவர் அவன் நமஸ்கரித்து எழுந்திருப்பதற்குள்ளாக காலைமாற்றித் தாண்டவமாடவாரம்பித்தார். அரசன் எழுந்திருந்து இந்த அத்புதக் காக்ஷியைக் கண்டு வியந்து ஈசுவரனை வெகுவாக ஸ்தோத்ரம் செய்து மதுரையில் வெள்ளியம்பலத்தில் எப்பொழுதும இம்மாதிரியே தர்சனம் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்படியே ஈசுவரனால் அனுக்ரஹிக்கப்பெற்று அரசன் அரண்மனை போய்ச்சேர்ந்தான். பிறகு அவனுக்கு குலோத்துங்கபாண்டியனென்று ஒரு புத்ரன் பிறந்தான். அவனுக்கு வயது வந்ததும அவனிடம ராஜ்யத்தை ஒப்புவித்து ராஜசேகரன் சிவலோகம் சென்றான்.

25. பிராமணபத்நீ இறந்தவிதத்தைக் காண்பித்தது.

குலோத்துங்கபாண்டியன் ராஜ்யமாண்டுவரும் நாளில் ஒருஸமயம் திருப்புத்தூரிலிருந்து ஒரு பிராமணன் தன் மனைவியுடனே கைக்குழந்தையையுமெடுத்துக்கொண்டு காடுகடந்து மாமனிருக்கிற மதுராபுரியை நோக்கி வரும்பொழுது வழியிலே தாகத்துக்கு நீர் வேண்டுமென்று வருந்திய மனைவியை குழந்தையுடன் ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலிலே களைப்பாறப் படுத்திருக்கச் செய்து தான் நீர்தேடிச் சென்றான். அடர்ந்த இலைகளையுடைய அந்த ஆலமரத்தில் வெகுநாளைக்கு முன்பு ஒருவனெய்த அம்பு இலைகளில் தைத்திருந்தது. அன்றயதினம் அந்தப் பிராமணப்பெண் அதனடியில் வந்து படுத்து சிரமத்தால் கண்ணயர்ந்ததும் ஒரு காற்றாலலைக்கப்பட்டு அவ்வம்பானது அவ்விலைகளினின்றும் விடுபட்டு கீழே அதற்கு நேராகப் படுத்திருந்த பிராமணப் பெண்ணின் மார்பில் தைத்து அதனால் அவள் பிராணனையிழக்கும்படி நேர்ந்தது. அதே சமயத்தில் அம்புகோத்த வில்லையுடைய ஒருவேடன் வெயிலுக்கொதுங்க நிழல்தேடிவந்து அந்த மரத்தின் நிழலிலே ஒரு பக்கத்திலிளைப்பாற நின்றான். தண்ணீர் கொண்டுவரப்போன பிராமணன் குளங்கண்டு தண்ணீரெடுத்துக்கொண்டு அந்த ஆலமரத்தடியில் வந்து தன் மனைவியைப் பார்த்ததும் அவள் இறந்துகிடப்பதைக்கண்டு கதறி யாதுகாரணத்தாலிறந்தாளென்று கவனிக்கையில் கூர்மையான அம்புதைத்து இறந்திருப்பதையறிந்து யார் அம்பு எய்திருப்பார்களென்று சுற்றுமுற்றும் பார்க்கையில் அங்கு நிழலுக்காக ஒதுங்கியிருக்கும் வேடனைக்கண்டு அவன்தான் செய்திருக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அவனைப்பிடித்து இழுத்து அடித்துக் கேட்டான். அதற்கு அவன் இறந்துகிடக்கும் பெண்ணைப் பார்த்து மிகவுமாச்சர்யமடைந்து தான் ஒருபாவமுமறியேனென்று எவ்வளவு சொல்லியும் அந்த பிராமணன் கேளாமல் அவனையுமிழுத்துக்கொண்டு தன் பத்னியின் சவத்தையும் கைக்குழந்தையையும் எடுத்துக்

கொண்டு மதுரைக்கு அரசனின் அரண்மனைக்குச் சென்றான். அரசனிடம் எல்லா விபரத்தையும் சொல்லவே அரசனும் பலவாறாக அவ்வேடனைக் கேட்டும் அவன் தான் நிரபராதியென்றும் தான் நிழலுக்காக அங்குவந்து ஒதுங்கியவனென்றும் தானச்சமயம் ஒரு அம்பாவது போடவில்லையென்றும் தான் சொல்வதெல்லாம் நிஜமென்றும் ஒரேவிதமாய் சொன்னான். இதைக்கேட்ட மந்திரிகள் அவன் கிராதகனானதலால் நிஜம் சொல்லமாட்டான். அவனை ஸரியானபடி தண்டித்து நிஜத்தை சொல்லும்படி செய்யவேண்டுமென்றார்கள். அதற்கரசன் "அவன் முகத்தைப் பார்த்தால் குற்றவாளியாகவோ பொய்சொல்லுகிறவனாகவோ தோன்றவில்லை. நீங்கள் அவன்மேல் சட்டப்படி நடவடிக்கை நடத்துங்கள்" என்று சொல்லிவிட்டு அந்த பிராமணனை நோக்கி "இனி நீர் மனைவி காலஞ்சென்றதைக் குறித்து வருத்தப்படுவதில் பிரயோஜனமில்லை. இந்த சவத்துக்கு மேலாகவேண்டிய காரியங்களையெல்லாம் செய்துவிட்டுவாரும். அதற்குள் நாமும் இதன் உண்மையைக் கண்டுபிடிக்கிறோம்" என்று சொல்லி அந்த பிராமணனுடைய குழந்தைக்கு போஷணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய உத்தரவுகொடுத்தனுப்பினான். எல்லோரும் சென்றதும் அரசன் தனிமையில் மிக மனவருத்தமுற்றவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தியானித்துத் தனக்கு இதனுண்மையை விளங்கச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே ஈசுவரனும் அசரீரவாக்கால் அவனுக்குச் சொன்னதாவது. "இந்தப் பட்டணத்துக்கு வெளியில் ஒருபுறத்துள்ள செட்டித்தெருவில் இன்றிரவு ஒரு கல்யாணம் நடக்கிறது. அங்கே நீ அந்த பிராமணனையும் கூட்டிச் சென்றால் எல்லாவற்றையும் உனக்கு தெளியச் செய்கிறோம்" என்றார். அவ்வண்ணமே அன்றிரவு அந்த பிராமணனுடன் மாறுவேடம் பூண்டு அரசனானவன் ஊருக்கு வெளியிலுள்ள கல்யாணவீட்டிற்குச் சென்றான். அங்கே இவர்களுக்குமுன் இரண்டு யமதூதர்கள் வந்து காத்திருந்தார்கள். ஈசுவரனின் அருளால் இவ்விருவர் கண்களுக்குமட்டில் அந்த யமதூதர்கள் தென்பட்டார்கள். அதுவுமன்றி அவர்கள் பேசிக்கொள்வதும் இவ்வரசனுக்கும் பிராமணனுக்கும் காதில் பட்டது. இவர்களிருவரும் ஒருபுறமாயிருந்து அந்தயமதூதர்கள் பேசிக்கொள்வதைக் கவனித்தார்கள். ஒருதூதன் மற்றொருவனைப்பார்த்து தங்களது அரசனாகிய தர்மராஜா இன்றயதினமே இவனுயிரைக்கொண்டு வாருங்களென்றவுத்திரவின்படி உடம்பிலே யாதொருவியாதியுமில்லாதிருக்கிற இந்த மாப்பிள்ளையினுயிரை எவ்விதத்தில் கொண்டுபோவதென்று கேட்க, அதற்கு மற்றொருவன் வழிநடந்த சிரமத்தினால் நிழலுக்கொதுங்கியிருந்த பிராமணஸ்திரீயை எக்காலத்திலோ மாத்தினிலையில் தைத்துக்கிடந்த அம்பைக்காற்றினால் விழச்செய்து அதைவ்யாஜமாக வைத்து எப்படி அவளுயிரை இன்று காலமே கொண்டுபோனோமோ அதுபோல இக்கல்யாணத்திலே கொட்டுகிற மேளவாத்தியங்களுக்கு மருண்டு கன்றீன்ற பசு கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துக்கொண்டுபோய் இவன்மேல் பாயச்செய்து இவனுயிரைக்கொண்டுபோவோமென்றான். இவ்வார்த்தைகளைக்கேட்ட அரசனுக்கும் பிராமணனுக்கும் பிராமணஸ்திரீ இறந்த காரணத்தின் உண்மை நன்றாய்த் தெரிந்துவிட்டதென்றாலும் இக்கல்யாணவீட்டில் அந்த தூதர்கள் சொனனபடி நடக்கிறதாவென்று பார்ப்பதற்காக சற்று தங்கியிருந்தார்கள். சொன்னது சொன்னபடியேநடந்தது. கல்யாணக் கோலமெல்லாம் விபரீதக்கோலமாக மாறிவிட்டது. உடனே அரசன்திரும்பி அரண்மனைக்குச்

சென்று அந்த பிராமணனுக்கு மறுபடிவிவாஹம் செய்துகொண்டு ஸுகமாயிருப்பதற்காக ஏராளமான தனத்தைக்கொடுத்தனுப்பிவிட்டு அந்த வேடனையும் சிறையிலிருந்து விடுவித்து அவனுக்கும் வேண்டியதிரவியம் கொடுத்தனுப்பினன்.

26. பிராம்மணனின் மஹாபாதகங்களைத் தீர்த்தது.

அவந்திதேசத்திலுள்ள ஒரு பிராமணன் மனதை நடுங்கச்செய்யும்படியான மாதிருகமனம் பிதிருஹத்தி முதலிய மஹாபாதகங்களையெல்லாம் செய்துவிட்டு அதன் பலனாக உடுக்கத் துணியில்லாமல் உண்கச் சோறு இல்லாமல் பிரும்மஹத்தி பின்தொடர ஊரூராய் திரியும் காலத்தில் ஏதோ ஜன்மாந்த்ர அதிர்ஷ்டவசத்தால் ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தை அடைந்தான். அங்கே கோபுரவாயிலிலேயே ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர் வேடவேஷம்பூண்டு ஸல்லாபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் அந்த பிராமணனுக்கு பாபவிமோசனகாலம் வந்துவிட்டதால் அவர்களிடம் தான் செய்த பாபங்களையெல்லாம் சொல்லி தனக்கு கதி கல்பிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். ஈசுவரனும் மனமிரங்கி அவனுக்கு நல்லகதிக்கு வேறு மார்க்கமில்லையென்றும் ஸுந்தரேசுவரரை மூன்றுவருஷகாலம் விடாமல் ஆராதித்து வந்தால் கடைசியில் அவர் கிருபை செய்வாரென்றும் சொல்லி மறைந்தார். அவ்வண்ணமே மூன்றுவருஷகாலம் ஹாலாஸ்யநாதரை அல்லும் பகலுமாய் ஆராதித்து கடைசியில் சிவலோகமடைந்தான்.

27. குருத்ரோஹியை தண்டித்தது.

ஒருஸமயம் சஸ்திரவித்யையில் மிகவும் தேர்ந்தவரும் மிகச்சிறந்த சிவபக்தருமான ஒரு விருத்தர் பத்னியுடன் மதுரைக்கு வந்து அங்கு ஒரு வித்யாசாலையேற்படுத்தி அதில் அநேகம் பையன்களுக்கு பலவித ஆயுதங்களின் பயிற்சியை கற்றுக்கொடுத்தார். அவரிடம் வாசித்த பையன்களுள் ஸித்தன் என்ற ஒருவன் துர்ப்புத்தி பிடித்து ஆயுதப்பயிற்சியில் தான் நிரம்பத் தேர்ந்தவனாக கர்வங்கொண்டு ஊருக்குவெளிப்புறத்தில் அவருக்கு போட்டியாய் தான் ஒரு வித்யாசாலையை ஏற்படுத்தி அங்கு அநேகம் பையன்களைச் சேர்த்துக்கொண்டு அவரிடமுள்ள பையன்களையும் கலைக்கவாரம்பித்தான். இதை சிலபையன்கள் அக்கிழவரிடம் போய்சொல்லியும் அவர் மிகவும் ஸத்வகுணமுடையவராதலால் அதை நம்பாமல் தான் வழக்கம்போல் பையன்களுக்கு சிறிதுநேரம் ஆயுதப்பயிற்சி கற்றுக்கொடுப்பதும் மீதியாயுள்ள நேரம் முழுமையும் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரை பிரதக்ஷிண நமஸ்காரங்களால் ஆராதிப்பதுமாக காலத்தைக் கழித்துவந்தார். சிறிதுநாளில் அந்தஸித்தன் என்பவனுக்கு மதம் அதிகரித்து தனதுகுருவின் பத்னியை இச்சிக்கவாரம்பித்தான். பிரதிதினமும் குருவீட்டிற்குபோய் அவர் பத்னியைக்கண்டு தனக்கு அன்று அவகாசம் அகப்படுமா இல்லையாவென்று கேட்பான். அவள் பாமஸாதுவானதால் இவனுடையகெட்டஎண்ணத்தை அறிந்துகொள்ளாமல் தனக்கு தெரியாதென்று பதில் சொல்லிவந்தாள். ஒருதினம் கிழவர் வீட்டிலில்லாத ஸமயத்தில் ஸித்தன் வந்து அந்தம்மாளை கையைப்பிடித்திழுக்கவாரம்பித்தான். உடனே அந்த அம்மாள் சப்தம் செய்து இவனை விரட்டிவிட்டு ஸங்கோசத்தால் பர்த்தாவிடம் இதுவிஷயத்தைச் சொல்லத் தயங்கி

மிகப் பதிவ்ரதையானதால் ஸ்ரீ ஹாலாஸ்யநாதரை தியானித்து அவரிடம் முறையிட்டாள். உடனே ஸ்ரீ ஹாலாஸ்யநாதரும் பக்தவத்ஸலரானபடியால் அந்தக் கிழவர் மாதிரியாக உருவமெடுத்துக்கொண்டு அந்த ஸித்தன் இருக்கும் வித்யாசாலைக்குப்போய் அவனைத் தன்னுடன் யுத்தத்திற்கழைத்தார். அவனும் குருவானதால் அவருடன் யுத்தம் செய்யக்கூடாதென்று முதலில் நடித்தானென்றாலும் அந்தரங்கத்தில் அவரைக் கொன்றுவிட்டால் அவருடைய பத்னியை யதேச்சமாய் அனுபவிக்கலாமென்ற கெட்ட எண்ணத்துடன் நிர்ப்பந்தத்தால் ஸம்மதிப்பவன்போல ஸம்மதித்தான். உடனே இருவரும் கத்தியை உருவிக்கொண்டு யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். அங்குள்ள பையன்களெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். சிறிது நேரத்தில் அந்தக் கிழவரானவர் அந்தப் பதிவ்ரதா சிரோமணியை பிடித்து இழுத்த கை இதுதானே என்று அவன் கையை வெட்டினார். அவளை கூப்பிட்ட நாக்கு இதுதானே என்று நாக்கை நறுக்கினார். இன்னும் பலவாறாக அவனை சித்ரவதை செய்து கடைசியாக அவன் கழுத்தை அறுத்துவிட்டு திடீரென்று அந்தர்த்தானமானார். இதையெல்லாம் பார்த்திருந்த பையன்கள் மிகவாச்சர்யங்கொண்டு கிழவர் வீட்டிற்கு ஓடிவந்து அவர் எங்கே என்று அவர் பத்னியைக் கேட்டார்கள். அவர் கோயிலுக்கு ஸ்வாமிதர்சனத்திற்கு போயிருக்கிறார் என்று அந்தம்மாள் சொல்ல அவர் வருமவரையில் காத்திருந்து அவர் வந்ததும் ஸித்தன் வீட்டில் நடந்தவற்றையெல்லாம் சொன்னார்கள். அதைக்கேட்டதும் அவருக்கு ஒன்றும் விஷயம் தெரியாமல் திகைத்து நிற்கையில அவர் பத்னியானவள் ஸித்தனின் கெட்ட எண்ணங்களையெல்லாம் வியக்தமாகச் சொன்னாள். மிகவும் ஆச்சரியமடைந்து எல்லாம் ஈசுவரன் செயல், அநாதனுக்கு அவர்தான் பந்து என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்துகொண்டு தன் பத்னியுடன் ஆலயத்துக்குச் சென்று ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை வெகுவாக ஸ்தோத்ரம் செய்து நமஸ்கரித்தார். இதையெல்லாம் செவியுற்ற பாண்டியராஜனும் கோயிலுக்குச் சென்று ஈசுவரனை நமஸ்கரித்துவிட்டு அந்தக் கிழவரை மிகப் பூஜித்து அவருக்கு பலவாறான ஸம்மானங்கள் செய்து உபசரித்தான்.

28. சமணர்கள் அனுப்பிய பாம்பைக் கொன்றது.

குலோத்துங்கபாண்டியனுக்குப் பிறகு அவனுடைய புத்ரனான அநந்தகுணபாண்டியன் அரசாண்டுவரும் நாளில் சமணர்கள் அவனிடம் த்வேஷம்கொண்டு முன்போல் எல்லோரும் ஒருங்குசேர்ந்து மஹத்தான ஆபிசாரஹோமம் செய்தார்கள். அந்தஹோமகுண்டத்திலிருந்து கோரமான ஒரு அஸுரனுண்டானான். அவனை பயங்கரமான ஸர்ப்பரூபமெடுத்துக்கொண்டு மதுராபுரிக்குப்போய்த் தனது விஷத்தால் அந்நகரையழிக்கும்படி ஏவிவிட்டார்கள். அவ்வாறே அந்தஸர்ப்பமானது மிகப்பெரிதான உருவெடுத்துக்கொண்டு மதுரையின் ஸமீபத்தில் வரும்பொழுதே அரசனின் ஸைந்யங்கள்சென்று அதையெதிர்த்து ஹிம்ஸித்தார்கள். உடனே அந்தப்பாம்பானது தன்முகத்தின்வழியாய் ஏராளமான கொடியவிஷத்தைக்கக்கிற்று. அதன்வேகம் பொறுக்கமாட்டாமல் ஜனங்களெல்லாம் அரசனிடம்முறையிட்டு அவனையும் கூட்டிக் கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்தித்தார்கள். அவரும் மூலலிங்கத்திலிருந்து வெளிக்கிளம்பி வந்து அந்தப் பாம்பைக் கொன்று கல்லாகச்செய்து தனது ஜடையிலிருந்த சந்திரகிரணங்களை அமிருதம்

வர்ஷிக்கச் செய்து அந்தகோரமான விஷத்தை மதுரமாகச் செய்துவிட்டு அந்தர்த்தானமானார். ஊர் முழுவதும் பாவியிருந்த விஷத்தை மதுரமாகச் செய்ததால் அவ்வூருக்கு அதுமுதல் மதுராபுரியென்று பெயர் ஏற்பட்டது. கல்லாகப்போன அப்பாம்பையும் நாகமலையென்று இப்பொழுதும் காணலாம்

29. சமணர்கள் அனுப்பிய பசுவை பசுமலையாகச் செய்தது.

இவ்வாறு தங்கள் முயற்சி வீணாகப்போய்விட்டதைக்கண்ட சமணர்கள் மனம் தளராமல் திரும்பவும் ஆபிசாரஹோமம் செய்து இன்னுமொரு அஸுரனையுண்டாக்கி அவனை பசுவின்ரூபத்தையெடுத்துச் சென்று மதுரையையழிக்கும்படி ஏவினார்கள். அவ்வாறே அந்தப் பசுவும் மஹத்தான ரூபமெடுத்துக்கொண்டு தன் கொம்புகளாலும் குளம்புகளாலும் எல்லாவற்றையும் த்வம்ஸம் செய்துகொண்டுவரும் ஸமயத்தில் பாண்டியராசன் ஸ்ரீ ஸுந்தரேசுவாரைப் பிரார்த்திக்க அவர் தமக்கு முன்னிலையில் படுத்திருக்கும் விருஷபராஜனை அப்பசுவினிடம் போய்வரும்படி யனுப்பினர். உடனே விருஷபராஜனும் ஆகாயத்தையளாவிய பெரிய ரூபத்தையெடுத்துக்கொண்டு அட்டஹாஸத்துடன் அப்பசுவிற்கு எதிரில் வந்ததும் அதைக்கண்டதும் அப்பசுவுக்குக் காமவிகாரம் உண்டாய் ஒன்றும் செய்யாமல் அசைவற்று விருஷபராஜாவைப் பார்த்தவண்ணமே நின்றது. சற்று நேரத்துக்கெல்லாம் அதன் வீர்யம் முழுமையும் தானாகவே வெளிவந்து சோர்ந்து கீழே விழுந்து பிராணனைவிட்டது. உடனே கல்லாக பசுமலையாகமாறிவிட்டது. விருஷபராஜாவும் திரும்பிச்சென்று தனது ஜயத்துக்குஅறிகுறியாக மதுரைக்கு வடபாகத்தில் தனது ஸ்தூலதேகத்தால் விருஷாத்ரி என்னும் மலையை ஜயஸ்தம்பம்மாதிரி ஏற்படுத்திவிட்டு ஸூக்ஷ்மசரீரத்துடன் திரும்பவும் முன்போல் ஸ்ரீ ஸுந்தரேசுவாருக்கு முன்பாகச் சென்று படுத்துக்கொண்டுவிட்டது.

30. பக்தனுக்காக ஸைந்யங்கள் காட்டியது.

அநந்த குணபாண்டியனுக்குப் பிறகு அவனுடைய புத்ரனான குணபூஷணபாண்டியன் அரசுசெலுத்திவரும் நாளில் அவனுக்கு மிகச்சிறந்த சிவபக்தனாகிய ஸுந்தரஸாமந்தன் என்று பெயருள்ள ஒரு ஸேனாபதி இருந்தான். இந்த ஸேனாபதியினுடைய சிவபக்தியை வர்ணிக்கவொண்ணாது. அவனுக்கு எப்பொழுதும் ஈசுவரன் ப்ரத்யக்ஷமாக இருந்தார். ஒருஸமயம் காட்டாசன் ஒருவன் மதுராபுரியின்பேரில் படையெடுத்து வருகிறானென்று தெரிந்து குணபூஷணபாண்டியன் ஸேனாதிபதியைக் கூப்பிட்டு கஜானாவிலிருந்து வேண்டிய திரவியத்தை யெடுத்துச் சென்று நல்ல பலிஷ்டர்களாயும் சூரர்களாயுமுள்ள ஜனங்களைப் பலவிடங்களிலிருந்தும் சேகரித்துக்கொண்டுவந்து மிகப்பெரிதான ஒரு ஸேனை தயார்செய்யும்படி ஆக்ஞாபித்தான். ஸுந்தரஸாமந்தனும் அவ்வாறே செய்வதாகச் சொல்லி கஜானாவிலுள்ள திரவியத்தை முழுமையுமெடுத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவாரிடம் தனக்கு அரசன் கொடுத்த ஆக்ஞையைச் சொல்லி தான் அந்தப்பணம் யாவற்றையும் ஈசுவரனை யாராதிப்பதிலும் ஏழையாயுள்ள சிவபக்தர்களின் தாரித்ரியத்தைப் போக்குவதிலும் ஈசுவரனுடைய ஆலயத்தில் ஜீர்ணமான பாகங்களைப் புதுப்பிப்பதிலும் செலவு

ழிக்கப்போவதாகவும் கடைசியில் வேண்டிய சமயத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் தாம் ஸைந்யங்களைக் கொண்டுவந்து சத்ருக்களை ஸம்ஹரிக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தான். அதற்கு ஈசுவரனும் அனுமதிகொடுக்க அவன் அவ்வாறே திரவியம் முழுமையையும் செலவழித்துவிட்டான். மந்திரிகள் கேட்டதற்கு பலவிடங்களுக்கு மனுஷ்யாள் அனுப்பியிருப்பதாயும் ஸேனைகள் சீக்கிரம் வந்துவிடுமென்றும் சொன்னான். ஆறுமாதகாலமான பிறகு ஒருநாள் அரசன் ஸேனாபதியை வரவழைத்து ஸேனை சேகரித்தாய்விட்டதா என்று கேட்டதற்கு தயாராயிருக்கிறதென்று பதிலுரைத்தான். மறுநாள் அந்த ஸேனையைத்தான் பார்க்கவருவதாக சொல்லி ராஜா ஸேனாபதிக்கு விடைகொடுத்தான். உடனே ஸேனாபதியும் ஆலயத்தினுள் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரிடம் விருத்தாந்தத்தை சொல்லி அவரால் அபயப்பிரதானம் செய்யப்பட்டவனாய் வீட்டுக்குத் திரும்பினான். மறுநாள் ஸுந்தரஸாமந்தன் ஸூர்யோதயத்திற்கெல்லாம் ஸ்நாநம் ஜபம் பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரை த்யானம் செய்துகொண்டு தன்பரிவாரங்களுடன் மெதுவாகத் தன் கிருஹத்திலிருந்து புறப்பட்டு அரண்மனைக்குச் செல்லுகையில் நடுவழியில் அரசனுக்குத்தான் என்ன சொல்வதென்று தயங்கி நிற்கையில் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் கொடுத்த ஆக்ஞையை அனுஸரித்து நந்தி பிருங்கி முதலிய சிவகணங்கள் மஹத்தான ஸைன்யமாய் மாறி பற்பல ஆயுதங்களுடன் பதாதிகளாகவும், குதிரைப்பட்டாளங்களாகவும், யானைப்பட்டாளங்களாகவும் வருவதைக் கண்டு மிகக்களிப்புடன் அரண்மனைசென்று அரசனிடம் ஸைன்யங்களைப் பார்க்கவாலாமென்று தெரிவித்தான். அரசனும் அவ்விதமே வந்துபார்த்து மிகவும் ஆச்சர்யமடைந்து தன் ஸேனாபதியை வெகுவாக மெச்சினான். அச்சைன்யத்தில் நானாதேசத்திய ஜனங்களுமிருந்தார்கள். ஒவ்வொருவரும் மிகவர்ச்சஸ்வியாயும் பராக்ரமசாலியாயுமிருந்தார்கள். அக்குதிரைகளின் வனப்பைசொல்லிமுடியாது. இந்த மஹத்தானஸைந்யத்தின் நடுவில் அவைகளுக்கு நாயகனாக ஒருவன் கம்பீரமான ஒரு குதிரையிலுட்கார்ந்துகொண்டு முக்கியஸ்தர்களாகக் காணப்பட்ட பலர் அவனை சூழ்ந்துகொண்டு நிற்கக்கண்டானரசன். உடனே ஸாமந்தனைக் கூப்பிட்டு அதுயார் என்றுகேட்க ஸாமந்தன், "ஸ்வாமின் இவ்வளவு பெரியஸைந்யம் எங்கிருந்து வந்ததென்றாவது அங்கு மத்தியில் காணப்படுகிறவர் யாரென்றாவது எனக்குத் தெரியாது. எல்லாம் ஸ்ரீ ஸுந்தரேசுவரர்செயல்" என்றான். அரசனும் ஸேனையின் மத்தியில் தோன்றிய மஹாபுருஷரைத்தருவித்து அவரை வெகுவாகஸம்மானித்தான். அவர் திரும்பி ஸேனைக்கு நடுவில் பிரவேசித்ததும் அந்தர்த்தானமாய்விட்டார். அதைக்கண்டு எல்லோரும் திகைத்து நிற்கையில் ஒருதூதன் ஓடிவந்து பாண்டியராஜாவை எதிர்த்துவந்த காட்டுராஜாவை ஒரு ஸிம்ஹம் கொன்று தின்றுவிட்டதென்றான். இதைக் கேட்டதும் குலபூஷணன் மிக ஸந்தோஷத்துடன் ஸாமந்தனை நோக்கி. "நீ சேகரித்த ஸைந்யங்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அவைகள் வந்ததும் நமக்கு ஜயம் வந்துவிட்டது. அவைகளை இனி திருப்பியனுப்பிவிடலாம்" என்றான். உடனே ஸாமந்தன் அசசைன்யங்களைப்பார்த்து "நீங்கள் யதாஸ்தானம் போய்விடலாம்" என்றுசொல்லவே அவ்வளவு ஸைன்யமும் இருந்தபடியே மறைந்துவிட்டது. இதைக்கண்டு அரசன் ஸாமந்தனின் பக்தியை வெகுவாகக் கொண்டாடி அவனுக்கு ஸர்வாதிபத்யத்தைக் கொடுத்து அவனுடன் கோயிலுக்குச் சென்று ஈசுவரனைப் பலவாறாகத்துதிசெய்து அரண்மனைக்குத்திரும்பினான்.

31. குலபூஷண பாண்டியனுக்கு அக்ஷயமான பணப்பை கொடுத்தது.

முந்திய லீலையில் சொன்னபடி ஸேனாபதியான ஸாமந்தன் கஜானாவிலிருந்த திரவியத்தையெல்லாம் ஒழித்துவிடவே ராஜ்யபாரம் செய்வதற்கும் பிராம்மணர்களைக்கொண்டு யக்ஞயாகாதிகள் நடத்திவைப்பதற்கும் திரவியமில்லாமல் அதனால் காலாகாலங்களில் மழையில்லாமல் ராஜ்யத்தில் துர்பிக்ஷம் ஏற்பட்டது. தேசத்திலுள்ள பிராமணர்கள் ராஜாவின் ஆதாவு குறைந்தமையால் அயலூருக்குச் சென்றார்கள். இதனால் மிகுந்த வியாகுலமுற்றவனாய் குலபூஷண பாண்டியன் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரை வெகுவாக பூஜித்து தேசத்திலுண்டாயிருக்கும துர்பிக்ஷத்தை விலக்க வழியேற்படுத்தவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தான். அரண்மனைக்குத் திரும்பிவந்து அன்ன ஆகாரமில்லாமல் அதே விசாரமாய் சோர்ந்து தரையில் விழுந்து அயர்ந்தான். அவனுடைய ஸ்வப்னத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் பிரஸன்னராகவந்து அவனுக்கு சொன்னதாவது "நீ சிறிதுகாலமாய் பிராம்மணர்களிடத்தில் ஔதாஸீன்யம் வைத்தமையால் இந்த துர்பிக்ஷம் ஏற்பட்டது. இனி அப்படி இல்லாமல் அவர்களை நன்கு ஆராதித்துவா. அதனால் தேசத்துக்கு துர்பிக்ஷம் போய் உனக்கும் ஆயுஸ் ஆரோக்யம் முதலிய எல்லாஸம்பத்தும் உண்டாகும். அதற்காக வேண்டியளவு தனம் இந்தப் பையில் இருக்கிறது. இது அக்ஷயமான பை. எவ்வளவு நீ எடுத்து செலவழித்தாலும இதில் குறைவு ஏற்படாது" என்றுசொல்லி அவனுடைய நெற்றியில் விபூதியைத் தடவி அவனுடைய கையில் ஸ்வர்ணத்திரவியமடங்கிய பையைகொடுத்துச்சென்றார். உடனே அரசன் எழுந்திருந்துகையில் இருந்த பையினால் கனவில்கண்டதெல்லாம் உண்மையென்றுதெரிந்து அந்தப் பையை தலையின்மேல் வைத்துக்கொண்டு ஆநந்தக்கூத்தாடினான். பொழுதுவிடிந்ததும் மந்திரிகளிடம் நடந்தவாலாற்றைச் சொல்லி அந்தப் பையை ஸிம்மாஸனத்தில் வைத்து பூஜை முதலியது செய்து அதிலிருந்து ஏராளமான தனமெடுத்து பிராமணர்களுக்குகொடுத்து தாரித்ரியத்தைத் தலைகாட்ட வொண்ணாமல் செய்து தேசத்தை ஸுபிக்ஷமாக்கினான்.

32. வளையல் விற்றது

இதற்கு முந்தி சிதம்பரக்ஷேத்ரவர்ணனையில் சொல்லியபிரகாரம் ஸாக்ஷாத் ஈசுவரனானவர் மூவுலகங்களையும் மோஹிக்கச்செய்யக்கூடிய பிக்ஷாடனர் ரூபத்தையெடுத்துக்கொண்டு தாருகாவனத்தில் ரிஷிகள் ஆசிரமங்களில் பிக்ஷையெடுத்தபொழுது அங்குள்ள ரிஷிபத்னிகளெல்லாம் அவருடைய ரூபலாவண்யத்தைக்கண்டுமயங்கி அவரைப்பிடித்துக்கட்டியணைக்கப்பிரயத்தனப்படுகையில் அவர் தனது மாயையால் அந்த ஸ்திரீகளின்கையிலகப்படாமல் சென்றதும் அந்த ரிஷிபத்னிகள் மிக ஏமாந்து தத்தம் கிருஹத்திற்குத்திரும்பிவந்தார்கள். அங்குள்ள ரிஷிகள் அவர்களை பரபுருஷனை இச்சித்துச்சென்றதற்காக வைசியர்குலங்களில் ஜனிக்கும்படி சபித்தார்கள். உடனே அவர்கள் ரிஷிகளின் கால்களில் விழுந்து தங்களை க்ஷமித்துத்தங்களுக்கு சாபவிமோசனம் கல்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ரிஷிகள் சொன்னதாவது, "ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலுள்ள வைசியர்களின் குலங்களில் நீங்கள் பெண்களாகப்பிறந்து இப்பொழுது நீங்கள் அபேக்ஷித்த ஈசுவரனின் அங்கஸ்பர்சம் ஏற்பட்டு மனோரதம் பூர்த்தியான பிறகு இங்கு திரும்பி வாருங்கள்"

என்றார்கள். அவ்வண்ணமே எல்லா ரிஷிபத்னிகளும் மதுராபுரியில் வைசிய கன்னிகைக ளாக வந்து ஜனித்தார்கள். மிகரூபலாவண்யத்துடன் பார்ப்பவர்கள் வியக்கும்படி அவர்கள் வளர்ந்து வருகையில் ஸ்ரீ ஸுந்தரேசுவரானவர் தாருகாவனத்தின் ரிஷிகளின் வார்த்தைக் கிணங்கதமது அங்கஸ்பர்சம் அந்த ஸ்திரீகளுக்கு கிடைக்குமாறு தாம் அதிஸுந்தரமான ஒரு வைசியவளையல்வியாபாரி ரூபமெடுத்துக்கொண்டு தோளில் நானாவிதமான வளையல்க ளைச் சுமந்துகொண்டு வைசியதெருவழியாக வளையல் விற்றுக்கொண்டுவந்தார். அங்குள்ள வைசியப்பெண்டீர்களெல்லாம் அந்த வியாபாரியின் ரூபத்தைக்கண்டு மோஹித்து எவ்வி தத்திலாவது அவன் ஸ்பர்சம் ஏற்படவேண்டுமென்ற ஆசையுடன் ஒவ்வொருவரும் அந்த வியாபாரியைக்கூபபிட்டு ஏற்கனவே தங்கள் கைகளில் வளைகள் இருந்தபோதிலும் அவை களை உடைத்துவிட்டு தங்களுக்கு வளையல் போடும்படி கேட்டார்கள். வியாபாரி ரூபமாக வந்த ஸ்ரீ ஸுந்தரேசுவரும் அவர்களுடன் மிகவும் வேடிக்கையானவார்த்தைகள் பேசிக் கொண்டு ஒவ்வொருவர் கைகளையும் தனது கையால் தொட்டுப்பிடித்து வளையடுக்கினர். இவ்வாறு அங்குள்ள எல்லாஸ்திரீகளுக்கும் அடுக்கியானதும் அவர்கள் கொடுக்கவந்த கிர யத்தைதாம் பிறகு வாங்கிக்கொள்வதாகச்சொல்லி மறைந்துவிட்டார். அந்த ஸ்திரீகளும் ஈசுவரனின் அங்கஸ்பர்சத்தால் மிகவும் ஆனந்தபரிதர்களாய் ஸமஸ்தபாக்கியத்தையும் அடைந்து கடைசியில் சாச்வதமான சிவபதவியை அடைந்தார்கள்.

33. யக்ஷஸ்திரீகளின் சாபத்தைத் தீர்த்தது.

முன்னொருகாலத்தில் கைலாஸத்தில் ஈசுவரனானவர் தக்ஷிணாமூர்த்தி ரூபியாய் ஆலமரத்தினடியிலுட்கார்ந்துகொண்டு சிவதர்மங்களையும் எல்லா ஆகம சாஸ்திரங்களையும் தத்துவஞானத்தையும் நந்தி பிருங்கி முதலிய கணங்களை வியாஜமாகவைத்து ஸநகஸநந்த நாதி மஹரிஷிகளுக்கு எடுத்துச்சொல்லிவரும் ஸமயத்தில் குமாரக்கடவுளுக்கு தாய்களாகப் பாவிக்கப்பட்டுவந்த ஆறுயக்ஷஸ்திரீகள் அங்குவந்து ஈசுவரனை நமஸ்கரித்து தங்களுக்கு அஷ்டஸித்தியை உபதேசிக்கும்படி வேண்டினர்கள். பரமதயாளுவான ஈசுவரனும் அவ் விதமே அவர்களுக்கு அஷ்டஸித்திகளின் ஸ்வரூபத்தையும் அவைகளை அடையும் வழியை யும் உபதேசித்தார். ஆனால் ப்ராரப்த கர்மவசத்தால் அந்த யக்ஷஸ்திரீகள் அதை ஸாவதான த்துடன் கவனியாமல் அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள். இதையறிந்த ஈசுவரன் அவர்களை பூலோகத்தில்போய் கல்லாக ஆகும்படி சபித்துவிட்டார்கள். உடனே மிகவும் நடு நடுங்கினவர்களாய் அந்த ஸ்திரீகள் ஈசுவரனின் பாதங்களில் வீழ்ந்து வெகுவாக துதி செய்து தங்களுக்கு எப்பொழுது இந்தசாபம் விடுபடும், அதுவரையில் எந்ததேசத்தில் தாங்கள் கல்லாக இருக்கவேண்டுமென்றுகேட்டார்கள். அதற்கு ஈசுவரன் பாண்டிய தேசத்தில் மிகப்பெரிதான ஒரு ஆலமரமிருப்பதாயும் அதனடியிற்சென்று அவர்கள் கற்க ளாகக்கிடந்தால் ஆயிரம் வருஷம் கழித்து தாம் அங்குவந்து அவர்களுக்கு அஷ்டஸித்தி யையும் உபதேசம்செய்து சாபத்தினின்றும் விடுவிப்பதாகச் சொன்னர். அவ்விதமே அவர்கள் அவ்வாலமரத்தினடியில் கல்லாகக் கிடந்தார்கள். குணபூஷணபாண்டியன் நா ளில் அந்த ஆயிரம்வருஷம் பூர்த்தியாகிவிட்டபடியால் தாம் சொன்னபடி ஈசுவரனானவர் தக்ஷிணாமூர்த்திரூபியாக நந்தீசுவரர் முதலிய கணங்களோடும் அகஸ்தியர் முதலிய மஹரி

ஷிகளோடும் அந்த ஆலமரத்தடிக்குவந்து கல்லாகவிருந்த ஆறுபேர்களையும் யக்ஷஸ்திரிகளாகமாற்றி அவர்களுக்கு அஷ்டஸித்திகளையும் உபதேசித்தார். அவர்களும் மிகுவும் ஸாவதானத்துடன் கேட்டு அந்த ஸித்திகளையெல்லாம் அடைந்தவர்களாய் அதன் பிரபாவத்தாலேயே ஆகாசமார்க்கமாக தாருகாவனம் சென்றுர்கள். ஈசுவரனும் மதுரையிலுள்ள மூலலிங்கத்திற்குள் அந்தர்த்தானமானுர்.

34. சோழராஜாவுக்கு தர்சனம் கொடுத்தது.

சோழநாட்டுக்குத் தலைநகராயுள்ள காஞ்சீபுரத்தில் காடுவெட்டிச்சோழன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் மிகச்சிறந்தசிவபக்தன். ஸதாஸர்வகாலமும் பஞ்சாக்ஷரம் ஜபிப்பதிலும் ஈசுவரனைத்யானம் செய்வதிலும் சிவபக்தர்களை உபசரிப்பதிலும் காலம் கழித்துவந்தான். காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன் மூலஸ்தானத்துக்கு சுற்றிலுமிருந்த காடுகளையெல்லாம் அழித்து அவ்விடத்தில் திவ்யமான அம்பாள் ஆலயமும் கட்டுவித்ததால் அவனுக்கு காடுவெட்டிச்சோழன் என்றுபெயர் பிரஸித்தியாயிற்று. ஒருநாள் அவனிடம் சிலசிவபக்தர்கள்வந்து ஹாலாஸ்யநாதரின் பெருமையையும் அவருடைய லீலாவிபவங்களையும் குறித்து வெகுவாகப்புகழ்ந்தார்கள். அதைக்கேட்டதும் இந்த சோழராஜனுக்கு ஹாலாஸ்யநாதரை தர்சனம் பண்ணி தான் கிருதார்த்தனுகவேண்டுமென்று அவா மிகவும் அதிகமாயுண்டாயிற்று. ஆனல் சோழராஜவுக்கும் பாண்டியராஜவுக்கும் பகையாதலால் எவ்விதம் தான் பாண்டியதேசத்துக்குள் போவதென்று மிகுந்தசிந்தையுடன் ஒன்றும் செய்யத்தோன்றுதவனுய் நாளுக்குநாள் உருகினன். இவனது பக்தியைக்கண்ட ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ஒருஸமயம் இவனுக்கு ஸ்வப்நத்தில் தோன்றி "நீ தனிமையில் உடனேபுறப்பட்டு மதுரைக்குவா. நாம் உனக்குவழிகாண்பித்துக் கூட்டிப்போய் ஹாலாஸ்யநாதரை தர்சனம் செய்துவைக்கிறோம்" என்றுசொன்னுர். இதைக்கேட்டு சோழராஜன் அளவிலடங்காத ஆனந்தங்கொண்டு உடனே மாறுவேடம் போட்டுக்கொண்டு மதுரையைநோக்கிப்புறப்பட்டான். ஈசுவரனுடைய அநுக்ரஹத்தால் வழியெல்லாம் கடந்து மதுரைக்கு ஸமீபத்தில் வைகையாற்றங்கரைக்கு ஸாயங்கால நேரத்தில் வந்துசேர்ந்தான். வைகையாற்றிலோ பிரவாஹம் மிகவதிகமாகவிருந்தது. அதையெப்படி தாண்டிச்செல்வதென்று வருத்தமுற்று தயங்கிநின்றுன். ராத்திரி வெகுநேரமாயும் வழியொன்றும் தென்படவில்லை. காஞ்சீபுரமிருந்து இவ்வளவுதூரம் நடந்துவந்தும், மதுரை இவ்வளவு ஸமீபத்திலிருந்தும், தனக்கு ஸ்ரீ மீனுக்ஷிஸுந்தரேசுவரர் தர்சனபாக்கியம் கிடைக்காமலிருக்கிறதேயென்று வெகுவாக நொந்துகொண்டான். 'அர்த்தராத்திரியாகப்போகிறதே. பொழுதுவிடியுமுன் தான் திரும்பிவிடவேண்டுமே. இல்லாவிடில் வெளிச்சத்தில் தன்னை பாண்டியவரசன் கண்டுகொண்டால் அனர்த்தம் விளையுமே, இதற்கு என்னசெய்வது என்று பலவாறுக வருந்தினன். பக்தன் வருந்துவதைக்கண்ட ஸ்ரீ ஸோமஸுந்திரரானவர் கோயிலில் அர்த்தஜாமம் ஆய் அதிகாரிகள் கதவுகளுக்கெல்லாம் பாண்டியராஜமுத்திரை வைத்துவிட்டு சென்றபிறகு மூலலிங்கத்தைவிட்டு ஸித்தர்மாதிரியாகப் புறப்பட்டு மாத்ரைக்கோலுங்கையுமாக வடக்குவாசல் வந்து அந்தக் கதவைத்தொடவே அது தானுகவேதிறந்துகொண்டது. உடனே வெளியில்வந்து வைகையாற்றங்கரைபோய் மாத்ரைக்கோலால் தொட்ட

மாத்திரத்தில் வைகையிலுள்ள பிரவாஹமானது அடங்கி மணல்தெரிந்தது. உடனே காடுவெட்டிச்சோழனும் வைகையைக்கடந்து தான் ஸ்வப்நத்தில் கண்டமாதிரியிருந்த ஸித்தரை நமஸ்கரித்து தனக்கு எவ்விதத்திலாவது ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரை தர்சனம் செய்துவைக்கும்படி மன்றாடினான். அந்த ஸித்தரும் சோழனைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு ஸமீபத்தில் வரும்பொழுதே அவனுக்கு கோபுரங்கள், விமானங்கள் எல்லாம் கண்ணுக்குப் புலப்படும்படி அர்த்தராத்ரியில் ஸூர்யபிரகாசத்தையுண்டாக்கி அவனுக்கவைகளின் விவரங்களைச் சொல்லி வடக்குவாசல் வழியாக உள்ளே சென்றதும் பொத்தாமரைக்குளத்தில் ஸ்நானம் செய்வித்து ஸ்ரீ மீனாக்ஷியையும் மூலலிங்கத்தையும் தர்சனம் செய்துவைத்து அவனுக்கு திருப்தியுண்டாக்கி திரும்பவும் வடக்குவாசல் வழியாகவே அவனை வெளியில் கூட்டிப்போய் அவன் நெற்றியில் விபூதியிட்டு விடியுமுன் பாண்டியநாட்டை விட்டகலும்படி சொல்லியனுப்பிவிட்டு தாம் வடக்குவாசலை முன்போல சாத்தி அதில் பாண்டியராஜாவின் முத்திரைக்குப் பதிலாக தம்முடைய விருஷப முத்திரையை வைத்துவிட்டுமூலலிங்கத்துக்குள் சென்றார். மறுநாள்காலையில் கோயிலதிகாரிகள்வந்து கோயில் கதவுகளைத் திறக்குமுன் முத்திரைகள் ஸரியாயிருக்கிறதாவென்று கவனிக்கையில் வடக்குவாசலில்மட்டும ராஜமுத்திரைக்குப் பதிலாக விருஷப முத்திரையிருக்கக்கண்டு உடனே பாண்டியவரசனாகிய குலபூஷணனுக்குத் தெரிவித்தார்கள். அரசனும் வந்துபார்த்து விஷயம் ஒன்றும் தெரியாமல் கதவுகளைத் திறநது உள்ளே பார்த்தபொழுது ஒன்றும் திருட்டுப்போகாமலிருந்ததைக்கண்டு இது திருடன் செய்தகார்யமல்லவென்று நிச்சயித்து உண்மையறியவேண்டுமென்று மிக அவாகொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப்பிரார்த்தித்து நின்றனன். ஈசுவரனும அசரீரவாக்கு மூலமாய் தாம்தான் முதல்நாள் ராத்ரி சோழராஜனுக்கு தர்சனம் செய்துவைக்கவேண்டி அம்மாதிரி செய்ததாக சொல்ல அரசனும் மறறுமுள்ளோர்களும் ஈசுவரனின் பக்தவாத்ஸல்யத்தைப் புகழ்ந்து வீடுபோய்ச்சேர்நதார்கள்.

35. தண்ணீர்ப்பந்தல் வைத்தது.

குணபூஷணபாண்டியனின் புத்ரனான ராஜேந்திரன் மிக தெய்வபக்தியுடன் ராஜ்யபாரம் செய்யும்பொழுது சோழராஜாவானவன் அவனை ஸ்நேகம் செய்துகொள்ளக் கருதி தன்னுடைய பெண்ணை ராஜேந்திரன் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்லியனுப்பினான். ராஜேந்திரனும் அதற்கிணங்க இருவரும் ஸ்நேகமாக இருந்தார்கள். இச்சமயத்தில் ராஜேந்திரனின் தம்பியாகிய ராஜஸிம்ஹனென்பவன் சோழராஜாவின் பெண்ணினழகைக் கேள்விப்பட்டு அப்பெண்ணைத் தான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸைநயங்களுடன் சோழராஜாவை யெதிர்த்துக் காஞ்சீபுரத்துக்குச்சென்றான். இருவருடைய பலாபலத்தையறிந்த சோழராஜா இவனுடன் ஸமாதானம் செய்துகொள்வதே ஸரியென்று கருதி ராஜஸிம்ஹனுக்கே தனது புத்ரியைக்கொடுப்பதாகச் சொல்லி அவனை யெதிர்கொண்டழைத்துச்சென்று அவனுக்குத்தன் புத்ரியையும் விவாஹம் செய்துவைத்தான். சிறிது காலத்துக்கெல்லாம் ராஜஸிம்ஹனானவன் தனது மாமனாராகிய சோழராஜனுடன் சேர்ந்து பாண்டியநாட்டைப் படையெடுத்து ராஜேந்திரனைக்கொன்று அவன் ராஜ்யத்தையுமபஹரிக்கவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்

துடன் சோழராஜாவின் ஸைந்யத்துடன் தன் மாமனாரையும் கூட்டிக்கொண்டு பாண்டிய தேசத்தின்மேல் படையெடுத்துவந்தான். இதையறிந்து ராஜேந்திரன் ஸ்ரீ ஸுந்தரேசுவாரிடம் முறையிட அவர் பயப்படவேண்டாமென்று சொல்லி அவனை ஸைந்யங்களுடன் எதிர்த்துப் போகும்படிக்கும் அவனுக்கு ஜயம் உண்டாகுமென்றும் சொல்லியனுப்பினார். உடனே இரண்டு ஸைன்யங்களுக்கும் மஹத்தான யுத்தம் நடந்தது. நல்ல கடுமையான கோடைகாலமானதால் வெயிலின் உஷ்ணம் தாங்கமுடியாமல் இரண்டு ஸைந்யங்களும் மிகத் தவித்தன. மத்யானம் 12 மணி வேளையில் எல்லோரும் மிகச் சோர்ந்துவிட்டதால் சற்று யுததம் நிறுத்தப்பட்டது. அச்சமயம் பாண்டியவரசனின் ஸைந்யமிருந்தவிடத்தில் ஈசுவரனானவர் ஒரு கூடாரத்தை யுண்டுபண்ணி அதில் தானே ஜடாதாரியான ஒரு பிராமணனாக வந்து அநேக பானைகளில் நல்ல தீர்த்தத்தை நிரப்பிவைத்துக்கொண்டு ஸேனைகள் முழுமைக்கும் தீர்த்தம் கொடுத்து ஆசுவாஸப்படுத்தினார். ஈசுவரனுக்கு அஸாத்தியமொன்றுண்டா. பாண்டய ஸைந்யமிருந்தவிடம் முழுமையும் தன் ஜடையிலுள்ள கங்காஜலத்தால் குளிரவடித்தார். உடனே பாண்டிய ஸைந்யமானது ஆசுவாஸமடைந்தவைகளாய் மீளவும் யுத்தத்துக்குப் புறப்பட்டது. ஆனால் சோழ ஸைந்யமோ தாகத்தால் நாவுலர்ந்து பேசக்கூட முடியாமல் சுருண்டு கிடந்தது. பாண்டிய ஸைந்யம் திரும்பவும் யுத்தத்துக்கு வருவதைக் கண்டதும் எல்லோரும் ஓட்டம் பிடித்தார்கள். சோழராஜாவும் ராஜஸிம்ஹனும் மட்டும் தனிமையில் கைது செய்யப்பட்டார்கள். அவர்களைப் பிடித்துக்கொண்டு திரும்புகையில் தண்ணீர்ப்பந்தலையும் அதை வைத்திருந்த பிராம்மணரையும் காணவில்லை. உடனே கோயிலுக்குவந்து ஸ்ரீ ஸுந்தரேசுவரரை நமஸ்கரித்து அந்த இரண்டு கைதிகளையும் ராஜேந்திரன் அவரிடம் ஒப்புவித்தான். பிறகு அவரது ஆக்ஞைப்படி சோழராஜனை அவன் ஸைந்யத்துடன் விடுவித்து ஊருக்கு அனுப்பிவிட்டான். கெட்ட எண்ணமுள்ள தம்பியை மிகத் தாழ்ந்த வேலைகளில் அமர்த்தினான். தான் வழக்கம்போல் ஸ்ரீஸுந்தரேசர் ஸேவையிலேயே கருத்துடன் ராஜ்யம் வஹித்து வந்தான்.

36. ரஸவாதம் செய்தது.

மதுரைக்கு ஸமீபத்தில் புஷ்பவனம் (திருப்பூவனம்) என்று ஒருஊர் இருக்கிறது. அவ்விடத்தில் ஹேமநாயகியென்று ஒரு தாஸியிருந்தாள். அவள்சிறந்த சிவபக்தை. தனது தொழிலினால் ஸம்பாதிக்கும் பணத்தையெல்லாம் சிவனடியார்களுக்கு அன்னமளித்து உபசரிப்பதில் செலவழித்து வந்தாள். ஒருநாள் அவள் அந்த ஊர்கோயிலுக்குச்சென்று புஷ்பவனேசுவரரை தர்சனம்செய்து கொண்டிருக்கும்பொழுது அந்தக்கோயிலுக்கு ஒரு உத்ஸவவிக்ரஹம் செய்துவைக்கவேண்டுமென்று அவளுக்கு புத்தியுண்டாயிற்று. அதற்காக அவள் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அதற்குவேண்டிய தனம் அவளிடம் சேரவில்லை. தினப்படி ஸம்பாத்யம் சிவனடியார்களின் சாப்பாட்டிற்கே ஸரியாய்ப்போய்விடுகிறது. இதனால் மிகமனவருத்தமுடையவளாய் அவள் ஸ்ரீ ஸுந்தரேசுவரரைத்யானித்து பிரார்த்தித்தாள். உடனே ஸுந்தரரும் தம்பிரான் ரூபமெடுத்துக்கொண்டு அவள் வீட்டுவாசவில் சாப்பாட்டுக்குவந்திருக்கும் சிவனடியார்களுக்கு மத்தியில் போயுட்கார்ந்தார். அவரை வேலைக்காரிகள் சாப்பிடவழைத்தபொழுது அவர்கள் யஜமானியை யழைத்துவரும்படி

சொன்னார். உடனே ஹேமநாயகியும் வெகு பக்திசிரத்தையுடன் அவரிடம் வந்து அவரை யுபசரித்தாள். அவர் அவளை நோக்கி "உன்னைப் பார்த்தால் கவலையுடனிருக்கிறவளாகக் காண்கிறது. என்ன காரணம்" என்றுகேட்டார். அதற்கு அவள் தனது மனதிலுள்ளதைச் சொல்ல அவர் தனக்கு ரஸவாதம் தெரியுமென்றும் அவள் வீட்டிலுள்ள பித்தளை இரும்பு முதலிய ஸகலலோஹங்களையும் கொண்டுவந்தால் தான் அவைகளை ஸுவர்ணமாக மாற்றிக்கொடுப்பதாயும் அதைக்கொண்டு அவள் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ளலாமென்றும் சொன்னார். உடனே அந்ததாஸியும் தன் வீட்டிலுள்ள எல்லா லோஹங்களையும் அவர் முன்பாக கொண்டுவந்து குவித்தாள். அவரும் அவை யெல்லாவற்றின்பேரிலும் தமது கையிலிருந்த பஸ்மத்தைத் தூவி மந்திரித்து அவைகளைக்கொண்டு போய் இராவுமுழுதும் அக்னியில் புடம்போட்டால் பொழுதுவிடிந்ததும் அவ்வளவும் ஸ்வர்ணமாக இருக்குமென்று சொன்னார். உடனே அந்த தாஸி அவரை போஜனமருந்தி இரவு அங்கே தங்கிவிட்டுப் போகும்படி வெகுதூரம் மன்றாடியும் அவர் கேளாமல் தாம் மதுரைஸித்தரென்றும் தமக்கு அங்கு ஒருத்தி காத்திருப்பளென்றும் சொல்லி இருந்தபடியே அந்தர்த்தானமானார். ஹேமநாயகியும் ஸந்தோஷத்துடனும் வருத்தத்துடனும் மறுநாள் காலையில் புடம்போடப்பட்ட லோஹங்களெல்லாம் தங்கமாக இருக்கக்கண்டு உடனே ஸுவர்ணத்தில் புஷ்பவனேசுவரரின் உத்ஸவ விக்ரஹம் வார்க்க ஏற்பாடு செய்தாள். அந்த விக்ரஹம் வார்த்து வந்ததும் அது வர்ணிக்கவொண்ணாதபடி மிகவுமழகாயிருந்ததைக்கண்டு அந்த ஹேமநாயகியானவள் தன் கைகளால் அதன் கன்னத்தைப் பிடித்துக்கொண்டு அதை உச்சிமுகர்ந்து முத்தமிட்டாள். இதனால் அந்தவிக்ரஹத்துக்கு கன்னத்தில் ஏற்பட்ட நகக்காயமானது இன்றும் காணப்படுகிறது.

37. சோழராஜாவை அகிழில் வீழ்த்தியது.

பாண்டியவாசனாகிய ராஜேந்திரனுக்குப் பிறகு அவனுடைய வம்சத்தில் ஸுந்தரேசபாதசேகரன் என்றொரு அரசனிருந்தான். அவன் மிகவும் பக்திசிரத்தையுடன் ஸுந்தரேசுவரரை பூஜித்து வந்தான். தன் ராஜ்யத்தில் பலவாற்றாலும் செலவுகளை மட்டுப்படுத்தி மீதியாகும் திரவியத்தையெல்லாம ஈசுவரகைங்கர்யத்தில் உபயோகப்படுத்தினான். அவ்வாறே தனது சேனைகளையும் எவ்வளவு குறைக்கலாமோ அவ்வளவு குறைத்து அந்தப் பணத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்தான். இவன் சைன்யம மிகவும் ஸ்வல்பமாக இருப்பதையும் கஜானாவிலும் அதிக திரவியமில்லாதிருப்பதையும் கேள்விப்பட்டு சோழதேசத்து அரசன் இவன்மேல் ஏராளமான சைந்யங்களுடன் படையெடுத்து வந்தான். இதையறிந்த ஸுந்தரேசபாதசேகரன் கோயிலுக்குச் சென்று ஈசுவரனைப் பிரார்த்தித்தான். ஈசுவரனும் அசரீரவாணி மூலமாய் அவனுக்குத் தேர்தல் சொல்லி அவனிடமுள்ள சைந்யத்துடன் யுத்தத்துக்குச் செல்லும்படிக்கும தாம் வந்து ஜயம் உண்டாகும்படி செய்வதாயும் கூறினார். உடனே பாண்டியவாசனும் சைந்யங்களுடன் சோழராஜாவை எதிர்த்துச் சென்றான். இவன் சைந்யம் ஸ்வல்பமாகவே இருந்தபோதிலும் ஈசுவரனின் மாயையால் ஏராளமாயிருப்பதாக எதிரிகளுக்குத் தோன்றிற்று. அதைக்கண்டு சோழ சைந்யங்கள் திரும்பி ஓடயத்தனிக்கையில் சோழராஜாவானவன் அவைகளை ஆசுவாஸப்படுத்தி ஒரே ஸமயத்தில்

தான் ஆயிரம்பேர்களைக் கொல்வேனென்று ஆர்ப்பாடம் செய்துகொண்டு ஸைந்யங்களை நடத்திக்கொண்டு முன்பாக வந்தான். அச்சமயம் பாண்டிய ஸைந்யத்தின் நடுவிலிருந்து மிகவும் கம்பீரமான ஒரு புருஷன் உயர்ந்த குதிரையிலேறிக்கொண்டு ராணுவ உடையைத் தரித்தவராய் கையில் வேலை சுழற்றிக்கொண்டு எத்தனைபேர்கள் வந்தாலும் ஒரே ஸமயத்தில் கொல்வேன் என்று ஆர்ப்பாடம் செய்துகொண்டு முன் வந்தார். அவரைக் கண்டதும் சோழராஜா பயந்து நடுநடுங்கி ஓட்டம் பிடித்தான். உடனே பாண்டியவரசனும் அவனைப பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றான். கொஞ்சதூரம் போனதும் சோழராஜா பின் திரும்பிப்பார்த்துத் தன்னைத் தொடர்ந்துவருகிறவன் பாண்டியவரசன் தான், அந்த கம்பீரபுருஷர் அல்லவென்பதைக் கண்டதும் தான் ஓடுவதை நிறுத்தித் தன் ஸைந்யங்களுடன் திரும்பிப் போர் செய்யவாரம்பித்தான். உடனே பாண்டியவரசன் தன் ஸைன்யங்களுடன் திரும்பி மதுரையை நோக்கி ஓடிவந்தான். சோழராஜாவும் வேகமாக அவனைப் பின்தொடர்ந்து அவனை மதுரை சேருவதற்குள்ளாகப் பிடிக்கப் பார்த்தான். பாண்டியவரசனோ ஓடோடியும் வந்து மதுரைக்கு மேற்குப்பக்கத்திலுள்ள அகிழில் தன் ஸைந்யத்துடன் குதித்து ஸ்ரீ ஸோமஸுந்தரரின் அனுக்கிரஹத்தால் உள்பக்கமாக கரையேறிவிட்டான். பின்தொடர்ந்துவந்த சோழராஜாவும் தன் ஸைந்யங்களுடன் அந்த அகிழில் குதிக்கவே ஈசுவரனுடைய லீலையால் அவர்கள் எல்லோரும் அந்த அகிழ் மடுவில் முழுகிப்போய்விட்டார்கள். பாண்டியவரசனும் ஈசுவரனை வெகுவாக துதித்து சத்துருக்களிடமிருந்து அபஹரித்த திரவியத்தைக்கொண்டு ஈசுவரனுக்கு மேன்மேலும் ஸேவை செய்தான்.

38. சூத்ரனுக்கு விரைக்கோட்டை கொடுத்தது.

மதுராபுரியில் மிகவும் ஈசுவரபக்தனான ஒரு சூத்ரன் இருந்தான். அவன் வியவஸாயம் செய்து அதனால் கிடைக்கும் தான்யத்தையெல்லாம் சிவபக்தர்களை அன்னமிட்டு போஷிப்பதில் உபயோகித்துவந்தான். ஒரு ஸமயம் அவன் நிலங்களில் ஸரியானபடி வெள்ளாமை விளையாததால் கஷ்டப்படும்படி நேர்ந்தது. அப்பொழுதும் சிவபக்தர்களுக்கு அன்னம் போடுவதை நிறுத்தாமல் கடன்வாங்கி யதைச்செய்தான். அவனுக்குக் கடனும் அதிகமாய், விளைச்சலுமில்லாமல், கடன் கொடுப்பவர்களுமில்லாமல் நிர்ப்பந்தம் ஜாஸ்தியாக ஆனதும் அவன் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் தனது குறையையெல்லாம சொல்லி தான் சிவனடியார்களை உபசரிக்க முடியாமல் வியர்த்தமாக பூமிக்கு பாரமாக இருப்பதைக்காட்டிலும் உயிரை விட்டுவிடுவதே நலமென்று தீர்மானித்திருப்பதாகத்தெரிவித்தான். உடனே ஈசுவரன் அவனிடம் கிருபையுடன் அசரீர வாக்கு மூலமாய் அவனுக்குச்சொன்னதாவது: "உன்பக்தியிலீடுபட்டோம். நீ கவலைப்படவேண்டாம். நீ உன் வீட்டுக்குப்போனால் அங்கு ஒரு விரைக்கோட்டையைக்காண்பாய். அது அக்ஷயமாய் இருக்கும். அதிலிருந்து நீ எவ்வளவெடுத்தாலும் அது குறையாது. அதைக் கொண்டு வழக்கம்போல் அன்னதானம் செய்துகொண்டு ஸுகமாய் இரு" என்று சொன்னார். உடனே அந்த சூத்ரனும் வீட்டுக்குச்சென்று அவ்வாறே அங்கு விரைக்கோட்டையிருக்கக்கண்டு அதை பூஜித்து முன்போல சிவபக்தர்களை யாராதித்துக்கொண்டு ஸுகமாக இருந்தான்.

39. மாமனாகவந்து தாயாதிகளை ஜயித்தது.

மதுராபுரியில் அர்த்தபதியென்ற ஒரு வைசியன் சிறந்த சிவபக்தனாகவிருந்தான். அவனுக்கு வெகுகாலமாயும் பிள்ளை யில்லாமலிருந்தது. தன்னுடைய தங்கை பிள்ளையை தன் பிள்ளையாகபாவித்து வளர்தது வந்தான். ஒரு ஸமயம் அவன் தங்கைக்கும் ஸம்ஸாரத்துக்கும் ஏதோ சச்சரவு நேர்ந்தபொழுது தங்கையானவள் "இந்தமலடிக்கு என்ன இவ்வளவு. என் பிள்ளையைகொண்டு பிள்ளையுள்ளவளாக ஆன இவளுக்கு இத்தனை வாயா" என்றாள். இது அந்த வைசியனுக்கு வருத்தத்தையுண்டாக்கி மறு ஜன்மத்திலாவது தங்களுக்கு புத்ரபாக்யம் உண்டாகும்படி ஈசுவரனைக்குறித்து தபஸ் செய்வோமென்று சொல்லி தன் ஸொத்து முழுமையும் தங்கை பிள்ளைக்கே கொடுத்துவிட்டு தன் ஸம்ஸாரத்தையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரை பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து விட்டு காட்டை நோக்கிச்சென்றான். கொஞ்சகாலமாயும் அவன் திரும்பி வாராததைக்கண்டு அவனுடைய தாயாதிகளெல்லாம் அவனுடைய தங்கை பிள்ளைக்கு யாதொருபாத்தியமுமில்லையென்று கச்சேரிகளில் வழக்காடி ஸொத்து முழுமையையும் பலாத்காரமாய் அபஹரித்துக்கொண்டுவிட்டார்கள். இதைக்கண்ட தங்கையானவள் அநாதர்களுக்கு ஸுந்தரேசனே நாதனென்றெண்ணி தன் பையனுடன் கோயிலுக்குச்சென்று ஈசுவரனிடம் முறையிட்டாள். ஈசுவரனும் அவளிடம் மனமிரங்கி அசரீரவாணி மூலமாக அவளை பயப்படவேண்டாமென்றும் அவள் அந்த தாயாதிகளை யெல்லாம் மறுபடி நியாயஸ்தலத்திற்கு வழக்காடியிழுததால் தாம் வந்து அவளுக்கு எல்லா ஸொத்தையும் திருப்பி வாங்கிக்கொடுப்பதாகவும் சொன்னார். மறுதினமே அந்த தங்கையானவள் அந்த தாயாதிகளிடம் சென்று அவர்களுடன் சண்டைசெய்து அவர்களை நியாயஸ்தலத்துக்கு இழுததுவந்தாள். அங்கு எல்லோரும் கூடியிருக்கையில் ஈசுவரனானவர் அந்த அர்த்தபதிசெட்டி மாதிரியாகவே ரூபமெடுத்துக்கொண்டு அங்குவந்து அவன் தங்கையையும் தங்கை பிள்ளையையும் கண்டு விஷயங்களையெல்லாம் விசாரித்துக்கொண்டு நியாயாதிபதிகளைப் பார்த்துத்திரும்பினார். அவரைக் கண்டதும் தாயாதிகளெல்லாம் பிரமிதது இவன் அர்த்தபதி செட்டியல்லவென்று கத்தினார்கள். உடனே ஈசுவரன் மிகக்கோபமுள்ளவர் மாதிரியாக அதிகபரபரப்புடன் அந்தசெட்டிகளின் குடிப்பேர், பட்டப்பேர், காணிப்பேர், தந்தைபேர், தாய்பேர், மாமன்பேர், மாமிபேர், பங்காளிகள்பேர், அவர்களைப் பெற்றவர்கள்பேர், பிள்ளைகள்பேர், உடன் பிறந்தார், பெண்டாட்டிகள், உறவினர், குணம், நடக்கை, அடையாளங்கள் முதலிய ஸகலத்தையும் சற்றேனும் தளராமற்சொல்லி தான் தங்கைபிள்ளையைத் தன் பிள்ளையாக எடுத்துக்கொண்டு தன் ஸொதது எல்லாவற்றையுமவனுக்குக்கொடுத்தாகவும் சொன்னார். இதைக்கேட்ட சபையோர் எல்லோரும் இவர் அர்த்தபதி செட்டியாரென்பது நிச்சயம் தானென்றும அவர் ஸொத்து முழுமையையும் அவர் தாயாதிகள். உடனே திருப்பி தங்கை பிள்ளைக்குகொடுத்து விடவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். நியாய ஸபையும் கலைந்தது. ஈசுவரனும மறைந்தார்.

40. வரகுணபாண்டியனுக்கு மதுரையில் சிவலோகம் காண்பித்தது.

ஸுந்தரேசபாதசேகரனுக்குப் பிறகு அவன் புத்ரன் வரகுணபாண்டியன் பாண்டிய நாட்டுக்கு அரசனாகவிருந்தான். இவனுக்கு வேட்டையில் அதிகப் பிரியமிருந்தது.

ஒருநாள் ராத்திரி வேளையில் வேட்டையிலிருந்து குதிரைமேலேறிக்கொண்டு திரும்பி வருகையில் வழிப்பாதையில் படுத்திருந்த ஒரு பிராமணனைக் கவனியாமல் அவனை மிதித்துக்கொண்டு குதிரை போய்விட்டது. அதனால் அந்தப் பிராமணன் உயிரிழந்தான். அந்தப் பிரம்மஹத்திதோஷம் அரசனைச் சூழ்ந்துகொண்டது. இதையறிந்த அரசனும் எவ்வளவோ சாந்திகள், தானங்கள் முதலியன செய்தும் மனதுக்குஸமாதானம் ஏற்படாதவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை அல்லும் பகலுமாகத் தனக்கு அந்த தோஷத்தை நிவர்த்திக்கும்படி பிரார்த்தித்தான். ஈசுவரனும் அவனுக்கு ஸ்வப்னத்தில்தோன்றி "நீ இந்த ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலேயே பாபம் செய்துவிட்டபடியால் இங்கு அதற்குமோசனம் கிடையாது. வேறு எந்தவிடத்தில் செய்தாலும் இங்கு வந்தால் தத்க்ஷணமே எல்லா பாபமும் தொலைந்துவிடும். ஆனால் இங்கு செய்கிறபுண்யமாகட்டும் பாபமாகட்டும் முடிவில்லாமல் விருத்தியாகிவிடுகிறது. ஆதலால் உனக்கு இங்கேமோசனம் கிடையாது. இருந்தாலும் உன்னிடமுள்ள பிரேமையால் உனக்கு இந்தபாபம் நீங்க ஒரு உபாயம் சொல்லுகிறோம். இன்னும் சிறிதுநாளில் சோழராஜா உன்மேல் படையெடுத்துவருவன். அப்பொழுது அவனை யெதிர்த்து ஜயித்து அவனை விரட்டிக்கொண்டு நீ பின்தொடர்ந்து செல்லுகையில் வழியில் காவேரிதீரத்தில் அர்ஜுன விருக்ஷத்தினடியில் நாம் மஹத்தான ஒரு லிங்கரூபமாக இருக்கிறோம். அங்கு சென்றதும் காவேரியில் ஸ்நானம் செய்து அந்தலிங்கத்தை பூஜைசெய்தாயேயானால் இந்த பிரம்மஹத்தியிலிருந்தும் விடுபடுவாய்" என்று சொன்னார். அவ்வாறே சிறிது காலத்திற்கெல்லாம் சோழராஜனை ஜயித்து அவனை விரட்டிக்கொண்டு போகையில் மத்தியார்ஜுன க்ஷேத்திரத்தை யடைந்ததும் வரகுணபண்டியன் காவேரியில் ஸ்நானம்செய்து மஹாலிங்கத்தின் தர்சனத்திற்காக கோயிலுக்குள் கீழகோபுரவாசல் வழியாய் போகும்பொழுது அந்த கோபுரவாசலிலேயே பிரம்மஹத்தி தங்கிவிட்டது. உள்ளேபோய் ஸ்வாமிதர்சனம் செய்துவிட்டு மேலவாசல் வழியாக திரும்பி வேகமாக மதுரையையடைந்து கோயிலுக்குச்சென்றுத் தன் குலதெய்வமாகிய ஹாலாஸ்யநாதரை வெகுவாகத் துதிசெய்து தனக்கு பிரம்மஹத்திதோஷம் தொலைந்துவிட்டபடியால் சிவலோக தர்சனம் செய்துவைக்கும்படி பிரார்த்தித்தான். ஈசுவரனும் தயவுடன் சிவலோகத்தை அவ்விடத்திலேயே அவனுக்குக் காண்பிப்பதாகச்சொல்லி அவனுக்கு ஞானக்கண்ணையருளினர். உடனே வரகுணபாண்டியனும் சிவலோகத்திலுள்ள அத்புதக் காக்ஷிகளையும் ஆநந்தங்களையும் கண்டு பிரமித்து நிற்கையில் நந்திகேசுவரர் வந்து அவனை கூட்டிச்சென்று அங்குள்ள பார்வதி பரமேசுவரர்களை தர்சனம் செய்துவைத்தார். அவர்களை நமஸ்கரித்துத் துதிசெய்து முடிந்ததும் ஈசுவரன் ஞானக்கண்ணை மறைத்துவிட்டதால் முன்போல் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர் முன்பாக நிற்கக்கண்டான். மதுரையிலேயே சிவலோகம் கண்டதால் அதுமுதல் மதுரைக்கு பூலோகசிவலோகமென்று பெயர் ஏற்பட்டது.

41. விறகு விற்றது.

வரகுணபாண்டியன் காலத்தில் அயலூரிலிருந்து சிறந்த ஓர் ஸங்கீதவித்வன் அவனரண்மனைக்கு வந்து மிகவத்புதமாய் வீணாகானம் செய்தான். அதைச் செவியுற்றவரசன் நிரம்பவுமாநந்தம் கொண்டவனாய் அவனை வெகுவாக ஸம்மானித்து அவனை சிறிதுகாலம்

அவ்வூரில் தங்கியிருக்கும்படிக்கும், சமீபத்தில் தான் அரண்மனையில் சபைகூட்டி அரண்மனை வித்வான்களையும் தருவித்து அச்சபையில் அவனுடைய ஸங்கீத கச்சேரியைவைத்து எல்லோருக்கும் பிரஸித்தப் படுத்துவதாகவும் சொல்லியனுப்பினான். அவ்வாறே அந்த வித்வானும் அவனுக்காக ஏற்படுத்திய வீட்டில் போய்த்தங்கினான். அவனுடன் வந்த அவனுடைய சிஷ்யர்கள் அவ்வூரில் நாலாபக்கத்திலும் அவனுடைய சாமர்த்தியத்தைப் பற்றி மிகப்புகழ்ந்து பேசி, தாங்களும் பாடிக்காண்பித்து ஆர்ப்பாடம் செய்துகொண்டிருந்தார்கள். வரகுண பாண்டியனும் தனதரண்மனை ஸங்கீத வித்வானாகிய பாணபத்ரன் என்பவனுக்கு ஆளனுப்பித் தருவித்து அவனிடம் புதிதாக வந்திருக்கும் வித்வானைப்பற்றிச் சொல்லி அவனை ஜயிக்கமுடியுமாவென்று கேட்டான். அதற்கு பாணபத்ரனும் சற்றேனும் தயங்காமல் ஸுந்திரேசுவரர் கிருபையால் கட்டாயம் ஜயிப்பேனென்றான். உடனே ராஜாவிடம் விடைபெற்றுக்கொண்டு அந்த பாணபத்ரனானவன் பரமசிவபக்தனானதால் கோயிலுக்குச் சென்றான். வழியில் புதிதாக வந்த வித்வானின் சிஷ்யர்கள் கடைத்தெருவுகளில் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டு அதிக வியப்படைந்து சிஷ்யர்களே இவ்வளவு திறமாகப்பாடினால், குரு எவ்வளவு ஸாமர்த்தியசாலியாக விருக்கமாட்டார், அவரை எவ்விதம் ஜயிப்பது என்று பயம் கொண்டவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ஸந்நிதிக்குப் போய் அவரிடம் விஷயத்தைத் தெரிவித்து தன்னை மானபங்கமில்லாமல் எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தான். ஈசுவரனும மனமிரங்கி அவனுக்கு அபயப்பிரதானம் செய்தனுப்பிவிட்டு மறுநாள் கிழவுருவமெடுத்துக்கொண்டு காட்டுக்குள் சென்று விறகுகளை வெட்டித் தலையில் சுமையாகத் தூக்கிக்கொண்டு கழுத்தில் கோடாலியுடன் மதுரை வீதிகளின் வழியாக விறகு விற்றுக்கொண்டு அந்திப்பொழுதில் நூதன ஸங்கீதவித்வான் இறங்கியிருந்த வீட்டு வாயிலண்டைவந்து விறகு சுமையையிறக்கிவைத்து சிரமத்துடன் அத்திண்ணையிலுட்கார்ந்து உல்லாஸமாக தேவகாந்தாரி இராகத்தில் பாடவாரம்பித்தார். அந்த ஸங்கீதத்தின் மாதுர்யத்தைக் கேட்டு உள்ளிருந்த புதிய வித்வான் வெளியேவந்து அவரை நீ யாரென்று வினவ அவர் தாம் ஒரு விருத்தனான விறகுவெட்டியென்றும் அவ்வூர் மஹாவித்வானாகிய பாணபத்ரனின் சிஷ்யனென்றும் சொல்லி விறகு சுமையைத் தூக்கிக்கொண்டு மறைந்துவிட்டார். இதைக் கேட்டதும் அந்த புதிய வித்வானுக்குண்டான பயத்திற்கோரெல்லையில்லை. கிழவனாயிருக்கும் இந்த சிஷ்யனே இவ்விதம் பாடினால் அந்த பாணபத்ரர் எவ்வளவு ஞானத்துடனிருக்கமாட்டார். அவரை ஒருவராலும் ஒருக்காலும் ஜயிக்கமுடியாது. இனித் தாமதித்தால் நிச்சயமாக அவமானப்படவேண்டியதுதான் என்று தீர்மானித்துத் தன்னுடன் வந்தவர்களைக் கூட்டிக்கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் அன்றிரவே ஊரைவிட்டு ஓடிவிட்டான். ஸோமஸுந்திரேசுவரரும் அன்றிரவிலேயே பாணபத்திரனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி தான் செய்த விருத்தாந்தங்களையும் அப்புதிய வித்வான் ஊரைவிட்டு ஓடிப்போனதையும் சொல்லிச் சென்றார். பாணபத்திரனும் அதிக ஸந்தோஷத்துடன் மறுநாள் பொழுதுவிடிந்ததும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்திரேசுவரருக்கு பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துவிட்டு அரண்மனைக்குப்போய் அப்புதிய வித்வானைக் கூப்பிட்டு உடனே சபை கூட்டும்படி அரசனிடம் கம்பீரமாய்ச் சொன்னான்.

அரசனும் தூதர்களையனுப்ப அவர்கள் புதிய வித்வானிறங்கியிருந்த வீட்டிற்குச்சென்று அவனைக் காணாமையால் அக்கம் பக்கங்களில் விசாரித்து முதல்நாள் ஸாயங்காலமும் இராத்திரியும் நடந்த விஷயங்களையறிந்து அவைகளை அரசனிடம் வந்து சொல்ல அரசன் மிக வாச்சர்யம் கொண்டு பாணபத்ரரை நோக்கி அந்த விருத்தனான சிஷ்யன் யாரென்று கேட்டான். அதற்கவர் தனக்கு ஸ்வப்னத்தில் ஈச்வரன் வந்து சொன்னதைத் தெரிவித்தார். அதைக் கேட்டவரசன் அவரை வெகுவாகப் புகழ்ந்து அவருக்கு ஏராளமான ஸம்மானங்கள் செய்து வீட்டிற்கனுப்பினான்.

42. சேரனுக்கு ஸ்ரீமுகம் கொடுத்தனுப்பியது.

முன் லீலையில்சொன்ன பாணபத்ரனென்பவன் ஒரு ஸமயம் தாரித்ரியத்தால் வருந்தும்நாளில் பிரதிதினமும் அவன் கோயிலுக்கு தர்சனத்துக்கு வரும்காலததில் ஈசுவரனானவர் அவன் முன்னிலையில் ஏதாவது திரவியங்களைவைத்து அவனை அதை யெடுத்துப் போய் காலக்ஷேபம் செய்யச்சொல்லியனுப்புவது வழக்கமாயிருந்தது. இப்படி சிலகாலம் சென்றபின் பாணபத்ரன் கோயிலுக்குச் சென்றபொழுது ஈசுவரன் ஒன்றும் கொடுக்கவில்லை. அதனால் அவன் மிக வறுமையிலடிபட்டு சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டான். ஆனால் பிரதிதினமும் கோயிலுக்குச்சென்று ஈசுவரனை பிரார்த்திப்பதில் சற்றேனும் தவறவில்லை. அவனுடைய துர்த்தசையைக்கண்டு ஈசுவரன் மனமிரங்கி ஒருநாள் அவனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி அதுவரையில் அவனுக்குத் தாம் கொடுத்துவந்த திரவியமெல்லாம் அரண்மனை கஜானாவிலிருந்து கொண்டுவந்தவைகளென்றும் கஜானாவதிகாரிகள் அவைகள் கெட்டுப்போனதையறிந்து இப்பொழுது அதிக ஜாக்கிரதையுடனிருப்பதாகவும் இனி அங்கிருந்து முன்போல அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தால் அதை அவ்வதிகாரிகள் கண்டு பிடித்தால் அவனை தண்டித்துவிடுவார்களாதலால் இனி தாம் அங்கிருந்து கொண்டுவரமுடியாதென்றும் தாம் சேரமஹாராஜாவுக்கு ஒரு ஸ்ரீமுகம் கொடுப்பதாகவும் அதைக் கொண்டுபோய் கொடுத்து அவனிடமிருந்து வேண்டிய திரவியங்கள் வாங்கி வரும்படிக்கும் சொன்னார். பாணபத்திரனோ தான் எவ்வளவு வறுமையால் கஷ்டப்பட்டபோதிலும் அவரை விட்டுப்பிரியமாட்டேனென்று எவ்வளவு சொல்லியும் ஈசுவரன் கேளாமல் தமது ஆக்ஞையை மறுத்தால் அவனுக்குப் பாபம் ஸம்பவிக்குமென்று சொல்லி ஸ்ரீமுகத்தையும் கொடுத்துச் சென்றார். உடனே பாணபத்ரனும் அந்த ஸ்ரீமுகத்தை யெடுத்துக்கொண்டு சேரதேசம் சென்று அங்கு ஒரு தண்ணீர்ப்பந்தலில் தங்கினான். முதல் நாளிரவு அந்த சேரமஹாராஜனுக்கு ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் ஸ்வப்னத்தில் தோன்றி தாம் தமது பக்தனொருவனை மதுரையிலிருந்து ஸ்ரீமுகத்துடனவனிடமனுப்பியிருப்பதாகவும் அவனுக்கு ஏராளமான திரவியம்கொடுத்து உபசரித்தனுப்பும்படியும் சொன்னார். மறுநாள் அதன்படி சேரவரசனும் தனது தேசத்தில் புதிதாக மதுரையிலிருந்து வந்திருக்கும் சிவபக்தன் யாரென்று தேடச்சொல்லி யாட்களை நாலாபக்கத்திலும் அனுப்பினான். அவர்கள் இந்த பாணபத்ரனை தண்ணீர்ப்பந்தலில் கண்டு அரசனிடம் போய் தெரிவிக்க அவன் தானே நேரில்வந்து அவனை வெகுவாக உபசரித்து அவன் கொடுத்த ஸ்ரீமுகத்தை வாசித்து சிரஸ்மேல் வைத்துக்கொண்டு அவனை யரண்மனைக்குக்

கூட்டிச்சென்று அவனுக்கு மிக ஏராளமான திரவியங்கள் கொடுத்து அவைகளின் பந்தோபஸ்துக்காக காவலாளர்களையும் அனுப்பி அதிக மரியாதைகளுடன் ஊருக்கு அனுப்பினன். அவைகளுடன் பாணபத்ரனும் மதுரைவந்து எல்லாவற்றையும் ஸ்ரீ ஸுந்தரேசுவாரிடம் ஒப்புவித்து அவரை யநுதினமும் ஆராதித்து ஸுகமாக விருந்தான்.

43. பாணபத்ரனுக்குப் பலகை கொடுத்தது.

ஸங்கீத வித்வானுகிய பாணபத்ரன் பிரதிதினமும் ஆறுகாலத்திலும் கோயிலுக்குச் சென்று வீணுகானம் செய்து ஈசுவரனை நியமமாய் ஆராதித்துவருகையில் அவனுடைய உறுதியை சோதிக்கவேண்டி ஈசுவரனுனவர் ஒருநாள் கோயிலில் அர்த்தஜாமம் நடக்கும் ஸமயத்தில் ஸந்ததாரையாக மழை கொட்டும்படி செய்தார். ஒருவராவது வீட்டை விட்டு அசைய முடியாமல் அவ்வளவு வேகமாயும் பலமாயும் மழையடித்தது. பாணபத்ரனேவெனின் அதைக் கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் வழக்கம்போல் கோயிலுக்குச்சென்று நந்திக்கு ஸமீபத்திலுட்கார்ந்துகொண்டு வீணையை வாசித்தான். மழையின் வேகத்தால் அவனுட்கார்ந்திருந்த விடமெல்லாம் ஜலமாய் விட்டது. அவன் ஏகாக்ரசித்தனுய் ஈசுவானிடம் மனதைசெலுத்தி கானம்செய்து கொண்டிருந்ததால் கீழே ஜலம்வந்தது அவனுக்குத் தெரியவேயில்லை. ஈசுவரன் அவன் பக்தியைக்கண்டு வியந்து அவன் ஜலமில்லாமலுட்காரும்படி ஒரு பலகையை அவனடியில் போட்டார். அதிலுட்கார்ந்து கொண்டு பாடி முடிந்தபிறகு ஈசுவரனை நமஸ்காரம் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும் பொழுதுதான் தனக்கு உட்காருவதற்கு பலகை போட்டிருப்பதைக்கண்டான். அதைக் கொண்டுவந்து போட்டவர்கள் பக்கத்திலுள்ளவர் களல்லவென்று தெரிந்துகொண்டு ஈசுவரனுகத்தானிருக்கவேண்டுமென்று நிச்சயித்து அந்தப் பலகையை கவனிக்கையில் அது ரத்னங்களிழைத்த ஸ்வர்ணப்பலகையாக விருக்கக்கண்டு ஈசுவரனை வெகுவாகத்துதி செய்து பலகையுடன் வீட்டுக்குச்சென்றுன்.

44. பாணபத்ரன் மனைவியின் கௌரவத்தைக் காப்பாற்றியது.

வரகுணபாண்டியனுக்குப் பிறகு அவனுடைய புத்ரன் ராஜராஜபாண்டியன் ஆண்டு வருகையில் பாணபத்ரனின் ஸம்ஸாரம் பர்த்தாவைப்போலவே ஈசுவரபக்தியிலும் ஸங்கீதத்திலும் மிகக் கீர்த்திபெற்று ஒருநாள் அரண்மனைக்குச்சென்று அங்கு அந்தப்புரத்திலுள்ள ராஜஸ்திரீகளை பேட்டிகண்டாள். அங்குள்ள போகஸ்திரீகளுள் ஒருவளுக்கும் பாணபத்ரன் பத்நிக்கும் ஸங்கீதத்தில் இருவர்களுள் யார் தேர்ந்தவர் என்று தகரார் ஏற்பட்டுவிட்டது. உடனே அந்த ராஜஸ்திரீயானவள் தனது காமவலையிலீடுபட்டிருக்கும் அரசனை எவ்விதத்திலாவது பாணபத்ரன் பத்னியை ஸங்கீதவித்யையில் அவமானப்படுத்த வேண்டுமென்று சொன்னுள். அதற்கு அரசனும் சம்மதித்து த்வீபாந்தரத்திற்கு ஆள்களையனுப்பி கானததில் மிகப்பிரஸித்திபெற்ற ஒரு ஸ்திரீயைத்தருவித்தான். அவளை தனிமையில் அரண்மனைக்கு அழைத்து எவ்விதத்திலாவது ஸங்கீதத்தில் பாணபத்ரனின் மனைவிக்கு அபஜயம் உண்டாக்க வேண்டுமென்றும் வெளியில் தான் நிஷ்பக்ஷபாதமாக காண்பித்தாலும் அந்தரங்கத்தில் அவள் சார்பாகவிருப்பதாகவும் சொல்லியனுப்பிவிட்டு பாணபத்ர

னின் மனைவியைத் தருவித்து புதிதாக வந்திருக்கும் ஸங்கீதவிதுஷிக்காக மறுநாள் ஸபை கூட்டப்போவதாகவும் அதில் அவள் புதிதாக வந்தவளை ஜயிக்கவேண்டுமென்றும் சொல்லியனுப்பினான். அப்படியே செய்வதாகச்சொல்லி அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு பாணபத்ரன் மனைவி கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸௌந்தரேசுவரரை பிரார்த்தித்துவிட்டு வீடுவந்து சேர்ந்தாள். மறுநாள் ராஜாவின் உத்தரவின்படி அரண்மனைக்குச்செல்ல அங்கு ஒரு பெரிய ஸங்கீதவித்வான்கள் ஸபை கூடியிருந்தது. த்வீபாந்தரத்திலிருந்து புதிதாக வந்தவளும் அங்கு காணப்பட்டாள். அரசன் வந்து உட்கார்ந்ததும் ஸபை ஆரம்பித்தது. இருவர்களுள் யார் ஜயிக்கிறார்களோ அவள் எஜமானி என்றும் அபஜயம் அடைபவள் வேலைக்காரி என்றும் பந்தயம் வைக்கப்பட்டது. உடனே புதிதாக வந்தவள் தன்னுடைய கானஸாமர்த்தியம் முழுமையும் காண்பித்தாள். அரசன் அதை வெகுவாக மெச்சினான். உடனே அவனை அனுசரித்து அங்குள்ள வித்வான்களும் வெகுவாக புகழ்ந்தார்கள். பிறகு பாணபத்ரன் மனைவி பாடினாள். அது நிரம்பவும் திறமாயிருந்ததென்றாலும் அரசன் பக்ஷபாதத்தால் அதைப் புகழவில்லை. அரசன் பேசாமலிருந்ததால் இதர வித்வான்களும் பேசாமலிருந்துவிட்டார்கள். கடைசியில் அரசன் பக்ஷபாதம் இல்லாதவன்போல் காண்பிக்கவேண்டி இன்று ஒருநாளில் முடிவு சொல்லக்கூடாது. மூன்று நாள் பார்ப்போம் என்று மறுநாள் எல்லோரையும் வரச்சொல்லி ஸபையைக் கலைத்தான். உடனே பாணபத்ரனின் பத்னீ கோயிலுக்குச் சென்று ராஜாவின் பக்ஷபாதத்தைக் குறித்து ஸ்ரீ ஸௌந்தரேசுவரரிடம் முறையிட்டாள். ஈச்வரனும் தயவுடன் அவளுக்கு அபயப்பிரதானம செய்து அவளைக் காப்பதாக வாக்களித்தனுப்பினார். மறுநாளும் அரண்மனையில் ஸபை நடந்தது. முதல்நாளைப்போலவே அரசனும் வித்வான்களும் நடந்தார்கள். உடனே பாணபத்ரனின் பத்னியானவள் அந்த ஸபையானது அரண்மனையில் நடப்பதால் அரசனுக்கு பயந்து கூடியிருக்கும் வித்வான்களெல்லாம் தன் பாட்டுக்கு பேசாமலிருந்துவிடுகிறார்களென்றும் ஆனதால் கோயிலில் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் முன்னிலையில் ஸபை கூட்டினால் தெய்வத்துக்குப் பயந்து வித்வான்கள் நிஜத்தைச் சரியாகச் சொல்லுவார்களென்றும் அரசனிடம் பரபரப்புடன் சொன்னாள். அரசனும் அதற்கிணங்கி மறுநாள் கோயிலில் ஸபை கூடுவதாகச் சொல்லி எல்லோரையும் அனுப்பிவிட்டான். அன்றும் பாணபத்ரனின் பத்னீ கோயிலுக்குச் சென்று நடந்தவற்றை ஸ்ரீ ஸௌந்தரேசுவரரிடம் தெரிவித்து மறுநாள் தன்னை எவ்விதத்திலும் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்து வீடு சென்றாள். மறுநாள் கோயிலில் ஸபை கூடிற்று. அங்கு அரசன் உட்கார்ந்திருக்கும் ஸிம்மாஸனத்தின் பின்பக்கம் வித்வான்களுக்கு நடுவில் ஸ்ரீ ஸௌந்தரேசுவரரும ஒரு வித்வான் மாதிரியாக வந்து உட்கார்ந்திருந்தார். புதிய ஸ்திரீயின் பாட்டு முடிந்ததும் அரசன் முதலிய எல்லோரும் வழக்கம்போல் புகழ்ந்தார்கள். பாணபத்ரையின் பத்னீ பாடிமுடிந்ததும் ஸ்ரீ ஸௌந்தரேசுவரராகிய வித்வான் மிகக் களிப்புடன் "பேஷ், இதற்கு ஸமானமில்லை, வெகு திறமாயிருக்கிறது, இதற்கு முந்தி பாடியது இதற்கு உரைபோடக்காணாது" என்று சொல்லவே அரசன் முதலிய மைத்த வித்வான்கள் எல்லோரும் அவர்களையறியாமலே "பேஷ் பேஷ்" என்று மிகவும் சிலாகித்தார்கள். அது மூன்றும் நாளானதால் பாணபத்ரனின் பதனீ ஜெயித்துவிட்டதாகச் சொன்னார்கள். உடனே பாணபத்ரனின் பத்னீ புதிதாக வந்

தவளின் தோளில் ஏறி உட்கார்ந்துகொண்டு அச்சபையை ஒருதடவை சுற்றிவரும்படி செய்தாள். உடனே அரசனும் அவளுக்கு பலவித ஸம்மானங்கள் செய்து புதிதாக வந்தவளையும் ஊருக்கு அனுப்பிவிட்டு தான் மனதினுள் செய்திருந்த தீர்மானத்திற்கு விரோதமாக தன்னையறியாமல் பாணபத்ரனின் பத்னியை சிலாகிக்கும்படி செய்த வித்வானைப் பார்க்க அவரைக் காணாமையால் அது ஸ்ரீ ஸௌந்தரேசுவரரின் செயல் என்றறிந்து ஈசுவரனைத் துதிசெய்து பாணபத்ரன் பத்னியின் பக்தியைக் கொண்டாடி அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

45. பன்றிக்குட்டிகளுக்குப் பால்கோடுத்தது.

மதுரைக்கு ஸமீபத்தில் வைகையாற்றங்கரையில் குருதீர்த்தம் என்று ஒரு ஸ்தலமிருக்கிறது. அவ்விடத்தில் மிகவும் ஸாத்விகர்களான ஒரு சூத்ர தம்பதிகளிருந்தார்கள். அவர்கள் சிறந்த சிவபக்தர்கள். தர்மத்திலாஸ்தையுள்ளவர்கள். அவர்களுக்கு பன்னிரண்டு பிள்ளைகள் ஜனித்தார்கள். அப்பையன்களையெல்லாம் ஸரியானபடி சிக்ஷிக்காமல் செல்வமாய் அவர்களிஷ்டப்படி விட்டுவிட்டார்கள். அதனால் அவர்களுக்கு புண்யத்திலாஸக்தியுமில்லை. பாபத்தில் பயமுமில்லை. அவர்களுக்கு யௌவன பருவம் வந்ததும் அவர்கள் தந்தையர்களிறந்துவிட்டார்கள். பிறகு அவர்கள் யதேச்சையாய் திரிந்துகொண்டிருக்கையில் ஒருநாள் காட்டிற்கு வேட்டைக்காகச் சென்று அங்கு ஒரு முனீசுவரர் தபஸ் செய்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். உடனே அவரைப் பரிஹாஸம் செய்துகொண்டு கைகொட்டிச் சிரித்து, சிறு கல்களாலும், மண்ணாங்கட்டிகளாலும் அவரை அடித்தார்கள். அதனால் தபஸ் கலைந்து அவர் கண்விழித்துப் பார்த்ததும் அந்தப் பையன்களுடைய சேஷ்டைகளைக் கண்டு கோபங்கொண்டவராய் அவர்களை பன்றிக்குட்டிகளாகப் பிறக்கும்படிக்கும், பிறந்தவுடன் பெற்றோர்களிறந்து பாலுக்குத் தவிக்கும்படிக்கும் சபித்தார். அந்த சாபத்தைக் கேட்டதும் அந்தப் பையன்கள் மிகுந்த பயம்கொண்டு அம்முனிவரை நமஸ்கரித்து தாங்கள் செய்தது தவறென்றும், தெரியாத்தனத்தால் செய்துவிட்டதாயும், அதைப் பொருத்தருளவேண்டுமென்றும், தங்களுக்கு சாபவிமோசனம் செய்யவேண்டுமென்றும் வெகுவாக மன்றாடினார்கள். அந்த முனீசுவரரும் அவன்களிடத்தில் மனமிரங்கி அவன்கள் பன்றிக்குட்டியாகப் பிறந்து தந்தையர்களிறந்ததும் ஸாக்ஷாத் ஸௌந்தரேசுவரரே பன்றிரூபமாக வந்து அவர்களுக்குப் பால்கொடுத்து வளர்த்து பிறகு இஹலோகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் ஸௌகத்தைக் கொடுப்பாரென்றும் சென்னார். அந்த சாபத்தின் பலனாக அந்தப் பையன்கள் பன்னிருவரும் அவ்வண்ணமே அடுத்த காட்டிலுள்ள பன்றியாசனுக்கு பன்னிரண்டு குட்டிகளாய்ப் பிறந்தார்கள். அவர்கள் பிறந்த சிறிது நாட்களுக்குள் பாண்டியவாசனாகிய ராஜராஜன் வேட்டைக்கு வந்து அந்த பன்றியாசனையும் அதன் பத்னியையும் கொன்றுவிட்டான். ஒரு சாபவசத்தால் அந்த ஜன்மத்தையடைந்திருந்த பன்றியாசதம்பதிகள் உடனே வித்யாதர ரூபத்தையெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சென்றுவிட்டன. அந்தப் பன்றியாசனின் சரீரமானது கல்லாக மாறி இன்றும் பன்றிமலையென்று வழங்கிவருகிறது. பாண்டியவாசன் வேட்டை முடிந்து ஊருக்குத் திரும்பி வந்தபிறகு ஸ்ரீ மீனாக்ஷிஸௌந்தரேசுவரர் உல்லாஸமாய் அந்தக் காட்டின் வழியாய் ஒருநாள் உலாவும் ஸமயத்தில் அந்த பன்றிக்குட்டிகள் தவிப்பதைக்கண்டு மீனாக்ஷிதேவியானவள் மனமிரங்கி

ஈசுவரனைப் பார்த்து அவைகளை ரக்ஷிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டாள். ஈசுவரனும் அவ்வார்த்தைக்கிணங்கி தாமே அந்தக் குட்டிகளின் தாயார் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அவைகளுக்குப் பால்கொடுத்து அவைகளை ஜாக்ரதையாக அந்தப் பன்றிமலையில் ஒரு குகையில் வைத்து வளரும்படி செய்தார்.

46. பன்றிக்குட்டிகளை மந்திரியாகச் செய்தது.

எப்பொழுது அந்தப் பன்றிக்குட்டிகளுக்கு ஈசுவரன் தாம் பால் கொடுத்து ரக்ஷிக்கத் தலைப்பட்டாரோ அப்பொழுது அவைகள் வரவர சிறந்த ஞானத்துடன் கூடினவைகளாய் முகம் மட்டில் பன்றிமாதிரியிருந்துகொண்டு மைத்த சரீர முழுமையும் மனுஷ்யாகிருதியாக வளர்ந்து யௌவனமடைந்தார்கள். எல்லா சாஸ்திரங்களிலும வல்லவர்களானார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ராஜராஜபாண்டியனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி “உன்னால் கொல்லப்பட்ட பன்றிராஜன்தான் இப்பொழுது பன்றிமலையாக இருக்கிறது. அம்மலையின் குகையில் அதன் குட்டிகள் பன்னிரண்டும் அவைகளுக்குப் பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட முனி சாபத்திலிருந்தும் எம்மால் விடுவிக்கப்பட்டு எம்மிடம் பால்குடித்ததால் சிறந்த ஞானத்தையுமடைந்து மனுஷ்யரூபத்துடன் வளர்ந்துவருகிறார்கள். அவர்களை நீ கூட்டிவந்து உனக்கு மந்திரியாக வைத்துக்கொண்டால் எல்லா க்ஷேமமுமுண்டாகும்” என்று சொன்னார். உடனே ராஜராஜனும் அவ்வண்ணமே அவர்களை அக்குகையிலிருந்து அழைத்துவந்து மந்திரி பதவிகளிலமர்த்தி அவர்களுக்குக் கல்யாணமும் செய்துவைத்தான். அவனுடைய ராஜயம் ஸுபிக்ஷமாய் மேன்மேலும் விருத்தியடைந்தது. ஐசுவர்யங்களெல்லாம் பொங்கிற்று. கடைசியில் பன்னிரண்டு மந்திரிகளுடன் ராஜராஜனும் சிவஸாயுஜ்யத்தையடைந்தான்.

47. பரத்வாஜ பக்ஷிக்கு மந்திரோபதேசம் செய்தது.

உலகத்திலுள்ள எல்லா பக்ஷிஜாதிகளுள்ளும் கஞ்ஜரீடம் என்று சொல்லப்படும் பரத்வாஜ பக்ஷியானது மிக அல்பமான பலமுள்ளது. அதனாலேயே கூர்மையான மூக்குள்ள இதரபக்ஷிகள் அதைக்கண்டால் குத்தி மிகஹிம்ஸைசெய்வது வழக்கமாயிருந்தது. அதற்காக பயந்துகொண்டு பரத்வாஜபக்ஷிகள் எப்பொழுதும மரப்பொந்துகளிலேயே தங்கிக்கொண்டு வெளியில் அதிகமாக ஸஞ்சரிக்காமலிருக்கும். ஒரு ஸமயம் பூர்வஜன்மத்தில் எவ்வளவோ தர்மங்கள் செய்த ஒரு புண்யவான் ஏதோ ஒரு பாபவிசேஷத்தால் இந்த பரத்வாஜபக்ஷியாகவந்து பிறந்தார். அவர் அந்த பக்ஷிவர்க்கத்தின் துர்ப்பலதத்தைப் பார்த்து மிக்க மனவருத்தமுற்று அதை எப்படியாவது நிவர்த்திக்கவெண்ணங்கொண்டு பூர்வஜன்மவாஸனையால் எப்பொழுதும் ஈசுவரனை தியானம் செய்துகொண்டு ஒரு மரத்திலுட்கார்ந்திருந்தார். அச்சமயம் அம்மரத்தின் கீழ் ஒரு பிராமணர் ஹாலாஸ்யக்ஷேத்திரத்தினுடையவும், ஹேமபத்மாகர தீர்த்தத்தினுடையவும், ஸ்ரீ ஸுந்தரேசுவரருடையவும் மஹிமைகளை வெகுவாக எடுத்து உரக்கச் சொல்லிக்கொண்டு போனார். அதைக்கேட்டதும் அம்மரத்திலிருந்த பரத்வாஜ பக்ஷியானது உடனே மதுரைக்குச் சென்று பொத்தாமரையில் ஸ்நானம் செய்து ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தது. இவ்வாறே பிரதி

தினமும் மூன்று வேளையிலும் செய்துவருகையில் ஈசுவரனுக்கு அதனிடத்தில் இரக்கமுண்டாய் அதற்கு பிரஸன்னராகி மூன்று அக்ஷரங்களுள்ள மிருத்யுஞ்ஜய மந்திரத்தை அதற்கு உபதேசம் செய்து இதை நீ பிரதிதினமும் காலைவேளையில் விடியுமுன் ஜபித்துவந்தால் உனக்கு நல்ல பலமுண்டாகும், அதற்குப் பிறகு உன்னிடம இதர பக்ஷிகள் வந்து ஹிம்ஸிக்காது. கடைசியில் உனக்கும் நல்லகதியுண்டாகும். இதை உன்னினத்தாருக்கும் நீ உபதேசிக்கலாம்'' என்று சொன்னார். அதைக்கேட்டானந்தித்து அந்த பாத்வாஜபக்ஷி அவ்வாறே அந்த மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்து ஸித்தியடைந்து நல்ல வலுவுடனும் தீக்ஷ்ணமான மூக்குடனும் கூடினதாக ஆய்விட்டது. அதுமுதல் அதனிடத்தில் பயந்துகொண்டு இதர பக்ஷிகள் நெருங்குவதில்லை. அதுவும் தன்னினத்தாருக்கெல்லாம் அந்த மந்திரத்தை உபதேசம் செய்துவிட்டது. அவைகளின் வலுவினால் அவைகளுக்கு அதுமுதல் "வலியன் குருவி'' என்று பெயருண்டாயிற்று. இப்பவும் காலைவேலைகளில் இந்த வலியன் குருவிகள் கத்துவதை கவனித்தால் மிருத்யுஞ்ஜய மந்திரத்தின் அக்ஷரங்கள் மாதிரி கேட்கும்.

48. நாரைக்கு முக்தி கொடுத்தது.

மதுரைக்கு ஸமீபத்தில் ஓர் குளத்தில் ஒரு நாரை வஸித்தது. காலக்கொடுமையினால் குளத்தின் ஜலம் வற்றிப்போகவே அந்த நாரைக்கு ஆகாரத்துக்கு மீன்களகப்படாமல் அடுத்த காட்டுக்குச் சென்றது. அக்காட்டில் அநேகம் தபோதனர்கள் வஸித்ததால் அங்கு சென்றதுமே அந்த நாரைக்கு நல்லபுத்தியுண்டாயிற்று. அங்குள்ள குளத்தில் பிரதிதினமும் மூன்றுவேளையும் அந்த தபோதனர்கள் வந்து ஸ்நானத்துக்காக கழுத்தளவு ஜலத்தில் இறங்குவதையும அவர்கள் தலைகளிலும் ஜடையிலும் மீன்கள் துள்ளி விளையாடுவதையும் கண்டு அவைகளின் பாக்கியத்தை மெச்சிக்கொண்டு பக்கத்திலிருந்த வேறொரு குளத்துக்குச் சென்றது. அங்கு மத்தியிலிருந்த நீராழிமண்டபத்தில் அந்த தபோதனர்கள் மத்தியான வேளைகளில் வந்து உட்கார்ந்து புராணம் வாசிப்பதையும் அதில் சொல்லியிருக்கும் ஹாலாஸ்ய மாஹாத்மியத்தையும் செவியுற்றது. உடனே அந்த நாரையானது மதுரையையடைந்து பொத்தாமரையில் ஸ்நானம செய்தது. அதிலுள்ள மீன்களைப் பார்த்ததும் ஆகாரமாக உட்கொள்ள எண்ணங்கொண்டது. ஆனால் உடனே அவ்வெண்ணத்தைத் தடுத்து ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை பிரதக்ஷிணம் செய்து துதிசெய்தது. ஸ்ரீ ஸுந்தரேசரும பிரஸன்னராகி அது கேட்டுக்கொண்டபடி பொத்தாமரையில் அதுமுதல் மீன்முதலிய ஜலஜந்துக்கள் இல்லாமலிருக்கும்படி வரம் கொடுத்து அந்நாரைக்கு முக்தியும் கொடுத்தருளினர்.

49. ஹாலாஸ்ய நகரத்தைத் திரும்பவும் நிர்மாணம் செய்வித்தது.

ராஜாராஜபாண்டியனுக்குப்பிறகு இருபத்திரண்டு பாண்டியராஜாக்கள் அரசுசெலுத்தியபின் கீர்த்தி விபூஷணன் என்னும் பாண்டியன் அரசனானன். அவன் காலத்தில் ஸமுத்திரம் கரைகடந்து பொங்கி யுகாந்தப்பிரளயம் உண்டாய் உலகமெல்லாம் அழிந்துபோய்விட்டது. ஆனால் அச்சமயத்திலும் ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேசுவராலயமும் ஹேமபத்மாகர தீர்த்தமும் நாசமடையவில்லை. பிறகு ஈசுவரனவர் தமது கருணையால் மீளவும் முன்போல் பூமியில்

பிராணிகளை ஸ்ருஷ்டித்து சேரசோழபாண்டிய வம்சங்களையும் உண்டாக்கினர். அந்த பாண்டியவம்சத்திலுதித்த வம்சசேகரபாண்டியனென்பவன் மதுரையை ஆளுங்காலத்தில் அவனுக்கு அந்நகரை பிரளயகாலத்துக்கு முன்னிருந்ததுபோல் கட்டவேணுமென்ற புத்திதோன்றி ஸ்ரீ ஸுந்தரேசுவரரை நகரத்தின் முந்திய எல்லையை தனக்கு காண்பிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க ஈசுவரனும் தமக்கு ஆபரணமாயிருந்த ஒரு ஸர்ப்பத்தை அந்நகரத்தின் பழய எல்லையைக் காண்பிக்கும்படி ஆக்ஞாபித்தார். உடனே அந்த ஸர்ப்பமானது கிழக்கு முகமாக ஒரு யோஜனைதூரம் சென்று அங்குள்ள திருப்பூவன க்ஷேத்ரத்தில் தன் வாலை வைத்து பிரதக்ஷிணமாக தெற்கே திருப்பரங்குன்று வழியாகச் சென்று மேற்கே ஸ்ரீபத்ரிகாபுரம் எனப்படும் திருவேடகத்தைக் கடந்து வடக்கே விருஷபாத்ரி மூலமாய்த் திரும்பி தனது முகத்தை கிழக்கேயுள்ள தன் வாலினிடமே கொண்டுவந்தது. இவ்வாறு நான்கு எல்லைகளையும் வம்சசேகரபாண்டியனுக்குத் காண்பித்துவிட்டு முன்போல் ஈசுவரனிடம் சென்று நமஸ்கரித்து புதிதாக நிர்மாணம் செய்யப்படும் நகரத்துக்குத் தன் பெயர் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க ஈசுவரனும் அப்படியே ஆகலாமென்றுரைக்க முன்போல ஈசுவரனுடைய புஜங்களுக்கு அலங்காரமாகப்பொருந்திவிட்டது. வம்சசேகரபாண்டியனும் மதுரா நகரத்தை குறிப்பிடப்பட்ட நான்கெல்லைக்குள் விஸ்தாரமாக நிர்மாணம் செய்து அதற்கு ஈசுவரன் ஆக்ஞைப்படி "ஹாலாஸ்யம்" (ஹாலம் என்றால் விஷம், ஆஸ்யம் என்றால் முகம்; ஹாலாஸ்யம் என்றால் விஷத்தையுடைய முகம் அல்லது ஸர்ப்பம் என்று பொருள்) என்று பெயரிட்டு அங்கே நெடுநாள் ராஜ்யபாரம்செய்தான். ஹாலாஸ்யம் என்னும் ஸம்ஸ்கிருதபதத்தின் தமிழ்தான் திருஆலவாய் எனப்படுகிறது.

50. சோழராஜாவின்பேரில் அம்பு எய்தது.

மதுராபுரியில் வம்சசேகரராஜன் ஆண்டு வருகையில் சோழதேசத்தரசனாகிய விக்ரமசோழனென்பவன் திடீரென்று பாண்டியநாட்டின்பேரில் படையெடுத்து வந்தான். எதிர்பார்க்காத ஸமயத்தில் படையெடுத்துவந்த சோழனை எவ்வாறு ஜயிப்பது என்று மிகவும் மனத்தளர்ச்சியடைந்தவனாய் பாண்டியவரசன் ஸ்ரீஸுந்தரேசுவரர் ஸன்னதிக்குச் சென்று அவரைப் பலவாறாகத் துதிசெய்து பாண்டியராஜ்யம் முழுமையும் அவருடையதென்றும் அவர் தான் ராஜாவென்றும் தான் அவருடைய ஸேவகனென்றும் ஆனதால் அவர் தான் எவ்விதத்திலாவது படையெடுத்து வந்திருக்கிற சோழஸைன்யத்தை ஜயிக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தான். ஈசுவரனும் அவனுக்கு தேர்தல் சொல்லி ஸைன்யங்களுடன் சோழராஜாவை எதிர்த்துச் செல்லும்படிக்கும் அவனுக்கு ஜயம் உண்டாகுமென்றும் அநுக்ரஹித்து அனுப்பினர். அவ்வாறே அவன் ஸைன்யங்களுடன் எதிர்த்துச்சென்றதும் இரு ஸைன்யங்களுக்கும் மஹத்தான யுத்தம் நடந்தது. அப்பொழுது ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் ஒருயுத்தவீரன் மாதிரி ரூபமெடுத்துக்கொண்டு பாண்டியஸைன்யங்களுக்கு மத்தியில் எதிரிகளின்பேரில் பாணங்களைவிட்டார். அந்த பாணங்கள் ஒவ்வொன்றும் எதிரி ஸைன்யங்களை ஆயிரக்கணக்காக நாசம்செய்தன. இதைக்கண்ட சோழராஜன் அந்தபாணங்களை எடுத்துப் பார்க்கும்பொழுது அது ஒவ்வொன்றிலும் ஸுந்தரர்என்று பெயர் வெட்டியிருப்பதைப் பார்த்து மிகவாச்சரியங்கொண்டு பக்தவத்ஸலரான ஸ்ரீஸுந்தரேசுவரரே

பாண்டியஸைன்யத்தில் வந்திருக்கிறதாகவும் அவர்போடும் அம்புகளில்தான் அம்மாதிரி பெயர் வெட்டப்பட்டிருக்கின்றன வென்றும் நிச்சயம்செய்துகொண்டு இனி தான் ஜயிக்க முடியாதென்று தன்னிடம் கூடவந்திருந்த சிற்றரசர்களையும் யுத்தத்தை நிறுத்தச் சொல்லி கட்டளையிட்டு தானும் ஸ்ரீஸுந்தரேசுவரரை துதிசெய்துகொண்டு திரும்பினான். உடனே வம்சசேகரபாண்டியனும் தன் ஸைன்யங்களுடன் ஊர்வந்து சேர்ந்து ஈசுவரனை நமஸ்கரித்துச்சென்றான்.

51. சங்கவித்வான்களுக்கு சங்கப்பலகை கொடுத்தது.

முன்னொருகாலத்தில் பிர்ம்மதேவனானவர் காசி க்ஷேத்ரத்தில் விச்வேசுவரர் ஸன்னதியில் பத்து அச்வமேதயாகங்கள் செய்து கங்கை நதிக்கரையில் தசாச்வமேத கட்டத்தில் பிரதி அசுவமேதயாகம் முடிந்ததும் அவபிருதஸ்நானம் செய்துவந்தார். பத்தாவது யாகம் முடிந்து ஸ்நானத்திற்காக போகும்பொழுது அவருடைய பத்னிகளான காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ என்னும் மூவர்களுள் ஸரஸ்வதீ தேவியானவள் வழியில் வித்யாதரர்கள் பாடியகானத்தில் ஈடுபட்டு தாமதித்து விட்டாள். பிர்ம்மதேவனும் ஸ்நானகட்டம் போய்ச்சேர்ந்தும் சற்று காத்திருந்தும் ஸரஸ்வதி வாராமையைக்கண்டு காயத்ரீ ஸாவித்ரீ தேவதைகளுடன் பத்தாவது அவபிருதஸ் நானத்தைச் செய்து முடித்தார். பின்பு ஸரஸ்வதீதேவியானவள் வந்து தான் வருவதற்குள் என்ன அவஸரமென்று பிரம்மாவைக் கோபித்துக்கொண்டாள். வழியில் தாமதித்த பிசகோடு அனாவசியமாக கோபித்துக்கொள்வதும் சேர்ந்தவுடன் பிரம்மாவுக்கு கோபம் உண்டாய் அவளை நாற்பத்தெட்டு ஜன்மம் பூலோகத்திற்கு போகும்படி சபித்துவிட்டார். உடனே ஸரஸ்வதீதேவியானவள் பயந்து "ஹே நாதா, தவருதலை க்ஷமிக்கவேண்டும். அஜராயுள்ள (பிறப்பு என்பது இல்லாதவரான) தங்களுக்கு பத்னியான பிறகு என்னை பூலோகத்தில் பிறக்கச் சொல்வது தர்மமா. ஆதலால் எனக்கு கொடுத்த சாபத்திற்கு வேறுவழி காண்பிக்கவேண்டும்" என்று வெகுவாக மன்றாடினாள். பிர்ம்மாவும் மனமிரங்கி "நீ அக்ஷரரூபியானதால் உன்னுடைய ரூபங்களான 'அ' முதல் 'ஸ' வரையிலுள்ள நாற்பத்தெட்டு அக்ஷரங்களும் பூலோகத்தில் நாற்பத்தெட்டு கவிகளாக ஜன்மமெடுத்து ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தையடைந்து அங்குள்ள மூலலிங்கமாகிய ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தர்சித்து ஹகாரரூபியாகிய அந்த ஈசுவரனும் இக்கவிகளுக்கெல்லாம் அத்யக்ஷராக ஏற்பட்டு அங்கே சிறப்போடு விளங்கட்டும்" என்று சொன்னார். அவ்வாறே நாற்பத்தெட்டு அக்ஷரங்களும் பூலோகத்தில் தாம்ரபர்ணீ தீரத்தில் நக்கீரர், கபிலர், பரணர் முதலான நாற்பத்தெட்டு கவிகளாக ஜனித்தன. காலாந்தரத்தில் அந்த நாற்பத்தெட்டு கவிகளும் ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தை அடைந்தார்கள். அங்கு வம்சசேகரபாண்டியனைக் கண்டு தங்களுடைய பாண்டித்யத்தைக் காண்பித்தார்கள். அவ்வரசனும் அவர்களுடைய தேஜஸ்ஸையும் பாண்டித்யத்தையும் கண்டு மெச்சி அவர்களுக்கு கோயிலிலேயே ஒரு மண்டபம் தனியாக கட்டுவித்து அதிலிருந்துகொண்டு எப்பொழுதும் ஈசுவரனை தர்சனம் செய்வதும் கவிகள் செய்வதுமாகவிருக்கும்படி ஏற்படுத்தினான். இதைக்கண்டதும் ராஜஸதஸ்ஸில் ஏற்கனவே விளங்கிவந்த வித்வான்களுக்கெல்லாம் பொறாமையுண்டாகி இந்த நாற்பத்தெட்டு பேர்களையும் பலவாறாக இகழவாரம்பித்தார்கள். புதிய வித்வான்களும் அவர்களை ஞானத்தில் வென்றார்கள் என்றாலும் பிரதிதினமும் அவர்களால் செய்யப்படும்

உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீஸுந்தரேசுவரரிடம் சென்று விஷயத்தைச் சொல்லி தங்களுக்கு உயர்வைக் காண்பிக்கும்படியாக ஒரு ஆஸனம் கொடுத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். உடனே ஈசுவரனும் தானே ஹகாரரூபியான வித்வானாக லிங்கத்திலிருந்து ஆவிர்ப்பவித்து ஒருமுழம் சதுரமுள்ள அக்ஷரரூபியான ஒரு பலகையை அப்புலவர்களுக்குக் கொடுத்து "இதைக் கொண்டுபோய் உங்களுடைய மண்டபத்தில் நடு வில் போட்டுக்கொண்டு அதில் ஒவ்வொருவராய் உட்காருங்கள். உங்கள் நாற்பத் தெட்டு பேருக்கும் இடம் கொடுக்கும். அதற்குமேல் உங்களுக்கு ஸமமான ஞானமில் லாத எவர் வந்தாலும் இடம் கொடுக்காது. அதனால் உங்களுடைய உயர்வு வெளியாகும்" என்று சொல்லி மறைந்தார். உடனே அந்த சங்கப்புலவர்களும் மிகவும் ஸந்தோஷ மனத்தினர்களாய் அப்பலகையை எடுத்து வந்து தங்களுடைய மண்டபத்தின் நடுவில் போட்டு பூஜித்து உபசரித்து தங்களுக்குள் முதல்வரான நக்கீரரை முதன்முதலில் அதில் உட்கார்த்திவைத்தார்கள். உடனே அந்தப்பலகை இன்னும் ஒரு முழநீளம் வளர்ந்தது. பிறகு அதில் கபிலர் உட்கார்ந்தார். மறுபடி ஒரு முழம் வளர்ந்தது. அதில் பாணர் உட்கார்ந்தார். இம்மாதிரியே ஒவ்வொரு முழமாக பலகை வளர வளர ஒவ்வொரு கவி யாக அதில் உட்கார்ந்து நாற்பத்தெட்டு கவிகளும் உட்கார்ந்ததும் பலகை வளருவது நின்றது. வேறு ஒரு வித்வான்களுக்கும் அந்தப்பலகை இடம் கொடுக்கவில்லை. இதைக் கண்டு எல்லோரும் வியந்து இந்தப் புலவர்களை கௌரவித்தார்கள். இவ்விதம் சிறிது காலம் சென்றபின் இந்த நாற்பத்தெட்டு கவிகளும செய்த பாடல்களையெல்லாம் ஒன்றாக குவிக்கப்பட்டிருந்தவைகளை எடுத்துப் பிரித்துப் பார்க்கும் ஸமயத்தில் இன்னார் செய் தது இன்னது என்று தெரியாமல் அவர்களுக்குள் அது விஷயமாய் கலகம் ஏற்பட்டது. உடனே ஈசுவரன் முன் போலவே கவிரூபமாகவந்து அவர்கள் முன் தோன்றி கலகத் திற்குக் காரணமென்னவென்று கேட்க அவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள். ஈசுவரனும் அந்தப் பாடல்களை யெல்லாம் எடுத்து ஒவ்வொருவர் செய்ததையும் தனித்தனியாகப் பிரித்து அவரவரிடம் கொடுத்துவிட்டார். இதைக்கண்டு வியப்படைந்து அச்சங்கப் புல வர்கள் அந்தக் கவியாக வந்த ஈசுவரனை தங்களுக்கெல்லாம் மேம்பட்ட முதல் கவியாக விருக்கவேண்டுமென்றும் தங்களுக்கு நடுவில் உட்காரவேண்டுமென்றும் பிரார்த்தித் தார்கள். உடனே அந்த சங்கப்பலகையின் நடுவில் தங்கமயமான ஒரு ஆஸனம் தோன்ற அதில் ஈசுவரன் அமர்ந்தார். இதனால் அந்தப் புலவர்களுக்கு மேன்மேலும் பிரஸித்தியுண்டாயுற்று. பிறகு ஈசுவரனும் அந்தப் புலவர்களுடன் பலவிதமான ஸம்வா தங்கள் செய்துவிட்டு தாம் ஈச்வரன் என்பதை அசரீரிவாக்கு மூலமாய் அவர்களுக்கு தெரிவித்துவிட்டு அந்தர்த்தானமானார்.

52. ஸுந்தரநாதனுக்கு தங்க முடிப்புக் கொடுத்தது.

வம்சசேகர பாண்டியனுக்குப்பிறகு வம்சசூடாமணி பாண்டியனென்று ஒரு அரச னிருந்தான். அவன் எப்பொழுதும் ஸ்ரீஸுந்தரேசுவரரை சம்பக புஷ்பங்களால் பூஜை செய்து சம்பக ஸுந்தரரென்று ஸ்தோத்திரமும் செய்துவந்ததால் அவனுக்கு சம்பகபாண் டியனென்று பெயருண்டாயிற்று. ஒரு நாள் அவ்வரசன் அரண்மனையில் அந்தப்புரத்தில்

தனது மஹிஷிகளுடனுட்கார்ந்திருக்கையில் ஒரு ஸ்திரீயின் தலைமயிரை அவிழ்த்து விட்டதும் மிகவும் அதிசயமான ஸௌகந்தம் வீசியது. அதை யுணர்ந்து அரசன் மிகவும் வியந்து அவளுடைய சிரஸில் புஷ்பங்கள் ஒன்றுமில்லாதிருக்கக்கண்டு இந்த அதிமதுரமான வாஸனை எந்த புஷ்பத்தினுடையது எங்கிருந்து வீசுகிறது என்று யோசித்துத்தனது மனதினுள்ள எண்ணத்தைப் பாடல் மூலமாக தெரிவிக்கிறவருக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாகச்சொல்லி அந்த ஆயிரம் பொன்னையும் ஒரு முடிப்பாகக்கட்டி சங்கப்புலவர்கள் மண்டபத்தில் தொங்கவிட்டான். உடனே அந்த சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடல்செய்து அரசனிடம் சென்று வாசித்தார்கள். அரசன் அதையெல்லாம் தன் எண்ணத்தை வெளியிடவில்லையென்று மறுத்துவிட்டான். இச்சமயத்தில் மிகவும சிவபக்தியுள்ள குருக்கள் வம்சத்திலுதித்த ஒரு ஏழை பிரம்மச்சாரி ஸௌந்தரநாதன் என்று பெயருள்ளவன் ஸ்ரீஸௌந்தரேசுவரரிடம் வந்து தனது வறுமையால்தான் விவாஹம்செய்துகொள்ள முடியாமலிருக்கிறதென்றும் அதனால் ஈசுவரனது லிங்கத்தைத் தொட்டு அபிஷேகம் பூஜைமுதலியது செய்யமுடியாமலிருக்கிறதென்றும் தற்சமயம் அரசன் கட்டித் தொங்கவிட்டிருக்கும் ஆயிரம பொன்னையும் தான் எடுத்துக்கொள்ளும்படி அந்தப் பாட்டை தனக்கு எழுதிக் கொடுத்துவிட்டால் தான் அதைக்கொண்டு விவாகம் செய்துகொண்டுவந்து ஈசுவரனை யாராதிப்பதற்கு அனுகூலமாயிருக்குமென்றும் அவ்விதம் ஈசுவரன் தனக்கு மனமிரங்கி கிருபைசெய்யவேண்டுமென்றும் வெகுவாக மன்றாடினான். ஈசுவரனும் அவனது பக்திக் கிணங்கி கவிரூபமெடுத்து வெளிவந்து அவனுக்கு அடியில் கண்ட ஆர்யாசுலோகத்தை யெழுதிக்கொடுத்தார்.

जानासि पुष्पगन्धान्भ्रमर त्वं ब्रूहि तत्त्वतो मेऽद्य ।
देव्याः केशकलापे तुल्यो गन्धेन किं गन्धः ॥

உடனே அந்த பிரம்மசாரி அதையெடுத்து சங்கப்புலவர்களிடம் சென்று அவர்களுக்குக் காண்பித்தான். அவர்கள் அதை மிக சிலாகித்து எல்லோருமாக அரசனிடம் சென்றார்கள். அரசனும் அந்த சுலோகத்தைக்கேட்டு தனது அபிப்ராயத்தை அது வெளியாக்கிவிட்டதாகமெச்சி அது யார் செய்ததென்று கேட்டான். எல்லோரும் பிரம்மசாரி யையனைக் காண்பிக்க அவனைப்புகழ்ந்து அந்தப் பொன்முடிப்பை அவனை யெடுத்துக்கொள்ளும்படி சொன்னான். அவ்வாறே அந்த பிரம்மசாரியும் அப்பொன் முடிப்பை யெடுக்கப்போகையில் மாத்ஸர்யத்தால் நக்கீரர் என்னும் கவியானவர் அவன் சொன்ன சுலோகத்தில் தப்பு இருப்பதாகவும் அந்த முடிப்பை எடுக்கக் கூடாதென்றும் தடுத்தார். உடனே அந்த ஸௌந்தரநாதன் ஸ்ரீ ஸௌந்தரேசுவரரிடம் சென்று முறையிட்டான். ஈசுவரனும் கவிரூபமெடுத்துக்கொண்டு ஸௌந்தரநாதனுடன் சங்கப்புலவர்கள் மண்டபம் வந்து தன் சிஷ்யன் வசம் தான் கொடுத்தனுப்பிய பாட்டுக்கு யார் என்ன குற்றம் சொல்லுகிறதென்று கேட்டார். அதற்கு நக்கீரர் எழுந்து தான்தான் சொல்வதாகவும் அந்த சுலோகத்தில் அர்த்தத்தில் தப்பிருப்பதாகவும் ஸ்திரீகளின் தலை மயிர்களுக்கு செயற்கைவாஸனையேயொழிய இயற்கைவாஸனை கிடையாதென்றும் அவ்வாறு இருப்பதாக சொன்னது தப்பென்றும் சொன்னார். பத்மினி முதலான உத்தமஜாதிப் பெண்களுக்குக்கூட இயற்கைவாஸனை கிடையாதோவென்று ஈசுவரன் கேட்டதற்கு கிடையாதென்று நக்கீரர் உரைத்தார். தேவ

ஸ்தீரீகளுக்கு இயற்கைவாஸனை கிடையாதாவென்றார் ஈசுவரன். அவர்களுக்கு தேவபுஷ்பங்களான பாரிஜாதம் முதலியவைகளின் செயற்கையால்தான் வாஸனையென்றார் நக்கீரர். ஸாக்ஷாத் பராதேவதையான கௌரீக்கும் அப்படித்தானோவென்று ஈசுவரன் சினந்து கேட்டதற்கும் அப்படித்தானென்று நக்கீரர் பதிலுரைக்கவே ஈசுவரனுக்குக் கோபமுண்டாய் நெற்றிக்கண்ணைக் கொஞ்சம் திறந்தார். இதைக்கண்ட கவிகளெல்லாம் அவர் பரமசிவன் என்பதையறிந்து பயந்து ஓடினார்கள். நக்கீரரோவெனின் கர்வம்பிடித்தவராய் எதிரில் நின்றுகொண்டு தான் சொன்னதையே பிடிவாதமாகச் சொன்னார். உடனே ஈசுவரனுடைய நெற்றிக் கண்ணினக்னியால் தஹிக்கப்படவாரம்பிக்கவே அதைப் பொறுக்கமாட்டாமல் தண்ணீர் தண்ணீர் என்று கதறிக்கொண்டு பொத்தாமரைக்குளத்தில் போய் குதித்தார். ஈசுவரனும் அந்தர்த்தானமானார்.

53. நக்கீரரைக் கரையேற்றியது.

நக்கீரருக்கு நேர்ந்த கதியைக்கண்டு இதர சங்கப்புலவர்களெல்லாம் மிகவும் மனவருத்தமுற்று ஸ்ரீஸுந்தரேசுவரரிடம் சென்று அவரை வெகுவாகத் துதிசெய்து நக்கீரர் செய்தது பெரியதவறென்றும் அதை எவ்வாற்றானும் பொருத்தருளவேண்டுமென்றும் அவரும் பொத்தாமரைக்குளத்திலிருந்தபடியே தன் பிசகை யறிந்தவராய் ஈசுவரனையெப்பொழுதும் துதிசெய்தவண்ணமாயிருக்கிறாரென்றும் அவரைக் காப்பாற்றித் தங்களை யனுக்ரஹிக்கவேண்டுமென்றும் திரும்பத்திருமபப் பிரார்த்தித்தார்கள். ஈசுவரனும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அம்பாளுடன்கூட பொத்தாமரையின் கரைக்கு வந்து நக்கீரர் செய்த ஸ்தோத்ரத்தைக் கேட்டு ஸந்தோஷித்து அவரைத்தாமே கைகொடுத்துக் கரையேற்றினார். உடனே எல்லோரும் ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேசுவரரைப் பலவாறாக ஸ்தோத்ரம் செய்ய அவர் அந்தர்த்தானமானார்.

54. நக்கீரருக்கு தமிழிலக்கண ஸூத்ரங்களுபதேசம் செய்வித்தது.

ஈசுவரனுடைய நெற்றிக்கண் ஜ்வாலைபட்டுத்தான் மன்மதன் மாதிரியாக எறிந்து சாம்பலாகப்போகாமல் தப்பித்தது அந்த பொத்தாமரைக்குளத்தீர்த்தத்தின் மஹிமையென்று தெரிந்துகொண்ட நக்கீரர் அன்றுமுதல் பிரதிதினமும் மூன்று வேளையும் அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதும் ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பூஜிப்பதுமாக நியமமாக இருந்து வந்தார். அவருடைய பூஜையில் ஸந்தோஷமடைந்து ஈசுவரனானவர் அவருக்குத் தமிழில் இலக்கண ஞானமில்லாமையால்தான் அவர் பிறரிடம் பொறாமைப் படுகிறாரென்று அவருக்குத் தமிழிலக்கணஸூத்ரங்களை நன்று கற்றுக்கொடுக்கும்படி அகஸ்தி மஹர்ஷியையேவினார். அவரும் அவ்வாறே நக்கீரருக்கு தமிழிலக்கண சாஸ்திரத்தில் நல்ல ஞானத்தைக் கல்பித்தார். இலக்கண பண்டிதரானபிறகு நக்கீரர் தான் முந்திசெய்த பாடல்களிலிருந்த தப்புகளையெல்லாம் திருத்திக்கொண்டு மேன்மேலும் ஈசுவரனை புதிய இனிமையான கவிகளால் துதிசெய்துகொண்டு காலம் கழித்துவந்தார்.

55. சங்கப்புலவர்களுக்குள் ஏற்பட்ட கலகத்தைத்தீர்த்தது.

அகஸ்தியமஹரிஷியிடம் நக்கீரர் கற்றுவந்த இலக்கண ஸூத்ரங்களுக்கு சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் விருத்திசெய்தார்கள். செய்துமுடித்ததும ஒவ்வொருவரும் தான்

செய்ததுதான் மேம்பட்டது, எல்லாவற்றையும்விட ரம்யமாயுள்ளது என்று சொன்னார்கள். இதனால் அவர்களுள் கலகம் ஏற்பட்டது. உடனே எல்லோருமாக ஸ்ரீஸுந்தரேசுவரரிடம்சென்று அவரை தங்கள் கலகத்தை தீர்த்துவைக்கும்படி பிராத்தித்தார்கள். ஈசுவரனும் அவர்கள்முன் தோன்றி அவ்வூரில் சிறந்த சிவபக்தர்களான ஒரு வைசிய தம்பதிகள் இருப்பதாகவும் அவர்களுக்கு ஸ்கந்தருடைய அம்சமான ஒரு புத்ரன் இருப்பதாகவும் அவன் ஊமையென்றும் ஆனால் மஹா ஞானியென்றும் அவனிடம்போய் விருத்திகளையெல்லாம் வாசித்துக்காண்பித்தால் அவன் எதை சிலாக்கிக்கிறானோ அதுவே திறமானது என்றும் சொன்னார். அவன் ஊமையானதால் எவ்வாறு சொல்லுவன் என்று புலவர்கள் கேட்டதற்கு ஈசுவான் "நீங்கள் வாசிக்கும்பொழுது யாருடைய விருத்தியில் அவனுடைய சரீரம் மயிர்க்கூச்செரிந்து கண்களில் ஆனந்தக் கண்ணீர்பெருகுகின்றதோ அந்த விருத்தியே திறம் என்று அறியுங்கள்" என்று சொல்லி மறைந்தார். அவ்வண்ணமே சங்கப்புலவர்களும் அந்த ஊமையைக் கண்டுபிடித்து அவனை கோயிலிலுள்ள தங்கள் மண்டபத்திற்கு அழைத்துவந்து உபசரித்து உட்காரவைத்து தங்கள் விருத்திகளையெல்லாம் ஒவ்வொன்றாக வாசித்துக்காண்பித்தார்கள். அவைகளில் நற்கீரர், கபிலர், பாணர், இவர்கள் மூவரும் செய்த விருத்திகளை வாசிக்கும்பொழுது அந்த ஊமையின் சரீரம் புளகாங்கிதமாய் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. உடனே அவைகள் தான் திறமானவைகள் என்று தெரிந்துகொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம்போய் அவரை நமஸ்கரித்து தங்களுடைய கலகத்தை ஒழித்துக்கொண்டார்கள்.

56. சங்கப்புலவர்களுடன் வடமதுரைசென்றது.

சம்பகபாண்டியனுக்குப் பிறகு அனேக அரசர்கள் ஆண்டார்கள். அந்த வம்சத்தில் குலேச்வர பாண்டியன் என்றொருவன் அரசனாகவந்தான். அவன் மிகச்சிறந்த வித்வானாகயிருந்ததால் அவனுக்குச் சங்கப்பலகையில் இடம் கிடைத்தது. அவனும் சங்கப்புலவர்களுள் ஒருவராக விளங்கிவரும் நாளில் ஒருசமயம் இடைக்காட்டுஸித்தர் என்ற ஒரு மஹா வித்வான் மதுரைக்குவந்து ஹாலாஸ்யநாதரைப் பூஜித்து அவானுக்கிரஹம் பெற்று சங்கப்புலவர்களுள் முக்கியரான கபிலருக்கு ஸ்நேகிதாய் அவருடன் குலேச்வர ராஜாவிடம் சென்று சில கவிகள் சொன்னார். அரசனோவெனின் அவரை உதாஸீனம் செய்து அவர் சொன்னபாடல்களில் தோஷங்களைக்கூறி அவரை அவமானப் படுத்திவிட்டான். உடனே அந்த இடைக்காட்டுஸித்தரும் சங்கப்புலவர்களுடன் கூட ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம்போய் முறையிட்டார். ஈச்வரனும் அரசன்செய்தது தவறு என்று உணர்ந்து அவ்வாசனுக்கு புத்தி கல்பிக்கவேண்டிய நிமித்தம் மீனாக்ஷிதேவியுடனும் சங்கப்புலவர்களுடனும் தாம் மதுரையை விட்டகன்று வடக்கே வைகையாற்றின் தென்கரையிலுள்ள வடமதுரை (உத்தர ஹாலாஸ்யம்) என்று சொல்லப்படும் க்ஷேத்திரத்துக்குச் சென்று அங்கு புதிதாக ஒரு கோயிலை நிர்மாணம்செய்துகொண்டு தங்கிவிட்டார். மதுரையில் மறுநாள் காலையில் குருக்கள் கோயிலுக்கு பூஜைக்குப்போய்ப் பார்க்கையில் அங்கு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் மூலலிங்கத்தைக் காணாமையால் மிகவும் பயந்து ஓடோடியும் சென்று அரசனிடம் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் அரசனும் திடுக்கிட்டு மூர்ச்

சித்து கீழேவிழுந்தான். மூர்ச்சைதெளிந்து எழுந்ததும் தான் செய்த குற்றம் இன்னதென்று தெரியாதவனாய்த் தவித்துக் கதறும்பொழுது சில பிராம்மணர்கள் வந்து வடமதுரையில் இதுவரையில் காணாத ஒரு அத்புதக்கோயில் நூதனமாகக்காணப்படுகிறதென்றும் அங்கு ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரும் சங்கப்புலவர்களும் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் குலேச்வர பாண்டியன் பரபரப்புடன் ஓடோடியும் வடமதுரை சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைக்கண்டு அவர்முன்பாக தண்டம்போல் விழுந்து கண்களில் நீர் சொரிய வாய்விட்டலறி தான் செய்த அபராதங்கள் என்னவாயிருந்தபோதிலும் க்ஷமிக்கவேண்டுமென்று மன்றாடி எழுந்து கைகூப்பி பின்வருமாறு துதி செய்தான்.

महानीपारण्यान्तरकनकपद्माकरतटीमहेन्द्रानीताष्टद्विपधृतविमानोद्वसितम् ।
महालीलाभूतिप्रकटितविशिष्टात्मविभवं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १ ॥

महामातङ्गासृग्धरवसनमद्रीन्द्रतनयामहाभाग्यं मत्तान्धककरटिकण्ठीरववरम् ।
महाभोगीन्द्रोद्यत्फणमणिगणालंकृततनुं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ २ ॥

महादुग्धाम्भोधौ मथनजवसंभूतमसितं महाहालं कण्ठे सकलभयभङ्गाय दधतम् ।
महाकारुण्याब्धिं मधुमथनदृग्दूरचरणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ३ ॥

नमन्नालीकाक्षाम्बुजभवशुनासीरमकुटीलसन्माणिक्यांशुस्फुरदरुणपादाब्जयुगलम् ।
अमन्दानन्दाब्धिं हरिनयनपद्मार्चितपदं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ४ ॥

समीराहारेन्द्राङ्गदमखिललोकैकजनकं समीराहारात्मप्रवणजनहृत्पद्मनिलयम् ।
सुमीनाक्षीवक्त्राम्बुजतरुणसूर्यं सुमनसं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ५ ॥

नताघौघारण्यानलमनिलभुङ्नाथवलयं सुधांशोरर्धांशं शिरसि दधतं जह्नुसुतया ।
वदान्यानामाद्यं वरविबुधवन्द्यं वरगुणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ६ ॥

दशास्याहंकारद्रुमकुलिशिताङ्गुष्ठनखरं निशानाथश्रीजिन्निजवदनबिम्बं निरवधिम् ।
विशालाक्षं विश्वप्रभवभरणापायकरणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ७ ॥

अनाकारं हारीकृतभुजङ्गराजं पुरहरं सनाथं शर्वाण्या सरसिरुहपत्रायतदृशम् ।
दिनारम्भादित्यायुतशतनिभानन्दवपुषं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ८ ॥

उमापीनोत्तुङ्गस्तनतटलसत्कुङ्कुमरजःसमाहारात्यन्तारुणविपुलदोरन्तरतलम् ।
रमावाणीन्द्राणीरतिविरचिताराधनविधिं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ९ ॥

धरापाथःस्वाहासहचरजगत्प्राणशशभृत्सुराध्वाहर्नाथाध्वरकरशरीरं शशिधरम् ।
सुराहारास्वादातिशयिनिजवाचं सुखकरं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १० ॥

धरापीठं धाराधरकलशमाकाशवपुषं धराभृद्दोर्दण्डं तपनशशिवैश्वानरदृशम् ।
विराजन्नक्षत्रप्रसवमुदरीभूतजलधिं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ११ ॥

सुपर्णाङ्काम्भोजासनदृगतिदूराङ्घ्रिशिरसं सुपर्णाहारस्रक्सुरविटपिशाखायतभुजम् ।
अपर्णापादाब्जाहतिचलितचन्द्रार्धमकुटं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १२ ॥

मखाराति मन्दस्मितमधुरबिम्बाधरलसन्मुखाम्भोजं मुग्धामृतकिरणचूडामणिधरम् ।
नखाकृष्टेभत्वक्परिवृतशरीरं पशुपतिं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १३ ॥

सहस्राब्जैकोने निजनयनमुद्धृत्य यजते सहस्राख्यापूर्त्यै सरसिजकृशे येन कृपया ।
सहस्रारं दत्तं तपननियुताभं रथपदं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १४ ॥

रथावन्याम्नायाश्वमजरथकारं रणपटुं रथाङ्गादित्येन्दुं रथपदधरास्त्रं रथिवरम् ।
रथाधारेष्वासं रथधरगुणं रम्यफलदं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १५ ॥

धराकर्षापास्ताप्रचुरभुजकण्डूयनजलं धराहार्यद्वैधीकरणहृतलोकत्रयभयम्।
स्मराकाराहाराकलनपटुफालानलकणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १६ ॥

ஈசுவரனும் இந்த ஸ்தோத்திரத்தில் ஈடுபட்டவராய் அவ்வரசனுக்கு பிரஸன்னராகி அசரீரவாக்கு மூலமாய் சொன்னதாவது "நீ காரணமில்லாமல் வித்யாகர்வத்தால் நமது பக்தனை இடைக்காட்டுஸித்தரை அவமானப்படுத்தியதால் நாம் சினங்கொண்டு இவ்வாறு இங்கு வந்தோம். நாம் ஹாலாஸ்யக்ஷேத்ரத்தையும் அங்குள்ள மூலலிங்கத்தையும் ஒருக்காலும் விட்டகலமாட்டோம் என்பது உனக்குத் தெரியும். இருந்தபோதிலும் உனக்கு புத்தி கல்பிக்கவேண்டி இதைச் செய்தோம். இப்பொழுது உனது ஸ்தோத்திரத்தால் பிரீதியடைந்தோம். திரும்பவும் முன்போல் மதுரை வருகிறோம்" என்று சொல்லி மறைந்தார். உடனே அவ்வரசனும் இடைக்காட்டுஸித்தரையும் சங்கப்புலவர்களையும் வெகுவாக உபசரித்து தான் செய்தகுற்றங்களையெல்லாம் மன்னிக்கும்படி மிகவும் பிரார்த்தித்தான். ஈசுவரனும் முன்போலவே சங்கப்புலவர்களையும் இடைக்காட்டுஸித்தருடன் கூட்டிக்கொண்டு மதுரை வந்துசேர்ந்தார்.

57. செம்படவனாகச்சென்று வலையை வீசியது.

ஒருஸமயம் ஸ்ரீ ஸுந்தரேசர் வேதாந்த தத்துவ விசாரத்தை எடுத்துப் பிரஸங்கித்து வருகையில் ஸ்ரீ மீனாக்ஷி தேவியானவள் அதை ஸாவதானமாய்க் கவனித்துக் கேளாமல் இருந்து விட்டதால் ஈசுவரன் கோபமகொண்டு அவளை தாழ்ந்த ஜாதியான செம்படவன் ஜாதியில் பிறக்கும்படி சபித்தார். உடனே ஸமீபத்திலிருந்த விநாயகரும் ஸுப்பிரமணியரும தாயாருக்காகப் பரிந்துகொண்டு அங்குள்ள சாஸ்திர புஸ்தகங்களையெல்லாம் விநாயகர் தனது துதிக்கையால் தூக்கி சமுத்திரத்தில் வீசி யெறிந்துவிட்டார். ஸுப்பிரமணியர் வேதாந்த விசாரம் செய்யும்பொழுது எவருக்கும் உங்களுடைய மாயையால் ஆலஸ்யம் உண்டாவது ஸகஜம் தானே ; இதற்காக ஏன் இவ்வளவு கோபம் என்று சொல்லி ஈசுவரன் கையிலிருந்த புஸ்தகத்தைப் பிடித்தெறிந்தார். ஈச்வரனும் கோபத்தால் ஸுப்பிரமணியரை வைசியகுலத்தில் ஊமையாகப் பிறக்கக்கடவாய் என்று சபித்தார். இவ்வாறு ஈச்வரன் எல்லோரிடத்திலும் கோபித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் நந்திகேசுவரர் எதிரில்வந்து நின்றார். அவரைக் கண்டதும் அவரிடமும் கோபம்கொண்டு அவரை ஸமுத்திரத்தில் ஒரு பெரிய மீனாகப்போகும்படி சபித்தார். அவ்வாறே நந்திகேசுவரர் ஸமுத்திரத்தில் ஒரு பெரிய மீனாகப் பிறந்து விக்னேச்வரரால் எறியப்பட்ட புஸ்தகங்களை

எல்லாம் விழுங்கி வயிற்றுக்குள் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு சாபவிமோசன காலத்தை எதிர்பார்த்து ஈசுவரனை தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். ஸுப்பிரமணியரும் முந்திய லீலையில் சொல்லியபடி வைசியகுலத்தில் ஊமைப்பிள்ளையாகப் பிறந்தார். அம்பாளும் செம்படவர் குலத்தில் உண்டாவதற்காகச் சென்றாள். தார்மிகனான செம்படவத்தலைவனொருவன் ஸமுத்திரத்தில் வலைவீசி மீன் பிடித்த ஸமயத்தில் மீன்களுடன் ஒரு வலம்புரிசங்கம் இருக்கக்கண்டான். அதைக் கையில் எடுத்ததும் அது ஒரு பெண் குழந்தையாக மாறிவிட்டது. அதை வெகு ஸந்தோஷத்துடன் தன் பத்தினியிடம் கொண்டுபோய்க் கொடுத்து அத்தம்பதிகள் தங்களுக்கு மக்கட்பேறு யில்லாமையால் ஈசுவரனால் கொடுக்கப்பட்ட பாக்கியம் அதென்று எண்ணி அதை நிரம்ப செல்வமாக வளர்த்து வந்தார்கள். அக்குழந்தைக்கு கன்னிப்பருவம் வந்ததும் அது ஸ்ரீ மீனாக்ஷிதேவியின் அம்சமானதால் அதை விவாகம் செய்துகொள்வதற்காக ஸ்ரீ ஸுந்தரேசர் அதிஸுந்தரமான செம்படவரூபம் எடுத்துக்கொண்டு பெரிய வலையொன்றை தோளில் சுமந்துகொண்டு அச்செமபடவத் தலைவனிடம் வந்து அவன் பெண்ணை தனக்குக்கொடுக்கும்படிக் கேட்டார். அதற்கவன் நீயார் எந்தவூர் என்று விசாரிக்க செம்படவரூபியாகிய ஈசுவரன் தான் மதுராபுரியென்றும் தான் செமபடவத்தொழிலில் மிகவும் ஸமர்த்தனென்றும் தான் வீசும் வலையில் ஜகத்தை முழுவதும் பிடித்து இழுக்க சக்தியுள்ளவனென்றும் சொல்லி தன் ஸாமர்த்தியத்தை வெகுவாகப் புகழ்ந்தார். இதைக்கேட்ட அச்செம்படவத்தலைவன் "நீ அவ்வளவு ஸாமர்த்தியமுள்ளவனானால் இந்த ஸமுத்திரத்தில் மிகப்பெரிதான ஒரு மீன் இருக்கிறது; கப்பல்களை யெல்லாம் கவிழ்த்து விடுகிறது; அதை எங்களால் பிடிக்கமுடியவில்லை; நீ அதைப் பிடித்தாயேயானால் உனக்குப் பெண்ணைக்கொடுக்கிறேன்" என்றான். உடனே ஈசுவரனும் அவன் குறிப்பிட்டுக் காண்பித்த இடத்தில் ஸமுத்திரத்தில் வலையை வீச மிகப் பெரிய மத்ஸ்யரூபமாயிருந்த நந்திகேசுவரர் அந்த வலையில் அகப்பட்டார். அம்மீனைக் கரையிலிழுத்து ஈசுவரன் தனது கையால் தடவிக்கொடுக்கவே அம்மீன்ரூபம் மாறி நந்திகேசுவரர் ஈச்வரனை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து எதிரில்வந்து தான் வைத்திருந்த சாஸ்திர புஸ்தகங்களையெல்லாம் ஈசுவரனிடம் ஸமர்ப்பித்துவிட்டு நின்றார். இதைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள். உடனே அந்த செம்படவத்தலைவனின் பெண்ணாயிருந்த மீனாக்ஷிக்கும் ஈசுவரனுக்கு விவாஹம் நடந்தது. உடனே ஈசுவரன் அம்பாளுடன் விருஷபாரூடராக எல்லோருக்கும் தர்சனம் கொடுத்து அச்செம்படவத் தலைவனுக்கும் அவன் பத்னிக்கும் ஸாரூப்யபதவியைக் கொடுத்து கைலாஸத்திற்கு அனுப்பினார். பிறகு ஈசுவரன் அம்பாளுடன் உத்தரகோசம் என்று சொல்லப்படும் க்ஷேத்திரத்துக்கு சென்று அவ்விடத்தில் வேதாந்தத்தையெல்லாம் அம்பாளுக்கும் இதரர்களுக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக் காட்டிக்கொண்டு சிறிதுகாலம் அங்கு தங்கிவிட்டு பிறகு ஹாலாஸ்யக்ஷேத்ரம் வந்துசேர்ந்தார்.

58. வாதபுரீசருக்கு ஞானதீக்ஷை செய்தது.

மதுரைக்கு ஸமீபத்திலுள்ள வாதபுரியென்னும் க்ஷேத்ரத்தில் மிகவும் தர்மிஷ்டனாயும் சிவபக்தனாயுமுள்ள ஸுந்தரநாதனென்னும் ஒரு பிராமணனுக்கு வாதபுரீசர் என்று

ஒரு புத்ரனுண்டானார். அவர் பிறந்தது முதலே ஈசுவரனிடம் அதிகபக்தியுள்ளவராய் ஸதாஸர்வகாலமும் ஈசுவரனை தியானம் செய்துகொண்டு அதிபால்யத்திலேயே ஸமஸ்த சாஸ்திரங்களிலும் நிபுணராக ஆய்விட்டார். அவருக்கு வயதுவந்ததும் எல்லாசாஸ்திரங்களிலும் எல்லா கலைகளிலும் அவருக்கு ஸமமான ஞானவானில்லையென்று சொல்லும்படியிருந்தது. இதைச் செவியுற்ற பாண்டியநாட்டரசனாகிய அரிமர்த்தன பாண்டியன் அவரை வரவழைத்து தனது மந்திரியாக நியமித்துக்கொண்டான். அவர் மந்திரியாக ஏற்பட்டது முதல் அரசனுக்கு எல்லா ஸம்பத்துக்களும் விருத்தியடைந்தன. அவரும் ஸதா ஸ்ரீஸுந்தரேசுவரரை தியானம்செய்வதிலும பூஜைசெய்வதிலும் சிவபக்தர்களுக்குப் பலவாறு உபசாரம்செய்வதிலும் ஊக்கமுள்ளவராகவிருந்தார். இப்படியிருந்துவருகையில் ஒருநாள் அரசனின் அசுவசாலை உத்தியோகஸ்தர்கள் வந்து அசுவசாலையில் குதிரைகள் மிகவும் குறைந்தும் மெலிந்தும் போய்விட்டன வென்றுப் வேறு நல்ல குதிரைகள் வாங்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இதைக்கேட்ட அரசனும் தனது மந்திரிகளுள் வாதபுரீசர் அசுவசாஸ்திரம் நன்றாகத் தெரிந்தவராதலால் அவரை உடனே கஜானாவிலிருந்து வேண்டிய திரவியங்களெடுத்துக்கொண்டுபோய் நல்லஜாதிக் குதிரைகளாகப் பொறுக்கி வாங்கி வரும்படி ஆக்ஞாபித்தான். வாதபுரீசரும் அவ்வண்ணமே கஜானாவிலிருந்து ஏராளமான திரவியத்தை யெடுத்துக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் கோயிலுக்குச்சென்று அவரை பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துவிட்டுத் தான் கஜானாவிலிருந்து எடுத்து வந்த திரவியத்தை குதிரை வாங்குவதில் துலுக்கர்களுக்குக்கொடுத்து செலவிடப்பேவதில்லையென்றும் எல்லாவற்றையும் ஈசுவரன் விஷயத்திலும் அவர் பக்தர்கள் விஷயத்திலும் செலவிடப்போவதாகவும் ஈசுவரன் தன்னை ராஜநிந்தைக்குள்ளாகாமல் எவ்வாற்றானும் காப்பாற்ற வேண்டுமென்றும் தனக்கு எவ்வளவோ சாஸ்திரங்கள் தெரிந்திருந்தும் கிரமமாக ஞானோபதேசமாகாததால் ஈசுவரனே உபதேசம் செய்தருளவேண்டுமென்றும் பிரார்த்தித்தார். அச்சமயம் மூலலிங்கத்தினிடமிருந்து ஒரு பிராமணர்வந்து அவர்கையில் வீபூதியைக்கொடுத்தார். அதையே ஈசுவரனின் அநுக்ரஹமாக பாவித்து தரித்துக்கொண்டு திரவியத்துடனும பரிவாரங்களுடனும் கிழக்கு முகமாகச்சென்றார். திருப்பெருந்துறை யென்று சொல்லப்படும் ஆளுடையார் கேயில் சேர்ந்ததும் அவர் மனதுக்கு ஏதோ அதுவரையிலில்லாத உபசாந்தி ஏற்பட்டு உருக்கமாயிருந்தது. உடனே அங்குள்ள குளத்தில் ஸ்நானம் செய்து கோயிலிலுள்ள ஜனவன்நாதரை (ஆளுடையாரை—இதைத் தான் ஆவுடையார் கோயிலென்று ஜனங்கள் வழங்குவது) தர்சித்துவிட்டு பிரதக்ஷிணம் வருகையில் பிராகாரத்தில் குந்தவிருக்ஷத்தினடியில் குருமூர்த்தி ரூபமாய் ஸ்ரீ ஸுந்தரேசர் அனேக சிஷ்யர்களுடன் வீற்றிருப்பதைக்கண்டார். அந்த குருமூர்த்தியும் வாதபுரீசரைத் தமது நேத்ரங்களால் கடாக்ஷித்ததும் இவர் மிகுந்த பயபக்தியுடன் அவரையணுகி பிரதக்ஷிணம்செய்து நமஸ்கரித்து நிற்கையில் பரமகிருபாளுவான ஈசுவரன் இவரை ஸமீபத்திலுட்காரவைத்து இவருக்கு ஞானோபதேசம் செய்வித்து இவரைச் சிறிதுகாலம் அங்கேயே தங்கியிருக்கும்படி சொல்லிவிட்டு மறைந்தார். உடனே பரமஸந்தோஷம் கொண்டவராய் வாதபுரீசரும் தன்னுடன் வந்த பரிவாரங்களையெல்லாம், ஆடிமாதத்தில் பலவிடங்களிலிருந்து அந்த ஊருக்குக் குதிரைகள் வருமென்றும் அவைகளுள் நல்லதாய் தான் பார்த்து வாங்கிவருவ

தாயும், அவர்களெல்லாம் திரும்பி ஊருக்குப்போகலாமென்றும் சொல்லி அவர்களை மதுரைக்கு அனுப்பிவிட்டுத் தான் மட்டிலந்த ஊரிலேயேயிருந்துகொண்டு எப்பொழுதும் ஈசுவரனை தர்சனம் செய்கிறதும் பக்தர்களை யுபசரிப்பதும் கோயிலைப்பழுதில்லாமல் கட்டுகிறதுமாய் காலங்கழித்தார். கையில் கொண்டுவந்த திரவியம் முழுமையும் பாக்கியன்னியில் செலவழித்துவிட்டார் ஆடிமாஸம்சென்றதும் அரசன் குதிரைகளுடன் அவரையும் கூட்டிவரும்படி ஸேவகர்களையனுப்பினான். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் வாதபுரீசர் ஆளுடையார் ஸந்நிதிக்குச்சென்று "தீனபந்தோ, அரசன் குதிரைகளைக்கொண்டு வரும்படி சொல்லியனுப்பிருக்கிறான். நானே கொண்டுவந்த திரவியம் முழுமையும் தங்கள் விஷயத்தில் செலவழித்து விட்டேன். தாங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும். அரசனுக்கு என்னபதில் சொல்லுகிறதென்று தெரியவில்லை" என்று பிரார்த்தித்தார். ஈசுவரனும் மனமிரங்கி அசரீரவாக்கு மூலமாய் "நீ பயப்படவேண்டாம், இன்னும் நாலைந்து தினங்களுக்குள் குதிரைகளுடன் ஊர்வந்து சேருவதாக சொல்லியனுப்பு" என்றார். உடனே அவ்வாறே அந்த ஸேவகர்களை சொல்லியனுப்பிவிட்டுத் தானும் இரண்டு நாட்களுக்கெல்லாம் ஈசுவரனிடம் விடைபெற்றுக்கொண்டு ஊர் போய்ச்சேர்ந்தார்.

59. நரிகளைப் பரிகளாக்கியது.

வாதபுரீசர் மதுரைவந்ததும் அரிமர்த்தன பாண்டியவரசனைக்கண்டு இன்னும் இரண்டு அல்லது மூன்று தினத்தில் குதிரைகள்வந்து விடுமென்றும் அதற்காக வேண்டிய லாயங்களெல்லாம் தயாரித்து ஊரையும் அலங்கரிக்க வேணுமென்றும் சொன்னார். அரசனும் எவ்வளவு குதிரைகள் வாங்கப்பட்டன, என்னகிரயம் என்பது முதலான விவரங்கள் கேட்டதற்கு அவையெல்லாம் குதிரைகள் வந்தபிறகு சொல்வதாகச் சொல்லிவிட்டு அரண்மனையிலிருந்து ஆலயத்தினுட்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் தான் செய்த விருத்தாந்தங்களையெல்லாம் உரைத்து அவர்தான் தன்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினார். ஈசுவரனும் அசரீரவாக்கு மூலமாய் அவரை பயப்படவேண்டாமென்று சொல்ல வாதபுரீசர் அங்கிருந்து வீடுசென்றார். குறிப்பிட்ட இரண்டு மூன்று நாட்களாயும் குதிரைகள் வாராமையால் அரசன் வாதபுரீசரைக்கேட்க அதற்கவர் மறுநாளாவது அதற்கு மறுநாளாவது வந்து விடுமென்று சொன்னார். பிரதி வேளையும் ஆலயத்துக்குச்சென்று ஈசுவரனைப் வெகுவாகப் பிரார்த்தித்தார். மறு இரண்டு தினத்திலும்கூட குதிரைகள் வரவில்லை. அரசனுக்குப் பக்கத்திலுள்ளவர்கள் வாதபுரீசர் சொல்லுவது பொய்யென்றும் அவர் கொண்டுபோன திரவியத்தை யெல்லாம் ஆளுடையார் கோயிலில் செலவழித்து விட்டதால் குதிரைகளை வாங்கப்பட வில்லையென்றும் சொன்னார்கள். அதைக்கேட்டு மிகக்கோபம் கொண்டவனாய் அரசன் வாதபுரீசரை வரவழைத்துக் கண்டித்துக் கேட்கும்பொழுது அவர் சீக்கிரம்வந்து விடுமென்று சொன்ன பதிலில் நம்பிக்கையில்லாமல் அவரை காராகிருஹத்திலடைத்து நிர்ப்பந்தம் செய்யச்சொல்லி வேலையாட்களுக்கு உத்தரவிட்டான். அவ்வாறே அவர்களும் அவரை நிரம்பவும் நிர்ப்பந்தம் செய்தார்கள். அவர்களின் ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் வாதபுரீசர் ஈசுவரனைத் துதித்து தன்னைக் காத்தருளும்படி மன்றாடினார். மறுநாள் காலையில் வாதபுரீசரை திரும்பவும் அர

சனிடம் கூட்டிவருகையில் வழியில் சிலர் ஓடோடியும் வந்து குதிரைகள் வந்துகொண்டிருக்கின்றனவென்று சொன்னார்கள். இதைக்கேட்டு வாதபுரீசரும் அரசனிடம் அவ்விதமே சொன்னார். அரசனும் அவருடன் குதிரைகளின் வரவை யெதிர்பார்த்து வெகுநேரம் காத்திருந்தும் வாராமையால் மறுபடியும் வாதபுரீசரை சிக்ஷிக்கும்படி சொன்னான். வேலையாட்கள் அவரை ஹிம்ஸித்தார்கள். இதற்குள் ஈசுவரனானவர் தமது பக்தன் படும கஷ்டத்தைப் பொறுக்காதவராய் தம்முடைய கணங்களைக் கூப்பிட்டு காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பிடித்துப் பரிகளாக்கி அவைகளின்மேல் கணங்களை மனுஷ்யரூபமாய் ஏறிவரும்படி ஆக்ஞாபித்தார். உடனே எல்லா கணங்களும் ஆயிரக்கணக்காக நரிகளைப்பிடித்து உயர்ந்த ஜாதிக்குதிரைகளாக அவைகளை மாற்றி அவைகளிலேறிக்கொண்டு மதுரைக்கு வேகமாக வந்தார்கள். ஈசுவரனும் வேதமாகிற குதிரையிலேறிக்கொண்டு எல்லோரையும் நடத்திக்கொண்டுவந்தார். அவைகள் வரும் சப்தம் கேட்டதும் அரசன் வாதபுரீசரை ஹிம்ஸிப்பதை நிறுத்தி அக்குதிரைகள் வரும் காம்பீர்யத்தைக்கண்டு திகைத்து நின்றான். குதிரைகளெல்லாம் வந்ததும் ஈசுவரனானவர் அரசனிடம வந்து "ஏ அரசனே, நீ வாதபுரீசரிடம் கொடுத்தனுப்பிய திரவியத்தையெல்லாம் அவர் நம்மிடம் கொடுத்துவிட்டார். நாம் குதிரைகளைக்கொண்டு வருவதற்குள் அவரை ரொம்பவும் ஹிம்ஸித்து விட்டாய். அவர் உன் ஸொத்தில் ஸவல்பம்கூட அபஹரிக்கவில்லை. இதோ குதிரைகள் வந்திருக்கின்றன. உனக்கு இஷ்டமானவைகளைப் பொறுக்கி யெடுத்துக்கொள். ஒன்றும் பிடிக்காவிடில் உன்னுடைய பணத்தை இரண்டுபங்காகச்செய்து இதோ கொண்டுவந்திருக்கிறோம். எடுத்துக்கொள். வாதபுரீசரை ஹிம்ஸிக்காதே" என்றார். உடனே அரசன அவரை யுபசரித்து தான் வாதபுரீசரை கமபாதகது பிசகென்றும் வந்திருக்கும் குதிரைகள் மிகவத்புதமா யிருக்கின்றனவென்றும், அவைகளின்ஜாதி லக்ஷணம் முதலியவைகளை அவரே தனக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். உடனே அச்குதிரை வியாபாரியாக வந்திருந்த ஈசுவரனும் மறுநாள் இருக்காது (ந ச்வ: அஸ்தி) என்னும் காரணத்தால்தான் குதிரைகளுக்கு அசுவம் என்று பெயரென்று சொல்லி அவைகளின் ஜாதி லக்ஷணங்களைக் குறித்து விஸ்தாரமாய் பிரஸங்கித்து வந்திருக்கும் குதிரைகளையும் தனித்தனியே அரசனுக்குக் காண்பிவித்தார். அரசனும் அதிக ஸந்தோஷத்துடன் குதிரைகளையெல்லாம் அசுவசாலையில் கொண்டுபோய் கட்டும்படி கட்டளையிட்டான். அந்த வியாபாரிக்கும் பலவித மரியாதைகள் செய்தனுப்பினான். பிறகு வாதபுரீசரையும் வெகுவாகப் புகழ்ந்து அவருக்கு விசித்ரமான ஸம்மானங்கள் கொடுத்தனுப்பினான். அவரும் கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரை துதி செய்து வீட்டுக்குச் சென்றார்.

60. வேகவதியில் பிரவாஹம் வரச்செய்தது.

அரிமர்த்தன பாண்டியனானவன் அன்று முழுவதும் அக்குதிரைகளின் வனப்பையும் காம்பீர்யத்தையும் வர்ணிப்பதிலும் வாதபுரீசரைக்கொண்டாடுவதிலுமாக காலம் கழித்தான். அன்றிரவு அர்த்தராத்ரியில் அக்குதிரைகளெல்லாம் தங்களுடைய பழைய ஸ்திதியான நரிகளாகமாறி ஊளையிட்டுக்கொண்டு ஊர் முழுவதும் ஓடித்திரிந்து கோட்டை வாசல்களெல்லாம் சாத்தப்பட்டிருந்ததால் வெளியில் போக மார்க்கமில்லாமல் ஊரார்களை

மிகவும் ஹிம்ஸித்தன. ஊரில் அமளி அதிகரித்தது. அவைகளின் ஹிம்ஸை பொறுக்காமல் காவலாலர்கள் கோட்டைவாசல் கதவுகளை திறந்துவிட்டார்கள். உடனே எல்லா நரிகளும் காட்டுக்கு ஓடிப்போய்விட்டன. அசுவசாலையில் ஏற்கனவே இருந்த பழைய குதிரைகளும் இந்த நரிகள்செய்த ஆரவாரத்தில் மொண்டு வெளிகளில் ஓடிப்போய்விட்டன. பொழுது விடிந்ததும் அச்சம்பவங்களையெல்லாம் அரசன் கேள்விப்பட்டு கோபபாவசனாயிருந்தான். அச்சமயம் அங்கு வாதபுரீசர் வந்து சேர்ந்தார். அவரைக்கண்டதும் அரசன் அதிவேகமாக "என்னிடம் என்ன ஜாலவித்யை செய்கிறீரா" என்று அதட்டினான். அதற்கவர் "ஏ அரசனே, இக்குதிரை வியாபாரத்தில் எனக்கு யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. நேற்று அந்த வியாபாரியிடம் தாங்களே நேரில் எல்லாம் பேசித்தெரிந்துகொண்டு பிறகு வாங்கினீர்கள். அந்த வியாபாரியோ குதிரைகளுக்கு மறுநாளைக்கு இருக்காது என்பதினாலேயேதான் அசுவமென்று பெயர் என்று வியக்தமாக சொன்னான். அதனாலேயே அந்த வியாபாரியும் குதிரைகளும் ஸாமான்யமானவைகளல்லவென்று தெரியவில்லையா? தாங்கள் சிறந்த ஈசுவரபக்தரானதால் ஸ்ரீ ஸௌந்தரேசர் தங்களுக்கு நேரில் குதிரைவியாபாரிமாதிரி தர்சனம்கொடுத்து இந்த லீலை செய்திருக்கிறார். தங்களது பாக்கியமே பாக்கியம். என்னைக் குற்றம் சொல்வதற்குக்கொஞ்சமேனும் இடமில்லை. நேற்றே அந்தவியாபாரி தங்களுக்கு குதிரைகள் பிடிக்காவிட்டால் திரவியத்தை இரண்டு பங்காக திருப்பிக்கொடுத்துவிடுவதாகச் சொன்னான். தாங்கள் தான் அதுவேண்டாமென்று குதிரைகளை வாங்கினீர்கள். ஆதலால் எனக்கு ஒரு ஸம்பந்தமுமில்லை" என்றார். அரசன் மனது அவமானத்தாலும் கோபத்தாலும் மூடப்பட்டிருந்ததால் அவனுக்கு பகுத்தறிவு சரியானபடி யுண்டாகாமல் வேலையாட்களை வாதபுரீசரை திரும்பவும் விலங்கிட்டு சிறையிலடைத்து ஹிம்ஸிக்கும்படி உத்தரவு செய்தான். வேலையாட்களும் அரசனுக்கிணங்க அவரை யணுகினார்கள். அவரோ ஈசுவரத்யானத்திலாழ்ந்திருந்தார். அச்சமயத்தில் திடீரென்று ஊர் முழுமையும் ஒரேசப்தமாக ஹாஹா என்று ஜனங்கள் அங்கு மிங்கு மோடத் தலைப்பட்டார்கள். சிலர் அரண்மனைக்கு ஓடிவந்து அரசனிடம் வைகையாற்றில் அஸாத்யமாக பிரவாஹம் வருவதாகவும் அது கரைகளையெல்லாம் உடைத்து வருவதாயும் இன்னுமதி சீக்கிரத்தில் ஊர் முழுகிப்போய் விடுமென்றும் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் அங்கிருந்த வேலையாட்களெல்லாம் அவனவன் வீடுகளுக்கு பிள்ளை குட்டிகளைக் காப்பாற்றுவதற்காக சொல்லாமல் ஓடிப்போய்விட்டார்கள். அரசனும் நதிக்கரைக்கு பிரவாஹத்தை நேரில் பார்ப்பதற்காகச்சென்றான். வாதபுரீசரை இந்த பரபரப்பில் ஒருவரும் கவனிக்கவில்லை. அவரும் உடனே கோயிலுக்குச்சென்று அமைதியான மனதுடன் ஸ்ரீ மீனாக்ஷி ஸௌந்தரேசரைத் துதிசெய்து நின்றுகொண்டிருந்தார்.

61. பிட்டுக்கு மண் சுமந்தது.

இவ்விதம் எதிர்பாராத ஸமயத்தில் வைகையாற்றில் மஹாப்பிரவாஹம் வந்து கரைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு ஊர் முழுமையும் முழுகிப்போய்விடும்போலானதைக் கண்டு ஜனங்கள் பயந்து தவிக்கையில் அரிமர்த்தனபாண்டியனனவன் தனது அதிகாரிகளை விட்டு ஊரிலுள்ள எல்லா வீட்டுக்காரர்களுக்கும் அந்த நதியின்கரையில் அளந்து பங்கு

விதம்போட்டு அந்தந்த பங்கை அவ்வவ்வீட்டுக்காரர்கள் அடைத்தே தீரவேண்டுமென்று நியமிக்கும்படி கட்டளையிட்டான். அவ்வாறே எல்லா வீட்டுக்காரர்களுக்கும் பங்குவீதம் போட்டுக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தாங்களும் இன்னும கூலியாட்களையும் கொண்டு மண்வெட்டிக்கொண்டுபோய் கரையை அடைத்து உயர்த்திகெட்டி செய்தார்கள். அந்த மதுரையில் ஒருவீட்டில் ஒரு கிழவி தனியேயிருந்தாள். அக்கிழவிக்கு வேறு வேண்டியவர்கள் ஒருவரும் கிடையாது. அவள் சிறந்த ஈசுவரபக்தியுள்ளவள். பிட்டு அப்பம் முதலிய பக்ஷணங்கள் செய்து முதலில் ஈசுவரனுக்கு நிவேதனம் செய்தபிறகு அதை விற்று ஜீவனம் செய்கிறவள். அவளுக்கு வீடிருந்தமையால் அவளுக்கும் நதிக்கரையடைப்பதில் பங்குவீதமேற்படுத்தப்பட்டது. அவளை அந்த பங்குவீதப்படி கரையை அடைக்கச சொல்லி அதிகாரிகள் வந்து சொன்னதும அவள் "நான் கிழவியாக தள்ளாதவயதிலிருக்கிறேன். என்னால் மண்கூடை சுமக்கமுடியாதே. எனக்குவேண்டிய ஜனங்களும் ஒருவருமில்லையே. கூலியாட்கள் நியமிப்பதென்றாலும் இந்த அமளியில் எல்லோரும் ஏற்கனவே அமர்ந்துவிட்டார்களே, நான் என்ன செய்வேன். ஸ்ரீ ஸுந்தரேசரைத்தான் சரணமடைய வேண்டும்" என்று சொல்லி கோயிலுக்குச் சென்று ஈசுவரனிடம் முறையிட்டுத் தன்னை அரசனின் ஆக்ஞைக்குத் தப்பிவிக்கவேண்டுமென்று வேண்டினாள். அவளைக் கவலைப்பட வேண்டாமென்று அசரீரவாக்கு உண்டாயிற்று. அதைக்கேட்டு ஸந்தோஷித்து அவள் திரும்பி கோயிலுக்கு வெளியே வரும்பொழுது வீதியில் ஈசுவரனானவர் நல்ல யுவாவாக தலையில் ஒரு கூடையும் தோளில் ஒரு மண்வெட்டியுமாக எடுத்துக்கொண்டு அவள் முன்னிலையில் வந்து "அம்மா உனக்கு என்ன ஆகவேண்டும்" என்று கேட்டார். அக்கிழவியும் "வைகையாற்றின் கரையில் தன் பங்குக்கரையை அடைத்துயர்த்தவேண்டும். உன்னைப் பார்த்தால் நல்ல பையனாக இருக்கிறாய். நீ போய் அந்தக் காரியத்தை முடித்துவந்தாயேயானால் உனக்கு சுடச்சுட பிட்டுதருகிறேன்" என்றாள். அதற்கு அந்தப்பையன் "பாட்டி, உன்னைப்பார்த்தால் எனக்கு என் அம்மாபோல் தோணுகிறது. உன் காரியத்தை நொடிப்பொழுதில் முடித்துக்கொடுக்கிறேன். அரசன் உன்னிடம் ஸந்தோஷிக்கும்படி செய்கிறேன். இப்பொழுது பசியாயிருப்பதால் நீ உன்னிடம் தயாராகவிருக்கும் பழம்பிட்டாகவிருந்தாலும் அதைக்கொடு, அதைச் சாப்பிட்டுவிட்டு உடனே வேலைக்குப்போகிறேன்" என்றான். உடனே அக்கிழவியும் மிகவும் ஸந்தோஷத்துடன் தன்னிடம் இருக்கும் பிட்டுகளைக் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு அந்தப் பையனும் நதிக்கரை சென்று அங்குள்ள கணக்குப்பிள்ளையிடம் தான் அந்த கிழவியின் பாகத்தை அடைக்கவந்த ஆள் என்று பதியவைத்துவிட்டு தனக்கு பங்கிட்டுக்கொடுத்திருக்கும இடத்திற்குச் சென்று அங்கே உட்கார்ந்து பிட்டைத் தின்றுகொண்டு இதர வேலையாட்களுடன் பரிஹாஸமாகப் பேசி சிரித்துக்கொண்டு காலத்தைப் போக்கினான். மத்தியானம் உணவுக்காக விடப்பட்டபோது அக்கிழவியிடம்சென்று வேலையெல்லாம் ஆய்விட்டது என்று சொல்லி நல்ல சூடாக அவளிடமிருந்த பிட்டை வாங்கிக்கொண்டு திரும்பவும் வேலையிடத்திற்கு வந்து பிட்டை தானும் சாப்பிட்டு இதரர்களுக்கும் கொடுத்து முன்போலவே பரிஹாஸ வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தான். சாயங்காலமானதும் ராஜஸேவகர்கள் வந்து பார்க்கும்பொழுது எல்லாருடைய பங்கும் அடைபட்டு இந்தப் பையனுடைய பங்குமட்டில் கொஞ்சமேனும்

அடைபடாமலிருப்பதைக்கண்டு கோபம்கொண்டவர்களாய் அப்பையனைக் கண்டிக்க அவன் அதை சற்றேனும் லக்ஷியம் செய்யாமல் உதாஸீனமாயிருந்ததால் அவனை அடிக்கச் சென்றபொழுது அவனுடைய ரூபத்தின் ஸௌந்தர்யாதிசயத்தைக் கண்டு வியந்து அடிக்கத் தோன்றாமல் அரசனிடம்போய் விஷயத்தைத் தெரிவித்தார்கள். அரசனும் உடனே அவ்விடத்திற்கு வந்து பார்க்கையில் அப்பொழுதுதான் அந்தப்பையன் ஸ்வல்ப மண்ணை கூடையில் எடுத்துக்கொண்டு உல்லாஸமாய்ப் பாடிக்கொண்டு மெதுவாய் செல்வதையும் அவன் பாகம் கரை அடைபடாமையால் அதுவழியாக பிரவாஹமானது பக்கங்களையும் அறுத்துக்கொண்டு வேகமாக உள்ளே செல்வதையும கண்டு கோபபரவசனாய் தன் கையிலிருந்த பிரம்பால் அந்தப்பையனை பின்புறத்தில் ஓர் அடி அடித்தான். அடித்ததுதான் தாமதம்! அவ்வரசனுக்கும் மற்றும் அங்குள்ள எல்லோருக்கும் அவ்வூராருக்கும் உலகிலுள்ள எல்லா ஜீவஜந்துக்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தத்தம் முதுகில் பளீர் என்றடி விழுந்தாப்போல் வலியுண்டாயிற்று. அந்தப்பையனோவெனின் தலையிலிருந்த மண்ணை அவனுடைய பங்குக் கரையில் கொட்டிவிட்டு அப்படியே மறைந்துவிட்டான். அங்குள்ள அரசன் முதலியவர்கள் அடியின் வலி கொஞ்சம் தணிந்து பார்த்தபொழுது அந்தக்கரை ஸரியாக உயர்த்தப்பட்டிருபபதையும் அப்பையன் காணாமல் மறைந்தபோனதையும் கண்டு மிகவாச்சரியமடைந்து அக்கிழவியிடம்போய் அந்தப்பையன் யார் என்று கேட்பதற்காக அங்கே சென்றார்கள். அவர்கள் வருவதை கண்ணுற்ற அக்கிழவியானவள் விஷயம் தெரியாததால் தன்னுடைய பங்கு இன்னும் அடைபடாமலிருக்கிறதோ என்னவோ அதனால் தன்னை ராஜா தண்டிக்கவருகிறானோவென பயந்து ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தியானித்து தன்னைக் காப்பாற்றவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். ஈச்வரனும் அம்பாளுடன் ரிஷபாருடராய் அங்குவந்து அரசன் முதலியவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அக்கிழவியை ஒரு விமானத்திலேற்றி கைலாஸத்திற்கனுப்பினார். இந்த அத்புதக்காக்ஷியைக்கண்ட அரசன் முதலிய ஜனங்கள் ஈச்வரனை ஸ்தோத்ரம் செய்தார்கள். அந்த ஸ்தோத்ரத்தை நீலகண்ட தீக்ஷிதர் பின்வருமாறு சமத்காரமாக சொல்லியிருக்கிறார்.

चूडाबद्धभुजंगपुंगवशिरोविन्यस्तपृथ्वीभरप्रान्तप्रस्खलितैः कणैः कतिपयैरीषत्करे पूरणे ।
मिथ्यारोपितयत्नगौरवकथाविज्ञापनाचातुरीसंमुह्यज्जरतीगृहीतशिथिलापूपाय तुभ्यं नमः ॥ १ ॥

योगक्षेमभरः समस्तजगतां न्यस्तस्तवाङ्घ्रिद्वये कुक्षौ त्रीणि जगन्ति मूर्ध्नि शशभृद्गङ्गाकपालस्रजः ।
वोढव्यस्तदुपर्ययं यदि मृदां भारोऽपि गौरीपते कस्ते मद्धरणे श्रमः क इव मे त्रासस्तदभ्यर्थने ॥

हे सन्तः शृणुताधुनैव मिलितैरस्माभिरेतच्छिवे वाच्यं वेत्रहतिं विभज्य न वयं भोक्तुं समर्था इति ।
नो चेत्पादहतिः शिलाप्रहरणं कोदण्डदण्डाहतिर्गण्डूषोदकसेक इत्यपि भवेत्सर्वं विभाज्यं हि नः ॥

ध्यायंध्यायमुपायकोटिभिरहं त्वत्प्राप्त्युपायं चिरं निर्विण्णो निरचैषमेकमधुना हालास्यचूडामणे ।
दिष्ट्या वेगवतीतटे यदि पतेदेतद्वपुर्मामकं संरोहेदपि जातु तत्तटमृदा साकं त्वदीयं शिरः ॥ ४ ॥

धूलीधूसरितं शशाङ्कशकलं जम्बालिता जाह्नवी भग्नं ब्रह्मकपालदाम फणिनो भूषोचिताः क्लेशिताः ।
मृद्भारोद्वहनं कुतोऽभ्युपगतं को वा गुणः पिष्टके सा दुष्टा जरती किमौषधमदात्तत्रेति न ज्ञायते ॥

पङ्क्तौ किं निहतः सुतो दिनमणेर्भग्नाश्चपेटाहतैर्दन्ताः किं तरणेः किमित्यपहृतं धातुः शिरः पञ्चमम्।
कामं त्वं जगदीश्वरो भव ततः कर्मापि किं जीर्यति प्रत्यक्षं खलु पाण्ड्यवेत्रलतिकाघातोऽयमासादितः॥
देवा दूरतरं प्रयात मुनयो गृह्णीत मौनं क्षणं मातुः शंसत मा चिरं गणवरा देवस्य दृष्टां दशाम्।
पुष्पैर्नन्दनसंभवैरपि सुरैर्यन्मन्दमभ्यर्च्यते तद्दिव्यं वपुरैश्वरं विलुलितं पाण्ड्यस्य वेत्राहतैः॥ ७॥
अम्ब खिद्यति वक्त्रमम्ब किमपि श्रान्त्या गतिर्मन्थरा मातः सीदति शंकरे प्रहृतवान्वेत्रेण पाण्ड्यो विभुः
इत्यावेदयतां मुखादनुपदं श्रुत्वा गणानां शिवा प्रेमोदीर्णपतिव्रतप्रशमितक्रोधा कथं वर्तते॥ ८॥
बाणे योऽधिकृतः समस्तजगतां तस्याम्बुराशौ सुखं निद्राणस्य तथाविधेऽपि समये प्रष्टैव नालक्ष्यते।
विष्टिं कुर्वति ताम्यति श्रमभराद्वेत्राहतिस्त्वय्यभूत्कस्याग्रे कथयिष्यसीममनयं स्वामिन्ननाथो ह्यसि॥
लीलाधारितसिन्धुतीरसिकताभारान्तरालस्थितो भूयासं मशकोऽप्यहं पशुपते तावच्च नार्हामि किम्।
यत्कीदृग्विधमैश्वरं शिर इति प्रष्टुं प्रवृत्ते विधावीदृक्ताद्दृगिदं तदित्युपदिशंस्तस्यापि च स्यां गुरुः॥
पाण्ड्यो दण्डयितास्तु पाण्ड्यतनया द्रष्ट्री कथं वर्तते कामं सा जननी ममैव किमतो युक्तं तु वाच्यं मया।
सव्ये स्थापय मूर्ध्नि मृद्भरममुं सव्यं वपुर्दर्शय प्राप्ते वेत्रलताहते च तदनु द्रक्ष्यामि देव्याः स्थितिम्॥

वोढुं प्रवृत्ते त्वयि वेगवत्याः शीर्षेण शंभो सिकतावितानम्।
भारं द्वयोः पर्यवसन्नमूहे चित्ते यतीनां शिरसि श्रुतीनाम्॥ १२॥

अर्धं पौरुषमर्धमेव भवति स्त्रैणं च यत्तावकं साम्राज्यं गृहकर्म वा किमपि तन्नायाति निर्व्यूढताम्।
त्वं राज्ञी मधुरापुरस्य दयितस्तत्रैव ते ताड्यते त्वं मातः स्वयमन्नदासि जगतां कान्तस्तु ते भिक्षते॥

आखेटधर्ममनुपालयतानुभूतः पार्थप्रहार इति यत्तदवैमि युक्तम्।
आयासवृत्त्यनुगुणां भृतिमप्यविन्दन्नङ्गीकरोषि किमपार्थममुं प्रहारम्॥ १४॥

वेत्राहतिं विभक्तुं विश्वात्मकता प्रदर्शिता भवता। करगतकबलग्रासे पुनरभिनीतं शिवाद्वैतम्॥ १५॥
वेत्राहतिमतिघोरां विभज्य ये भुञ्जते जना नियतम्। भवतापतापितेष्वपि तेषूपेक्षैव ते कथं लीला॥ १६॥

आनम्यानम्य मौलिं त्वयि किरति मृदं स्रंसते मूर्ध्नि गङ्गा
बद्ध्वाबद्ध्वा कपर्दं स्पृशति फणधरा दारुणं निःश्वसन्ति।
औत्सुक्यात्ताड्यमाने त्वयि जगदखिलं ताड्यते वेत्रयष्ट्या
भक्तस्यैकस्य रक्षा भवति पशुपते सर्वलोकस्य शिक्षा॥ १७॥

अस्मत्तो बहुधा गृहीतमधुनाप्यस्मद्भवस्रोतसां संरोधे न किमप्ययं प्रयतते देवः प्रमाणं ततः।
इत्यग्रे विनिपत्य पाण्ड्यनृपतेर्ब्रूमो वयं चेत्ततः कोपात्कोपमुपेयुषः क्षितिपतेः किं भावि संभाव्यताम्॥
वोढव्यानि वहानि ते सुरनदीवेधःकपालादिकान्यात्मानं च निवेदयाम्यथ भवद्भक्त्यामृतेनाप्लुतम्।
इत्यभ्यर्थयमानमीषदपि मामप्रेक्षमाणो भवान्पिष्टापूपकृते मृदं वहसि चेद्देवः प्रमाणं ततः॥ १९॥

प्रहृतं प्रहृतमिति त्वं पाण्ड्य विषीदसि किमम्बिकारमणे ।
प्रहृतं यदि साधु कृतं पाशुपतं गणय सिद्धमस्त्रं तत् ॥ २० ॥

पाण्ड्येन प्रहृतोऽसि वेत्रलतया पार्थेन गाण्डीवतः पादेनापि किरातकेन वटुना केनापि च प्रस्तरैः ।
तत्तत्प्रत्युत तेषु तेषु तप इत्यग्राहि मत्पूजने त्वागांस्येव पदे पदे गणयसे दैवं ममैवंविधम् ॥ २१ ॥

இவ்வாறு ஸ்தோத்திரம்செய்து முடிந்ததும் ஈசுவரனானவர் அரசனைநோக்கி "நீ நமது பக்தனான வாதபுரீசனை அனாவசியமாக ஹிம்ஸை செய்தாய். உன்னுடைய திரவியங்களையெல்லாம் அவன் நம்விஷயத்தில் செலவழித்து அதனால் உனக்கு அதிகமான புண்யத்தையும் ஐச்வரியஸமிருத்தியையும் ஸம்பாதித்து வைத்தான். நீ அதை அறியாமல் அவனை ஹிம்ஸித்தாய். அதனாலேயே நாம் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி கொண்டு வந்து விட்டோம். அப்பொழுதும் வாதபுரீசனின் மஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் அக்குதிரைகள் நரிகளான பிறகு மீளவும் நீ அவனை ஹிம்ஸித்தாய். அதற்காகத்தான் வேகவதியில் இந்த மஹா பிரவாஹத்தைத் தருவித்தோம். நமது பக்தையான இந்தக் கிழவிக்கு மோக்ஷம் கொடுக்கவேண்டி அவனிடம் பிட்டுவாங்கி சாப்பிட்டு மண் சுமந்தோம். நம்முடைய பரமாத்மத்வத்தையும், ஸர்வாந்தர்யாமித்வத்தையும் காண்பிப்பதற்காக உன் கையால் அடிபட்டோம். இனியாவது நமது பக்தனான வாதபுரீசனின் மஹிமை உனக்குத்தெரியலாம். உன் அரண்மனை கஜானாவில் இப்பொழுது ஐச்வர்யம் நிறைந்திருக்கிறது. அச்வசாலையிலும் அச்வங்கள் நிறைந்திருக்கின்றன. இனி வாதபுரீசனை நாம் உன்னிடம் வைக்கப்போகிறதில்லை. நமக்கு முக்கிய க்ஷேத்ரங்களுள் ஒன்றாகிய சிதம்பரத்திற்கு அனுப்புகிறோம். அவன் இப்பொழுது கோயிலில் இருக்கிறான். நீ உடனே அங்கு சென்று அவனிடத்தில் மன்னிப்பு கேட்டுக்கொண்டு அவனை வெகுவாக உபசரித்து சிதம்பரத்திற்கு வழிகொண்டு அனுப்பு" என்றுசொல்லி அந்தர்த்தானமானார். உடனே அரிமர்த்தன பாண்டியனும் ஓடோடியும கோயிலுக்குவந்து வாதபுரீசரைக்கண்டு அவரைப் பிரதக்ஷிணம் செய்து அவர் முன்பாக ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தான்செய்த குற்றத்தையெல்லாம் பொறுத்து தன்னை க்ஷமித்தருளவேண்டுமென்று மிகவும் வேண்டினான். வாதபுரீசரும் புன்சிரிப்புடன் அவரை அனுக்ரஹிக்க அரசன் அவரை பலவாறாக உபசரித்த பிறகு அவரும் ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் விடைபெற்று சிதம்பரத்திற்குப் புறப்பட்டவுடன் அரசனும் கூடப்பின் தொடர்ந்து கொஞ்சதூரம் வழிநடந்து அனுப்பிவிட்டு திரும்பி ஊர் வந்து சேர்ந்தனன். இந்த வாதபுரீசர்தான் மாணிக்கவாசகர் என்று பிரஸித்திபெற்றவர்.

62. குப்ஜபாண்டியனின் ஜ்வரத்தை நிவர்த்திப்பித்தது.

அரிமர்த்தன பாண்டியனுக்குப் பிறகு அவன் வம்சத்தில் அநேகம் அரசர்கள் காலஞ்சென்றதும் குப்ஜ பாண்டியனென்பவன் அரசனாக ஏற்பட்டான். அவன் மிகவும் பராக்ரமசாலியாகவிருந்ததால் இதரவரசர்களையெல்லாம் தனக்குள்ளடக்கியாண்டுவந்தான். சோழதேசத்து மன்னன் தன் பெண்ணாகிய வநிதேசுவரியை இவனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்து ஏராளமான திரவியமும் கப்பமாக ஸமர்ப்பித்து இவனுடன் ஸமாதான

மாக இருந்தான். அந்த வநிதேசுவரியின் கூடவே சோழதேசத்திலிருந்து அங்கு மந்திரியாயிருந்த குலபந்தனன் என்பவனும் மதுரைக்குவந்து அங்கு குப்ஜபாண்டியனிடம் மந்திரி வேலையிலமர்ந்தான். இந்த வநிதேசுவரியாகிய ராணியும் குலபந்தனான மந்திரியும் பரமசிவபக்தர்கள். பிரதிதினமும் சிவபூஜை செய்யாமல் சாப்பிடுகிறதில்லை. கோயிலுக்குப்போய் சிவதர்சனம் செய்யாமலிருக்கிறதில்லை. ஆனால் அந்த குப்ஜபாண்டியனின் ஜன்மாந்தர பாபத்தால் தற்சமயம் சிவபக்தியில்லாதவனாய் சமணர்களிடமீடுபட்டு அவர்களுடைய மதத்தை யவலம்பித்துக்கொண்டு விபூதி ருத்ராக்ஷம் தரித்தவர்கள் தன் முன் வரக்கூடாதென்று உத்தரவிட்டிருந்தான். இந்த ராஜஆக்ஞைக்கு பயந்து ராணியும் மந்திரியும இரஹஸ்யமாய் அரசனுக்குத்தெரியாமல் விபூதி ருத்ராக்ஷங்களையணிந்து கொண்டு சிவபூஜைசெய்வதும கோயிலுக்குப்போய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தர்சனம்செய்வதும் அரசனுக்கு நல்லபுத்தி கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதுமாயிருந்தார்கள். இவ்வாறு நடந்து வருகையில் ஒருநாள் கோயிலில் இவர்களிருவரும் ஸ்வாமி தர்சனத்துக்குப்போயிருந்த ஸமயத்தில் சோழதேசத்திலிருந்து ஒரு கிழப்பிராமணரங்கு வந்திருந்தார். அவரை அத்தேசத்திலென்ன விசேஷமென்று இவர்கள் கேட்க அவர் "சோழதேசத்திலொரு அத்புதமுண்டாயிருக்கிறது. பிரம்மபுரம் என்று சொல்லப்படும் சீர்காழியில் சிவபாதாப்ஜஹ்ருதயர் என்னும் ஒரு பிராம்மணோத்தமருக்கு ஈசுவரன் கட்டளைப்படி ஸுப்ரமமண்யஸ்வாமி உலகக்ஷேமார்த்தம் புத்ரனாக உண்டாயிருக்கிறார். அப்பையனுக்கு கருணைக்கடலான பார்வதிதேவியே ஸ்தன்யபானம் செய்வித்தாள். அந்த ஸ்தன்யத்தைக்குடித்த மாத்திரத்திலேயே அவர் மிகவும் சிறந்த ஞானவானாக ஆய்விட்டார். மூன்றாவது வயதிலேயே நிகரில்லாத வித்வானாகி அவர் ஞானஸம்பந்தர் என்று அர்த்தத்தோடு கூடிய பெயரையுமடைந்தார். அவர் இப்பொழுது பற்பல சிவக்ஷேத்ரங்களுக்குச் சென்று ஈசுவரனை தர்சனம் செய்து பதிகங்கள் பாடிக்கொண்டு அங்கங்குள்ள வேததூஷகங்களான இதர மதங்களை கண்டித்து தொலைத்துக்கொண்டு வருகிறார். இந்த ஹாலாஸ்யக்ஷேத்ரத்தில் மூலலிங்கத்தை தர்சிப்பதற்கும் சமணர்களை நாசம் செய்வதற்கும் சீக்கிரத்தில் இங்கு வருவார்" என்றார். இதைக்கேட்டதும் ராணியும் மந்திரியும் மிகவும் ஸந்தோஷமடைந்து உடனே ஹாலாஸ்ய க்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டு வரவேண்டுமென்று ஞானஸம்பந்தருக்கு ஒரு கடிதமெழுதி அதை அந்த பிராம்மணரிடம்கொடுத்து அவரை அக்கடிதத்துடன் விரைவில் ஞானஸம்பந்தரிடம்சென்று அதைக்காண்பித்து அவரை உடனே மதுரைக்குக் கூட்டிவருமபடி மிகவும் பிரார்த்தித்தனுப்பினார்கள். அந்த பிராமணர் அக்கடிதத்தைகொண்டுவந்து ஞானஸம்பந்தரிடம் கொடுக்கும் ஸமயமானது அவராகவே மதுரைக்குச்சென்று ஹாலாஸ்யநாதரை தர்சனம்செய்து சமணர்களை தொலைக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்த ஸமயமாகவிருந்தது. இக்கடிதத்தைக் கண்டதும் ஞானஸம்பந்தர் உடனே புறப்பட்டு அனேக ஆயிரம் சிஷ்யர்கள் சூழ முத்துப்பல்லக்கிலேறிக்கொண்டு வந்திகள் சப்தமும் வாத்யங்கள் கோஷமும முழங்க மதுராபுரி வந்துசேர்ந்தார். அங்கு பொத்தாமரையில் ஸ்நானம் செய்து ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேசுவரரை தர்சனம் செய்து ஆனந்தபரவசராய், ஏகாக்ரசித்தராய் பதிகங்கள் பாடிக்கொண்டு நின்றார். அவர் பாடிமுடிந்து திரும்பியதும் ராணியும் மந்திரியும் வந்து அவரை நமஸ்கரித்து எவ்விதத்திலாவது தங்க

ளது அரசனுக்கு நல்ல புத்தி யுண்டாகும்படி செய்து சமணர்களையும் நாசம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்விதமே செய்வதாக அவர்களுக்கு வாக்குக்கொடுத்து அவ்வூரிலுள்ள வாகீசர் மடத்துக்குச்சென்று அங்கு தங்கினார். இவர் வந்த ஆர்ப்பாடத்தைக்கண்டதும் சமணர்கள் மனம் கலங்கிற்று. எவ்விதத்திலாவது இவரைக்கொன்றுவிடவெண்ணங்கொண்டு சமணர்களுள் ஆசாரியர்களாயுள்ளவர்கள் ஒன்றுகூடி மஹத்தானவோர் ஆபிசாரஹோமம் செய்து, அந்த அக்னியை ஞானஸம்பந்தர் மேலேவிவிட்டார்கள். அதை வேடிக்கை பார்க்க அந்த அக்னியின் பின் சமணசிஷ்யர்களும் வந்தார்கள். அந்த அக்னியானது வாகீசர் மடத்துக்கு ஸமீபத்தில் வரவே அதன் வேகமெல்லாம் அடங்கி சமனமாய்விட்டது. அதைக்கண்ட சமணசிஷ்யர்கள் மிக வாச்சரியங்கொண்டு தங்கள் கைகளால் அந்த அக்னியை எடுத்து ஞானஸம்பந்தர் இறங்கியிருந்த மடத்தின் நாலாபக்கத்திலும் கூரையில் வைத்தார்கள். அந்த அக்னியின் ஜ்வாலையானது மேலே தெரிந்ததேயொழிய அந்த மடத்தின் கட்டடத்தையணுகவில்லை. இதுவிஷயத்தை உள்ளே சிரமத்துடன் படுத்திருந்த ஞானஸம்பந்தரிடம் அவர் சிஷ்யர்கள் தெரிவிக்கவே அவர் பதிகம்பாடி அந்த அக்னியை மெதுவாகச்சென்று அரசனை ஜ்வாரூபமாக தஹிக்கும்படி ஏவிவிட்டார். அந்தப் பிரகாரமே அந்த அக்னியானது அரண்மனைக்கு அரசனிடம் சென்றுவிட்டது. அரசனும் கடுமையான ஜ்வரத்தால் மிகவும் வருந்தினான். உடனே அரசன் சமண ஆசார்யர்களைக் கூப்பிட்டு ஜ்வரத்திற்கு சிகித்ஸைகள் செய்யச்சொன்னான். அவர்கள் என்ன செய்தும் ஜ்வரம் தணியவில்லை. அரசனுக்கோ தாபம் பொறுக்கமுடியவில்லை. மூர்ச்சைபோய் தரையில் விழுந்து புரண்டான். அச்சமயம் ராணியும் மந்திரியும் அரசனிடம்வந்து அவனை சற்று ஆசுவாஸப்படுத்தி எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவரான ஞானஸம்பந்தர் என்றொருவர் மதுரைக்கு வந்திருப்பதாயும் அவரைத் தருவித்தால் நொடிப்பொழுதில் ஜ்வரத்தைத் தணித்து விடுவாரென்றும் சொன்னார்கள். அதற்கரசன் அவர் தனது மதத்துக்கு விரோதியான சைவராயிற்றே. அவர் பஸ்மத்தைத் தடவுவரே. அவரிடம் எப்படி வைத்யம் செய்துகொள்வதென்று மறுக்க மந்திரியும் ராணியும்சொன்னதாவது: “இச்சமயம் நமக்கு எவ்விதத்திலாவது சரீரம் ஸௌக்யமாகவேண்டியதுதான் முக்யம். அவர் யாராயிருந்தாலும் அதை இச்சமயம் கவனிக்கக்கூடாது. இந்த சமண ஆசார்யர்களால் எவ்வளவு முயன்றும் ஸௌக்யப்படுத்த முடியவில்லை. ஆதலால் அவரையும் அழைத்து அவரிடத்தில் சரீரத்தின் ஒரு பாகத்தையும் சமண ஆசார்யர்களிடத்தில் மற்றொரு பாகத்தையும் ஒப்புவித்து யார் ஸ்வஸ்தப்படுத்துகிறார்களோ அவரை யனுஸரிப்போம்” என்றார்கள். அரசனும் அதற்கிணங்கவே சமண ஆசார்யர்களுக்கு ஆட்களையனுப்பிவிட்டு தாங்களே நேரில்சென்று ஞானஸம்பந்தரை யழைத்து வந்தார்கள். அரசனும் முன்சொன்னபடியே வலது பக்கத்தை ஞானஸம்பந்தரிடமும் இடது பக்கத்தை சமண ஆசார்யர்களிடமும் ஒப்புவித்து யார் தனது வியாதியை ஸ்வஸ்தப்படுத்துகிறார்களோ அவரைத்தான் அனுஸரிப்பதாகச்சொன்னான். உடனே சமணர்கள் மருந்தில்லாமல் மந்திரத்தாலேயே ஸௌக்யப்படுத்தவேண்டுமென்றார்கள். ஞானஸம்பந்தரும் அதற்கிணங்கி விபூதியையெடுத்தார். சமணர்களதைத் தடுத்து அந்த விபூதியில் மருந்துகள் கலந்திருப்பாய், வேறு பஸ்மம் இங்கிருந்து எடுத்து வரவேண்டுமென, ஞானஸம்பந்தர் அரசனின் வேலையாட்களை கோயிலுக்

குச்சென்று மடப்பள்ளியிலிருந்தும் சாம்பலைக்கொண்டுவரச் சொல்லியனுப்பினர். அவர்களும் அவ்வாறே கொண்டுவர அந்த சாம்பலை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை தியானம் செய்துகொண்டு அரசன் வலதுபக்கத்தில் தனது கையால் தடவினர். உடனே ஜ்வரம் நீங்கிற்று. ஆனால் இடதுபக்கத்தில் முன்னிலும் இரண்டு பங்கதிகமாக தாக்கிற்று. சமணர்கள் மயில் தோகையால் எவ்வளவு அடித்தும், கமண்டுலுவிலிருந்து எவ்வளவு ஜலம் புரோக்ஷித்தும் வரவர அதிக உபாதியேற்பட்டதே யொழிய சற்றேனும் தணியவில்லை. சமணர்கள் கடைசியில் வலதுபக்கம் அமிருதமுள்ள பக்கமானதால் சீக்கிரமாக ஸௌக்யமாய்விட்டதென்றும் இடதுபக்கம் விஷமுள்ள பக்கமானதால் தாமதப்படுகிறதென்றும் ஞானஸம்பந்தரானவர் இடதுபக்கத்தையும அந்தமாதிரி சீக்கிரமாக ஸௌக்யப்படுத்தினல் தாங்கள் ஒத்துக்கொள்வதாகவும் சொன்னர்கள். உடனே அரசன் ஞானஸம்பந்தரை மிகவும் வேண்ட அவர் இடதுபக்கத்தையும் அந்த பஸ்மத்தால் தடவ உடனே ஸௌக்யமாய் அரசன் முன்னிலும் அதிக வலுவுள்ளவனக ஆய்விட்டான். சமணர்கள் வெட்கமடைந்து தங்களிருப்பிடம்சென்ருர்கள். அரசனும் ஞானஸம்பந்தரை வெகுவாக நமஸ்கரித்து இனித் தான் அவர் சிஷ்யனென்றும் தன்னை எவ்விதத்திலாவது நல்லகதிக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் மன்ருடினன். ஞானஸம்பந்தரும் அவனைத் தனது கடாக்ஷத்தாலனுக்ரஹித்தமாத்திரத்தில் அவனுடைய கூன் நீங்கி மன்மதாகிருதியாக எதிரில் நின்ருன். எல்லோரும் கண்டு வியந்தார்கள். அவனுக்கு பஞ்சாக்ஷரம் முதலிய உபதேசங்கள் செய்வித்து ஸுந்தரபாண்டியன் என்று பெயருமளித்து அவனைப்பெரும் சிவபக்தனகச்செய்து விட்டு அவனல் வெகுவாக உபசரிக்கப்பட்டு தனது மடம் சென்ருர்.

63. சமணர்களைக் கழுவிலேற்றினது.

மறுநாள் காலையில் ஞானஸம்பந்தரிடம் வந்தேசுவர ராணியும் குலபந்தன மந்திரியும்வந்து நமஸ்கரித்து அரசனை வைதிகமதத்திற்குத் திருப்பியாய்விட்டதென்று எண்ணி அவர் உடனே ஊரைவிட்டுப் போய்விடக்கூடாதென்றும், சமணர்கள் 8000 பேர்கள் பக்கங்களிலுள்ள எட்டு மலைகளிலுமிருப்பதாகவும், அவர்கள் செய்யும் அக்கிரமங்கள் கணக்கிலடங்காவென்றும் அரசன் யதேச்சனயிருக்கப்பட்டவனதலால் அவர்களையடக்க அவனை நம்பக்கூடாதென்றும், சமணர்கள் மிகவும் அயோக்யர்களாகவும் வஞ்சகர்களாகவும் இருப்பதால் வேறெருவராலும் அவர்களை ஜயிக்கமுடியாதென்றும், ஒருமாதகாலம் ஞானஸம்பந்தர் அவ்வூரில் தங்கி அவர்களைவென்று 8000 பேரையும் வேரோடு நாசம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள் அவரும் அப்படியே செய்வதாக அங்கீகரித்து கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்தித்தார். ஈசுவரனும் அசரீரவாக்கு மூலமாய் ஞானஸம்பந்தருக்கு ஜயமுண்டாகுமென்று சொல்லி சமணர்களை நாசம்செய்ய அநுமதிகொடுக்க உடனே அரண்மனைசென்று தனதிஷ்டத்தை அரசனிடம் தெரிவித்தார். அரசனும் அதற்கிணங்கி மறுநாள் சமண ஆசார்யர்களை ஞானஸம்பந்தருடன் வாதத்துக்குத் தருவிப்பதாகச்சொன்னன். இதற்குள் அரசன் ஜ்வரத்தைத்தணிக்க முடியாமல் அவமானமடைந்து தம்தம் இருப்பிடம்சென்ற சமணர்கள் தங்கள் பத்னிகளால் இகழ்வாகப் பேசப்பட்டவர்களாய் எல்லொரும் ஒருங்குசேர்ந்து மறுநாள் எவ்விதத்தி

லாவது அக்னிஸ்தம்பம் ஜலஸ்தம்பம் முதலிய மந்திரங்களால் ஸம்பந்தரை ஜயிப்பதாகத் தீர்மானித்து மறுநாள் காலையில் அரசனிடம்சென்று ஸம்பந்தரோடு வாதம்செய்ய அநுமதி கேட்கப் புறப்பட்டார்கள். புறப்படும்பொழுது அவர்கள் பத்னிகள் முதலிரவில் தாங்கள் மிகவும் க்ரூரமான கெட்டஸ்வப்நங்கள் கண்டதாகவும் அன்றையதினம் அரண்மனைக்குப்போக வேண்டாமென்றும் தடுத்தார்கள். சகுனங்களும் ஸரியானதாக ஆகவில்லை. ஆனாலும் சமணர்கள் காலம் கிட்டிவிட்டதால் ஒன்றையும் கவனியாமல் ஒரே பிடிவாதமாய் அரண்மனைசென்று அரசனை ஸம்பந்தரோடு வாதுசெய்ய அநுமதி கேட்டார்கள். அரசனும் ஏற்கனவே அன்றயதினம் வாதத்துக்கு ஏற்பாடு செய்வதாக ஸம்பந்தரிடம் சொல்லியிருந்தபடியால் உடனே அநுமதிகொடுத்தான். ராணியும் மந்திரியுமசென்று ஞானஸம்பந்தரை உபசரித்து அழைத்து வந்தார்கள். அவர் அரசனால் உபசரிக்கப்பட்டு உட்கார்ந்ததும் சமணர்கள் அவரைப்பார்த்து "நீர் அரசன் ஜ்வரத்தைத் தீர்த்தது உம்முடைய மந்திர சக்தியென்று எண்ணவேண்டாம். ஏதோ காக்காய் ஏறினதும் பனம்பழம் விழுந்ததம் என்ற நியாயமாய் ஜ்வரம் ஸௌக்யமாயிற்று. ஆதலால் அதை ஒரு பொருட்டாக மதிக்கக்கூடாது. இப்பொழுது நாங்களெல்லோரும் எங்கள் மந்திரங்களை ஓலைகளிலெழுதி அக்னியில் போடுகிறோம். நீரும் உம்முடைய மந்திரத்தை எழுதி அக்னியில் போடும். எது எரிந்துபோகாமலிருக்கிறதோ அதுவே உயர்ந்தது. இதற்கு ஸம்மதமா" என்றார்கள். ஞானஸம்பந்தரும் அதற்கு ஸம்மதித்து அங்கேயே அரசனுக்கு முன்னிலையில் அக்னிகுண்டம் வளர்க்கச்சென்னார். அதற்கு சமணர்கள் அந்தவிடம் சிவனுக்குப் பிரியமான விடமாதலால் அங்கே கூடாதென்றும் மதுரைக்குப் பத்துமைலுக்கு வெளியிலே மைதானத்துக்குப்போய் அக்னிகுண்டம் வளர்க்கவேண்டுமென்றும் சொன்னார்கள் உடனே எல்லோருமாக சமணர்கள் காட்டிய விடத்திற்குச் சென்றார்கள். கன்றின் பின்னேடு தாய் செல்வதுபோல் ஞானஸம்பந்தர் பின்னேடு ஒருவருக்கும் தெரியாமல் ஸ்ரீ ஸுந்தரேசரும்சென்றார். அவ்விடத்தில் அக்னிகுண்டம் வளர்த்தானதும் சமணர்கள் ஒவ்வொருவரும் மந்திரங்கள் எழுதிய ஏட்டை அக்னியில் போட்டார்கள். ஞானஸம்பந்தரும் தன்னுடைய கையிலிருந்த புத்தகத்திலிருந்து ஒரு ஏட்டையெடுத்து நெருப்பிலிட்டார். சமணர்களேடுகளெல்லாம் நொடிப்பொழுதில் சாம்பலாய் விட்டது. ஸம்பந்தர் ஏடோவெனின் சற்றேனும் அக்னியினல் பாதிக்கப்படாமல் அந்த ஜ்வாலையில் தனியாக நின்றது. இதைக்கண்டு எல்லோரும் மிகவுமாச்சர்யமடைந்தார்கள். சமணர்களுக்கும் மனதிற்குள் பயமுண்டாயிற்றென்றாலும் லஜ்ஜையில்லாதவர்களாதலால் திரும்பவும் ஸம்பந்தரைப்பார்த்து "உமக்கு அக்னிஸ்தம்பவித்யை தெரியும்போலிருக்கிறது. அன்றயதினம் நீர் தங்கியிருக்கும் மடத்தை யெரிக்கும்படி நாங்களனுப்பிய அக்னியானது அவ்விதம் எரிக்காமலிருந்ததனலேயே எங்களுக்குத்தெரிந்தது. ஆதலால் இது பிரயோஜனமில்லை. நம்மிருவர்களுடைய மந்திரங்களையும் முன்போலவே ஏடுகளில் எழுதி வைகையாற்றின் பிரவாஹத்திலெறியுவோம். அதில் எது ஆற்றை யெதிர்நோக்கிச்செல்கின்றதோ அதுவே ஜயமடைந்தது ஆற்றோடுசெல்வது தோல்வியுற்றது. ஜயிப்பவருக்கு தோல்வியுற்றவர் வேலையாளாக அமர்ந்துவிடுகிறது என்ற பந்தயமும் ஏற்படுத்திக்கொள்வோம்" என்றார்கள். இதைக்கேட்ட ஞானஸம்பந்தர் "நீங்கள் 8000 பேரிருக்கிறீர்கள். ஸ்ரீ

ஸுந்தரேசரின் கிருபையால் நான் ஜயமடைந்தால் வேதசூன்யர்களான உங்கள் 8000 பேரையும் வேலையில் வைத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை. ஆதலால் நீங்கள் தோல்வியடைந்தால் உங்களைக்கழுவில் ஏற்றிவிடுகிறது. இதற்கு நீங்கள் அரசனின் முன்னிலையில் ஸம்மதித்தால் நீங்கள் சொல்லுகிறபடியே செய்வோம்'' என்றார். சமணர்களும் அவர்களுக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டதால் அதற்கு ஸம்மதித்தார்கள். உடனே அரசனும் 8000 கழுவு தயார் செய்யச்சொல்லி உத்தரவுகொடுத்தான். எல்லோரும் வைகையாற்றங் கரைசென்றார்கள். முன்போலவே ஒவ்வொருவரும் தம்தம் மந்திரங்கள் எழுதிய ஏட்டை நதியின் பிரவாஹத்திலெறிந்தார்கள். சமணர்களும் தங்களுக்குத்தெரிந்த ஜலஸ்தம்ப மந்திரத்தால் நதியின் பிரவாஹத்தை எவ்வளவோ தடுத்துப்பார்த்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. அவர்களுடைய ஏடுகளெல்லாம் கொடிப்பொழுதில் ஸமுத்ரம் போய்ச்சேர்ந்தன. ஞானஸம்பந்தரின் ஏடோவெனின் பிரவாஹத்தை யெதிர்த்துச்சென்றது. குலபந்தன மந்திரியானவர் அதைப்பின் தொடர்ந்துசென்று திருவேடகம் என்று சொல்லப்படு மிடத்தில் ஒரு பிராம்மணரூபமாய் வந்த ஈசுவரனால் எடுத்துக் கொடுக்கப்பெற்று அவ்வேட்டைத் திருப்பிக்கொண்டுவந்தார். அப்பொழுது ஞானஸம்பந்தர் அச்சமணர்களை நோக்கி "இப்பொழுதாவது நீங்கள் வேத நிந்தையை ஒழித்து விபூதி ருத்ராக்ஷமணிந்து பஞ்சாக்ஷர ஜபம் செய்வீர்களானால் உங்களை விட்டுவிடுகிறேன். இல்லாவிடில் கழுவிலேற வேண்டியது தான்'' என்றார். சமணர்களுள் முக்கியமானவர்கள் அவர் வார்த்தையைக் கேளாமையால் அரசனின் வேலையாட்களால் கழுவிலேற்றப்பட்டார்கள். உயிருக்குப் பயந்தவர்களெல்லாம் உடனே உடம்பு முழுமையும் விபூதியைப் பூசிக்கொண்டு ஞானஸம்பந்தரை சரணம் புகுந்தார்கள். இவ்வாறு சமணர்கள் பூண்டை வேரோடொழித்து விட்டு அரசனால் வெகுவாக ஸம்மானிக்கப்பட்டு எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு ஞானஸம்பந்தர் மதுரையை விட்டகன்று இதர க்ஷேத்ரங்களுக்குச்சென்றார். இந்த குப்ஜ பாண்டியன்தான் நெடுமாறநாயனார்; குலபந்தன மந்திரிதான் குலச்சிறைநாயனார்.

64. ஸாக்ஷியாகவிருந்த கிணறு, விருக்ஷம், லிங்கம் மூன்றையும் வரவழைத்தது.

காவேரிபபட்டணம் என்னும் ஊரில் சிறந்த சிவபக்தனான ஒரு வைசியன் இருந்தான். அவனுக்கு ஏராளமான ஸம்பத்திருந்தது. ஆனால் புத்ரபாக்யமில்லை. அநேகம் தானம் முதலியவைகள்செய்து கடைசியாக ஒரு புத்ரியைப்பெற்றான். அதை மிகவும் செல்வமாக வளர்த்துவந்தான். அப்புத்ரி பிறந்தது முதலே அவளையும் தனது ஆஸ்தி முழுமையையும் மதுரையில் தனது மருமகனுக்குக்கொடுப்பதாக ஸமீபத்திலுள்ள தனது பந்துக்களிடமெல்லாம் சொல்லிவந்தான். ஆனால் அப்பெண்ணுக்கு கல்யாணம் செய்வதற்கு முந்தியே அந்த வைசியனும் அவன் பத்னியும் காலகதி யடைந்துவிட்டார்கள். உடனே அங்குள்ளவர்கள் மதுரையிலிருந்த அவன் மருமகனுக்குக் கடிதமனுப்பி அவனைத் தருவித்து அந்த வைசியன் வெகுநாளாய் சொல்லிக்கொண்டிருந்ததை அவனிடம் சொல்லி அவனை அந்தப்பெண்ணையும் அந்த ஸொத்துக்களையும் எடுத்துப்போகும்படி சொன்னார்கள். அந்த மருமகனும் ஸொத்தையெல்லாம் எடுத்து தன் மனுஷ்யர்கள் மூலமாக மதுரைக்கு அனுப்பிவிட்டு தானும் அந்தப்பெண்ணும் இன்னும் சிலருமாக தினம் கொஞ்ச

தூரமாக நடந்து வந்தார்கள். வழியில் திருப்படறப்பயம் என்னும் க்ஷேத்திரத்தில் தங்கி ஸ்வாமி தர்சனம்செய்து அங்கு கோயிலிலிருந்த வன்னிமரத்தடியில் சமைத்து சாப்பிட்டு விட்டு அஸ்தமித்ததும் கோபுரவாசல் திண்ணையில் மருமகனும் உள் மண்டபத்தில் அந்தப் பெண்ணுமாகப் படுத்து நித்திரைசெய்தார்கள். அர்த்த ராத்திரியில் அந்த மருமகனை ஸர்ப்பம் தீண்டி அவன் இறந்துவிட்டான். உடனே அந்தப்பெண்ணும் கூட இருந்தவர்களும் கதறிக்கொண்டு அவ்வூரில் ஸர்ப்பத்தின் விஷத்தைப்போக்கடிக்க மந்திரம் தெரிந்தவர்கள் யாராகிலும் இருக்கிறார்களாவென்று கத்திக்கொண்டு அக்ரஹாரத்திற்கு வந்தார்கள். அப் பெண்ணினதிர்ஷ்டவசத்தால் அன்றயதினம் அந்த க்ஷேத்ரத்திற்கு ஞானஸம்பந்தர் ஸ்வாமிதர்சனத்திற்கு வந்திருந்தார். இவர்கள் அழுகைக்குரலைக் கேட்டதும் அவர் வெளியேவந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு கோபுரவாயிலையடைந்து இறந்துகிடந்த அந்த மருமகன் சரீரம் முழுமையும் தனது கையால் விபூதியை யெடுத்துத்தடவி ஈசுவரன் பேரில் பதிகம்பாடினார். உடனே அப்பையன் தூங்கி யெழுந்திருந்தவன்போல எழுந்தான். அவனைச் சேர்ந்தவர்களெல்லாம் ஸந்தோஷத்தால் அவனைக்கட்டியணைத்து ஆனந்தமடைந்தபொழுது அப்பெண் மட்டும் அவனைத்தொடவில்லை. அதென்ன விபரமென்று ஞானஸம்பந்தர் கேட்க அம்மருமகன் தனது மாமன் விருத்தாந்தத்தை சொல்லி தான் மதுரைபோய் பந்துக்கள் முன்னிலையில் அப்பெண்ணை பாணிக்ரஹணம்செய்து கொள்ள வெண்டுமென்றிருப்பதால் இன்னும் அப்பெண்ணைத் தொடவில்லையென்று சொன்னான். இதைக்கேட்ட ஞானஸம்பந்தர் அவனை அப்பெண்ணை உடனே அவ்வூரிலேயே விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்றுசொல்ல அம்மருமகன் அவர் சொல்வதைத்தான் தட்டக் கூடாதென்றும் ஆனால் அங்கேயே கல்யாணம் செய்துகொண்டால் ஊருக்குச்சென்றதும் கல்யாணத்துக்கு ஒருவரும் ஸாக்ஷி யில்லாததால் பின்னாடி விவாதங்களுக்கு இடமுண்டாகுமென்றும் அதற்காகத்தான் தயங்குவதாயும் சொன்னான். ஞானஸம்பந்தர் "நீ அதற்காகத் தயங்கவேண்டுவதில்லை. உனக்கு உயிர்ப் பிச்சைகொடுத்த இந்த க்ஷேத்ரத்திலுள்ள ஈசுவர லிங்கமும், வன்னிமரமும், இக்கிணறும், எப்பொழுது வேண்டுமானாலும் உனக்கு ஸாக்ஷிசொல்லும். நானிருக்கிறேன், என் முன்பாக விவாஹம் செய்துகொள்" என்றார். உடனே அவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அந்த மருமகன் அப்பெண்ணை அவ்வூரிலேயே விவாஹம் செய்துகொண்டு ஞானஸம்பந்தரால் ஆசீர்வதிக்கப்பெற்று அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மதுரைவந்து சேர்ந்தான். அவனுக்கு இதற்கு முன்னதாகவே ஒரு ஸம்ஸாரம் உண்டு. ஒருஸமயம் இந்த இரண்டு ஸம்ஸாரத்திற்கும் பிறந்த குழந்தைகளுக்குள் சச்சரவு ஏற்பட்டது. அப்பொழுது மூத்தவள் இளையவளைப்பார்த்து அவள் வேசியென்றும் அக்னிஸாக்ஷியாகக் கல்யாணமாகாதவளென்றும் ஏசினாள். இளையவள் தனக்குக் கல்யாணம் நடந்த விவரத்தையெல்லாம் சொல்லி ஈசுவரலிங்கமும், வன்னிமரமும், கிணறும் தனக்கு ஸாக்ஷியென்றும ஞானஸம்பந்தர் முன்னிலையில்தான் நடந்ததென்றும் என்னசொல்லியும் மூத்தவள் அதை நம்பாமல் பொய்யென்று மறுத்து விட்டாள். இளையவள் மிகவும் மனவருத்தம் கொண்டவளாய் அன்றிரவு தனது கணவனிடம் முறையிட்டாள். அவன் ஒன்றும் தோன்றாமல் பேசாமலிருந்தான். மறுநாட் காலையில் அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு கோயிலுக்குப்போய் பொற்றாமரையில் ஸ்நா

னம் செய்துவிட்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் கோயிலுக்குச்சென்று மூத்தாளால் தனக்கு நேர்ந்த அவமானங்களை யெல்லாம் ஈசுவரனிடம் முறையிட்டு ஞானஸம்பந்தர் சொன்ன வாக்குப் பிரகாரம் அந்த மூன்று ஸாக்ஷிகளையும் உடனே மதுரைக்கு வரவழைத்து மூத்தாளுக்கும் இதரர்களுக்கும தன் வார்த்தையை மெய்ப்பித்து தனது கணவனுக்கு தன்னை தர்மபத்னியாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்றும் இல்லாவிடில் தான் அங்கேயே பிராணனை யிழந்து விடுவதாகவும் ஈசுவரனிடம் தெரிவித்தாள். ஈசுவரனும் அவளிடம் மனமிரங்கி ஞானஸம்பந்தர் மாதிரியாகவே அவள் முன்வந்து இந்திர விமானத்துக்கு ஈசான்யதிக்கில் அந்தக்கிணறு, வன்னிமரம், ஈசுவரலிங்கம் மூன்றையும் தருவித்து எல்லோருக்கும் திருப்புறம்பயத்தில் நடந்த விஷயத்தையெல்லாம் எடுத்துச் சொல்லி மூத்தாளை யாவரும் நிந்திக்கும்படியாகச்செய்து விட்டு எல்லோரையும் அனுக்ரஹித்துவிட்டு அந்தர்த்தானமானார். இந்த அதிசயத்தைக் கண்டு மகிழாதவர்களில்லை. அந்த வைசிய மருமகனும் மூத்தாளை ஒதுக்கி வைத்துவிட்டு இளையாளுடன் ஸுகமாக இருந்தான். அந்த ஸாக்ஷிக்கிணறும், மாமும், ஸாக்ஷிநாதர் என்று சொல்லப்படும் லிங்கமும் இன்றும் மதுரை கோயில் பிராகாரத்தின் ஈசான்ய பாகத்தில் காணலாம்.

திருவிளையாடல் படங்கள்.

கேயிலின் உள்ளே அமைந்த பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிலுமுள்ள மண்டபங்களின் சுவர்களில் சுந்தரேசுவரர் செய்த இந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களின் சித்திரங்களும் வரையப்பட்டிருக்கக் காணலாம். 224-வது பக்கத்தில் இந்த சித்திரங்களின் ஒரு பாகத்தைப் படமெடுத்துப் பதிப்பித்திருக்கிறோம்.

சங்கம்.

வெகுகாலந் தொட்டு, இந்த ஊர் தமிழ்ப் பாஷையில் பாண்டித்தியம் வாய்ந்தவர்கள் சங்கம் கூடு மிடமெனப் பெயர் பெற்றிருந்தது. மதுரைத் தமிழ்ச் சங்கம் என்பதைக் கேள்விப்படாதவர்கள் மிகச்சிலரே. இச்சங்கத்தாருள் முக்யஸ்தர்களாகிய நக்கீரர், கபிலர், பாணர் இவர்கள் நாயன்மார்களில் பொய்யடிமை இல்லாத புலவர்களைச் சேர்ந்தவர்கள். இக்கூட்டத்தில் 51-வது லீலையில் சொல்லியபடி ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் ஒருவராகத் திருவிளையாடல் செய்தனர்.

கோயில் கட்டடங்கள்—ஆயிரக்கால் மண்டபம்.

சாஸ்திரோக்தமாய் அமைக்கப்பட்டுள்ள அழகிய ஆயிரக்கால் மண்டபமும் இங்கு விசேஷமானதெனக்கூறலாம். தஞ்சாவூரிலிருந்த வீரப்ப நாயகர் என்பவர் இங்கு வாதுங்கன், ஸ்ரீ வல்லபர்கள் ஆளுகையில் இங்குள்ள அழகிய கல்தூண் மண்டபத்தை கட்டி வைத்தது மாத்திரமேயன்றி, மீனாட்சியம்மனுக்கும் கற்கள் இழைத்த தங்கக் 'கவசம் செய்து அணிவித்தார் என்ற விஷயம் தெரிகிறது.

புது மண்டபம்.

ஸுந்தரேசுவரது கோயிலுக்கு எதிராக நூற்று ஐந்தடி நீளமும் முப்பத்து மூன்று அடி அகலமு முள்ளதோர் மண்டபம் அமைக்கப்பட்டுளது. அம்மண்டபத்திற்குப் புது மண்டபமென்று பெயர். இது அழகிய சிற்ப வேலைகளைக் கொண்டது. மற்றக் கட்டடங் களுக்குப் பிறகு அமைக்கப்பட்டதிலிருந்து இதற்குப் புதுமண்டபமென்ற பெயர் வாய்ந் ததுமன்னியில் வஸந்த காலத்தில் ஸ்வாமியும் அம்மனும் அங்குபோவதிலிருந்து அதற்கு 'வஸந்தமண்டபம்' என்ற பெயரும் இடப்பட்டிருக்கிறது. இந்த மண்டபத்தின் தூண் வரிசைகளுள் மத்தியிலுள்ள வரிசையில் பத்து மதுரை நாயக்க அரசர்களது உருவமும், அவர்களது மனைவிகளின் உருவங்களுடன் செதுக்கிவைக்கப்பட்டிருப்பது காணப்படும். இதில்தான் வெகு கியாதியுடன் இவ்வூரை ஆண்ட திருமலைநாயகருடைய சிலையும் இருந்து வருகிறது. வெளிவரிசைத் தூண்களில் சிவபிரானது பற்பல உருவங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அதில் ஒன்று ஸுந்திரேசுவரர் ஒரு தாய்ப்பன்றி உருவமாக மாறிப் பல பன்றிக்குட்டிகளைப் பால்கொடுத்துக் காப்பாற்றியது. இது ஈசுவரன் செய்த அறுபத்து னான்கு திருவிளையாடல்களுள் ஒன்று.

அஷ்டலக்ஷ்மி மண்டபம்.

அஷ்டலக்ஷ்மிகளையும் குறிக்கும் "அஷ்ட லக்ஷ்மி மண்டபம்" என்ற மண்டபம் இங்கு ஏற்பட்டிருத்தல் இன்னொரு விசேஷம் எனக் கூறலாம். இது ஸ்ரீ மீனாக்ஷியம்மன் ஸந்நிதி கோபுரவாசலில் உள்ளது.

காரைக்காலம்மை.

தனது உத்கிருஷ்டமான சிவபக்தியாலும் தவத்தினாலும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையது விசேஷ சிலை ஒன்றும் இங்குள் ளது. இவ்விடத்தில் தான் இவரது புருஷன் இவரிடம் மாமபழம பெற்ற அதிசயத்தி னால் இவரை நமஸ்கரித்ததும் அவ்வம்மை பின்னர் தமது அழகு வாய்ந்த மாம்ஸதே கத்தை வைத்திருப்பது அழகல்லவென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்தித்ததும் தனது தேகத்திலுள்ள மாம்ஸம் நீங்கப்பெற்று எலும்புடன் பேய் வடிவையடைந்தனர்.

மூர்த்தி நாயனார்.

இவ்விடத்திலிருந்த மூர்திநாயனார் என்னும் வைசியர் ஸுந்தரேசுவரருக்கு தினப்படி சந்தனக்காப்பு சாத்த சந்தனம் அறைத்துக் கொடுக்கும் தொண்டு செய்துவருகையில் கர் நாடகதேச அரசன் மதுரையை ஜயித்துத் தனது ஆளுகையில் ஜைன மதத்தைப் பரவச் செய்து இவரது கைங்கற்யத்திற்குச் சந்தனக்கட்டை கிடைக்காமலிருக்கச் செய்ததின் நிமித்தம் தனது வெருங்கையை அறைத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்தது கண்ட ஈஸ்வரன் அக்கர்நாடக ராஜன் திடீரென்று இறக்கவும், பட்டத்துயானை இவரையே அரச னாக்கி இவரால் சைவம் தழைந்தோங்கவும் செய்தார்.

நெடுமாற நாயனர்.

கூன்பாண்டிய னென்னும் பெயருடன் சோழ ராஜாவின் பெண்ணுகிய மங்கையர்க்கரசியை மணந்திருந்த பாண்டிய ராஜன் ஜைனமதத்தார் வசப்பட்டதும் ஸம்பந்தர் அவ்விடம் சென்று பல அற்புதச் செயல்களைச்செய்து இவரைத் திரும்பவும் சைவ மதத்திற்குத் திருப்பினர். இவர் தான் திருநெல்வேலி சென்று பல்லவராஜனுடன் சண்டை செய்து ஜயமடைந்தவர். இப் பல்லவராஜன் தான் வாதாபியைச் சிறுத்தொண்டர் உதவியால் வென்றதாகவும் பின்னர் இப்பாண்டியவரசனல் திருநெல்வேலியில் தோல்வி அடைந்ததாகவும் தெரிய வருகிறது. இந்தக் கூன்பாண்டியன் தான் நெடுமாற நாயனர் என்று வழங்குவது.

வண்டியூர்த் தெப்பக்குளம்.

கோயிலுக்குக் கிழக்கில் சுமார் மூன்றுமைல் தூரத்தில் ஆயிரம் அடி சதுரமுள்ள ஓர் அழகிய குளமும் அதன் மத்தியில் ஒரு சதுரமான தீவில் ஒரு சிறிய கோயிலும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வண்டியூர்த் தெப்பக்குளமென்று பெயர். இக்குளம் வைகை நதிக்கருகிலிருப்பதுடன் ஓர் கால்வாயினல் அந்நதியுடன் சேர்க்கவும் பட்டிருக்கிறது. இக்குளத்திற்கு மஹிமை ஏற்பட்டதற்குக் காரணம் திருமலைநாயக்கன் அரண்மனை கட்ட மண்தோண்டிய இவ்விடத்தில் தற்காலம் கோயிலுக்குள் இருக்கும் பெரிய விநாயகர் சிலை கண்டெடுக்கப்பட்டதாம். அச்சிலை அகப்பட்ட அவ்விடத்தில் மேற்கூறியுள்ள திருக்குளம் அமைத்து அதில் தெப்ப உத்ஸவம் நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் படம் 210, 214, 215, 226 பக்கங்களில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

கூடல் அழகர் கோயில்.

இங்குள்ள விஷ்ணு கோயிலுக்குக் கூடல் அழகர் கோயிலென்று பெயர். கூடல் என்பது மதுரைமா நகருக்குப் புராதனப் பெயர். இவ்விடத்தில் மீனுட்சி அம்மனுக்கும் ஸுந்தரேசுவரருக்கும் பாணிக்கிரகணம் பங்குனி உத்தரத் தன்று செய்யப்பட்டதால் தாரைவார்க்க மஹாவிஷ்ணுவும் அந்த ஸமயம் தோன்றலாயினர். இக்கூடலழகர் கோயில் எல்லா ஸ்தலங்களிலும் விஷ்ணு கோயில் ஏற்படுவதுபோல் இவ்வூரில் மேற்குத்திக்கில் அமையப்பெற் றிருக்கிறது. இக்கோயிலின் விமானத்திற்கு அஷ்டாங்க விமானமென்று பெயர். இது அழகான சில்ப வேலைப்பாடுடையது.

ஆனை மலை.

தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு யானையினது உருவம்போல் அமையப்பெற்றிருக்கும் பெருமை வாய்ந்த இந்த மலை மதுரையின் வடகிழக்கில் ஆறுமைல் தூரத்தில் இருக்கிறது. இம்மலை இம்மாதிரி யானை உருவமாய் இவ்விடம் ஏற்பட்டிருப்பது திருவிளையாடல்களுள் ஒன்று (22). காஞ்சியிலிருந்துவந்து பாண்டிய ராஜனை எதிர்த்த ஜைன மதத்தினனை பல்லவராஜன் ஒரு யானையை அனுப்பி மதுரையை அழிக்கவிட அதனை ஸ்ரீ ஸுந்தரேசுவரர் நாஸிம்மரூபம்கொண்ட பாணம்விட்டுக்கொன்று கல்லாகத் தோன்றச்

செய்தார். இப்பொழுதும் இதன் நிமித்தம் இம்மலை வடக்கில் குகைக்கோயில் ஏற்பட்டு அதில் நரஸிம்மசுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பூசிக்கப்பட்டு வருகிறார். இம்மூர்த்தி கலியுகம் 3873 (கி. பி. 700-ல்) ஏற்படுத்தப்பட்டதாக சிலாசாஸனம் இருந்துவருகிறது. மேலும் இக்கோயிலிலுள்ள முதலாவது பராந்தகன் காலத்தில் அதாவது (கி. பி. 907-ல்) ஏற்பட்ட சாஸனத்திலிருந்து இந்த கிராமத்திற்கு அப்பொழுதே நரசிங்கம் எனப் பெயர் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவருவது மன்னியில்கலியனேரி என்னும் குளமும் அப்பொழுது வெட்டப்பட்டதாம்.

நீலகண்டதீக்ஷிதர்.

இவர் மிகவும் பிரஸித்திபெற்ற அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் சகோதாரான ஆச்சா தீக்ஷிதரின் பேரன். பதினேழாம் நூற்றாண்டின் முற்பாகத்தில் இருந்தார். இவரும் ஒரு பெரிய வித்வான். அநேகம் கிரந்தங்கள் எழுதியிருக்கிறார். இவர் மதுரையில் திருமலை நாயக்கனிடத்தில் வெகுகாலம் மந்திரியாக இருந்தார். அப்பொழுது ஒருஸமயம் திருமலை நாயக்கன் தன்னைப்போலவும், தன்னுடைய பத்னியைப்போலவும் இரண்டு சிலை உருவங்கள்செய்து கையில் தீபம் ஏந்திக்கொண்டிருக்கும் மாதிரியாக ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர் ஸன்னதியில் வைக்கவேண்டுமென்று நீலகண்டதீக்ஷிதரிடம் சொன்னான். உடனே நீலகண்டதீக்ஷிதரும் சில்பவேலைக்காரனைத் தருவித்து அந்த மாதிரியே இரண்டு சிலைரூபங்கள் செய்யும்படி உத்திரவிட்டார். சில்பவேலைக்காரனும் திருமலை நாயக்கனின் சிலையை சீக்கிரத்தில் செய்துவிட்டான். அவன் பத்னியின் சிலை செய்யும்பொழுது அந்த உருவத்தின் அடித்துடையில் ஒரு பள்ளம் ஏற்பட்டுவிட்டது. உடனே அதைத் தள்ளிவிட்டு வேறொரு சிலை எடுத்து உருவம் செய்தான். அதிலும் அவ்வாறே பள்ளம் ஏற்பட்டுவிட்டது. மறுபடியும் வேறொரு கல் எடுத்தான். இந்த மாதிரியாக எவ்வளவு கற்கள் எடுத்து செய்த போதிலும், ஒவ்வொன்றிலும் அந்தப் பள்ளம் காணப்பட்டது. அதனால் அந்த சில்பவேலைக்காரன் ஒன்றும் தோன்றாதவனாய் இன்னது செய்வது என்று தெரியாமல் தவித்து நின்றான். ஒருநாள் திருமலைநாயக்கன் தீக்ஷிதரைக் கூப்பிட்டு சிலை உருவங்கள் ஆய்விட்டனவா என்று கேட்க, தீக்ஷிதரும் போய்ப் பார்த்து வருவதாகச்சொல்லி சில்ப வேலைக்காரன் வீட்டுக்குச்சென்றார். இவரைக் கண்டதும் சில்ப வேலைக்காரன் பிரதக்ஷிணம் பண்ணி நமஸ்காரம் செய்து "ஸ்வாமின், நாயகருடைய சிலை மிகவும் நன்றாக அமைந்துவிட்டது. அவர் பத்னியின் சிலையை எவ்வளவுதரம் செய்தபோதிலும் அடித்துடையில் ஒரு பள்ளம்விழுகிறது. அதனால் எனக்கு என்னசெய்வது என்று தோன்றவில்லை. தாங்கள் எப்படி உத்திரவுகொடுக்கிறீர்களோ அப்படி செய்கிறேன்" என்று சொல்லி தான்செய்த உருவங்களை யெல்லாம காண்பித்தான். அவைகளை எல்லாம் பார்த்துவிட்டு தீக்ஷிதர் சற்றுநேரம் தியானத்திலிருந்தார். உடனே அந்த சில்ப வேலைக்காரனை நோக்கி "அப்பா, நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம், அந்த அம்மாளுக்கு அடித்துடையில் அப்படித் தானிருக்கிறது; ஆதலால் அதைப்பற்றி நீ கவனியாமல், நீ செய்திருக்கிற உருவங்களில் நல்லதாக எடுத்து வைத்துவிடு. நாளை பிரதிஷ்டை செய்துவிடலாம்" என்று சொல்லிவிட்டு திருமலைநாயக்கனிடம்போய் உருவங்கள் தயாராய் இருக்கின்றனவென்றும்

மறுநாள் பிரதிஷ்டைசெய்து விடலாமென்றும் சொன்னார். அவ்வாறே மறுநாள் அச்சிலை உருவங்கள் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன திருமலைநாயக்கனும அவன் பத்னியைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்குச்சென்று அவ்வுருவங்களை நன்ருக கவனித்துப் பார்த்தான். தனது பதனியின் அடித்துடையில் பள்ளமிருப்பதைக் கண்டதும் அந்த சில்ப வேலைக்காரனைக் கூட்டிவரச்சொல்லி கோபித்துக்கொண்டான். அதற்கவன தான் அனேக உருவங்கள் செய்ததாகவும், எல்லாவற்றிலும் அந்தப் பள்ளம் காணப்பட்டதாகவும் பிறகு நீலகண்டதீக்ஷிதர் வந்து அந்த அம்மாளுக்கு அப்படியே இருக்கிறதாகவும அதனுல் அந்த சிலையையே வைக்கும்படி உத்திரவு கொடுத்ததின் பேரில் தான் அப்படிச் செய்ததாகவும் சொன்னுன். இதைக்கேட்ட திருமலைநாயக்கன் தனது பத்னியை நோக்க அவள் தனக்கு அதுமாதிரியே இருப்பதாக ஒப்புக்கொண்டாள். உடனே அது நீலகண்டதீக்ஷிதருக்கு எவ்வாறு தெரிந்ததென்று தீக்ஷிதரிடம் கோபங்கொண்டவனுய் தனது வேலையாட்களைக் கூப்பிட்டு உடனே போய் தீக்ஷிதரின் கண்களைப் பிடுங்கிவிட்டு வரும்படி கட்டளையிட்டான். அவ்வேலையாட்கள் தீக்ஷிதரின் வீட்டிற்கு வருமபோழுது தீக்ஷிதர் பூஜையிலிருந்தார். இவ்வாறு வேலையாட்கள் வாசலில் வந்திருக்கிறதாக தீக்ஷிதரிடம் தெரிவிக்கவே அவர் ஞானதிருஷ்டியால் அவன்கள் வந்திருக்கும் காரியத்தை தெரிந்துகொண்டு ஈசுவரனுக்கு பூஜை முடிந்து கர்ப்பூரஹார்த்தி ஆனவுடன் அவ்வெரிந்து கொண்டிருக்கும் கர்ப்பூரத்தை தானே தன் கண்களில் போட்டுக்கொண்டு தனது திருஷ்டியைப் போக்கிக்கொண்டார். பிறகு பூஜையிலிருந்து வாசலில்வந்து அவ்வாட்களைக் கண்டு "உங்கள் நாயக்கன் உங்களிடம் சொல்லி அனுப்பிய காரியதலைத நாமே முடித்துக்கொண்டு விட்டோம். நமது கண்களைப் போக்கிக்கொண்டோம். இதை அந்த அவிவேகியிடம் போய் தெரிவித்துவிடுங்கள். இனி நாம் அவனைப் பார்க்கமாட்டோம்" என்று சொல்லி மடிசஞ்சிகையை எடுத்துக்கொண்டு பத்னியை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்ருர். அங்கே மீனுக்ஷியம்மன் ஸன்னிதியில் நின்றுகொண்டு "ஆனந்தஸாகாஸ்தவம்" என்று சொல்லப்படும் மிக அத்புதமான ஸ்தோத்ரத்தைச் சொன்னார். அதில் அம்பாளைப்பார்த்து "அம்மா, நான் ஸதாஸர்வகாலமும் உன்னை தியானம செய்வதிலும் உன்னுடைய திவ்ய ரூபத்தை கண்குளிர பார்ப்பதிலும் உன்னை ஸ்தோத்திரம் செய்வதிலும் இது முதலான ஆனந்தக் கடலில் மூழ்கினவனுய் இவ்வளவு நாள் ஆயிற்றென்பது தோனுமல முப்பது வருஷமாகக் காலங்கழித்து வந்தேன். இந்த முட்டாளான திருமலைநாயக்கவாசன் விவேகமின்மையால் என்னிடம் ஸந்தேகம்கொண்டு என் கண்களைப் பிடுங்க யத்தனித்தான். நான் உன்னைத்தவிர வேறொருவனுக்கும் கட்டுப்பட்டவனில்லாமையால் நானுகவே என் கண்களைப் போக்கிக்கொண்டுவிட்டேன். இனி எந்தக் கண்களால் உன்னுடைய திவ்ய ரூபத்தை தரிசிப்பேன்" என்று உருக்கமாகச்சொன்னதும் அம்பாள் பரமகருணையுடன் அவருக்குப் பிரஸன்னையாகி அவருக்கு திருஷ்டியைக்கொடுத்து அனுக்ரஹித்தாள். பிறகு மிகவும் நேர்த்தியாக அம்பாளை ஸ்தோத்தரித்துவிட்டு ஸ்ரீஸுந்தரேசுவரரையும் தர்சனம பண்ணி ஸ்தோத்ரம் செய்துவிட்டு ஸம்ஸாரத்துடன் தனது ஊரை நோக்கித் திரும்பினுர். இவ்வத்புதங்களை எல்லாம் கேள்விப்பட்டு திருமலைநாயக்கன் இவரிடம்வந்து நமஸ்கரித்து தான் செய்ததெல்லாம் தவறு என்றும் அவர் மதுரையை விட்டுப்போகாமல் தன்னிடமே இருக்

கவேண்டுமென்றும் எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவனை நிக்கரித்துவிட்டு தனது ஊர்போய்ச் சேர்ந்தார்.

சிலாசாஸனம்.

இவ்விடத்திலுள்ள சிலாசாஸனங்களிலிருந்து பல விஷயங்கள் வெளியாகின்றன. சகம் 1501-ல் ராமநாதபுரம் சிமையிலிருந்து அரண்மனைக்கு முதலில் வெற்றிலைபாக்கு கொண்டுவரும் சேடர்களுக்குத் தீர்வை வஜா செய்யப்பட்டது, வரி நீக்கிய கிராமங்களிலிருந்து தீர்வை கேட்டதற்காகக் கோயில் பட்டர்கள் சகம் 1632-ல் விஜயரங்க சொக்கநாதர் ஆக்ஷியில் கிழண்டை கோபுரத்திலிருந்து விழுந்து உயிரைவிட யத்தனித்தது, கம்பத்தடி மண்டபம் சகம் 1505-ல் வீரப்ப நாயக்கன் காலத்தில் கட்டப்பட்ட விவரம், கூடல் அழகர் விஷ்ணுகோயில் கர்ப்பகிருஹம் அர்த்த மண்டபம் இவைகளுக்குக் கருங்கல் கந்தாடை கோனம்மனால் எல்லப்ப நாயக்கன் காலத்தில் சேகரிக்கப்பட்டது, ஆனைமலையில் நரசிங்கப் பெருமாள் கோயில் சமீபத்தில் கலியனேரி என்னும் குளம் சோழராஜாவாகிய முதலாவது பராந்தகன் (கி. பி. 906-947) 33-வது வருஷ ஆளுகையில் வெட்டப்பட்டது.

॥ श्रीः ॥

॥ मीनाक्षीपञ्चरत्नम् ॥

उद्यद्भानुसहस्रकोटिसदृशां केयूरहारोज्ज्वलां
बिम्बोष्ठीं स्मितदन्तपङ्क्तिरुचिरां पीताम्बरालंकृताम् ।
विष्णुब्रह्मसुरेन्द्रसेवितपदां तत्त्वस्वरूपां शिवां
मीनाक्षीं प्रणतोऽस्मि संततमहं कारुण्यवारांनिधिम् ॥ १ ॥

मुक्ताहारलसत्किरीटरुचिरां पूर्णेन्दुवक्त्रप्रभां
शिञ्जन्नूपुरकिंकिणीमणिधरां पद्मप्रभाभासुराम् ।
सर्वाभीष्टफलप्रदां गिरिसुतां वाणीरमासेवितां
मीनाक्षीं प्रणतोऽस्मि संततमहं कारुण्यवारांनिधिम् ॥ २ ॥

श्रीविद्यां शिववामभागनिलयां ह्रींकारमन्त्रोज्ज्वलां
श्रीचक्राङ्कितबिन्दुमध्यवसतिं श्रीमत्सभानायकीम् ।

श्रीमत्षण्मुखविघ्नराजजननीं श्रीमज्जगन्मोहिनीं
मीनाक्षीं प्रणतोऽस्मि संततमहं कारुण्यवारांनिधिम् ॥ ३ ॥

श्रीमत्सुन्दरनायकीं भयहरां ज्ञानप्रदां निर्मलां
श्यामाभां कमलासनार्चितपदां नारायणस्यानुजाम् ।
वीणावेणुमृदङ्गवाद्यरसिकां नानाविधाडम्बिकां
मीनाक्षीं प्रणतोऽस्मि संततमहं कारुण्यवारांनिधिम् ॥ ४ ॥

नानायोगिमुनीन्द्रहृन्निवसतीं नानार्थसिद्धिप्रदां
नानापुष्पविराजिताङ्घ्रियुगलां नारायणेनार्चिताम् ।
नादब्रह्ममयीं परात्परतरां नानार्थतत्त्वात्मिकां
मीनाक्षीं प्रणतोऽस्मि संततमहं कारुण्यवारांनिधिम् ॥ ५ ॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यस्य श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्यस्य
श्रीमच्छंकरभगवतः कृतौ मीनाक्षीपञ्चरत्नं संपूर्णम् ॥

॥ श्रीः ॥

॥ मीनाक्षीस्तोत्रम् ॥

श्रीविद्ये शिववामभागनिलये श्रीराजराजार्चिते
श्रीनाथादिगुरुस्वरूपविभवे चिन्तामणीपीठिके ।
श्रीवाणीगिरिजानुताङ्घ्रिकमले श्रीशांभवि श्रीशिवे
मध्याह्ने मलयध्वजाधिपसुते मां पाहि मीनाम्बिके ॥ १ ॥

चक्रस्थेऽचपले चराचरजगन्नाथे जगत्पूजिते
आर्तालीवरदे नताभयकरे वक्षोजभारान्विते ।

विद्ये वेदकलापमौलिविदिते विद्युल्लताविग्रहे
मातः पूर्णसुधारसार्द्रहृदये मां पाहि मीनाम्बिके ॥ २ ॥

कोटीराङ्गदरत्नकुण्डलधरे कोदण्डबाणाञ्चिते
कोकाकारकुचद्वयोपरिलसत्प्रालम्बहाराञ्चिते ।
शिञ्जन्नूपुरपादसारसमणीश्रीपादुकालंकृते
मद्दारिद्र्यभुजंगगारुडखगे मां पाहि मीनाम्बिके ॥ ३ ॥

ब्रह्मेशाच्युतगीयमानचरिते प्रेतासनान्तस्थिते
पाशोदङ्कुशचापबाणकलिते बालेन्दुचूडाञ्चिते ।
बाले बालकुरङ्गलोलनयने बालार्ककोट्युज्ज्वले
मुद्राराधितदैवते मुनिसुते मां पाहि मीनाम्बिके ॥ ४ ॥

गन्धर्वामरयक्षपन्नगनुते गङ्गाधरालिङ्गिते
गायत्रीगरुडासने कमलजे सुश्यामले सुस्थिते ।
खातीते खलदारुपावकशिखे खद्योतकोट्युज्ज्वले
मन्त्राराधितदैवते मुनिसुते मां पाहि मीनाम्बिके ॥ ५ ॥

नादे नारदतुम्बुराद्यविनुते नादान्तनादात्मिके
नित्ये नीललतात्मिके निरुपमे नीवारशूकोपमे ।
कान्ते कामकले कदम्बनिलये कामेश्वराङ्कस्थिते
मद्विद्ये मदभीष्टकल्पलतिके मां पाहि मीनाम्बिके ॥ ६ ॥

वीणानादनिमीलितार्धनयने विस्रस्तचूलीभरे
ताम्बूलारुणपल्लवाधरयुते ताटङ्कहारान्विते ।
श्यामे चन्द्रकलावतंसकलिते कस्तूरिकाफालिके
पूर्णे पूर्णकलाभिरामवदने मां पाहि मीनाम्बिके ॥ ७ ॥

शब्दब्रह्ममयी चराचरमयी ज्योतिर्मयी वाङ्मयी
नित्यानन्दमयी निरञ्जनमयी तत्त्वंमयी चिन्मयी ।
तत्त्वातीतमयी परात्परमयी मायामयी श्रीमयी
सर्वैश्वर्यमयी सदाशिवमयी मां पाहि मीनाम्बिके ॥ ८ ॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यस्य श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्यस्य
श्रीमच्छंकरभगवतः कृतौ मीनाक्षीस्तोत्रं संपूर्णम् ॥

தேவாரப் பாடல்கள்.

திருஞானஸம்பந்தஸ்வாமிகளருளிச்செய்தது:—

முதல் திருமுறை—திருவிருக்குக்குறள்—பண்—குறிஞ்சி.

நீலமாமிடற், றாலவாயிலான், பாலதாயினர், ஞாலமாள்வரே. 1
ஞாலமேழுமா, மாலவாயிலார், சீலமேசொலீர், காலன்வீடவே. 2
ஆலநீழலா, ராலவாயிலார், காலகாலனார், பாலதாமினே. 3
அந்தமில்புக, ழெந்தையாலவாய், பந்தியார்கழல், சிந்தைசெய்மினே. 4
ஆடலேற்றினான், கூடலாலவாய், பாடியேமனம், நாடிவாழ்மினே. 5
அண்ணலாலவாய், நண்ணினான்றனை, யெண்ணியேதொழத், திண்ணமின்பமே. 6
அம்பொனாலவாய், நம்பொனார்கழல், நம்பிவாழ்பவர், துன்பம்வீடுமே. 7
அரக்கனார்வலி, நெருக்கனாலவா, புரைக்குமுள்ளத்தார்க், கிரக்கமுண்மையே. 8
அருவனாலவாய், மருவினான்றனை, யிருவரேத்தநின், றுருவமோங்குமே. 9
ஆரநாகமாஞ், சீரனாலவாய்த், தேரமண்செற்ற, வீரனென்பரே. 10
அடிகளாலவாய்ப், படிகொள்சம்பந்தன், முடிவிலின்றமிழ், செடிகணீக்குமே. 11

இரண்டாம் திருமுறை—திருநீற்றுப்பதிகம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே. 1
வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. 2
முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. 3
காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே 4
பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகொடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான்றிருநீறே 5

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்
திருநீறே. 6

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. 7

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. 8

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு வாலமுதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடாக் கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு வண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிரு
நீறே. 10

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றனைப் போற்றிப்புகலிநிலாவுபூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச் சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்
தாமே. 11

மூன்றும் திருமுறை—பண்—கோல்லி.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லலசே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 1

ஆகமத்தொடுமந்திரங்களமைத்தசங்கதபங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 2

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 3

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 4

கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 5

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா

வணகர்திபர்மதுபொழிர்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 6

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலமெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியனாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 7

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனார்மிகைசெற்றதீப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 8

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவத்தையினார்கள்போரலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாயசகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 9

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாதநற்சேவடி
யெங்கணாயகனேத்தொழிந்திடுக்கேமடுத்தொருபொய்த்தவம்
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 10

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுறைப்பவர்க்கிடரில்லையே. 11

மூன்றாம் திருமுறை—பண்—கௌசிகம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட, னாட்டமூன்றுடையாயுரைசெய்வனான்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை, யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. 1

மத்தயானையினீருரிமூடிய, வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண், சித்தரையழிக்கத்திருவுள்ளமே. 2

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந், திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாகியபேயமண், டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. 3

ஓதியோத்தறியாவமணாதரை, வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே, நீதியாகநினைத்தருள்செய்திடே. 4

வையமார்புகழாயடியார்தொழுஞ், செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப், பையவாதுசெயத்திருவுள்ளமே. 5

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய, தேரலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச், சீறிவாதுசெயத்திருவுள்ளமே. 6

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழுந், தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கையரைவாதினிற், செண்டடித்துழறத்திருவுள்ளமே. 7

அரக்கன்றன்கிறியேற்றவன்றன்முடிச், செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக், கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. 8

மாலுநான்முகனும்மறியாநெறி, யாலவாயுறையுமண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரை, சாலவாதுசெயத்திருவுள்ளமே. 9

கழிக்கரைப்படுமீன்கவர்வாசம, ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய், மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. 10

செந்தெனாமுரலுந்திருவாலவாய், மைந்தனேயென்றவல்லமணாசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம், பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. 11

பண்—கௌசிகம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய, வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர், பையவேசென்றுபாண்டியற்காகவே. 1

சித்தனேதிருவாலவாய்மேவிய, வத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர், பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. 2

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச், சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர், பக்கமேசென்றுபாண்டியற்காகவே. 3

சிட்டனேதிருவாலவாய்மேவிய, வட்டமூர்த்தியனேயஞ்சலென்றருள்
துட்டராமமணர்கொளுவுஞ்சுடர், பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. 4

நண்ணலார்புரமூன்றெரியாலவா, யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
எண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர், பண்ணியற்றழிப்பாண்டியற்காகவே. 5

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு, மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர், பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. 6

செங்கண்வெள்விடையார்திருவாலவா, யங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல், பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. 7

தூர்த்தன்வீயர்தொலைத்தருளாலவா, யார்த்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர், பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. 8

தாவினாயன்றானறியாவகை, மேவினாய்திருவாலவாயாயரு
ளேவிலாவமணர்கொளுவுஞ்சுடர், பாவினான்றென்னன்பாண்டியற்காகவே. 9

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய, வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர், பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே 10

அப்பனாலவாயாதியருளினால், வெப்பர்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ், செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. 11

திருவிராகம்—பண்—கௌசிகம்,

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற், பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற், கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. 1

பட்டிசைத்தவல்குலாள்பாவையாளோர்பாகமா, வொட்டிசைந்ததன்றியும்முச்சியானொ
ருத்தியாக்
கொட்டிசைத்தவாடலாய்கூடலாலவாயிலா, யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே 2

குற்றநீ குணங்கணீ கூடலாலவாயிலாய், சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீ யருத்தமின்பமென்றிவை, முற்றநீ புகழ்ந்துமுன்னுரைப்பதென்முகமனே. 3

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீ முழங்கழ, லதிரவீசியாடுவாயழகனீ புயங்கனீ
மதுரநீ மணாளனீ மதுரையாலவாயிலாய், சதுரனீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. 4

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய், பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனே நின்னையன்றி நித்தலுஞ், சீலமாயசிந்தையிற்றேர்வதில்லை தேவரே. 5

பொன்றயங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை, பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய், நின்றையங்கியாடலேநினைப்பதென்னியமமே. 6

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே, சோதியந்தமாயினாய்சோதியுள்ளோர்சோதியாய்
வேதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா, லோதிவந்தவாய்மையாலுணர்ந்துரைக்கலாகுமே 7

கறையிலங்குகண்டனே கருத்திலாக்கருங்கடற், றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய், நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. 8

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறும, கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
நீவணம்மலர்மிசைத்திசைமுகன்னுமாலுநின், றாவணமளக்கிலார்துளக்கமெய்துவார்களே. 9

தேற்றமில்வினைத்தெழிற்றேரருஞ்சமணரும், போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுண்ணியங்
கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய், நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்ன
நன்மையே. 10

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான், பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
யாலசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத், தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாய
தேவரே. 11

திருப்பாசுரம்—பண்—கௌசிகம்.

வாழ்கவந்தணர்வானவரானினம், வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே, சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. 1

அரியகாட்சியராய்த்தமதங்கைசே, ரெரியரேறுகந்தேறுவர்கண்டமுங்
கரியர்காடுறைவாழ்க்கையராயினும், பெரியராரறிவாரவர்பெற்றியே. 2

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே, தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா, வெந்தையாரவரெவ்வகையார்கொலோ. 3

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்புங், கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை, தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். 4

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச், சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின், சாதுக்கண்மிக்கீரிறையேவந்துசார்மின்களே. 5

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம், பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டீராகி, னாடுந்திறத்தார்க்கருளல்லதுகாட்டலாமே 6

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல,படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி, யடிசேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டு
மன்றே.

வேதம்முதல்வன்முதலாகவிளங்கிவையம், மேதப்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த, சூதன்னொலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே. 8

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப், போராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப், போராழியீந்தபுகழும்புகழுற்றதன்றே. 9

மாலாயவனும்மறைவல்லநான்முகனும், பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்கடைந்தார்க்கரிதாயெழுந்த, வாலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே. 10

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினானும், தெற்றென்றுதெய்வந்தெளியார்கரைக்கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங்கெதிர்விரவும்பண்புநோக்கிற், பெற்றென்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே. 11

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல, வெல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும், வல்லார்கள்வானோருலகாளவும்வல்லான்றே 12

ஈரலடிமேல்வைப்பு.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ, லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 1

வைதிகத்தின்வழியொழுகாதவக், கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே, மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 2

மறைவழக்கமிலாதமாபாவிகள், பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே, மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 3

அறுத்தவங்கமாயினநீர்மையைக், கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே, முறித்தவான்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 4

அந்தணாளர்புரியுமருமறை, சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெயத்திருவுள்ளமே, வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 5

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி, மூட்டுச்சிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே, காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 6

அழலதோம்புமருமறையோர்திறம், விழலதென்னுமருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே, தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 7

நீற்றுமேனியராயினர்மேலுற்ற, காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே, யாற்றவானரக்கர்க்குமருளினாய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 8

நீலமேனியமணர்திறத்துநின், சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர், கோலமேனியதாகியகுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 9

அன்றுமுப்புரஞ்செற்றவழகநின், றுன்றுபொற்கழல்பேணுவருகரைத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே, கன்றுசாக்கியர்காணுத்தலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 10

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு, வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப், பாடல்வல்லவர்பாக்கியவாளரே. 11

பண்—திருஇயமகம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. 1

பாதியாயுடன்கொண்டதுமாலையேபாம்புதார்மலர்க்கொன்றைநன்மாலையே
கோதினீறதுபூசிடுமாகனேகொண்டநற்கையின்மானிடமாகனே
நாதனாடொறுமாடுவதானையேநாடியன்றுரிசெய்ததுமானையே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலநல்வாயிலே. 2

காடுநீடதுறப்பலகத்தனேகாதலானினைவார்தமகத்தனே
பாடுபேயொடுபூதமசிக்கவேபல்பிணத்தசைநாடியசிக்கவே
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழநாளுமிருப்பனே
யாடநீள்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. 3

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதவில்லவர்தம்மையிழித்தியே
பண்டநாயகனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. 4

சென்றுதாதையுகுத்தனன்பாலையேசீறியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலையேவீடவெட்டிடக்கண்டுமுன்காலையே
நின்றமாணியையோடினகங்கையானிலவமல்கியுதித்தனகங்கையா
லன்றுநின்னுருவாகத்தடவியேயாலவாயரனாகத்தடவியே. 5

நக்கமேகுவர்நாடுமோரூருமேநாதன்மேனியின்மாசுணமூறுமே
தக்கபூமனைசுத்தக்கருளொடேதாரமுய்த்ததுபாணற்கருளொடே
மிக்கதென்னவன்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
யக்கினாரமுதுண்கலனோடுமேயாலவாயரனுமையோடுமே. 6

வெய்யவன்பல்லுகுத்ததுகுட்டியேவெங்கண்மாசுணங்கையதுகுட்டியே
ஐயனேயனலாடியமெய்யனேயன்பினானினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டதுகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
ஐயமேற்பதுரைப்பதுவீணையேயாலவாயரன்கையதுவீணையே. 7

தோள்கள்பத்தொடுபத்துமயக்கியேதொக்கதேவர்செருக்கையமைக்கியே
வாளரக்கனிலத்துகளித்துமேவந்தமால்வரைகண்டுகளித்துமே
நீள்பொருப்பையெடுத்தவுன்மத்தனேநின்விரற்றலையான்மதமத்தனே
யாளுமாதிமுறித்ததுமெய்கொலோவாலவாயரனுய்த்ததுமெய்கொலோ. 8

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிநேடிடமாலொடே
துங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே
செங்கயற்கணினாரிடுபிச்சையேசென்றுகொண்டுரைசெய்வதுபிச்சையே
யங்கியைத்திகழ்விப்பதிடக்கையேயாலவாயரனாரதிடக்கையே. 9

தேரரோடமணர்க்குநல்காளையேதேவர்நாடொறுஞ்சேர்வதுகாளையே
கோரமட்டதுபுண்டரிகத்தையேகொண்டநீள்கழல்புண்டரிகத்தையே
நேரிலூர்களழித்ததுநாகமேநீள்சடைத்திகழ்கின்றவுநாகமே
யாரமாகவுகந்ததுமென்பதேயாலவாயரனாரிடமென்பதே. 10

ஈனஞானிகடம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானஸம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்தனே
நானுரைத்தனசெந்தமிழ்ப்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்ப்பத்துமே. 11

பண்—புறநீர்மை.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. 1

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. 2

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பரம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 3

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவன்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 4

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 5

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்

கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 6

முத்தின்றாள்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுதன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனுருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 7

நாவணங்கியல்வாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்வாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வேவணங்கியல்வாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 8

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 9

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறியின்கணெறியிடைவாரா
வண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. 10

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுள்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. 11

திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்தது:—

நான்காந்திருமுறை—திருநேரிசை.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்குநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடும்
ஆதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 1

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ணம்
அன்பனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 2

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய்பேரமுதின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாயாளும்வல்வினைகடீர்க்கும்
அருமருந்தாலவாயிலப்பனேயருள்செயாயே. 3

செய்யநின்கமலபாதஞ்சேருமாதேவர்தேவே
மையணிகண்டத்தானேமான்மறிமழுவொன்றேந்து

சைவனேசாலஞானங்கற்றறிவிலாதநாயேன்
ஐயனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 4

வெண்டலைகையிலேந்திமிகவூர்பலிகொண்டென்று
முண்டதுமில்லைசொல்லிலுண்டதுநஞ்சுதன்னைப்
பண்டுனைநினையமாட்டாப்பளகனேனுளமதார
அண்டனேயாலவாயிலப்பனே அருள்செயாயே. 5

எஞ்சலில்புகலிதென்றென்றேத்திநானேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றிமலரடிகாணும்வண்ண
நஞ்சினைமிடற்றில்வைத்தநற்பொருட்பதமேநாயேற்
கஞ்சலென்றாலவாயிலப்பனேயருள்செயாயே. 6

வழுவிலாதுன்னைவாழ்த்திவழிபடுந்தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத்தெண்டிரைநஞ்சமுண்ட
குழகனேகோலவில்லிகூத்தனேமாத்தாயுள்ள
அழகனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 7

நறுமலர்நீறுங்கொண்டுநாடோறுமேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத்திருவடிசேரும்வண்ண
மறிகடல்வண்ணன்பாகாமாமறையங்கமாறும்
அறிவனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 8

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பந்தர்செய்த
சிலந்தியையரசதாளவருளினையென்றுதிண்ணங்
கலந்துடன்வந்துநின்றான்கருதிநான்காண்பதாக
அலந்தனனாலவாயிலப்பனேயருள்செயாயே. 9

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புக்கியொன்றிப்
பிடித்துநின்றாள்களென்றும்பிதற்றிநானிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோன்
அடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 10

ஆறாம் திருமுறை—திருத்தாண்டகம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றிமுதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும் வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத்
துளைத்தானைசுடுசரத்தாற்றுவளநீறாத் தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்,
திளைத்தானைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 1

விண்ணுலகின்மேலார்கண்மேலான்றன்னை மேலாடுபுரமூன்றும்பொடிசெய்தானைப்
பண்ணிலவுபைம்பொழில்சூழ்பழனத்தானைப் பசும்பொன்னிறத்தானைப்பானீற்றானை
யுண்ணிலவுசடைக்கற்றைக்கங்கையாளைக்கரந்துமையோடுடனாகியிருந்தான்றன்னைத்
தெண்ணிலவுதென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 2

நீர்த்திரளைநீள்சடைமேனிறைவித்தானை நிலமருவிநீரோடக்கண்டான்றன்னைப்
பாற்றிரளைப்பயின்றாடவல்லான்றன்னைப் பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தான்றன்னைக்
காற்றிரளாய்மேகத்தினுள்ளேநின்று கடுங்குரலாயிடிப்பானைக் கண்ணோர்நெற்றித்
தீத்திரளைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 3

வானமிதுவெல்லாமுடையான்றன்னை வரியரவக்கச்சானைவன்பேய்சூழக்
கானமதினடமாடவல்லான்றன்னைக்கடைக்கணான்மங்கையுமைநோக்காவென்மேல்
ஊனமதுவெல்லாமொழித்தான்றன்னை யுணர்வாகியடியேனதுள்ளேநின்ற
தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 4

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும்
பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னை பிணக்காட்டினடமாடல்பேயோடென்றும்
ஆரானை யமரர்களுக்கமுதீந்தானை யருமறையானான்முகனுமாலும்போற்றுஞ்
சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 5

மூவனைமூர்த்தியைமூவாமேனியுடையானைமூவுலகுந்தானேயெங்கும்
பாவனைப்பாவமறுப்பான்றன்னைப்படியெழுதலாகாதமங்கையோடு
மேவனைவிண்ணோர்நடுங்கக்கண்டுவிரிகடலினஞ்சுண்டமுதமீந்த
தேவனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 6

துறந்தார்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைத் துன்பந்துடைத்தாளவல்லான்றன்னை
யிறந்தார்களென்பே யணிந்தான்றன்னை யெல்லினடமாட வல்லான்றன்னை
மறந்தார்மதின்மூன்று மாய்த்தான்றன்னை மற்றொருபற்றில்லாவடியார்க்கென்றுஞ்
சிறந்தானைத் தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 7

வாயானைமனத்தானை மனத்துணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான்றன்னைச் சுடர்திங்கட்சடையானைத் தொடர்ந்துநின்றென்
றாயானைத்தவமாய தன்மையானைத்தலையாயதேவாதி தேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற் றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 8

பகைச்சுடராய்ப்பாவ மறுப்பான்றன்னைப் பழியிலியாய்நஞ்சமுண்டமிர்தீந்தானை
வகைச்சுடராய்வல்லசுரர் புரமாட்டானை வினையிலியா யெல்லார்க்கு மருள்செய்வானை
மிகைச்சுடராய்விண்ணவர்கண் மேலைப்பாலை மேலாயதேவாதிதேவர்க்கென்றுந்
திகைச்சுடரைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 9

மலையானைமாமேருமன்னினானைவளர்புன்சடையானைவானோர்தங்கள்
தலையானையென்றலையினுச்சியென்றுந்தாபித்திருந்தானைத்தானேயெங்குந்
துலையாகவொருவரையுமில்லாதானைத்தோன்றாதார்மதில்மூன்றுந்தூளாவெய்
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 10

தூர்த்தனைத்தோண்முடிபத்திறுத்தான்றன்னைத்தொன்னரம்பினின்னிசைகேட்டருள்செய்தானைப்
பார்த்தனைப்பணிகண்டு பரிந்தான்றன்னைப்பரிந்தவற்குப்பாசுபத மீந்தான்றன்னை
யார்த்தனையடியேனுக்கன்பன்றன்னை யளவிலாப்பல்லூழி கண்டுநின்ற
தீர்த்தனைத்தென்கூடற் றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 11

பட்டினத்துப்பிள்ளையார் பாடல்:—

“விடப்படுமோவிப்பிரபஞ்சவாழ்க்கையை? விட்டுமனந்
திடப்படுமோ? நின்னருளன்றியேதினமேயலையக்
கடப்படுமோ? வற்பர்வாயிலிற்சென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படுமோ? சொக்கநாதா! சவுந்தரபாண்டியனே!

	ரூ.	அ.	ப.
மாணிக்கவாசகர் ...	0	10	0
கமலபவனம் ...	0	10	0
காதலா கருணையா ...	0	14	0
பார்தாளவாவி ...	0	6	0
சந்திரகுப்தன் ...	0	8	0
மங்கம்மாள் ..	1	8	0
ஞானசுந்தரன் ...	0	12	0
கமலநாதன் ...	1	8	0
அமிர்த ஸஞ்சீவினி ...	1	2	0
மதுராம்பாள் ...	0	12	0
வஜ்ரலேகை ...	1	4	0
தயாபரஸுந்தரி ...	0	12	0
மீனலோசனி ...	0	6	0
தீனதயாளு ...	0	12	0
பாய்பரமானந்தன் ...	1	0	0
ஸோமசுந்தரன் ...	1	0	0
யமகாதகன் ...	0	8	0
அமரநாதன் ...	1	4	0
குணஸுந்தரன் ..	1	4	0
கோமளம் குமரியானது ...	0	12	0
குலசேகரன் ...	1	0	0
நாகபூஷணம் ...	0	12	0
பீமராவ் ...	0	10	0
விஷதாரி ..	1	4	0
தாரா ...	0	10	0
உபநிஷத் பஞ்சகம் ...	0	5	0
பாத்திரமறிந்து பிச்சையெடு ...	0	1	0
மகாத்மா காந்தி ...	0	1	0
ராஜராஜேச்வரி ...	1	8	0
கல்பலதா ...	1	4	0
கோமளா ...	0	12	0
சித்ரரேகை ...	1	8	0
மாயாவதி ...	0	8	0
விக்ரமோர் வசீயம் ...	0	8	0
ராஜபுத்ர வீரன் ...	0	8	0
அழகு சுந்தரி ...	0	8	0
உத்தரராமாயண கதைகள் ...	0	4	0
மரகதவல்லி ...	0	6	0
சத்ருஜித் ..	0	12	0
ஆஸ்திகோபாக்யானம் ...	0	5	0
சிறுத்தொண்டர் ...	0	8	0
ஸ்ரீமதி ...	0	2	0
வீரவல்லி ...	0	12	0
பாயிரவிருத்தி ..	1	0	0
மனோன்மணி ...	0	12	0
மனோன்மணி கதை ...	0	8	0
செல்வராஜன் ...	0	12	0

	ரூ.	அ.	ப.
கமலசுந்தரி ...	0	4	0
சந்திரஹாஸன் ..	0	3	0
பவழக்கொடி ...	0	8	0
காயற்கண்ணி ...	0	12	0
ராஜாத்தி ...	0	12	0
சிறுமணிச்சுடர் ...	0	1	0
அர்ஜுன ஸந்யாஸி ...	0	12	0
கதாகதம்பம் ...	0	2	0
குசேல வெண்பா ...	0	8	0
பகீரதன் ...	0	1	0
பாலவிநோதினி ...	0	2	0
ஔவையார் ...	0	12	0
ஸாவித்திரி சரித்திரம் ...	0	4	0
ஜியார்ஜ்மன்னன் சரித்திரம் ...	0	1	6
வள்ளியம்மை சரித்திரம் ...	0	8	0
பாலகங்காதர திலகர் ...	0	4	0
திரிலோக மோஹனாங்கி ...	1	0	0
ஆர்ய சரித்திரம் ...	0	8	0
ராமனும் ஸீதையும் ...	0	1	6
ஜீவகன் ...	1	0	0
ஸ்ரீராமசந்திரன் ...	0	3	0
ஸுபோத பாரிஜாதம் ...	5	0	0
தனபாலன் ...	2	0	0
பாடல் திரட்டு ...	0	8	0
திருவஹீந்திரபுரமான்மியம் ...	0	4	0
கற்பகசுந்தரி ...	2	12	0
சுந்தர்சிங் ...	1	4	0
ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி	1	0	0
பாலசுந்தரம் ...	1	0	0
அம்பலவாணன் ...	1	4	0
ருக்மணி ...	1	0	0
சரோஜனீ ...	2	0	0
அஞ்சனாவதி ...	1	4	0
லலிதாதேவி ...	0	12	0
நீலோத்பலவிசாலாக்ஷி ...	1	8	0
ஜெயசாந்தகாந்தா ...	1	0	0
திருக்கழுக்குன்றத்துக்கொலை ...	1	8	0
கோஹினூர் ...	0	9	0
பவானந்தர் ...	0	8	0
ஞானானந்தன் ...	0	11	0
கோவிந்தன் ...	0	10	0
மதனசிங்கர் ...	1	4	0
மாணிக்கவல்லி ...	1	0	0
இரட்டைப்புலவர் சரிதம் ...	0	6	0
அண்டப்புளுகன் ...	0	8	0
மர்ம்மமுகி ...	0	12	0
ரதிமதனன் ...	0	12	0

மானேஜர்,

ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை,

ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
ஸ்ரீரங்கம்.